
www.padippakam.com

அக்டோபர்
2004
ரூ.15

# புதிய கோடாங்கி



## வேலிகளாக மாடுகளும் சோளக்காட்டு பொம்மைகளும் தலித்துக்கு காவல் எது?

படிப்பகம்

www.padippakam.com




Published, Printed and owned by Audrey Jannet joseph, Published from 2/206, Pandian Salai, Canalpuram Road, neelangarai, Chennai - 41.
Printed at Sri Lakshmi Printers, 20, Big Street, Anakaputhur - 600 070. Editor : AUDREY JANNET JOSEPH

படிப்பகம்

www.padippakam.com


பு
தி
ய
கோ
டா
ங்
கி
மாத இதழ்

மலர் 4 - இதழ் 4
அக்டோபர்- 2004

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

*முகப்பு, உள் ஓவியங்கள்*
சந்ரு

*இதழ் வடிவமைப்பு*
யாக்கன்

*சந்தா*
ஆண்டுக் கட்டணம் - ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம்.- ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
தனி இதழ் US $ 2

ஆண்டுக் கட்டணம்
US $ 20

*விளம்பரம்*
அரைப்பக்கம் ரூ. 5,000/-
முழுப்பக்கம் ரூ. 10,000/-
பின் அட்டை ரூ. 20,000/-

*தொடர்பு முகவரி*
705, 101-ஆவது தெரு
15-ஆவது செக்டர்
கே. கே. நகர்
சென்னை - 600 078.
Mobile : 98404 - 49204
kodangi@hotmail.com


## தலையங்கம்

தலித் இதழியல் வளர்ந்துகொண்டு வருகிறது. சிறு சிறு பத்திரிக்கைகள் அங்கங்கு தோன்றிக்கொண்டிருக்கின்றன. இது எழுச்சியூட்டுவதாக உள்ளது. சாதி ஒழிப்பை மய்யப்படுத்தும் அதே வேளையில், தலித்துகளுக்கான பல்வேறு தளங்களுக்கும் குறிப்பாக விவசாயம், விஞ்ஞானம், கலை, இலக்கியம் போன்ற இவற்றிற்கும் இடமளிக்க வேண்டும். எல்லா இதழ்களும் தலைவர்களை மய்யப் படுத்தி அவர்களைச் சுற்றிய அரசியல் வலைப்பின்னல்களை விவரிப் பதிலேயே ஆர்வங்காட்டுகின்றன. தலித் அறிஞர்களைத் தேடி அடை யாளங்கண்டு அவர்களது ஆற்றல்களைப் பயன்படுத்திக்கொள்ள முனையவேண்டும். தலித்துகளின் பங்களிப்பு குறைவானதாகவே உள்ளது. தனிமனிதர்கள் பற்றிய விமர்சனங்களைக் குறைத்து, பிரச்சினைகளை மய்யப்படுத்தி விமரிசனம் வைப்பதே வரவேற்புக் குரியதாக இருக்கும். புதிய கோடாங்கியும் இத்தகைய செயல்பாடுகளை மேற்கொள்ளும்.

செப்டம்பர் மாதம் 17, 18, 19 தேதிகளில் அனித்ரா ட்ரஸ்ட் 'நிர்வாகத்தில் தலித்துகள்' என்ற தலைப்பில் மாநில அளவிலான கருத்தரங்கம் ஒன்றை நடத்தியது. அதன் பதிவுகள் அடுத்த இதழில் வெளிவரும்.

செப்டம்பர் 28, 29 தேதிகளில் ஜவ்வாது மலைகளில் வாழும் மலையாளிகள் எனப்படும் மலையின மக்கள் பற்றிய வாய்வழி இலக்கியம் பதிவு செய்யப்படுகிறது. விவரங்கள் அடுத்த இதழில் வரும்.

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே...


| | | |
|---|---|---|
| ஜெயேந்திரருக்கு ஓர் கடிதம் | டாக்டர் என். ஜெயராமன் | 3 |
| ஆதி திராவிடர்களும் பெரியாரும் | அன்பு பொன்னோவியம் | 10 |
| வா - சிறுகதை | க. கலாமோகன் | 14 |
| ஊடகங்களின் ஆக்கல், காத்தல், அழித்தல் பணிகள் | நிகழ் அய்க்கண் | 18 |
| கேள்வி - பதில் | முனிமா | 22 |
| பாரசீக வளைகுடாவுக்கு அப்பால் | எச். பீர்முஹம்மது | 24 |
| உலகமயமாக்கல் - ஆயுத எழுத்தாய் ஹைகூ கவிதைகள் | அன்பாதவன் | 27 |
| பிராமணரல்லாதார் - பெரியார் - திராவிட அரசியல் | மா. வேலுசாமி | 29 |
| நாட்டுப் பற்று - கவிதை | மருத்துவர் காசிப்பிச்சை | 37 |
| கோயில் மாடுகள் - கவிதை | வீ. ஏழுமலை | 37 |
| மாற்றங்கள் - சிறுகதை | சுப்ரபாரதிமணியன் | 38 |
| அகம் சொல்லும் முகம் - கவிதை | விழி.பா. இதயவேந்தன் | 41 |
| சும்மாடு - நூல் அறிமுகம் | ப்ரதிபா ஜெயச்சந்திரன் | 42 |
| உடல்மொழி - தொடர் | சிவகாமி | 44 |
| மக்கள் அறியாத அம்பேத்கர் - தொடர் | குடியரசன் | 47 |
| நாம் யார் - கவிதை | தேவதேவன் | 49 |
| கழிவறையின் விலை - கவிதை | புதிய மாதவி | 49 |
| தலித் தேசியம் - தொடர் | கௌதம சன்னா | 50 |
| பாரதியின் பௌத்த வெறுப்பும் இந்துத்துவப் பற்றும் - தொடர் | பு. ஜார்ஜ் | 52 |
| கல் அறி கற்பி - கவிதை | மகாராசன் | 54 |
| கணிதம் நம் உடைமை - தொடர் | குடியரசன் | 55 |
| பிணம் - சிறுகதை | பரிக்கல் என். சந்திரன் | 59 |
| அவசர அலறல் - கவிதை | அரும்பா. சரவணனன் | 61 |
| எல்லாமே அழுக்கு - கவிதை | வலம்புரி ஜான் | 62 |
| சுதந்திரம் என்றொரு பெருங்கதையாடல் | ஆ. வெங்கடேஷ் | 63 |
| முகத்தில் முகம் | | 64 |


படிப்பகம்

www.padippakam.com

**டாக்டர் என். ஜெயராமன்**
பல் மருத்துவர்

832, கீழ ராஜ வீதி
புதுக்கோட்டை - 622 001
மருத்துவமனை : ✆220061, 232126
வீடு : ✆262620

மதிப்பிற்குரிய ஜெயேந்திரர் அவர்களுக்கு,

என்னை நீங்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. பத்திரிக்கைகளின் மூலமாக உங்களை நானறிவேன். என்னையும் என் போன்ற 24 கோடி தலித்துகளின் உள்ளத்து வேதனைகளையும், எங்களின் அவமானங்களையும், சமூக பகிஷ்காரங்களையும் ஏறத்தாழ நீங்கள் எழுதத் துவங்கிய காலங்களிலிருந்து இன்றுவரை நாங்கள் இந்து மதம் என்று கூறப்படுகின்றதொரு மதத்தில் பிறந்துவிட்ட காரணத்தினால் மட்டும் நாங்கள்படுகின்ற அவமானங்களையும், இந்த ஒரு காரணத்தினாலேயே எங்கள் பொருளாதாரமும், வாழ்க்கை முறைகளும் கேவலமாக்கப்பட்டதையும், இன்னும் வார்த்தைகளில் விவரிக்க முடியாத வேதனைகளையும் தாங்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை என்று கூறமுடியாது. ஆனால் அனுபவித்திருக்க வாய்ப்பில்லை. எந்த வேதனையும் அனுபவிப்பவனால் மட்டும்தான் உணரமுடியும்.

இதை ஏன் உங்களுக்கு எழுதுகின்றேன்? சமீபத்தில் மெரினா கடற்கரையில் கூட்டம் போட்டு தலித் மக்கள் மதம் மாறக்கூடாது என்று கூறினீர்களே, அதனால்தான் இக்கடிததத்தை எழுதுகின்றேன். இந்து மதம் என்றொரு மதத்தில் நான் இருந்துகொண்டு இருப்பதாக என் பள்ளிச் சான்றிதழ் கூறுகின்றது. இந்து மதம் என்றால் என்ன? மதம் என்றால் கடவுள் ஒன்று இருக்குமே? அதற்கென்று புனிதநூல் கூட இருக்குமே? என்று என் பெற்றோர்களைக் கேட்டேன். இந்துமதம் பற்றி அவர்களுக்கு எதுவுமே தெரியவில்லை. அவர்களுக்கு தெரிந்த பத்துப் பதினைந்து பரிட்சயமான, பரிட்சயமில்லாத சாமிகளின் பெயர்களைச் சொன்னார்கள். புனித நூல் பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. என் மூதாதையர்களுக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. தெரிந்திருந்தால் என் பெற்றோர்களுக்கு கூறியிருப்பார்கள். ஆனாலும் கூட அவர்கள் தங்களை இந்துக்கள் என்றே கூறுகிறார்கள். எப்படித் தெரியுமா? காலையில் எழுந்ததும் வாய் கொப்பளித்து துப்புவோமே அதுபோல. அவர்கள் கல்வி கற்கும் வாய்ப்பினை நீங்கள் தடுக்காதிருந்தால், அவர்களுக்கு கல்வி கிடைத்திருந்தால் நிச்சயமாக இன்று நீங்கள் இருக்கும் இதே இடத்தில் இதற்கு முன் ஒரு பெரியவர் இருந்தாராமே அவரிடம் என் போலவே கடிதம் எழுதி கேட்டிருப்பார்கள்.

ஆசைகாட்டி மதம் மாற்றக்கூடாது, மதமாற்றத்தைக் கட்டாயப்படுத்தக்கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டுள்ளது தாங்கள் அறியாததல்ல. இது தங்களின் ஏற்பாடுதான் என்பது அனைவரும் அறிந்த இரகசியமே. உங்களின் கூற்றுப்படியே இந்த மதமாற்றங்கள் நடைபெறுவது இன்று நேற்றல்ல, ஏறத்தாழ கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல் இசுலாமியர்களும், 16- ஆம் நூற்றாண்டு முதல் கிருத்துவர்களும் இந்தியாவிற்கு வர ஆரம்பித்தது முதல் நடைபெற்று வருகிறது என்பதும் தாங்கள் அறிந்ததே. நீங்களும், உங்கள் மடங்களும் அன்று முதல் இருந்து வருகிறீர்கள். அது ஏன்?

இத்தனை ஆண்டுகளாக இப்படி ஒரு சட்டம் கொண்டுவர நினைக்காத நீங்கள் 2002-ஆம் ஆண்டு முடிவு செய்தீர்கள். உங்கள் ஊரிலேயே பிறந்த ஒருவர் தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக இருந்தபோது கூட தாங்கள் அவ்வாறு முயற்சி செய்யவில்லையே. ஏன்? உங்களோடு அவர் ஒத்த கருத்துடையவராக இல்லாததால்தானோ? ஆசை வார்த்தைக்கும் ஆயிரம் ரூபாய்க்கும் சோரம்போக வேண்டிய நிலையில் நானில்லை. ஆனாலும் கூட நான் இப்போது இருக்கின்ற என் மதத்தைப் பற்றி அதன் தலைவர் என்று தாங்கள் சொல்வதாலும், சமீபத்திய நூல் வெளியீட்டு விழாவில் அனைவருக்கும் வழிகாட்டுபவர்கள் தாங்களும் தங்கள் சமூகத்தவர்களும் என்று கூறியிருப்பதாலும் எனக்கும் என்போன்ற 24 கோடி தலித் மக்களுக்கும் வழிகாட்டுவீர்கள் என்ற நம்பிக்கையில் உங்களோடு நான் சில செய்திகளை பறிமாறிக் கொள்ள விரும்புகிறேன். எனக்குள்ள சில சந்தேகங்களை தயவுசெய்து தெளிவுபடுத்துங்கள்.


படிப்பகம்

www.padippakam.com

நானும் என் மூதாதையர்களும் எப்போது இந்து வானோம்? இந்து என்ற சொல்லே எங்கும் காண வில்லையே! வேதநூல்களில் இந்து மதத்தில் நான்கு வருணங்கள்தானே உள்ளது. அந்த நான்கில் நான் எவ்வாறு இல்லாது போனேன்? நான்கு வருணத்தில் இல்லாதபோது நான் எப்படி இந்துவாக இருக்க முடியும்? எந்த வகையிலும் ஒரு சராசரிக்கும் கீழான நிலையில் (தங்களின் இதுநாள் வரையிலான அணுகு முறையின்படி) உள்ள எங்களை என்ன காரணத்தினால் இந்து மதத்திற்குள் பூட்டிவைக்க சட்டம் இயற்றுகின்றீர்கள். தேர்தல்கால விடுபட்டுப் போனவர்கள் பட்டியல் போல நாங்கள் இந்துமதப் பட்டியலில் விடுபட்டுப்போனவர்களா? இதுதான் ஒரு வேளை உண்மை என்றால் இத்தனை ஆண்டுகால சீனியாரிட்டி அடிப்படையில் எங்களையும் சேர்த்து ஐந்தாவது வருணம் என்ற திருத்தப்பட்ட பட்டியல் எப்போது வெளியிடப்போகின்றீர்கள்?

பட்டியலில் இல்லாமல் இருந்தும்கூட தொடர்ந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இதற்குள்ளேயே இருந்து, எம்மக்களும் தாங்களும் இந்துக்கள் தான் என்ற பெருமையோடு வாழப்பழகிக் கொண்டார்கள். அவர்கள் விழிப்படைந்துவிடக்கூடாது என்பதில் தாங்கள் இதுவரை மிகத் தெளிவாகவே இருக்கின்றீர்கள். உங்கள் மொழியில் 'பாவம்' இவர்கள். நீங்கள் என்னையும் 24 கோடி தலித் மக்களையும் இந்துவாகவே இறுதிவரை இருந்துவிட வேண்டும் என்று சட்டம் இயற்றிவிட்டதால் நாங்களும் தாழ்த்தப்பட்ட இந்துவாகவே இருந்துவிடுகின்றோம். இதுவரைக்கும் அப்படித்தான் எந்த அர்த்தமும் புரியாமல் இருந்து வந்தோம். ஆனால் தற்போது இதில் தொடர்ந்து இருப்பதில் கொஞ்சம் நெருடல்கள் இருப்பதால் குறைந்த பட்சம் ஒருசில விசயங்களையாவது தெளிவுபடுத்த வேண்டுகின்றேன்.

ஏறத்தாழ இரண்டு ஆயிரம் ஆண்டுகளாக நீங்கள் எங்களை அசிங்கப்படுத்தி வந்ததைப் பற்றியெல்லாம் உங்களை கேள்விகேட்டு சிரமப்படுத்த விரும்ப வில்லை. சமீபத்திய நிகழ்ச்சியைப் பற்றிய சந்தேகம் மட்டுமே! 'இந்து சாத்திரத்தில் எனது உயிர் என்பது, கேவலம் பசுமாட்டின் உயிரைவிட உயர்ந்தது இல்லை' என்று இந்தியாவில் வெளிவரும் பிரதான பத்திரிக்கைகளின் மூலம் அறிந்தேன். அது உண்மையா? இந்து சாத்திரத்தில் என் உயிரின் விலை இதுதானா? உலகத்தில் உள்ள உயிரினங்களிலெல்லாம் உயர்ந்தது மனித உயிர் என்ற உலகளாவிய தத்துவம் இந்து மதத்திற்கும் அதில் உள்ளவர்களுக்கும் மட்டும் பொருந்தாதா? பயிரைக்கூட உயிராக மதித்தவர்கள் எல்லாம் இங்கே உண்டு. 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று செடியின் உயிரைப் போற்றிய வரலாறுகள் ஏராளம் உண்டு. ஆனால் என்மீது பலவந்தமாக திணிக்கப்பட்ட ஒரு மதத்தில் மட்டும் ஏன் இப்படி ஒரு மனிதநேய தட்டுப்பாடு? என் உயிரே இந்த சாத்திரத்தில் இந்த நிலையில் உள்ளது என்றால், மற்ற விசயங்களில் என் அந்தஸ்த்து எப்படியிருக்கும் என்று எண்ணிப்பார்க்க ஆசைப்படுகிறேன். அதையும் கொஞ்சம் தெளிவுபடுத்துங்கள். நான் இந்து என்று ஆக்கப்பட்டுவிட்டதால் என் மதநூல் பற்றியும் அந்த நூலில் என்னைப் பற்றி என்னவெல்லாம் கூறப்பட்டுள்ளது என்றும் அறிய ஆவலாக உள்ளேன்.

என் கிருத்துவ இஸ்லாமிய நண்பர்கள் எல்லாம் அவர்களின் வேத நூல்களில் எல்லா மனித உயிர்களும் உயர்வாக போற்றப்பட்டுள்ளதாகக் கூறி பெருமைப் பட்டுக்கொள்கிறார்கள். அவர்களின் வேதநூல்களைப் பற்றியெல்லாம் பெருமையாகப் பேசிக்கொள்கிறார்கள். அதைக் கேட்கும்போது எனக்கு பொறாமையாகக் கூட இருக்கின்றது. இன்னுமொரு ஆச்சரியம் என்ன தெரியுமா? அவர்களின் வேத நூல் இல்லாத வீடே கிடையாதாம். அதை அவர்கள் எல்லோரும் படிக்கலாமாம். படிக்கத் தெரியாதவர்கள் மற்றவர்களைப் படிக்கச் சொல்லி கேட்கலாமாம். நமது மதத்தில் உங்களைப் போன்ற அந்தணர் குலத்தில் பிறந்தவர்களைத் தவிர மற்றவர்கள் படிக்கக் கூடாது என்றும் மீறிப்படித்தால், படிக்கக் கேட்டால் உடல் உறுப்புக்களை சேதம் செய்கின்ற அளவிற்குத் தண்டனையெல்லாம் உண்டு என்றும் கூறுகின்றார்களே, உண்மையா? தண்டனை கிடைத்தாலும் பரவாயில்லை. படித்துப் பார்த்து விடலாம் என்று முடிவு செய்திருக்கின்றேன். எனவே மற்ற மதத்தினரைப் போல நானும் நமது வேதநூலை என் வீட்டில் வைத்துக் கொள்ளலாமா?

நூலை வாங்கிவிட முடிவு செய்துவிட்டதால் நான்கு வருணத்தைச் சேர்ந்த நண்பர்கள் அனைவரிடமும் கேட்டுப் பார்த்துவிட்டேன். நமது மதத்திற்கு அப்படியொரு புனிதநூல் கிடையாது என்றும் அப்படியொரு நூலினை என் வாழ்நாளில் ஒருமுறை கூட தொட்டுப் பார்த்தது கிடையாது என்றும் 89 வயது பெரியவர் கூறுகின்றார். இது எந்த அளவிற்கு சரியானதாக இருக்கும் என்று தெரியவில்லை. எப்படியும் மதம் என்றால் அதற்கு அவசியம் ஒரு புனித நூல் வேண்டுமல்லவா? எனவே பொது நலன் கருதி மெரினா கடற்கரையில் ஒரு கூட்டம் போட்டு இதுதான் இந்து மதத்தின் வேத நூல், இதை இந்துவாக இருக்கின்ற ஒவ்வொருவரும் படிக்க வேண்டும் என்றும், வேதநூல் படிக்காதவர்கள், படிக்க விருப்பம் இல்லாதவர்களுக்கு குறைந்தபட்சம் 'அரியானா' தண்டனையாவது கொடுக்கப்படும் என்றால் எல்லோருக்கும் பயம் வரும் இல்லையா? படிக்க மனமில்லாவிட்டாலும் சிலர் வாங்கிவைத்து சரஸ்வதி பூசையாவது செய்வார்கள் அல்லவா? அல்லது இந்து மதத்திற்கு என்று ஒரு குறிப்பிட்ட வேதநூல் கிடையாது. வேதநூல் இல்லாத மதம் என்று பகிரங்கமாக அறிவித்து விடலாமே! குழப்பமாவது மிஞ்சும்.

ஆமாம், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையானது என்றும், உலகத்தில் உள்ள மதங்களுக்கெல்லாம் வழிகாட்டி இந்து மதம் என்றும், 'பாரதநாட்டு அந்தணர்களிடம் இருந்து பல்துறை விசயங்களைக் கற்க உலகம் அனைத்திலிருந்தும் மக்கள் வந்தனர்; அவர்களுக்கு அந்தணர்கள் கற்றுக் கொடுத்தனர்' (தினமணி 12.11.2002) என்றும் கூறியிருக்கின்றீர்களே,



படிப்பகம்

www.padippakam.com

அவர்களுக்கு எதையெல்லாம் கற்றுக் கொடுத்தீர்கள். குறிப்பாக 'பசு மாட்டின் தத்துவங்கள்' எல்லாம் கற்றுக் கொடுத்திருக்கின்றீர்களா? வெளிநாட்டின ருக்கு கற்றுக்கொடுத்ததை உங்கள் மதத்திற்குள்ளே உள்ள உங்கள் அடிமைகளாகிய எங்களுக்கும் கற்றுத் தரக்கூடாதா? ஒருசில மிகப்படித்த அறிவாளி நண்பர் கள் கண்ணதாசன் எழுதிய 'அர்த்தமுள்ள இந்து மதம்'தான் நமது வேதநூல் என்கிறார்களே! இந்து மதத்திற்கு இப்படி ஒரு சோதனையா? எந்த வர லாற்றுச் செய்திகளுக்கும் நூல்தானே ஆதாரம். எனில் அடிப்படை ஆதாரத்திலேயே இவ்வளவு குளறுபடி களா? அடிப்படையே சரியில்லை என்றால் அதற்குள் இருக்கும் செய்திகள் எவ்வாறு தெளிவாக இருக்க முடியும்? தான்தோன்றித்தனமாகத்தானே இருக்க முடி யும்? 'பகவத் கீதை' என்ற ஒரு நூலினைக் கூறினார் கள். போர்க்களத்தில் யுத்தம் நடக்கும் இடத்தில் போர் முறையை விளக்குகின்ற இடத்தில் (போர் செய்பவர் கள் சத்திரியர்கள். அங்கே அந்தணருக்கு என்ன வேலை?) நடக்கின்ற உரையாடல்களாக இருக்கின்றது அந்த நூல். போர் முறைகளில் தந்திரங்களும் சூழ்ச்சி களும் வஞ்சனைகளும் மனிதப் பண்பற்ற முறைகளும் தான் நடைபெறும்.

யுத்த களத்தில் வெற்றிதானே பிரதானமாக இருக்க முடியும்? மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கின்ற வரை அவனுடைய வாழ்வு முறைகளை வகைப்படுத்துகின்ற நெறிப்படுத்துகின்ற செய்திகளைக் கொண்டதுதான் மற்ற வேதநூல்களின் தத்துவமாக இருக்கின்றபோது, இங்கு மட்டும் போர்க்களமாக இருக்கின்றதே. ஒரு வேளை இதைப் படித்ததனால்தானோ உங்கள் இளை ஞர்கள் அவ்வப்போது முஸ்லீம்களிடமும், தலித்து களிடமும் இந்த போர் யுக்திகளை அரங்கேற்றிப் பார்க்கின்றார்கள். இந்த நூலில் ஓர் இடத்தில் முக்கிய 'கதாப்பாத்திரம்' வகிக்கும் ஒருவர் கூறுகிறார். 'நான்கு வருணங்களையும் நானே படைத்தேன்' என்று. யுத்த களத்தில் வில்லைப் பிடித்திருக்கின்றவனிடம் இந்த படைப்பு வியாக்கியானம் எதற்கு?

அவருடைய கூற்றுப்படியே பார்த்தாலும் பஞ்ச மர்கள் என்ற தலித்துகளை கதைக்காகக்கூட அந்த 'பாத்திரமேற்றவர்' படைக்கவில்லை, சேர்த்துக் கொள்ளவில்லை என்றால் உண்மையைக் கூறுங்கள். உங்களுடைய இந்து மதத்தில் நாங்கள் உறுப்பினராக இருக்கின்றோமா? அல்லது உபரி இணைப்பா? உபரி இணைப்பு (Extra fitting) என்றால் எதற்காக சேர்த்துக் கொண்டீர்கள்? உங்களுக்கு ஏவல் வேலை பார்ப்பதற் காகவா? அப்படியும் இருக்க வாய்ப்பில்லை என்றே நினைக்கின்றேன். ஏன் என்றால் நாங்கள் உங்கள் வீடு கள் இருக்கும் பக்கமும், தெருப்பக்கமும் நடமாடக் கூடாது, எங்களை நீங்கள் எல்லாம் பார்க்கக்கூடாது, தொடக்கூடாது. அப்படியேதும் நடந்துவிட்டால் நீங்கள் தீட்டுப்பட்டு விடுவீர்கள். எனவே நாங்கள் ஏவல் ஆட்களாக இருக்கமுடியாது. எனவே அதற்கும் சாத்தியம் இல்லை. ஒருவேளை உங்கள் கோமாதாக் களை குளிப்பாட்டி தீனிபோட்டு பராமரிக்கவா? (நீங்கள் கோமாதாக்களை மேய்த்து, குளிப்பாட்டி, தீவனம் போட்டு நாங்கள் பார்த்தது கிடையாது இப்போதும் கூட.) அதுதான் உண்மை என்றால் என் உயிரை விட, இல்லை, இல்லை, உங்களின் உயிரை விடவும் உயர்வான உங்கள் கோமாதாக்களை நான் எப்படித் தொடலாம்?

முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் கடவுளான கோமாதாவை நான் உயிரோடு தொட்டுவிட்டால் அது தீட்டுப்பட்டுப் போய்விடுமே! சாத்திரம் கெட்டு விடுமே. சாத்திரத்தில் இவ்வளவு உயர்வான இடம் பெறும் கோமாதா 'முக்தி' அடைந்துவிட்டால் அதை நீங்கள் தூக்கிச் சென்று இறுதி மரியாதை செலுத்து வதுதானே சரியாக இருக்கும்? உயிரோடு இருக்கும் வரை அது கோமாதா. முக்தி அடைந்துவிட்டால் அது தலித்துகளுக்கா? ஒருவேளை செத்துப்போன கோமாதாக்களுக்கு குழிவெட்டத்தான் இந்த தலித்து களை இந்து மதத்திற்குள் வைத்திருக்கின்றீர்களா? இவர்களுக்கு ஏன் இவ்வளவு உயர்வான அந்தஸ்து? உங்களுடைய அந்தணர் பிரிவிலேயே ஒரு பிரிவினரை தாழ்ந்தவர்கள் என்று வைத்திருக்கின்றீர்களே, அவர் களிடம் இந்த மாடுதூக்கும் வேலையைக் கொடுத்து கடைசியாக கோமாதாவின் அடக்கத்தை கௌரவப் படுத்தியிருக்கலாமே. இல்லை நான்கு வருணத்திற் குமே இவன்தான் குழிவெட்டுபவன். கொளுத்துபவன். எனவே, இவனே கோமாதாவையும் அடக்கம் செய்யட்டும் என்று விட்டுவிட்டீர்களா?

ஜெயேந்திரர் அவர்களே! நிலைமையைப் பார்த் தீர்களா? உங்கள் நான்கு வருணங்களும், உங்கள் கோமாதாக்களும் கடைசிக் கட்டத்தில் 'என் காலடி யில் மிதிபடுவதை.' உயிரோடு இருக்கும்வரை என் வாழ்க்கை உங்கள் ஜாதியின் பிடிக்குள். நீங்கள் இறந்த பிறகு என் காலடியில்! இந்த கோமாதா விஷயத்தில் ஏன் இவ்வளவு கவனமாக உங்களிடம் கேட்கிறேன் என்றால் கோமாதாக்களை வளர்ப்பது நாங்கள், பிரசவிப்பது நாங்கள், புல் போடுவது நாங்கள், செத்தபிறகு அதைச் செருப்பாக்குவதும் நாங்கள்.

தயவு செய்து இனிமேல் இந்த செத்துப்போன கோமாதாக்களை தலித்துகள் அப்புறப்படுத்தக் கூடாது என்று உங்கள் முதலமைச்சரிடம் கூறி இன்னுமொரு சட்டம் இயற்றிவிடுங்கள். ஏனென்றால் செத்த மாட்டை அப்புறப்படுத்துவதில்தானே எங்கள் சகோதரர்கள் 5 பேரை அரியானா மாநிலத்தில் காவல் துறை மற்றும் நீதிபதிகள் முன்னிலையில் உயிரோடு அடித்தும், வெட்டியும், கொளுத்தியும் இருக்கிறார்கள்.

எப்படி வந்தது இப்பிரச்சினை? கோமாதா செத்து விட்டது என்று நாங்கள் தோலை உரித்தோம். இல்லை உயிரோடு இருந்தது என்று நீங்கள் எங்கள் தோலை உரித்தீர்கள். ஏன் இந்த வம்பு நமக்குள். அதுவும் ஒரே மதத்திற்குள். அதற்குத்தான் கூறுகின்றேன், நான் நானா கவே இருக்கின்றேன். நீங்கள் நீங்களாகவே இருந்து விட்டுப் போங்கள். 'சந்தர்ப்பம் வரும்போது சுடுகாட் டில் சந்தித்துக் கொள்வோம்.' எதற்காக இதை உங்க ளிடம் தயவு செய்து கேட்கிறேன். நானோ தினமும் குளிக்காதவன், சுத்தமாக இல்லாதவன், வசதியற்றவன்,


படிப்பகம்

www.padippakam.com

இறந்துபோன மிருகங்களை உண்டு வாழ்ந்து வருப வன், நாகரீகமற்றவன்.

உங்கள் முதலமைச்சரின் எடுபிடி அமைச்சர் ஒருவரின் பத்திரிக்கை பதிலில் தலித்துகள் பற்றி விளக்குகிறார். அதாவது, 'அறிவார்ந்த ஆய்வுப் பணிகளிலும் தேட்டங்களிலும் வேதாந்த தத்துவ விசாரங்களிலும் தலித் மக்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை.' (தினகரன் தலையங்கம் 8.11.2002) இவ்வளவு ஒரு கேவலமானவனை எதற்காக சட்டம் போட்டு உங்களோடு வைத்திருக்கின்றீர்கள்? என் மதம் எது என்று உறுதி செய்யும் நீங்கள் என் உயிரைக் கேவலப்படுத்துகின்றீர்கள். உங்களோடு என்னால் எப்படி தொடர்ந்து வரமுடியும்?

இந்து மதத்தில் என் நிலை இப்படியிருக் கும்போது, 'அந்தணர்கள் என்பவர்கள் உங்கள் வீட்டில் பிறந்து விட்டாலே அவன் உயர்ந்தவன் என்று கூறுகின்றீர்கள். அவ்வாறு பிறந்தவனுக்கு யாரும் துன்பம் விளைவிக்கக் கூடாது என்கிறீர்கள். அவன் வருத்தப்பட்டால் நாடு தாங்காது என்கிறீர்கள்.' (தினமணி 12.11.2002) இப்படி இடம்மாறிப் பிறப்பதி னால் மட்டுமே உங்களுக்கு யாருமே துன்பம் விளை விக்கக் கூடாது என்று உங்களை உயர்த்திக் கொள்ளும் நீங்கள் என்னை பிறப்பினாலேயே கேவலமானவன் என்று கூறி என்னையும் 24 கோடி தலித் மக்களையும், இப்படி ஒரு தத்துவக் கோட்பாட்டை உள்ளடக்கிய அருவருப்பான மதத்திற்குள் இருக்கவேண்டும் என்று கட்டாயப் படுத்துகின்றீர்களே - உங்கள் ஆணவத்தின் அளவுதான் என்ன? இன்னமும் எம்மக்கள் அவர் களை இந்துக்கள் என்று கூறிக்கொண்டிருக்கின் றார்களே - அதுதான் உங்களின் பலமா? அல்லது கேட்டுக்கொண்டு இன்னமும் வாளாவிருக்கின்றோமே, அது எங்கள் பலவீனமா? அல்லது இதுதான் இந்து மதத்தின் வெற்றியா?

இந்த நாடு நலம்பெற அந்தணர்கள்தான் உழைத் தார்கள் என்கிறீர்களே! பொய்களின் மொத்த வடி வமே அந்தணர்களா? அல்லது இந்து மதத்தின் தத்துவ விசாரமே அதுதானா? ஒரு தேசம் உருவாக ஒவ்வொரு வனும் உழைத்தாக வேண்டும் என்ற அடிப்படையே தெரியாத தத்துவத்தை உள்ளடக்கிய ஒரு மதத்திற்குள் நான் இருக்கின்றேனா? வெட்கத்தில் என் உடம்பெல் லாம் கூசுகிறதே! கோவிலுக்குள் உட்கார்ந்து கொண்டு மணி ஆட்டிக்கொண்டு இருந்தால் இந்த உலகம் செழிப்பதற்கான அத்தனை பணிகளும் நடந்தேறி விட்டதாக கூறுகின்றீர்களா?

இந்த மக்களுக்கான உங்கள் உடல் உழைப்பு என்ன? 100 கோடி மக்கட் தொகை கொண்ட இந்த இந்தியாவில் ஒரே ஒருவன் பசியைப் போக்க, 'ஒரு பிடி நெல்' நீங்கள் சுயமாக உழுது விதைத்து அறுவடை செய்தது உண்டா? 100 கோடி மக்களில் ஒரே ஒரு வனுடைய மானத்தைக் காப்பாற்ற 1 முழம் நீள கோவணத்துணி தயாரித்துக் கொடுத்ததுண்டா? இந்த சிறிய பங்களிப்பினைக் கூட இம்மக்களுக்கு நீங்களும் உங்கள் சமுகமும் செய்தது கிடையாது என்ற வரலாறு கூட தெரியாத உங்களை 'லோக குரு' என்கிறார்களே, உங்களின் வாசகப்படி உலகம் என்றால் என்ன? இந்தி யாவில் 3 சதவிகிதமாக இருக்கின்ற உங்களில் சைவம், வைணவம் என்று பல பிரிவுகள் இருக்கின்றதே! அதில் பாதிப்பேர் உங்களையும் உங்கள் லோக தத்துவங் களை யும் உங்கள் வழிபாட்டு முறைகளையும், ஏன் கடவுள்களுக்கும் உங்களுடைய அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் துளியும் தொடர்பில்லை என்று சமீபத்திய பத்திரிக்கைகளில் துகில் உரித்துக் கொண் டிருக்கின்றார்களே, நீங்கள் படிக்கவில்லையா? (வேத மேதை ராமானுஜ தாத்தாச்சாரியார் பேட்டி குமுதம் ரிபோர்ட்டர் 21.11.2002.)

உங்களையும், உங்கள் தத்துவங்களையும் ஏற்றுக்கொண்ட வெறும் 1.5 சதவீதம்தான் இந்த உலகம். அதற்குத்தான் நீங்கள் லோக குரு? இந்த சத வீத மக்களின் உழைப்பினால்தான் இந்தியா செழிப் படைந்துள்ளது, அகில உலகமே நாகரீகம் பெற்றிருக் கின்றது. மலையும், மடுவும், ஆற்றுப்படுகையும், கடல் கொண்ட பகுதிகளுமாக கோடிக்கணக்கான ஆண்டு களுக்கு முன் தோன்றிய இந்தப் பிரபஞ்சமே உங்கள் அந்தணர்கள் கைபட்டதாலும் வியர்வை சிந்திய தாலும்தான் இந்த பூமி மனிதன் வாழ்வதற்கு ஏற்ற நிலப்பரப்பாக மாறியது என்ற 'உண்மைகளை' இனி மேல் என்போன்றவர்கள்தான் புதிய வரலாறாக எழுத வேண்டும்.

அய்யா அவர்களே! எனக்கும் என் சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கும் இந்த மதத்திற்குள் சொல்லப்படு கின்ற செய்யப்படுகின்ற கேள்விப்படுகின்ற அனைத் தும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போக முடியாதபடி ஏராளமான முரண்பாடுகளுடன் இருக்கின்றதே! படிப்பு வாசமே எனக்கும், என் சமூகத்திற்கும் கிடைத்து விடாமல் நீங்கள் பாதுகாத்து வந்ததன் நோக்கத்தை கொஞ்சம் கொஞ்சமாக இப்போதுதான் உணருகின்றோம். எங்களின் சமூக விழிப்பிற்காகப் போராடிய, சிந்தித்த தியாகிகளின் உழைப்பினால் இன்று நாங்கள் இந்து மதத்தில் எங்களின் நிலை மையை உணரத் துவங்கியிருக்கின்றோம்.

மதங்களற்ற மனிதன் உலகில் யாருமே கிடையாது. அப்படியே இருந்தாலும் குறைவான, கணக்கில் வராத சதவீதமே. மதங்களை ஏற்கத்துவங்கிய மனிதன், அவைகள் உருவான காலம் தொட்டு இன்றுவரை தத்துவ முரண்பாடுகளின் அடிப்படையில் யுத்தங் களை, அழிவுகளை நடத்தி வருகின்றான். நமது சைவம் கூட 8000 சமணர்களை கழுவிலேற்றிக் கொன்றதாக வரலாறு கூறுகிறது. மதங்களை ஏற்றுக் கொள்ளாத மனிதர்களால் மதச் சண்டைகள் ஒருபோதும் வந்தது கிடையாது, அழிவுகளும் கிடையாது. மதத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்குத் தான் 'மதம்' பிடித்துக் கொள்கின்றது. மதங்களுக்கிடையேயான கருத்து வேறுபாடுகளினால் தான் சண்டைகளும் அழிவுகளும் உலக வரலாற்றில் பதிவாகியிருக்கின்றது. இது தாங்கள் அறியாதது அல்ல. நான் ஒன்றை தங்களுக்கு நினைவு படுத்தியாக வேண்டும். இதுவரை உலகத்தில் தோன்றிய அத்தனை மதங்களும் தன் மதத்திற்குள் இருக்கின்றவனை



படிப்பகம்

www.padippakam.com

சகோதரனாக, சமஉரிமை உள்ளவனாக, அவனுக்கு உலகின் எந்த மூலையில் தீங்கு நேர்ந்தாலும் தன் உரிமைக் குரலையும், உதவிக் கரங்களையும் நீட்டத் தயங்குவதும் இல்லாத நிலைதான் இருந்து வருகின்றது.

மொத்தத்தில் தன் மதத்திற்குள் இருக்கின்ற ஒவ்வொருவனையும் மனிதனாகவே வைத்திருக்கின்றது. அங்கு அவர்களுக்குள்ளே ஏற்றத்தாழ்வுகள் அவமானங்கள் கிடையாது. சில மதங்கள் அதையும் கடந்து மற்ற மதத்தில் உள்ளவரையும் மனிதனாகவே ஏற்றுக் கொள்கின்றது. அவர்களது உரிமைக்கும், சுதந்திரத்திற்கும் அங்கீகாரம் கொடுக்கிறது. ஆனால் இந்து மதம் மட்டும் அதை நம்பியவனை, ஏற்றுக் கொண்டவனை, பூஜிப்பவனை, கடவுளின் உடம்பின் வெவ்வேறான உடலுறுப்புகளில் தோன்றியதாகக் கூறி, உச்சி முதல் பாதம் வரை அவனது பிறந்த இடங்களை அடிப்படையாக வைத்து அதன் அடிப்படையில் தலைப் பகுதியில் உற்பத்தியானவன் மிகவும் உயர்வானவன் என்றும், கடவுளின் கால் பாகத்தில் பிறந்ததாகக் கூறப்படும் ஒருவனை இழிவானவன் என்றும், அந்தப் பட்டியலில் எல்லாம் கூட பிறக்காதவன் ஒருவன் பஞ்சமன், தீண்டத்தகாதவன் என்றும் இம்மதத்தை ஏற்றுக் கொண்டவர்களையே தரம் பிரித்து பலகூறுகள் போட்டு ஒருவருக்கொருவர் நட்பாகவும், உறவாகவும் இல்லாமல் பகைமையை வளர்த்து வருகின்றது.

அப்படிப் பிறப்பினாலேயே ஒருவன் உயர்ந்தவனாக இருக்க முடியும்; இருக்கின்றோம், அதுதான் உண்மை என்று இந்த நூற்றாண்டில் கூறுகின்றீர்களே! சொல்வதற்கே அருவருப்பாக இல்லையா? இந்த வசனத்தை உலகமெல்லாம் சென்று, (உங்களுடைய லோகம் அல்ல) அதாவது பூகோளத்தில் உள்ள உலகமெல்லாம் சென்று அங்குள்ள மக்களிடத்தில் இந்து மதத்தில் உள்ளவர்களின் 'பிறப்பு ரகசியங்களை' எடுத்துக்கூறி (அவர்களை புரிய வைத்து) அதற்கு அங்கீகாரம் பெற்று வந்து உங்களின் தலையில் தோன்றிய தத்துவத்தை நிலை நிறுத்த முடியுமா?

தெரிந்தோ தெரியாமலோ, அறிந்தோ அறியாமலோ, ஏற்றுக் கொண்டோ அல்லது திணிக்கப் பட்டோ நானும் என் மக்களும் இந்து மதத்திற்குள் இருக்கின்றோமே, எங்கள் பிறப்பினை மட்டுமே காரணமாக்கி எங்களை அருவருக்கத்தக்கவர்களாக உருவகப்படுத்தியிருக்கின்றீர்களே, என் வேதனையை உங்களால் உணர முடியுமா? ஒரு மனிதனை எதைச் சொல்லி துன்புறுத்தினாலும் கலங்குவதைவிட, அவனது பிறப்பையே கேவலமாக்கும்போது அவன் எப்படியெல்லாம் கலங்குவான் என்பது உங்களுக்குப் புரியுமா? அதிலும் அவன் ஏற்றுக்கொண்ட மதமே அவனை தீண்டத்தகாதவனாக ஆக்கியிருக்கின்றது என்பதை தன்மானம் கொண்ட ஒருவன் எவ்வாறு தாங்கிக் கொள்வான். ஜாதிய அடிப்படையில் நான் படும் வேதனையை உங்களால் உணர முடியாது. ஏன் தெரியுமா? உங்களுக்கு மேலே ஒரு ஜாதியும் இல்லை. என் நிலைமை? எனக்குக் கீழே ஒரு ஜாதியும் இல்லை. இல்லை என்பதால் எனக்கு மகிழ்ச்சியே. ஏன்

**பிறப்பினாலேயே**
**ஒருவன் உயர்ந்தவனாக**
**இருக்க முடியும்;**
**இருக்கின்றோம்,**
**அதுதான் உண்மை என்று**
**இந்த நூற்றாண்டில்**
**கூறுகின்றீர்களே!**
**சொல்வதற்கே**
**அருவருப்பாக**
**இல்லையா?**

தெரியுமா? என் கால்களுக்குக் கீழே இந்த பூமி உள்ளது. உங்களுடைய கால்களுக்குக் கீழே வெறும் ஜாதிகள்தான் உள்ளன. இந்த ஜாதிகளை கூறு போடத்தான் தெரியும், முடியும் உங்களால். இதைத் தவிர நீங்கள் சாதித்தது என்ன?

எனக்குக் கீழே உள்ள நீங்களும், என் தோள்மீது பயணித்துக் கொண்டிருக்கின்றார்களே இதர மூன்று வருணத்தவர்கள் - அவர்களும், இந்த மண்ணில் வாழ்வதற்கு ஏற்ற வகையில் இந்த பூமியை சொர்க்க பூமியாக்கியிருக்கின்றேனே! என் உழைப்பினாலும், என் வியர்வையாலும் இந்த மண் வளமாயிற்று! என் கைகள் படாதபோது இந்த பூமி மனிதன் வாழ்வதற்கு ஏற்றதாகவா இருந்தது? கட்டிடம் கட்டினேன் சாலைகள் போட்டேன். உங்களுக்கு வீடு கட்டினேன். உங்கள் கடவுளுக்கும் நான்தானே வீடு கட்டிக் கொடுத்தேன். மலையைக் குடைந்தேன். மண்ணைக் குடைந்து என்கால்களுக்குக் கீழே உள்ள கனிமங்களை எடுத்துத் தந்தேன். எத்தனை உலோகங்கள் என் கால்களுக்கு கீழே. எவ்வளவு உழைத்தேன். என் பூமிமீது வீசிய கழிவுகளை அப்புறப்படுத்தி என் பூமியை தூய்மையாக்கினேன். என் உழைப்பால் இந்த பூமி வளம் பெற்றது. இந்த நிலத்தை நான் உழுதேன் விதைத்தேன், அன்றும் இன்றும். உங்களுக்கும் உங்கள் கடவுள்களுக்கும் சேர்த்து நான் சோறு போடுகின்றேன் என்ற உண்மை உங்களுக்கு எப்படித் தெரியாமல் போய்விட்டது. உங்களாலும் நீங்கள் பூஜிக்கின்ற கடவுளாலும் பசித்தவனுக்கு ஒருவேளை உணவு கொடுக்க முடியுமா?

சூரிய உதயத்தில் தலை குனிந்த நான் அஸ்தமனமாகியும் நிமிரவில்லை என்ற என்நிலை என் நியதி ஆகிவிட்டது. அதிலும் எனக்கு மகிழ்ச்சிதான். ஏன் தெரியுமா? குனிந்த நிலையில் நான் என் பூமியைப் பார்க்கின்றேன். நிமிர்ந்தால் என் தலைக்கு மேல் ஒரே அசிங்கமாக இருக்கின்றது - வெறும் சாதிகளாகவே இருக்கின்றது. இப்படி உழைத்து இன்று விகாரமாகிப் போனேன். ஆனால் நீங்கள் இன்று அறிக்கை விடுகின்றீர்கள். 'தலித் மக்கள் குளித்துவிட்டு சுத்தமாக கோவிலுக்குள் வாருங்கள்' என்று. நான் சுத்தமாக இருந்திருந்தால் இந்த தேசம் பட்டினியில் மடிந்திருக்குமே! நான் சுத்தமாக இருந்திருந்தால் இந்த பூமி நாறிப் போயிருக்குமே! நான் சொல்வது உண்மையா இல்


படிப்பகம்

www.padippakam.com

லையா என்று நிருபித்துப் பார்த்துவிடலாமா? 24 கோடி தலித் மக்களும் ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டம் செய்து காண்பிக்கலாமா?

உங்கள் சுத்தம் எப்படியிருக்கும் என்பது உங்களால் உறுதி கூறமுடியுமா? நீங்களும் உங்களோடு சேர்ந்து உங்கள் கடவுள்களுமே நாறிப் போகுமே! வாய்க்கு வந்ததை எல்லாம் பேசி விடலாம் என்று நினைத்து அறிக்கைகள் கொடுத்துக் கொண்டிருக்கின்றீர்களா? நானும் உங்களைப் போல சுத்தமாக இருக்கும் காலம் வரும். அப்போது நீங்கள் எங்கு இருப்பீர்கள் தெரியுமா? எம்மக்கள் விழிக்கத் துவங்கி விட்டால் அடுத்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு நீங்களும் உங்கள் சமூகமும் மலம் சுமக்க வேண்டிய காலம் வரும். ஏதோ இந்த மனித குலத்திற்கு அந்தணர்கள் மட்டும் எதை எதையோ சாதித்திருப்பதாக புத்தகம் வெளியிட்டிருக்கின்றீர்களே. இந்த மனித குலத்திற்கு இதுவரை நீங்கள் சாதித்தது வஞ்சகமும், துரோகமும், சூழ்ச்சியும், வேசித்தனமும்தானே தவிர இந்து மதத்தில் இருக்கின்ற ஒவ்வொருவனும் சகோதரனாக வாழவா வேதம் எழுதி வைத்தீர்கள். அந்தணர் என்று கூறிக்கொள்ளும் நீங்கள் கல்வி கற்கும் உரிமையை மட்டும் உங்களைத் தவிர வேறு எவரிடமும் போய்ச் சேராதவண்ணம் மிகவும் பத்திரமாக ஆண்டாண்டு காலமாக பாதுகாத்து வந்தீர்கள். கல்வி கற்றதனால் அரசனுக்கு அருகில் அமரவும் ஆலோசனை வழங்கவும் வாய்ப்பு பெற்றீர்கள். அந்த வாய்ப்பினை லாவகமாக தக்க வைத்துக் கொண்டீர்கள். ஆள்பவர்கள் சத்திரியர்கள். அவர்கள் வீரம் செறிந்தவர்கள். வில்லை எடுப்பார்கள், போர் முடிப்பார்கள். மாண்டவர் போக மீண்டவர்க்கு நீங்கள் ஆலோசகராக இருந்தீர்கள். அவனிடம் வீரம் இருந்தது; போர்க்களத்தில் இறந்தான். உங்களுக்கு வீரம் என்றால் என்னவென்றே தெரியாது. உங்களிடம் நரித்தனம் இருந்தது. எனவே யார் ஆண்டாலும் ஆலோசனை கூறினீர்கள், கூறிக்கொண்டிருக்கிறீர்கள்.

உங்கள் கைவசம் இருந்த கல்வி, அன்றே எங்கள் கைக்கு மாறியிருந்தால் நரிகள் கூட்டம் நாடு கடத்தப்பட்டிருக்கும். ஆனால் இன்னமும் கல்வி உங்களிடம் தான் இருக்கின்றது என்பதை சொல்லிக் கொள்வதில் எனக்கொன்றும் வெட்கமில்லை. காலம் மாறும். இன்னமும் கூட உங்கள் குலத்தோன்றல் 'சோ' தனது பத்திரிக்கையில் அரியானா சம்பவத்திற்கு தலையங்கம் எழுதுகிறார் 'நடந்தது அட்டூழியம்' என்று. அயோக்கியர்களை உடனே கைது செய். தவறு செய்தவர்களை தூக்கிலிடு என்றுகூட எழுத மனமில்லை அவருக்கு. மேலும் 11.11.2002 நாளிட்டதுக்ளக் தலையங்கத்தில் 'தாழ்த்தப்பட்டவர்களோடு மோதல் வருவது பிற்படுத்தப்பட்ட மக்களைச் சார்ந்தவர்களுக்குத்தான்' என்று அந்தணர் குலத்தைக் காப்பாற்றுகிறார்.

தலித் மக்களுக்கு எதிரான கொடுமைகளை அந்தணர்கள் ஒருபோதும் செய்வதில்லை. இதர ஜாதி இந்துக்கள்தான் செய்கிறார்கள் என்று கூறி தப்பித்துக் கொள்கிறார். ஆனால் உண்மை என்ன? உங்களுக்குக்

**என் உழைப்பினாலும், என்**
**வியர்வையாலும்**
**இந்த மண் வளமாயிற்று! கட்டிடம்**
**கட்டினேன். சாலைகள் போட்டேன்.**
**உங்களுக்கு வீடு கட்டினேன்.**
**உங்கள் கடவுளுக்கும் நான்தானே**
**வீடு கட்டிக் கொடுத்தேன்.**
**மலையைக் குடைந்தேன்.**
**மண்ணைக் குடைந்து என்**
**கால்களுக்குக் கீழே உள்ள**
**கனிமங்களை எடுத்துத் தந்தேன்.**
**எத்தனை உலோகங்கள்**
**என் கால்களுக்குக் கீழே.**

கீழே உள்ள ஜாதி இந்துக்கள் என்ற மூன்று வருணத்தவரும் எங்களை அடிப்பதற்கும், உதைப்பதற்கும், கற்பழிப்பதற்கும், கொளுத்துவதற்கும் என்றே உங்களுக்காக உருவாக்கப்பட்ட அடியாள் கூட்டம்தானே! இந்த மூன்று பிரிவினருக்கும் சாதிய மேலாதிக்கம் என்ற விஷத்தை கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் இரத்தத்தில் ஏற்றி அவர்களை இன்று வெறிபிடித்த மனித மிருகங்களாக நடமாடவிட்டது, உங்களின் இந்து மதத்தின் தத்துவமும் வக்கிரச் சிந்தனைகளும் கழிசடைக் கோட்பாடுகளும்தானே! உங்கள் கூற்றுப்படி நாங்களும் பிற்படுத்தப்பட்டவர்களும்தானே ஒருவரை ஒருவர் வெட்டிக்கொண்டு மாய்ந்து போகிறோம்! எதற்கு வெட்டிக் கொள்கிறோம் என்ற உண்மை நீங்கள் அறிந்ததுதானே. தேரில் உங்களை உட்காரவைத்து தெருத்தெருவாக இழுத்து வருவது? நீயா! நானா? என்பதில், தேரின் கயிற்றை பிடித்து இழுப்பதற்குக் கூட எங்களுக்கு உரிமையில்லை என்று எங்களை வெட்டுகிறார்கள், கொளுத்துகிறார்கள் எங்கள் வீடுகளையெல்லாம்.

உங்களுக்கு ஒன்றைச் சொல்லட்டுமா? இன்னமும் தேரில் சுகமாக சவாரி செய்து கொண்டிருக்கிறீர்கள். கயிறு பிடிப்பதற்கு வெட்டிக்கொள்ளும் நாங்கள் தேரில் உட்காருவதற்கு வெட்டிக் கொள்ளத் துவங்கும் காலம் வெகு தொலைவில் இல்லை. அந்த நாள் வரும்போது நிராயுதபாணியாக தேரில் இருக்கும் உங்கள் நிலையை எண்ணிப் பாருங்கள். வளர்த்த கடா மார்பில் பாயும் என்பது முதுமொழி. உங்களால் விஷமேற்றப்பட்டு மனித மிருகங்களாக நடமாடிக் கொண்டிருக்கும் உங்கள் அடியாள் கூட்டத்திற்கு முதல் பலி யாராக இருக்கும் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள். நான் இந்துவாகவே இருக்கவேண்டும். இந்த கொடுமைகளையெல்லாம் அனுபவிக்க வேண்டும். நீங்கள் எல்லாம் அதைப்பார்த்து ரசிக்க வேண்டும். அதற்கு ஒரு கூட்டம் தேவை. அவர்கள் ஏன் என்று கூட கேட்கக் கூடாது என்றுதானே இம்மதத்திற்குள்ளேயே இருக்க வேண்டும் என்று சட்டம் இயற்றி வைத்திருக்கின்றீர்கள்.

என் சகோதரர்கள் என்னிடம் அப்பாவித்தனமாக கேள்வி கேட்கின்றார்கள். என்ன தெரியுமா? மனித



படிப்பகம்

www.padippakam.com

நாகரீகத்திற்குத் துளியும் தொடர்பில்லாத, மனிதனை மனிதன் கேவலப்படுத்துகின்ற, இந்து மதத்திற்குள்ளேயே இருக்கின்ற தலித்துகளை இவ்வளவு அசிங்கப்படுத்துகின்ற, உலகத்தில் தோன்றிய மதத்திற்கெல்லாம் இல்லாத அருவெறுப்பான கழிசடை தத்துவங்களைக் கொண்ட இந்து மதத்தின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் சங்கராச்சாரிகள் போன்ற இந்து மதத்தலைவர்கள் திருத்தியமைக்கக் கூடாதா? விஞ்ஞானத்தில் மனிதன் செவ்வாய் கிரகத்தை நோக்கிச் செல்லும்போது இந்தியாவில் இப்படி ஒரு மதம் சக மனிதனை ஐந்தாயிரம் ஆண்டுகள் பின்னோக்கி இழுத்துச் செல்கின்றதே! இந்த மதத்தின் இவ்வளவு 'உயர்ந்த தத்துவங்களை' காலத்திற்கேற்றவாறு மாற்றியமைக்கக் கூடாதா? இதை மாற்றி அமைக்க தூய்மைப்படுத்த 'மெரினா கடற்கரையில் கூட்டம் போடமாட்டார்களா?' அல்லது நாம் அந்த கூட்டத்தை நடத்தக்கூடாதா? நாமும் இந்துக்கள்தானே! என்கிறார்கள்.

ஐயா ஜெயேந்திரர் அவர்களே, இந்த மக்களின் அறியாமையைப் பார்த்தீர்களா? இவர்களின் அறியாமை ஆச்சரியமாக இல்லையா? இந்த கேள்விக்கு மிகச்சரியான பதில் உங்களுக்கும் எனக்கும் மட்டும் தான் தெரியுமில்லையா? இந்து மதத்தில் உள்ள ஜாதிகளையும், அதில் உள்ள ஏற்றத்தாழ்வுத் தத்துவங்களையும் அதில் உள்ள குப்பை கூழங்களையும், சாக்கடையையும் அகற்றிவிட்டால் மிஞ்சுவது என்ன? அரைகுறை ஆடையோடு இருக்கின்ற இந்து மதம் அம்மணமாகி விடும் இல்லையா? இந்து மதத்தை தாங்கி நிற்பது இந்த உளுத்துப்போன நான்கு ஜாதித் தூண்களும் உங்களின் நரித்தனமும்தானே.


எனவேதான் அய்யா அவர்களே, ஏறத்தாழ 2000 ஆண்டுகளாக இழி தொழிலே பார்த்து வந்த நாங்கள் இந்த மண்ணும் இதில் வாழ்ந்த மக்களும் தூய்மையாக, சுகாதாரமாக, கௌரவமாக வாழ எவ்வளவோ அசிங்கங்களையெல்லாம் அப்புறப்படுத்தி நாங்கள் நேசித்த இந்த மண்ணை தூய்மைப்படுத்தினோம், பண்படுத்தினோம். மனிதன் வாழ்வதற்கு ஏற்றதாக இந்த மண்ணை தூய்மைப்படுத்தியபோதெல்லாம் நான் மகிழ்ந்தேன், பூரித்தேன். ஏன் தெரியுமா? இந்த மண்ணுக்கு சொந்தக்காரன் நான், இது எனது மண், எனது கலாச்சாரத்தை வளர்த்த மண் என்பதால். ஒரு காலத்தில் இது நாங்கள் ஆண்ட பூமி நான்கு நரிகளின் தந்திரத்தால் இன்று வீழ்ந்து கிடக்கின்றோம். அதனால்தான் என் சகோதரனுக்குச் சொன்னேன் 'சகோதரா, இரண்டாயிரம் ஆண்டுகளாக மனிதக் கழிவுகளையும் மிருகக் கழிவுகளையும் சுத்தம் செய்தே பழகிப் போய் விட்டது. இந்த மண்ணைச் சுத்தம் செய்த கைகளினால் இந்து மதத்தைச் சுத்தம் செய்யும் வேலை நமக்கு வேண்டாம். இதுவரை நாம் சுத்தம் செய்வதையெல்லாம் விட இது கேவலமானது.இந்தக் கழிவு நச்சுத் தன்மையுடையது. இது விஷவாயுவாகி நம்மையெல்லாம் அழிக்கும் முன் இங்கிருந்து நாம் வெளியேறி விடுவோம்' என்றேன். மீண்டும் என் சகோதரன் கேட்டான் 'வெளியேறி விடலாம் ஆனால் எங்கு செல்வது?' அவனுக்குக் கூறினேன், 'தம்பி, வெளியேறி நாம் வேறு எங்கும் சென்றுவிட வேண்டாம். அங்கெல்லாம் ஏறத்தாழ இங்குள்ள நிலைதான் இருக்கின்றது. ஆகையால் நாம் இன்று இந்த அளவிற்கேனும் சிந்திக்கின்றோம் என்றால் அது நமது அறிவுலக மாமேதை பாபா சாகேப் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் அயராத உழைப்பினாலும் சிந்தனையாலுமேதான். இந்த உண்மையின் ரகசியத்தை நம் சகோதரர்களுக்கு விளங்க வைக்க வேண்டும். அந்த மாமேதை இந்தப் பிரச்சினைக்கு எடுத்த முடிவுதான் மிகச் சரியானதாக இருக்கும். அவர் நிறைய கற்றவர். நிறைய சிந்தித்தவர். இந்த மக்களின் சமூக மேம்பாட்டிற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். அவர் காட்டிய பாதைதான் நிச்சயமாக நம் சந்ததிகள் கௌரவமாக இனிவரும் காலங்களில் மனிதர்களாக வாழ்வதற்கு சரியான பாதையாக இருக்கும்' என்றேன்.

அய்யா ஜெயேந்திரர் அவர்களே, இறுதியாக ஒன்றைக் கூறுகிறேன். இந்து மதத்தில் நான் எவ்வளவு வேதனைகளைச் சுமந்து வந்து கொண்டிருக்கின்றேன் என்பதனை மிகவும் தெளிவாக கூறியிருக்கின்றேன். இவைகளையெல்லாம் நீங்கள் தெரிந்திருக்கலாம். அனுபவித்திருக்க வாய்ப்பில்லை. எதையுமே அனுபவித்துப் பார்த்தால்தான் அதில் உள்ள சுகமும் சுமையும் தெரியும். இரண்டாயிரம் ஆண்டுகள் பட்ட வேதனைகளை தயவுசெய்து நீங்கள் அனுபவிக்க வேண்டும்.நமது மதத்தில் அதற்கு பிரகாசமான வாய்ப்பு உண்டு. நமது மதத்தின் முதல் தத்துவமே மறுபிறவிதானே!

நமது விஷ்ணு பகவான்கூட 10 அவதாரம் எடுத்தாரே. அந்தப் பத்தில் மலம் தின்னும் பன்றியாகக்கூட அவதாரம் எடுத்தார். ஆனால் ஒரு அவதாரத்தில் கூட தலித்தாக உருவம் எடுக்கவில்லை. ஏன் தெரியுமா? அது அவ்வளவு துயரமானது, கேவலமானது என்பதை அவர் அறிந்ததனால்தான். ஆனால் நீங்கள் அப்படியில்லை. 'லோககுரு.' உலகத்தில் இருப்பவர்களின் வேதனையின் ஊற்றுக்கண் தெரிந்து அதை தீர்த்து வைக்கின்றீர்கள். எனவே, பகவானின் அனுக்கிரஹத்தால் அடுத்த பிறவியில் இந்தியாவில் இந்து மதத்தில் ஒரு தலித்தாகப் பிறந்து நான் கூறிய செய்திகளின் உண்மை நிலையை உணருங்கள். அதற்கு அடுத்த பிறவியில் மீண்டும் ஜெயேந்திரராக வந்து இந்து மதத்தை கலைத்து விடுங்கள். இந்தியா உலக அரங்கில் ஒரு கௌரவமான நாடாக பிரகாசிக்கும். நம்மை ஈன்ற மண்ணுக்குச் செய்யும் மிகப்பெரிய தேசத் தொண்டாக இருக்கும்.

நன்றி வணக்கம். ஜெய்பீம்!

**தங்களன்புள்ள**



www.padippakam.com

# ஆதி திராவிடர்களும் பெரியாரும்

■ அன்பு பொன்னோவியம்

அன்புடையீர்,

2.2.1962 தங்கள் இதழின் தலையங்கத்தில் 'ஆதி திராவிடர்களும் கண்ணீர்த் துளிகளும்' என்ற தலைப்பில் சமீபத்தில் பெரியார் கூறியதாகக் கூறப்படும் ஒரு சம்பவத்திற்கு தாங்கள் விளக்கம் தந்திருக்கிறீர்கள். அதில் 'நமது மக்களாக, நமது மக்களான, நமது மக்களை, நம் மக்களும்' என்ற வார்த்தைகளை அன்போடும் உரிமையோடும் தாங்கள் கையாண்டிருப்பதைக்கண்டு ஆதி திராவிடர் மீது தங்களுக்கிருக்கும் நல்லெண்ணத்திற்கும் பரிவிற்கும் பாராட்டுகிறேன்.

"துணிவிலை ஏறிவிட்டதற்குக் காரணம் இப்போ பறைச்சிகளெல்லாம் ரவிக்கை போடுவதுதான்! வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பதற்குக் காரணம் பறையன்களெல்லாம் படித்துவிட்டதுதான்" என்று பெரியார் கூறியதாக செய்திகள் வந்தபோது மலைத்து விட்டவர்கள் பலரில் நானும் ஒருவன். ஆனால் தாங்கள் குறிப்பிட்டிருந்ததைப் போன்று நான் 'அப்பாவி' அல்ல. ஏனெனில் 1939-ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பெரியார்ரையும் அவரது இயக்கத்தையும் கூர்ந்து கவனித்து வரும் பல பேர்களில் நானுமொருவன். எங்களது திகைப்பிற்குக் காரணம் பெரியார் அவர்களோ, அன்றி அவரது பத்திரிக்கையோ அது பற்றிய விளக்கத்தை சரியாக தராமையாலும், பொதுக்கூட்டங்களிலும்கூட அதைப்பற்றி பேச்சு ஏதும் வராததாலும், குறிப்பாக சமீபத்தில் நடந்த மாநாட்டின் போது அதைப்பற்றி தகவல் எதையும் தெரிந்து கொள்ள முடியாத காரணத்தாலும் எங்களுக்கு அப்படிப்பட்ட 'மலைப்பு' ஏற்பட்டதில் தவறில்லை - வியப்பில்லை. எனினும் அவசரப்படாது அதைத் தெரிந்துகொள்ள வேண்டிய ஆர்வத்தில் நானும் இன்னும் பலரும் இருக்கின்றோம் என்பதை தங்களுக்கு கூறிவிட ஆசைப்படுகிறேன்.

அந்த 'சம்பவம்' ஒரு சாதாரண பிரச்சினையாக பெரியாரும் அவரது இயக்கமும் கருதியிருக்கக் கூடும். ஆனால் அது ஒரு சமுதாயத்தைப் பற்றியது என்பதோடு ஒரு தலைவர் நிலையிலிருப்பவர் அப்படி கூறினாலும் கூறாவிட்டாலும் அதுபற்றிய வதந்திகளுக்கு விளக்கம் தருவது அவருடைய பொறுப்பாகும். இது மிகச் சாதாரண பிரச்சினையென்றோ, இவர்களுக்கு விளக்கம் தரவேண்டிய அவசியமில்லையேன்றோ பெரியாரோ அன்றி அவரது இதழோ - இயக்கமோ கருதுமானால் எங்களைப் போன்றவர்கள் மலைப்பதிலே தவறில்லை. தவறாக கருதுவதிலேயும் குற்றமில்லை.

என்னைப் போன்று பலர் மலைப்பதற்கு மற்றொரு காரணமுண்டு. பெரியார் பல சமயங்களில் ஆதி திராவிட மக்களை சாடி, பழித்துபேசியிருக்கிறார். 19.6.47 பெரியர் பேச்சும், 24.4.58 விடுதலை தலையங்கம் போன்றவைகளையும் சான்றாக கூறலாம். அவை சில சமயங்களில் நேரிடையாகவும், சூசகமாகவும் இருக்கும். காரணம் எதுவாக இருந்தாலும் பெரியார் போன்ற தலைவர் நிலையிலிருப்பவர்க்கு அது அழகல்ல, நல்லதல்ல. எனினும் பெரியாரை ஆதி திராவிட பெருங்குடி மக்களும், தலைவர்களிலே சிலரும் இன்னமும் 'பெரியாராகவே' மதிக்கின்றனர். பெரியாரை நன்றாக புரிந்து கொண்டவர்கள் ஆதி திராவிட மக்கள். பெரியாருடன் சுயமரியாதை இயக்கத்தில் உழைத்த ஆதி திராவிடர்களில் பலர் இன்னமும் உயிருடன் இருக்கின்றனர். பெரியார் அவர்களின் கொள்கைகளை ஏந்தி வந்த புரட்சி, பகுத்தறிவு, குடியரசு போன்ற இதழ்கள் என்னைப் போன்றவர்களிடம் இருந்து கொண்டிருக்கிறது. ஆக, பெரியார் அவர்களை மிக நன்றாக ஆதி திராவிடர்கள் புரிந்து கொண்டவர்கள் என்பதோடுகூட மற்ற வகுப் பாரைக் காட்டிலும் பெரியாரையும் அவரது இயக்கத்தையும் வளர்த்தப் பெருமை ஆதி திராவிட பழங்குடி மக்களையேச் சாரும் என்பதையும் என்னால் அறுதியிட்டுக் கூற முடியும். ஏனெனில் பல சமயங்களில் ஆதி திராவிட மக்களை 'கொள்கையை புரிந்து கொண்டவர்கள்' என்று பெரியாரே புகழ்ந்து கூறியிருக்கின்றார். பெரியாருடைய கொள்கையை பெரும்பான்மையான பழங்குடி மக்கள் வரவேற்றக் காரணத்தால்தான் பெரியாரால் நடத்தப்பட்டு வந்த அமைப்பை 'பறையர் கட்சி' என்று மற்றவர்கள் குறிப்பிட நேர்ந்தது. 'சுயமரியாதைக் கூட்டம் என்றாலே பெரும் பாலும் சேரிகளில்தான் நடக்கும். சுயமரியாதை திருமணங்களும், ஏறக்குறைய அனைத்துமே சேரியில்தான் நடக்கும்.' (விடுதலை 7.12.61) பெரியார் நடத்திய மொழிப் போராட்டத்தில் முதல் பலியாக்கப்பட்டவன் ஆதி திராவிடன் என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். அவருடைய இறுதி போராட்டத்தில் சிறையிலும், அடிபட்டும் இறந்தவர்கள் எண்ணிக்கையில் ஆதி திராவிடர்களே அதிகமானவர்கள் என்பதை பெரியாரே தனக்குத் தந்த வரவேற்பில் கூறியிருக்கின்றார். பெரியார் இந்த நாட்டு மக்களுக்கு பொதுவாக தன் கொள்கைகளை தந்தார். ஆனால் மற்ற வகுப்பினரைக் காட்டிலும் ஆதி திராவிட மக்களே அதற்கு ஆதரவு தந்திருக்கின்றனர் என்பதை யாரும் மறைக்க, மறுக்க முடியாது. எனவே ஆதி திராவிடருக்கு பெரியார் வழிகாட்டினார் என்ற பெருமை பெரியார்க்கே உரியதாகும் என்றால் பெரியாரை வளர்த்த பெருமை ஆதி திராவிடப் பெருங்குடி மக்களையே சாரும் என்பதில் எள்ளவும் தவறில்லை.

நிற்க...

'...அம்பேத்கார் போன்றவர்கள் வாயளவில் ஆதி திராவிடர்களுக்காகப் பரிந்து பேசிக்கொண்டா லும்... ஆதி திராவிட மக்களுக்காக அவர்களின் உரிமைகளுக்காக இந்தியாவில் எழுந்த முதல் குரலே பெரியார் அவர்களின் அந்தக் குரல்தான்...' என்று பெரியார் மீதுள்ள அளவு கடந்த பற்றுதலினால் மிகைப்பட கூறியிருக்கிறீர்கள்.

ஆதி திராவிடர்களுக்காகவும் 'இழிந்த சாதி' என்று... வேத சாஸ்திரங்களும், மதமும் ஒதுக்கி வைத்திருக்கிற மக்களுக்காகவும் தந்தை பெரியார் அவர்கள் கடந்த 40 ஆண்டுகளாக செய்து வந்திருக்கிற தொண்டும்... என்று தாங்கள் மற்றொரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். எனவே தங்களின் கூற்றுப்படி பெரியார் அவர்கள் ஆதி திராவிடர்களுக்கன்றி மற்ற வகுப்பார்களுக்கும் (?) தொண்டு செய்தவராகிறார். எனவே ஆதி திராவிடர்கள் மட்டும் அவருக்கு கடமைப்பட்டவர்களல்ல, மற்ற வகுப்பினரும் அவருக்கு கடமைப்பட்டவர்கள் என்பதை வலியுறுத்தி பெரியாருக்கு பெருமை தேடித் தருகிறீர்கள் மிகவும் மகிழ்ச்சி!



படிப்பகம்

www.padippakam.com

ஆனால், ஆதி திராவிட மக்களுக் காக அவர்களின் உரிமைகளுக்காக இந்தியாவில் எழுந்த முதல் குரலே பெரியார் அவர்களின் அந்தக் குரல்தான் என்று அறுதியிட்டுக் கூறியிருக்கிறீர் கள். இதைப்பற்றி தாங்கள் தயைகூர்ந்து பெரியார் அவர்களையே சந்தித்து கேட்டுப் பாருங்கள். அவருடைய கருத்து நிச்சயமாக வேறாக இருக்கும். பெரியார் அவர்களுக்கு பெருமை தேடு வதிலேயே தாங்கள் முழு கவனம் செலுத்துகிறபோது பேரறிஞர் அம்பேத் கார் அவர்களை தாங்கள் 'நடு நிலைமை' எண்ணத்தோடு பார்க்கத் தவறிவிட்டீர்கள். காரணம் பேரறிஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை தாங்கள் படிக்காததுதான். 'சரியான முழு வாழ்க்கை வரலாறும் புத்தகமாக இல்லை என்றுதான் நினைக்கிறேன்' என்று அம்பேத்கார் வரலாற்றைப் பற்றி கேட்டதொரு வினாவிற்கு 20.10.61-ல் தாங்கள் விடை தந்திருப்பது இதை வலியுறுத்துவதாக இருக்கிறது. எனினும் தாங்கள் 'அம்பேத்கார் வீரமிக்க வர்' என்று 27.11.59 நாத்திகத்தில் குறிப்பிட்டிருப்பதையும் தங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பேரறி ஞர் அம்பேத்கார் ஒரு புறமிருக்கட்டும். அவரைப்பற்றி, அவர் எழுதிய புத்தகங் கள், அவரது போராட்டங்கள், அவைக ளால் கிடைக்கப் பெற்ற நன்மைகள் ஆகிய விபரங்கள் இன்னமும் அழிந்து விடவில்லை. வாய்ப்பு ஏற்படுமானால் தங்களுக்கு அதைப்பற்றி எழுதுகிறேன்.

'இழிந்த சாதி என்று ஒதுக்கி வைத் திருந்த மக்களுக்காகவும்' பெரியார் போராடியதாக தாங்கள் எழுதியிருக் கிறீர்கள். அவர்கள் கம்மாளர், வன் னியர், நாடார், பறையர் ஆகிய மக்களை குறிக்கும் என்று கருதுகிறேன். ஏனெ னில் வரலாற்றுப்படி இவ்வினத்தார் அனைவரும் தாங்கள் குறிப்பிட்டிருந்த படி வேத, சாஸ்திரங்களால் தீண்டா மையை ஒரு காலத்தில் ஏற்றிருந்தவர் களாகும். அவர்களில் கம்மாளர்களுக்கு வெகு காலத்திற்கு முன்பும், நாடார் களுக்கு சமீப காலத்திலும் விடுதலை கிடைத்தது. எனினும் தாங்கள் 7.8.59 நாத்திக இதழில் குறிப்பிட்டிருந்தபடி சமீப கால வரையில் உயர்த்தப்பட்ட வகுப்பினருக்கு அடங்கி ஒடுங்கியி ருக்க நேரிட்டது. இன்னும் ஓரளவு இது இருக்கத்தான் செய்கிறது.

நாடார் குல மக்களின் அத்தகைய நிலைக்கும், அவர்களது 'கோயில் நுழைவு' போராட்டத்திற்கும் பெரியார் அவர்கள் போராடினார் என்று நிச்சய மாக தாங்கள் கூற முடியாது. நாடார் மக்களின் போராட்டம் 1871-ல் தொடங்கி 1920-ல் முடிவு பெற்றது. 1920-இல் தான் பெரியார் அரசியலில் நுழைய நேரிட்டது என்பதை தாங்கள் நாத்திகம் இதழ் ?.10.59 வெளியீட்டில் குறிப்பிட்டிருப்பதை தங்கள் நினை வுக்குகொண்டு வருவதால் வருத்தப்பட மாட்டீர்கள் என நம்புகிறேன். இதைக் கூறுவதின் நோக்கம் நெடுங்காலமாக வே எல்லா சமுதாய மக்களும் தங்கள் உரிமைகளுக்காக காலந்தோறும் விட்டு விட்டு போராடி வந்திருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்டவே இதனை எழுத நேர்ந்தது.அப்படிப்பட்ட போராட் டங்கள் ஒரு குறிப்பிட்டவரால் நடத்தப்பெ பற்று வெற்றி பெற்றதில்லை, வெற்றி பெற முடி யாது. இது வரலாறு காட்டும் உண்மையாகும்.

தமிழகத்தை பொறுத்தவரை பதி னெட்டாம் நூற்றாண்டின் இடையில் தமிழ் மக்கள் ஒவ்வொரு பிரிவினரும் தங்களது உரிமைகளுக்காக முனைந்து நின்றனர். பறையர் முதுகுடியினர் எல்லா வகுப்பினருடனும் மோத நேரிட்டு அதன் பயனாக சிற்சில மாறுதல் அடையகாரணமா யிருந்த ஆண்டு 1652 என்று ஒரு வரலாற்று ஆராய்ச்சியாளர் குறிப் பிடுகிறார். திருநெல்வேலியில் 1871-ஆம் ஆண்டில் நாடார் சமுதாய மும் பறையர் முதுகுடியும், மறவர் குல மக்களோடு போராடியது குறிப்பிடத் தக்க வரலாற்று நிகழ்ச்சியாகும். நாடார் மக்கள் 1920-லும் பறையர் பழங் குடிமக்கள் 1957-லும் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறார்கள். வன்னிய சமுதாயமும் வேளாளர் (முதலியார்) மக்களோடு போர் துவங்கி 1885-லிருந்து போராடி 1924-இல் முடிவு கண்டார்கள் என்பது வரலாறு. எனினும் இந்த உரிமைப் போராட்டங்களை, 'கலகம்' என்றே அன்றைய வெள்ளை அரசாங்கமும் 'உயர்த்தப்பட்ட வகுப் பின'ரும் குறிப்பிட்டார்கள்.

இருபதாம் நூற்றாண்டிற்கு சற்று முன்பு 1892-இல் சென்னையில் இரட்டைமலை ஆர். சீனுவாசனாரால் ராயப்பேட்டை வெஸ்லிமிசன் பள்ளி யில் ஒரு மாபெரும் மாநாடு கூட்டப் பெற்று அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகியவற்றை தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு எடுத்துக் கூறப்பட் டது. இதையே ஆதி திராவிடர்களின் முதல் முழக்கமாக எல்லோரும் கருது கின்றனர். ஆனால் 1884-இல் காங்கிரஸ் சபை கூடுவதற்கான முயற்சிகள் நடைபெற்ற முதல் ஆலாசனைக் கூட் டத்திற்கு சென்றிருந்த இரட்டைமலை சீனுவாசனார் அவர்கள் அங்கு 'உயர்ந்த' வகுப்பாளர்களுக்கே செல்வாக்கிருப்ப தையும், தாழ்த்தப்பட்டோர்களுக்கு இடமில்லை என்பதையும், அப்படியே இருந்தாலும் தாழ்த்தப்பட்டோர்களது பிரச்சினைகளை கவனிக்க அன்றைய நிலையில் அவர்கள் தயாராக இல்லை என்பதையும் தெரிந்த பிறகு வெளியிட்ட அறிக்கையையே ஆதி திராவிடர்களின் முதல் முழக்கமாக கொள்ளல் வேண் டும். அது சர்.பி. தியாகராய செட்டியார் அவர்கள் 20.11.1916-இல் வெளியிட்ட 'முதல் அறிக்கை' பிரகடனம் போன்ற தாகும். உயர்திரு. சீனுவாசனார் அந்த அறிக்கையில் 1680, 1996, 1777 ஆகிய ஆண்டுகளில் கிழக்கிந்திய கம்பெனி யாரிடமே ஆதிதிராவிட மக்களின் முன் னோர்கள் போராடியிருப்பதாக குறிப் பிட்டிருக்கிறார்கள். இது பற்றிய மிக குறைவான தகவல்களையே நான் பெற முடிந்தது என்றாலும் அதை சாதாரண வரலாறு என்றோ, நம்ப முடியாத ஒன்று என்றோ யாரும் மறுத்து விட முடியாத வைகளாகின்றன.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி யிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் 'பஞ்சமர்' சமுதாயத்தின் தலைவர்கள் பலர், தம் மக்களுக்காக கடுமையாக உழைக்க ஆரம்பித்தனர். அவர்களில் ஷட்டாவதானம் வைரக் கண் வேலாயுதபுலவர், பண்டித அரங் கையதாஸ், பண்டிதர் க. அயோத்தி தாஸ், வேம்புலி பண்டிதர், ஏ.பி. பெரிய சாமி புலவர், முத்துவீர நாவலர் போன்ற தமிழறிஞர்களும்- ராஜேந்திரம் பிள்ளை, திருசிபுரம் பெருமாள், இரட்டைமலை சீனுவாசன், ஜான் ரத்தினம், கோலார் ஜி. அப்பாதுரை, புதுவை ரா. கனகலிங்கம் போன்ற எழுத்தாளர்களும் - பஞ்சமன், பறையன், திராவிடமித்திரன், திராவிட பாண்டியன், மகாவிகடதூதன், ஆன் றோர் மித்திரன், தமிழன், இல்லற ஒழுக்கம் போன்ற பத்திரிக்கைகளின் வாயிலாக - அத்துவைதானந்த சபை, சுபச்சார சங்கம், பறையர் மகாஜன சங்கம், பஞ்சம கல்விக் கழகம், திராவிட மகாஜன சங்கம் ஆகிய பல்வேறு அமைப் புகள் மூலமாக ஆதி திராவிடர்களுக் காக உழைத்திருப்பதை பெரியார் போன்றவர்களும் பிறரும் அறிந்திருக் கக்கூடும்.

20.8.1917-க்குப் பின் இந்தியா வெங்கும் சுற்றுப் பயணம் மேற்


படிப்பகம்

www.padippakam.com

கொண்ட 'மாண்டேகு சேம்ஸ்போர்ட்' குழுவிற்குப்பிறகு அறிஞர் அம்பேத்கார், இரட்டைமலை சீனுவாசன், எம்.சி. ராஜா, எம்.சி. மதுரைப்பிள்ளை, கோவை வீரையன், பெரும் வணிகர் ஷாப்பு பி.வி. சுப்பிரமணியம், வாசுதேவப் பிள்ளை, அனுமந்த உபாசகர், முனுசாமி பிள்ளை, சுவாமி சகஜாநந்தம் போன்றவர்களும் மற்றவர்களும் அரசியலில் ஆதி திராவிடர் களுக்கு பாடுபட்டது எல்லோரும் அறிந்ததொன்றாகும். அறிஞர் அம்பேத்கார், உயர்திரு எம்.சி. ராஜா, உயர்திரு இரட்டைமலை ஆர். சீனுவாசனார் ஆகியோர்கள் 'வட்டமேஜை' மாநாட்டிற்கு சென்றவைகள் போன்ற நிகழ்ச்சிகளையும் தாங்கள் அறிந்திருக்கக்கூடும். உயர்திரு எம். சி. ராஜா அவர்கள் சென்னை அமைச்சராக இருந்தபோது ஆற்றிய பணி பெரும்பணியாகும், சீனுவாசன் ஆக்ட், வீரையன் ஆக்ட், மதுரைப்பிள்ளை ஆக்ட் போன்ற வைகள் ஆதி திராவிட மக்களின் நல் வாழ்விற்கு வழிகோலியவை என்றால் மிகையாகாது.

மற்றும் தமிழகத்தின் மூடக் கொள்கைகளை முதன்முதலில் 1900-லிருந்து முன்பிருந்து சாடியவர் பண்டித க.அயோத்திதாஸ் அவருடைய சிறு நூல்கள் போற்றத் தகுந்தவைகளாகும். அவர் தமது 'தமிழன்' பத்திரிக்கையில் (1907) பௌத்த தர்மத்தைப் பற்றியும், திருக்குறளையும் வேறு பல பகுத்தறிவு வாதங்களையும் 1909-லிருந்து தொடர்ந்து நடத்திக் கொண்டு வந்தவர். அவரால் விழிப்புணர்ச்சியடைந்த தமிழர்கள் ஏராளம்.

ஆதி திராவிடரில் பெருஞ்செல்வருள் ஒருவரும், தலைவருமான எம்.சி. மதுரை பிள்ளை அவர்கள் 1909-ஆம் ஆண்டில் பிள்ளையார் பொம்மையை செருப்பால் அடித்து உடைத்தது, பேரறிஞர் அம்பேத் கார் அவர்கள் 1927-ஆம் ஆண்டில் மனுஸ்மிருதியை மாநாட்டில் கொளுத்தியது, கோயில் ஒன்றை செய்து அதை பூனா தெருவில் வைத்து உடைத்தது போன்ற சம்பவங்களையும் ஏனையவற்றையும்கூட தங்களுக்கு என்னால் எடுத்துக்கூற முடியும். வியக்கத்தக்க வகையிலே அன்றைய 'பறையர்' முதுகுடியினர் தங்களுக்காக தாங்களாகவே, தனித்து நின்று போராடியது இன்று மறைந்துவிட்டவைகளாக, மறைக்கப்பட்டவைகளாக இருக்கலாம் எனினும் வெறுப்பு விருப்பற்ற 'நடுநிலைமை' ஆராய்ச்சி யாளர்களால் என்றாவது ஒரு நாள் எதிர்கால வரலாற்றில் ஆதி திராவிடர்களின் சரித்திரத்தை நிச்சயம் இடம் இடம்பெற செய்வார்கள். நாடார், வன்னியர், கம்மாளர் ஆகியோரின் உண்மை வரலாறும் எதிர்காலம்தான் உருவாக்கித் தீரவேண்டும். இதற்கிடையில் நாம் ஒருவரைப்பற்றி அவசரப்பட்டு அவர்களது வரலாற்றை கணிப்பதிலே கவனமாக இருக்கவேண் டும்.

அதிலும் தனிப்பட்ட ஒரு தலைவரைப்பற்றி எழுதும்போதோ, பேசும் போதோ மிகவும் நிதானம் கொள்ள வேண்டும். கூறப்போகிற வரைப்பற்றி மேலெழுந்தவாரியாக தெரிந்து கொண்டு குறைகூறுவதோ, புகழ்வதோ பிறகு சங்கடமான நிலைமைக்கு உள்ளாக நேரிடும். இதை அரசியலிலும், சமுதாயத்திலும் பங்கு கொண்டுள்ள தங்களைப் போன்றோர்களுக்கு என்னைப் போன்ற மிகச்சாதாரணமானவர்கள் எடுத்துக்கூறத் தேவை யில்லையேன்றே கருதுகிறேன்.

"அம்பேத்கார் போன்றவர்கள் வாயளவில் ஆதி திராவிடர்களுக்காகப் பரிந்து பேசிக்கொண்டாலும்..." என்ற தங்கள் வார்த்தைகளைத் தாங்கள் தயை கூர்ந்து மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்திக் கொண்டால் கீழிருக்கும் தங்களால் கூறப்பட்ட வாக்கியங்களே தங்களுக்கு நிச்சயம் விளக்கம் தரும்.

"அந்த மாபெரும் சமுதாயத்தில் தோன்றி உலக அறிஞர்களில் ஒருவராக வாழ்ந்து மறைந்த மேதை டாக்டர் அம்பேத்கார் போன்ற ஒரு சிலர்... அந்த சமுதாய மக்களுக்காகப் பெரிதும் பாடு பட்டனர்..."

"தங்கள் சமுதாயத்திலேயே தோன்றி, வாழ்வெல்லாம் தங்கள் முன்னேற்றத்திற்கே உழைத்து மாண்ட டாக்டர் அம்பேத்கார்...."

"டாக்டர் அம்பேத்கார் போன்ற, தங்கள் சமுதாய அறிஞர்களின் உழைப்பைப் பற்றியாவது அம்மக்கள் தெரிந்து வைத்திருக்கிறார்களா?"

மேற்கண்ட வாக்கியங்கள் அனைத்தும் தங்களால் 30.12.60 நாத்திகம் இதழில் 'அண்ணாத்துரையும் - ஆதி திராவிடர்களும்!' என்ற தலைப்பின்கீழ் எழுதப்பெற்றதாகும். அதே பகுதியில் 'இந்தகக்கன் மந்திரியாக இருக்கும் போது நான் ஏன் மந்திரியாக இருக்கக் கூடாது...?' 'இதையும்கேட்டுக் கொண்டு அண்ணாதுரையின் அரசியல் பித்தலாட்டத்திற்கு, ஒரு ஆதி திராவிட மகனாவது உடந்தையாக இருப்பானேயானால் அவனை எப்படி நாம் 'ஒரிஜினல்' என்று கருதுவது...?' என்றும் கூறியிருக்கிறீர்கள்.

'தி.மு. கழகம் மக்களுக்கு நன்மை செய்யவில்லை! தாழ்த்தப்பட்ட மக்களிடம் அவர்களுக்கு செல்வாக்கு இல்லை. ஆகவே தேர்தலில் தோற்றார்கள்' என்று கும்பகோணத்தில் நடந்த கூட்டத்தில் ஈ.வெ.ரா. பெரியார் கூறினார். (தினத்தந்தி 3.11.59) இதை தாங்கள் ஏற்றுக் கொள்வீர்களோ மாட்டீர்களோ ஆனால் ஆதி திராவிடர் சமுதாயம் 'முதுகளத்தூரை' இன்னமும் மறந்துவிடவில்லை - என்றென்றும் மறக்காது.

ஆதி திராவிடர்களைப் பற்றி மிகவும் சுருக்கமாகவும் சிதறலாகவும் எழுதியிருக்கிறேன். இதிலிருந்து தாங்கள் ஆதி திராவிடர்களைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள ஏதுவாகும் என்ற எண்ணத்தின் மீதே இதை எழுதினேன். அபெடுபாய்ஸ் அவர்களைப் பற்றிய தொரு பிரச்சினையை தங்களுக்கு எழுத இருந்தபோது இது 'குறுக்கிட்டது. அதைவிட இதை என்னுடைய பெரும் கடமைகளில் ஒன்றாக நான் கருதியமையினால் இதை தங்களுக்கு எழுத நேர்ந்தது.

தெரிந்தோ தெரியாமலோ சில நல்லவர்களும் கூட ஆதி திராவிட மக்களைப் பற்றி அவதூறாக பேசுவதையும், எழுதுவதையும் பார்க்கிற போது எங்களில் பெரும்பாலோர் மிகவும் வேதனைப்படுகிறோம். அவர்கள் ஆதி திராவிடர்களைப் பற்றி ஏதும் அறியக் கூடாமையினால் - தெரிந்தும் - வேண்டுமென்றே அவ்வாறு பேச எழுதச் செய்கிறார்கள் என்றே நாங்கள் கருதுகிறோம். எல்லா வகுப்பு மக்களும் அவ்வப் போது தங்கள் வாழ்க்கைக்காக உரிமைக்காக போராடி வந்திருக்கிறார்கள் என்பதை வரலாற்றை உணர்ந்து படிக்கிறவர்கள் நன்றாக புரிந்து கொள்ளக்கூடும். எனினும் ஆதி திராவிட பழங்குடி மக்களை பலர் இன்னமும் எடுப்பார் கைப் பிள்ளையாகவே கருதி பேசுகின்றனர், எழுதுகின்றனர். ஆனால் ஆதிதிராவிடராகிய நாங்கள் பொறுமையுடன்,

"துறந்தாரின்தூய்மைஉடையர் இறந்தார் வாய்
இன்னாச் சொல் நோக்கிற் பவர்"

என்ற வள்ளுவரின் வாய்மொழியை கடைபிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கொடியேந்தும் ஒரு சில 'ஏதுமறியா' ஆதி திராவிட் மக்களைக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு ஒரு சமுதாயத்தை கணிப்பது ஒப்புக் கொள்ளக் கூடியதுதானா? அதனால் அச்சமுதாயத்தின் தலைவர்களையும் - குறைவாக எண்ணுவதும், எழுதுவதும் ஏற்புடையதா? என்பன போன்ற வினாக்களுக்கு விடையை தங்களுடைய பொறுப்பிற்கே விட்டு விடுகிறேன்.

'காய்க்கும் மரம்தான் கல்லடிக் குள்ளாகும்' என்ற சாதாரண பழமொழிக்கு ஒப்ப எல்லாக் கட்சிகளிலும் தொண்டர்களாக தெரிந்தும் தெரியாமலும் போய் விடுகிற ஆதி திராவிட சமுதாயத்திற்கு இது போன்ற பழிச்சொற்கள் கிடைப்பதிலே வியப்பில்லை. என்றாலும் அந்த ஒரு சமூக மக்கள்தான் எல்லா கட்சிகளில் இருக்கவில்லை, மற்ற வகுப்பினரும் உள்ளனர். எனினும் குறைகூறப்படுகிறவர்களும் குற்றத்திற்குள்ளாகிறவர்களும் ஆதி திராவிட மக்களாகவே இருக்கிறார்கள். இதற்கு எதிர்காலம்தான் விளக்கம் தர வேண்டும்.

பெரியாரும் வேறு சிலரும் எண்ணுவதைப் போன்று ஆதி திராவிடர்கள் என்றென்றும் அடிமைகளாக, கூலிகளாக, கோழைகளாக இருந்ததில்லை. ஆதி திராவிடர்கள் 'உபயோகமற்ற அடிமைகளாக' இருந்தார்கள் என்பது வலிறுத்தப்படுமானால் இந்நாட்டில் உள்ள அத்தனை வகுப்பாரும் ஒரு வருக்கொருவர் 'அடிமை' தனத்தை ஏற்று வாழ்ந்தவர்கள்தான் என்பதை மிக சுலபமாக வலியுறுத்திக்காட்ட முடியும். அதை படித்த, நாணயமுள்ள நடுநிலை மையாளர் நிச்சயம் உணர்ந்து ஏற்றுக் கொள்வார். எனவே ஆதி திராவிடர்களாகிய நாங்கள் தமிழறிஞர், சமுதாயத் தலைவர்கள், அரசியல் முன்னோர்கள் ஆகிய நல்லவர்களின் வழி வந்தவர்கள் - எப்படியோ அறிஞராகி விட்டவரின் வழி வழி வந்தவர்களல்ல.

மாறாக, அன்புத் தலைவர், காலத்தின் வழிகாட்டி, இணையற்ற சமுதாயத் தலைவர், அயராத் தொண்டர், கொள்கைமிகு பேச்சாளர், குற்றங்காணா எழுத்தாளர், பண்புள்ள ஆசிரியர், சீர்திருத்தச்செம்மல், அறிவு சார்ந்த ஆராய்ச்சியாளர், சட்டநிபுணர், பொருளாதார விற்பன்னர், தத்துவ மேதை, அரசியல் அறிஞர் - வீரமும் ஒழுக்கமும், தூய்மையும் கொண்ட பேரறிஞர் டாக்டர் அம்பேத்கார் எம்.ஏ., பி.எச்.டி., டி.எஸ்.சி. டி.லிட்., எல்எல்.டி., ஜே.பி., பார்-அட்-லா. ஆகிய பட்டங்களைப் பெற்றுத் திகழ்ந்து பெருமைப்பட வாழ்ந்த அறிஞர் பெருமகனாரின் வழிவந்தவர்கள் நாங்கள் என்று பெருமையோடு கூறி,

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார் பொறுத்தல் தலை"

என்ற குறளை தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டுவந்து இன்னமும், இனிமேலும் அதையே பின்பற்றுவோம் என்று கூறி முடிக்கிறேன்.

அன்பன்

அன்பு பொன்னோவியம்.

*-2.2.1962 நாத்திகம் இதழில் 'ஆதிதிராவிடர்களும், கண்ணீர்த் துளிகளும்' என்னும் தலைப்பில் வெளிவந்த தலையங்கத்திற்கு 2.3.1962 நாத்திகம் இதழில் பக்கம் 6-இல் வெளிவந்த அன்பு பொன்னோவியத்தின் எதிர்வினை.*


**ராணிப்பேட்டை BHEL - SC/ST ஊழியர் சங்கமும், புதிய கோடாங்கியும் இணைந்து நடத்தும் விழிப்புணர்ச்சி முகாம்**

நாள் : 2.10.2004 சனிக்கிழமை
நேரம் : காலை 10 மணி
இடம் : டவுன்சிப் உறால், ராணிப்பேட்டை

மேலும் தொடர்புக்கு :
திரு மகாலிங்கம்
தொலைபேசி :
04172 - 266398

**புதிய கோடாங்கியின் இளைஞர் விழிப்புணர்ச்சி முகாம் திருவள்ளூர்**

நாள் : 17.10.2004 ஞாயிறு
நேரம் : காலை 10 மணி
இடம் : IVP திருமண மண்டபம், திருவள்ளூர்

மேலும் தொடர்புக்கு :
திரு P. சுப்பிரமணியன்
தொலைபேசி :
04116 - 264996

**புதிய கோடாங்கியின் பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கான பயிற்சி முகாம்**

நாள் : அக்டோபர் 30 - 31, சனி, ஞாயிறு
இடம் : புதுக்கோட்டை

தலித் எழுத்தாளர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள் பயிற்சி முகாமில் கலந்துகொள்ள விரும்பினால் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

டாக்டர் ஜெயராமன்
பல் மருத்துவர்
புதுக்கோட்டை
தொலைபேசி எண்கள்
223322, 232126




படிப்பகம்

www.padippakam.com

■ க. கலாமோகன், *பாரிஸ்*

## "எனக்கு எனது உடலை மட்டுமே விற்கத்தெரியும், உபசாரத்தையல்ல"

# வா!

என்னால் தூங்க முடியவில்லை. காலை இரண்டு மணி. எனது கால்களை அங்கு போ எனச் சொன்னேன். சில பெண்களும் பல ஆண்களும் நான் கடந்த வீதிகளில். ஒருவன் என்னிடம் முதலில் ஓர் தாள் கேட்டான். தாள் கிடைத்ததும் அவனுக்கு நெருப்புத் தேவைப்பட்டது. நெருப்பையும் கொடுத்தேன்.

- சுகமா?
- நான் பதில்கள் உலகிலிருந்து தூரத்தில்.
- எனது சிகரெட்டை ஒரு தடவை புகை!

ஓர் இமுவை. காலம் எனக்குமுன் காலங்களாகின.

- நீ எனது நண்பன்.
- நானும் உனது நண்பன்.
- நீ எங்கே போகின்றாய்?
- அது எனது கால்களிற்கே தெரியும் என நினைக்கின்றேன்.
- போ!

எனது கையிலோ பையிலோ ஓர் பியர் ரின் இல்லாதபோதும் எனக்குள் ஓர் போதை இருந்தது.

போ!

நான் எனது கால்களிற்குக் கட்டளையிட்டேன்.

மார்க்ஸ் டோர்முவாச் சந்தி ஓர் வட்டச் சந்தியல்ல. நான்கு வீதிகளை அது இணைத்துள்ளது. அது தொடுக்கும் வீதியொன்றில் உள்ள பழைய தேவாலயத் திற்குள் நான் உள்ளிட்டது ஒருதடவை மட்டுமே. சந்திக்குத் தொலைவில் சில ஆண்டுகளின் முன் ஓர் கவர்ச்சியான பெண்ணைக் கண்டேன். எனது கால்கள் அவளைத் தொடர்ந்தன. அவளின் செக்ஸியான கோலத்தின்முன் எனது விழிக்குள் போதையேறியது. நான் அவள் பின். திரும்பிய கணங்களில் என்னைத் தனது விழிகளால் அழைத்தாள். நான் அவளைத் தொடர்ந்தேன். அவள் தேவாலயத்தின் முன்னே வந்ததும் என்னைத் தனது விழிகளால் அழைத்து விட்டு உள்ளே நுழைந்தாள். நானும். அவள் வெளி யேறும்வரை உள்ளே நிற்பதென முடிவெடுத்துக் கொண்டேன். மெழுகுதிரிப்பக்கம் ஒன்றுமட்டுமே எரிந்துகொண்டிருந்தது. அவள் அந்தப் பக்கம் சென் றாள். தனது தோள்பையைத் திறந்தாள். பல மெழுகு திரிகளை எடுத்தாள். அவை எரிந்தன. உருகத்தொடங் கின. என்னால் பொறுமை காக்க முடியவில்லை. அவளின் அருகே சென்றேன்.

"போ!"

"எங்கே?"

"லாச்சப்பல் சந்திக்கு அருகில் உள்ள சாண்ட்விச் கடைக்கு!"

"ஏன்?"

"இவையனைத்தும் எரிந்து முடிந்தபின்னர் நான் உன்னை அங்கு சந்திப்பேன்"

"நான் போவேன், நீ வருவாயா?"

"வருவேன், பின்னர் நாம் காதல் செய்வோம்."

"நீ கட்டாயம் வருவாயா?"

"போ!"

சாண்ட்விச் கடை களைகட்டி இருந்தது. முத லாளி பிற்ஸா போடும் வேளையில் பிஸியாக இருந்தார். அவியும் பிற்ஸாவிலிருந்து வந்த மணம் எனக்குள் ஓர் பேய்ப்பசியை ஏற்படுத்தியபோதும் அவள் எப்போது வருவாள் என எனக்குள் கேள்விக்குமேல் கேள்விகள்.

"வா!"

நான் கத்தியது எவருக்குமே கேட்கவில்லை.

ஆம்! நான் எனக்குள் கத்தினேன்.

எனக்குள் வெடிக்கும் கேள்விகள்.

"போ!"

இரண்டு மணித்தியாலங்கள். அவை எனக்கோ இரு நூற்றாண்டுகள் போல.

"சாப்பிட்டவர்கள் அனைவரும் போய்விட்டனர். சிலரைத் துரத்தியும் விட்டேன். கடைமூடும் நேரம். உங்களை எனக்குத் தெரியும் என்பதால் நான் துரத்தவில்லை. உங்களுக்குப் பசியென்றால், உடனடியாக ஓர் பிற்ஸா போட்டுத்தருகின்றேன். அதனை இங்கே சாப்பிடாமல் வெளியே சாப்பிடவும். நான் கட்டாயம் கடையைப் பத்து நிமிடத்துள் பூட்டவேண்டும்?"

"எனக்குப் பசியில்லை. அவள் கட்டாயம் வருவாள் என நம்புகின்றேன்."



படிப்பகம்

www.padippakam.com

"எனக்கு விளங்குது. காசைக்குடுத்து ஏன் வருத்தத்தை வாங்குவான்."

"உன்னிம் பிற்ஸா வாங்கியவர்கள் அனைவரும் நோயாளிகளா?"

"போ!"

தேவாலயத்தை நோக்கி எனது கால்கள். அவள் அங்கே நிற்கவேண்டும் என்பது எனது பிரார்த்தனை. அவளது பிருஷ்டம் எனது முகத்தை மூடியது. அது ஓர் செங்கல்நிற மண்குடம்.

குடங்கள் வரிசையாக. கடலின்முன் குழாய்த் தண்ணீருக்காகக் காத்திருக்கும் சித்திரங்கள். இந்தப் பாரமான குடங்களை எவ்வாறு அந்தச் சின்ன இடைகள் தாங்கின என்பதை என்னால் இன்றும் விளங்க முடியாமல் உள்ளது. இன்றோ குடங்களும் இல்லை, இடங்களும் இல்லை, இருப்பும் இல்லை. பேய்கள் மட்டுமே குண்டுகளோடு.

போ!

தேவாலயம் மூடப்பட்டுக் கிடந்தது. Merde! அவள் எங்கே? அனைத்துப் பக்கமும் அலைந்தன எனது விழிகள். அபூர்வமாக அலைந்த அனைத்து நிழல்களும் அவளது உடலின் படைப்புகள் போல. ஆசையும் கோபமும் எனக்குள் போர் செய்தன. நான் மூடப்பட்டுக்கிடந்த தேவாலயத்தின்முன் முழங்காலில் என்னை இருத்தி செபம் செய்யத்தொடங்கினேன்.

"வா!"

வந்தாள்.

"நான் உனக்காகக் காத்திருந்தேன்."

"எங்கே?"

"சாண்ட்விச் கடையில்."

"மன்னித்துக்கொள். நான் அங்கு வரவில்லை"

"ஏன்?"

"இதனை யேசுவிடம் கேள்."

"அவர் இறந்துவிட்டார். சிலுவையில். சிலுவை சித்திரவதையின் குறியீடு."

"படி!"

எனது கையில் கிழிந்தும் அழுக்காகியும் கிடந்த ஓர் விவிலிய வேதத்தைத் தந்து இன்னொருவன் பின்னால் ஓடினாள்.

ஏன்?

"மாலை வணக்கம்?"

என்முன் ஓர் வயோதிகர் தரிசனம் தந்தார்.

"மாலை வணக்கம்!" என நானும் சொன்னேன்.

"அவளை எனக்குத் தெரியும்."

"என்னைச் சந்திக்க அவள் இன்று ஒப்புக்கொண்டாள். ஆனால் சந்திக்கும் இடத்திற்கோ வரவில்லை."

"அவள் அப்படித்தான்."

"அப்படித்தான் என்றால்?"

"அவள் ஒப்புக்கொண்டபோது உனக்குள் ஓர் சந்தோஷம் ஏற்பட்டதல்லவா?"

"உண்மை, ஆனால் அவள் வரவில்லையே"

"அவளது முதலாவது ஒப்புதல்தான் முக்கியம், அவளல்ல. அவள் வராதுவிட்டதற்கு அவள் காரணமல்ல, நானே காரணம்."

"என்ன நீ காரணமா?"

"நீ அவளின் பின்னே நடந்து கொண்டிருந்தபோது நான் உனக்குப் பின்னே நடந்துகொண்டிருந்தேன். நீ என்னைக் காணவில்லை. நீ தேவாலயத்துக்குள் நுழைந்தபோது நானும் நுழைந்தேன். நீ அவளோடு பேசிவிட்டு வெளியே போவதைக் கண்டேன். நானோ அவள் வெளியே போகும்வரை உள்ளே இருந்தேன்."

"நிறுத்து! எனக்கு விளங்குகின்றது."

"அவளை விடு! அவள்களின் உலகத்திற்கான வழியை என்னால் உனக்குக் காட்டமுடியும்!"

"காட்டு!"

"18, rue de la Chappelle"

"Bonne nuit a toi!"

18-ஆம் இலக்கம் நான் நின்ற வீதியிலேயே இருந்தது. 10 நிமிடமாவது நடக்கவேண்டும். என்னைக் கட்டியணைக்கத் துடித்த களைப்பு என் கண் முன்னே காணாமல் போனது. உஷார். நான் அவள்களது உலகை நோக்கி நடந்தேன். மார்க்ஸ் டோர்முவாச் சந்தி ஓர் மயானம் போலக்கிடந்தது. நேரத்தைப் பார்த்தேன் பி.எம். 2 மணியைத் தாண்டி. கால ஒழுக்கம் எனது மறதிக் கிடங்குள். கிறெடிற் லியோன் வங்கிமுன் பல வெறுமையான பியர் ரின்கள். எனக்குள் தாகம் ஏற்பட்டது. அந்த நேரத்தில் என்முன் எந்தக் கடைகளும் தெரியவில்லை. நான் சந்தியைத் தாண்டி இன்னோர் வீதிக்குள் ஓர் நம்பிக்கையோடு நுழைந்தேன். ஓர் கடை எனக்காகக் காத்திருந்தது.

"பியர்?"

"உன்னிடம் காசு உள்ளதா?"

"பியரைத் தா! காசு வரும்."

"பிடி, 1 ஈரோ 90."

"பிடி, 2 ஈரோ, மிஞ்சும் பத்து உனக்காக."

"மேர்சி"

"து றியான் முன் அமி."

"18"

"18"

"18"


படிப்பகம்

www.padippakam.com

றூயூ து ல சப்பெல்.

அந்த இரவில் நான் சாறி கட்டிய எந்தப் பெண்களையும் சப்பெல் வீதியில் காணவில்லை. சில பெண்களைக் கண்டேன், சாறி இல்லாமல்.

"சகோதரனே! வீடு செல்! தூங்கு!"

ஓர் பெண் என்னிடம் சொன்னாள்

"நான் 18-ஆம் இலக்கத்துக்குப் போகவேண்டும்."

"அங்கு போகாதே!"

"ஏன்?"

"அங்கு..."

"என்ன?"

"வா!"

"எங்கு?"

"எனது வீட்டிற்கு!"

"ஏன்?"

"உனக்கு எது தேவைவோ அதனைத் தருவதற்கு!"

"வேண்டாம்!"

"வா!"

"போ!"

அவள் என்னை முறைத்துப் பார்த்துவிட்டு முதுகைக்காட்டி நடந்தாள்.

18-ஆம் இலக்கத்திற்குச் சிறு தூரத்தில் நான். அந்த இரவில் அதற்குள் உடல்கள் சில போவதும் வெளியேறுவதுமாக. என்து கால்களில் ஓர் இனம்புரியாத வலு. கதவைத் தள்ளித்திறந்து உள்ளிட்டேன்.

"வா!"

தனது முலைகளைக் கைகளில் தாங்கியபடி அவள் அழைத்தாள்.

அவளைக் கடந்து நடக்கையில் இன்னோர் அழைப்பு!

"வா! வா!"

திறந்து கிடந்த கதவின் முன் அவள். மொழிக் கிடங்காக அவளது விழிகள். கட்டில் தெரிந்தது. சமையல் புகை எனது நாசியைத் தொட்டதால் எனக்குள் ஓர் பசி.

"வா!"

நான் நானாக இல்லாமல். தலைக்குள் ஓர் குளிர்மழை.

"இங்கே 5 மாடிகள். ஏறு! நிறைய இளம் பெண்கள்! ஏறு!"

ஏறிக்கொண்டிருந்த ஒருவன் எனக்குக் கேட்கும் படி சொன்னான்.

**நான்காவது மாடியில் அனைத்துக் கதவுகளும் மூடப்பட்டுக் கிடந்தன. காம முனகல்கள் எனது காதுவரை. எனக்குள் சூடு. ஒவ்வொரு கதவையும் தட்ட எனது கரங்கள் துடித்தபோதும், துணிச்சல் ஏற்படவில்லை.**

அது ஓர் சுத்தமான கட்டிடமல்ல. சிறுநீரகமணம் வீசியது. படிகள் தேய்ந்துகிடந்தன. அரசால் கழித்து விடப்பட்ட கட்டிடமாக இருக்கலாம் என நினைக்கத்தோன்றியது.

"வா! உள்ளே வா!"

முதலாவது மாடியில் அழைப்புவிட்டவளின் உடல் என்னை அவள்முன் ஓடவிட்டது.

"20 ஈரோ" என்றபடி தனது நாக்கைத் தன் உதடுகள்மீது லாவகமாக உருளவிட்டாள்.

"நீ எனது மனைவியாகுவாயா"

"நான் மனைவியாகிவிட்டேன். வா!"

என்னைத் துக்கம் தொட்டது.

"வா!"

பதில் எதுவும் சொல்லாமல் 2-ஆவது மாடிக்குத் தாவினேன்.

3 பெண்கள் ஒரே தடவையில்...

"வா!!!!!!"

மூன்று அறைகளும் திறந்துகிடந்தன. மூன்று கட்டில்கள். மெத்தைகள் அழகாக இரவுப் பசியைத் தூண்டும் விதத்தில் விரிக்கப்பட்டிருந்தன.

"என்னோடு வா!" என ஒருத்தி கேட்டபோது ஏனைய இருவரும் பொறுமை விழிகளால் என்னைப் பார்த்தபடி. இந்தப் பொறுமையின் அர்த்தம்...

நான் மூன்றாவ்து மாடிக்குத் தாவினேன்.

"வணக்கம் அம்மா?"

"வணக்கம் பெபே! வா!"

எனது கண்முன் எனது அம்மா.

"அம்மா!"

"வா!"

அவள் எனது அம்மாவைப் போலவேயிருந்தாள்.

"நீங்கள் எனது அம்மாவைப் போல!"

"வா!"



படிப்பகம்

www.padippakam.com

**திரும்பிய கணங்களில் என்னைத் தனது விழிகளால் அழைத்தாள். நான் அவளைத் தொடர்ந்தேன். அவள் தேவாலயத்தின் முன்னே வந்ததும் என்னைத் தனது விழிகளால் அழைத்து விட்டு உள்ளே நுழைந்தாள். நானும். அவள் வெளியேறும்வரை உள்ளே நிற்பதென முடிவெடுத்துக் கொண்டேன்.**

என்னை அறைக்குள் இழுத்தாள். எனது உதடுகளில் அவளது உதடுகள்.

"வேண்டாம்!"

நான் பலவந்தமாக அறையைவிட்டு வெளியேறி 4-ஆவது மாடிக்குத் தாவினேன்.

"பெடே" (அலி) என அவள் ஆத்திரத்தில் கத்துவது எனக்குக் கேட்டது. ஒலியைத் துரத்தி அவளது முகத்தை மட்டும் எனக்குள் படம்பிடித்துக் கொண் டேன்.

நான்காவது மாடியில் அனைத்துக் கதவுகளும் மூடப்பட்டுக் கிடந்தன. காம முனகல்கள் எனது காதுவரை. எனக்குள் சூடு. ஒவ்வொரு கதவையும் தட்ட எனது கரங்கள் துடித்தபோதும், துணிச்சல் ஏற்படவில்லை.

இந்த ஒலிகள். இந்த ஈரமான கவிதைகள். இந்த வாசிப்புகள். இந்த இடங்கள். இந்தக் கதவுகள். இந்த உடல்கள். இந்த இரவுகள்.

கதவு ஒன்று திறபட்டது. ஒருவன் வெளியேற ஒருத்தியின் தலை. குலைந்து கிடந்தது.

"வா!" களைப்புள் கரைந்து வந்தது அழைப்பு.

அதனைத் தொடர்ந்து ஓர் குழந்தையின் அழுகை. அவளது முகம் மறைந்தது.

5-ஆவது மாடியில் நிறைய ஆண்கள்.

"எங்களது முறைக்காகக் காத்திருக்கின்றோம்."

சொன்னவன் முகம் வர்ணம் எதுவுமற்ற கதவொன்றை வெறியோடு பார்த்தபடி.

எனது பாதங்கள் இறங்கத் தொடங்கின.

4

வா!

3

வா!!!

2

வா!!

1

வா!!!!

கீழ் தளத்தில் நான். சமையல் புகை வந்து அறையின்முன் அவள் நிர்வாண முலைகளோடு. சிரித்தாள்.

"எனக்குப் பசிக்கின்றது!"

"வா!"

உள்ளே நான். ஓர் கோப்பையில் சோறும் சின்ன மீன் துண்டும் குழம்பும். என்னிடம் தந்தாள்.

நான் அனைத்தையும் விரைவில் சாப்பிட்டதால், "உனக்கு நல்ல பசிதான்!" என்றபடி மீண்டும் எனக்குப் பரிமாறினாள். நன்றி சொல்லியபடி அதனையும் சாப்பிட்டு முடிந்தேன்.

"இப்படியொரு உபசாரம் கிடைக்குமென நான் எதிர்பார்க்கவேயில்லை. உனது உணவின் ருஷி எப்போதும் எனது நாக்கிலிருக்கும்."

20 ஈரோவை அவள் முன் நீட்டினேன்.

அதிர்ச்சியோடு அவள் முகம் "ஏன்?" எனும் விதத்தில் என்னைப் பார்த்தது.

"உனக்கு!"

"ஏன் எனக்கு?"

"உனது உபசாரத்திற்கு!"

"நான் வா என்றபோது வந்திருந்தால் இதனை வாங்கியிருப்பேன். வா! என்னோடு காதல் செய்! என்னைச் சுவை! வாங்குவேன்."

"என்னிடம் இந்தக் கணத்தில் எந்த செக்ஸ் விருப்பமும் இல்லை. பிடி!"

நீட்டினேன்.

"எனக்கு எனது உடலை மட்டுமே விற்கத்தெரியும், உபசாரத்தையல்ல."

வெளியேறி நான் நடக்கத் தொடங்கிய வீதிகள் அனைத்திலும் அவளது முகத்தின் நிழல்களே.

●

**அறிவிப்பு**

**புதிய கோடாங்கி மாத இதழை தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை செய்ய முகவர்கள் தேவைப்படுகிறார்கள். விருப்பமுள்ளவர்கள் புதிய கோடாங்கியின் முகவரிக்கு கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.**

**– ஆசிரியர்**



படிப்பகம்

www.padippakam.com

"ஆக்கவும் - காக்கவும் - அழிக்கவும்" பணியில்

# பத்திரிக்கை ● தொலைக்காட்சி ● வானொலி

■ நிகழ் அய்க்கண்

- வசூலிக்கப்படாத வருமான வரி 87,000 கோடி (மத்திய நிதி அமைச்சர் சிதம்பரம் தகவல்)
- தமிழகத்தில் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மக்களை ஏமாற்றிய தொகை 14,000 கோடி
- சிறுதொழில் நிறுவனங்கள் மூடலில் தமிழகம் முதலிடம்
- வறுமைக் கோட்டிற்கும் கீழ் அதிகமாக வசிப்பவர்கள் வாழும் நாடுகளின் பட்டியலில் உலகத்தர வரிசையில் இந்தியா 124-வது இடத்திலிருந்து 127-வது இடத்திற்குத்தள்ளப் பட்டிருக்கிறது.
- இந்திய உணவுக் கழக இருப்பில் கெட்டுப்போன தானியம் 22 ஆயிரம் டன் (மத்திய மந்திரி தகவல்)
- 2003-இல் பின்வரும் பிரிவுகளில் செலவினங்கள் வேகமாக உயர்ந்துள்ளன.

  செல்போன் 96%, நுகர்பொருட்கள் 53%, வீட்டு உதவி செலவுகள் 48%, சினிமா தியேட்டர் 38%, புத்தகங்கள் இசை 32%, விடுமுறை 32%, துணிவகைகள் 29%, கம்ப்யூட்டர் 10%
- தமிழகத்திலுள்ள பத்து தனியார் தொலைக்காட்சி சேனல்களுக்கும் ஆண்டுக்கு 300 கோடி விளம்பர வருவாயாகக் கிடைக்கிறது.
- இந்தியப் பண்பாட்டில் மதம் எப்படி ஆழப்பதிந்துள்ளதோ, அதுபோல அரசியலிலும் மதம் ஆழப்பதிந்து இருக்கிறது. மதச் சார்பற்ற அரசியல் என்றால் அரசியலில் இருந்து மதத்தை விலக்கிவைப்பது அல்ல. (எல்.கே. அத்வானி)
- சாதாரண மக்களும் 40 சானல்களைப் பார்க்கும் வகையில் வீடுகளுக்கே கேபிள் சானல்கள் நேரடி இணைப்புத் திட்டத்தை தூர்தர்ஷன் ரூ.164 கோடியில் விரைவில் அமல் செய்ய உள்ளது.

நாடு சுதந்திரம் பெற்று 58 ஆண்டுகளும், உலக மயத்துக்குள் நுழைந்து 13 ஆண்டுகளும் கழிந்த நிலையில் இந்திய தேசத்தின் இன்றைய நிலையினை மேலே கூறப்பட்ட செய்திகள் பிரதிபலிக்கலாம்.

இந்தியக் குடியரசுத் தத்துவத்தின் அடிப்படைகளுள் ஒன்றான மதச்சார்பற்ற பண்புகளை வளர்த்தெடுப்பதிலும் அரசியல், சமூக பொருளாதார தளத்தினை அனைத்து மக்களுக்கும் சமமாகக் கிடைக்க வழிவகைகள் காண்பதிலும் அரசின் மக்கள் தொடர்பு சாதனங்களான தொலைக்காட்சி நிறுவனத்திற்கும், வானொலி நிலையத்திற்கும் முக்கிய பங்கு உண்டு.

அதேபோன்று நாட்டின் சுதந்திரத்திற்காக தனியார்களால் நடத்தப்பெறுகிற பத்திரிக்கைகளும் ஓரணியில் நின்று பதிவு செய்ததைப் போன்று, சுதந்திரத்திற்குப் பின்பும் இந்தியாவின் அனைத்துவகை மக்களுக்குமான அரசியல் சமூக பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி கட்டியெழுப்பி யிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக பத்திரிக்கைத் துறையானது தலித்தல்லாத பிறசாதியினருக்கு மட்டும் அனைத்து மட்டத்திலும், இன்றளவும் உறுதுணை புரிந்து வருகிறது. தலித் மக்கள் தாக்கப் படுவது, தலித் மக்கள் வீடுகள் எரிக்கப்படுவது, தலித் பெண்கள் கற்பழிக்கப்படுவது, தலித் மக்களின் சொத்துக்கள் சூறையாடப்படுவது, தலித் மக்கள் கொல்லப்படுவது ஆகியவைகள் தொடர்நிகழ்வுகளாக நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இம்மாதிரியான நிகழ்வுகள் தத்தம் பத்திரிக்கைகளில் பதிவாகிறதா என ஆய்ந்தால் பெரும்பாலும் இருப்பதில்லை. அப்படியே செய்தி வெளிவந்தாலும் எந்தவித கண்டனமின்றியும், அனுதாபம் நட்புறவின்றியும் வெறும் செய்தியாக வருகிறது. கழுத்து முட்டுமளவுக்கு விளம்பரங்களைப் பெற்றுக்கொண்டு, இரத்தம் - பாலியல் - திடுக்கிடும் நிகழ்வுகள் - பரபரப்பு நிரம்பிய செய்திகளையும், திசைதிருப்பும் திறன் கொண்ட துணுக்குச் செய்திகளையும் இட்டு பக்கங்களை நிரப்புவதில் பத்திரிக்கைகள் குறியாய் இருக்கின்றன.

தலித் மக்களின் பிரச்சினைகளுக்கு இப்பத்திரிக்கைகள் எவ்வளவு இடங்கொடுக்கின்றன என 1997 ஜூன் மாதம் டான் பாஸ்கோ தொடர்பு நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின்படி தமிழில் தினமணியும், ஆங்கிலத்தில் ஹிந்துவும் ஒரு சதவீதம் இடமளித்து செய்தியினை வெளியிட்டு இருக்கின்றன. பிற தினசரி பத்திரிக்கைகள் அதற்கும் குறைவான இடத்தை ஒதுக்கி செய்தி வெளியிட்டு இருக்கின்றன. தலித்/ தலித் நிகழ்ச்சிகள் பற்றிய புகைப்படங்களும் மிகக்குறைந்த அளவிலேயே வெளியிடப்பட்டிருக்கின்றன. செய்திகள் பெரும்பாலும் தலித் மக்களுக்கு அரசால் அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்கள், சலுகைகள் பற்றிய செய்திகளாகவே இருக்கிறது என அந்த ஆய்வறிக்கை கூறுகிறது. இன்றளவும் பத்திரிக்கைகள் அதே மாறாத நிலைப்பாட்டுடன் செயல்பட்டு வருவதை தலித் மக்கள் அறிவர். தற்போது பல தினசரிப் பத்திரிக்கை நிறுவனங்கள் தங்களது பதிப்புகளைத் தொடங்கி, பகுதி/மாவட்டந்தோறும் விரிவுபடுத்திக் கொண்டுவிட்டன. தலித் மக்களைப்



படிப்பகம்

www.padippakam.com

பற்றி செய்திகள்கூட பகுதி/மாவட்ட அளவில் சுருங்கிவிடுகிறது.

தினசரி பத்திரிக்கைகளிடையே போட்டா போட்டிகள் இருப்பது போல் தோன்றினாலும் இவர்களுக்கிடையே நெகிழ்ச்சியான உறவுகளும் இருக்கவே செய்கின்றன. பத்திரிக்கைகளில் வெளியிடப்படும் செய்திகள் பக்கம், காலஅளவு சார்ந்து முன்னே-பின்னே இருப்பினும் செய்திகளிடையே ஆழமான ஒற்றுமைகளைக் காணமுடியும்.

ஆகஸ்ட் 2004 மத்தியில் வெளிவந்த ஜூனியர் விகடன், குமுதம் ரிப்போர்ட்டர் (வார இருமுறை வெளிவரும்) இதழ்களின் அட்டைப்பட செய்தியினை மட்டும் பார்த்தால்,

குமுதம் ரிப்போர்ட்டர் 5.8.2004

- 'ஏழு மாதங்கள் - ஏழு பெண்கள்' ஒரு சூன்யக்காரனின் காமவெறியாட்டம்.

குமுதம் ரிப்போர்ட்டர் 15.8.2004

- ஜெயலட்சுமியின் விறு விறு வாழ்க்கை. படித்தது 7-ஆங் கிளாஸ், கவிழ்த்தது காக்கிச் சட்டைகளை.
- யார் இந்த ஆறுமுக சாமி? மணல் மன்னனின் பகீர் பின்னணி.

ஜூனியர் விகடன் 15.8.2004

- எஸ்.ஐ. முதல் எஸ்.பி. வரை தென்மாவட்ட போலீஸை முந்தானையில் முடிந்த ஜெயலட்சுமி
- மணல் பிசினஸ் மர்மங்கள் வெளிச்சத்துக்கு வரும் நிழல்முக சாமி

ஜூனியர் விகடன் 18.8.2004

- பலமுக பெண்மணி ஜெயலட்சுமி புதுசு புதுசா பகீர் தகவல்கள்.

கொலை, கொள்ளை, அடிதடி, கற்பழிப்பு, போலீஸ் செய்திகள், சினிமா பின்னணிச் செய்திகள் இவைகளை உள்ளடக்கியயே பெரும் பரபரப்புக்கான செய்திகளாக வெளிவருகின்றன. தொலைக்காட்சி அலைவரிசைகளிலிருந்து நேயர்களை வாசகர்களாக மாற்ற முயல இவைகள் உதவினாலும், வக்கிரங்களை பிரதிபலன் அறியாது ஊக்குவிப்பவையாகவே அமைகின்றன. (சரவணபவன் ஜீவஜோதி, பண்ணையார், செரினா, ஜெயலட்சுமி - போலீஸ் பரபரப்புக்கு பெரும்பாலும் பெண்களே இவர்களுக்கு தேவையாய் இருக்கிறார்கள்). அதுமட்டுமின்றி வெளிநாட்டுத் தலைவர்களின் வருகை, தலைவர்கள் வெளிநாடு செல்வது, இயற்கைச் சீற்றங்கள், விபத்துகள், தீ விபத்துகள், ராசிபலன், ஆன்மீகம், ஷாப்பிங் குறிப்புகள், அழகுக் குறிப்புகள், கும்பாபிஷேகம், மழைவேண்டி ஜெபம், கழுதைகளுக்கு கல்யாணம், பசுமாட்டுக்கு ஐந்து கால்கள், தங்க பூணூல் அளிப்பு, காஞ்சிபுரமும் மேல்மருவத்தூரும் சந்திப்பு - இத்தியாதிகள். தினமலர் நாளிதழின் தலைப்புச் செய்திகளைக் கவனித்தால் தீ வைப்பு, சாவு, அதிர்ச்சி, இழப்பு, வெடிப்பு இப்படியாக பரபரப்பூட்டுகிறது. வாசகர்களை பரபரப்புச் செய்திகளின் மூலம் பரவசமூட்டி, மனதை அலையவிட்டு வெற்றிடத்தை நிரப்புகின்றன. அனைத்துப் பத்திரிக்கைகளும் தாங்கள் விரும்பும் அல்லது வெறுக்கும் செய்திகளை சாதுர்யமாக தலைப்பிட்டு வாசகர்களிடையே தள்ளி விடுகின்றன. வாசகர்களும் இப்படியான செய்திகளில் உழன்று, சரி/தவறு என தீர்மானிக்க முடியாமல் குழப்பநிலைக்குத் தள்ளப்படுகின்றனர். நிலவும் அதிகாரத்தினைத் தக்க வைப்பது, அதிகார அமைப்பு முறையை பாதுகாப்பது - இவைகளில் மட்டுமே பத்திரிக்கைகள் கவனமாய் இருக்கின்றன.

பத்திரிக்கைகள் எதைச் செய்கின்றனவோ அதைநோக்கி வாசகர்களின் கவனத்தை திசை திருப்ப முயலுகின்றன. சமூகப் பிரச்சினைகள் என்று பத்திரிக்கைகள் சொல்லும் விஷயங்களைப் பற்றி வாசகர்களின் அபிப்ராயம் எதுவாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றி பத்திரிக்கைக்காரர்களே தங்களது செய்திகள் மூலம் உணர்த்துகிறார்கள். கலை, இலக்கியத்துறையிலும் இதுதான் நடக்கிறது. மதிப்பீடு செய்யப்படும் புத்தகங்கள் நிலவும் சமூக நடைமுறைகளைப் பேணி அதை உறுதிப்படுத்துவதாக இருக்கின்றன. ஊருடன் ஒத்துப்போவது பற்றியும், பார்ப்பனிய மரபுகளைப் பேணுவதும், பொருளாதாரச் சந்தையினை வளர்ப்பதுமாய் பத்திரிக்கைகள் இருக்கின்றன. தலித் மக்களுக்கெதிரான அநீதிகளும், சமூக பாரபட்சங்களும் வாசகர்களின் கண்ணுக்குப் படாமலேயே பத்திரிக்கைக்காரர்களால் தடுக்கப்படுகிறது. சமூக நீதிக்காக போராடுபவர்கள் ரவுடிகளாக, வன்முறையாளர்களாகப் பதிவு செய்யப்படுகின்றனர். காவல் துறை, நீதிமன்றம், தலைமைச் செயலகம், மருத்துவமனை, சினிமா, நடிகர், நடிகைகள், சட்டமன்றம், பாராளுமன்றம், அமைச்சர் கள், பிரதமர்கள் இவர்களைச் சுற்றியே செய்திகளும், கிசுகிசுக்களும் பின்னப்படுகின்றன.

அரசு சார்ந்த தொலைக்காட்சி நிறுவனத்தின் செயல்பாடுகளை ஆய்ந்தால், கற்பிப்பது, தகவல் அளிப்பது, கேளிக்கை இம்மூன்று வகைகளில் செயல்படுவதாகக் கூறிக்கொள்கின்றன. ஆனால் அரசு சார் தொலைக்காட்சிகளோ, சாதி, தீண்டாமைக் கொடுமைகள் நிறைந்த தேசத்தில் இந்துத்துவ ஆதிக்கத்திற்கு எதிரான குரல்களைப் பதிவு செய்வதில்லை. சாதி, தீண்டாமையைப் போக்கும் வழிகளையும், மதச்சார்பற்ற கருத்துக்களையும் மக்கள் மனதில் ஊன்றுவதிலும் இவ்வூடகம் தவறியிருக்கிறது. ஆதிக்க சாதியினருக்கும், தலித் மக்களுக்கும் இடையே ஏற்றத் தாழ்வினை நீக்கவும், கூட்டுறவினை எற்படுத்தவும் தவறியிருக்கிறது. சமத்துவ, சுதந்திர, சகோதரத்துவத்தை வளர்த்தெடுப்பதற்குப் பதிலாக மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. தலித் மக்களுக்கு அரசியல், பொருளாதார தளங்களில் மேம்பாட்டுக்கான வழிகளை ஏற்படுத்தித் தர மறுத்துவருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

அதுமட்டுமின்றி மதங்களுக்கிடையே சமத்துவத்தினை வளர்த்தெடுப்பதற்குப்பதில், விரசல்களையும், பற்றவைப்பதிலும் முனைப்புடன் அக்கறை காட்டியிருக்கின்றன.

அரசின் தொலைக்காட்சிகளில் தலித் மக்களும், சிறுபான்மையினரும் திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டு வருவதை அவர்கள் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளின் மூலம் அறியலாம். இந்துத்துவ ஆதிக்கச் சாதியினருக்கான கல்வி, கலை, இலக்கியம், இசை, அரசியல், பொரளாதார நலன்களுக்கு கடந்த 45 ஆண்டுகளுக்கு மேலாக ஒத்துழைப்பு நல்கி வருகின்றன. அதுமட்டுமின்றி அவைகளை பிற மக்கள் திரள் மீது செலுத்தி அவைகளை ஏற்கவும் செய்கின்றன. மக்களை ஒருமுகப்படுத்துவதும், நுகர்வோராக்குவதும், சமஸ்கிருதமயமாக்குவதுமே இத்தொலைக்காட்சியின் நோக்காகும். நல்ல குடிமகனை உருவாக்குவதற்குப் பதில் இந்துத்துவ கருத்தியல்களுக்கும், பொருட்களுக்கும், கேளிக்கைகளுக்குமான 'நுகர்வோராக' இத்தகைய தொலைக்காட்சிகள் உற்பத்தி செய்து வருகின்றன.

தாராளமயமாக்கலின் விளைவால், தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் அனுமதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இன்று 10 சேனல்களுடன் இந்திய அளவில் தமிழகம் முதலிடம் வகிக்கின்றது. இந்தியாவிலுள்ள நான்கு மெட்ரோ நகரங்களில் சென்னை மக்கள் மட்டும்தான் வாரத்திற்கு 20 மணி நேரத்திற்கும் மேல் தொலைக்காட்சி பார்ப்பதில் முன்னணி வகிக்கின்றனர். நிகழ்ச்சித் தயாரிப்புகளில் பெரும்பாலும் அமெரிக்கா மற்றும் பிற மேலை நாடுகளின் மாதிரிகளையே இத்தனியார் தொலைக்காட்சிகள் பின்பற்றுகின்றன. உள்ளூர் சூழல்களுக்கேற்ப சிற்சில மாற்றங்களும் உண்டு. திரைப்படங்கள், பிரசித்திப்பெற்ற இசை, சந்தோஷச் செய்திகள், உண்மைச் செய்திகள், டாக்-ஷோ, முக்கிய நகரைப் பற்றிய செய்திக் கோவை, முரண், சிறு குற்றங்களை வெளிப்படுத்துதல், குற்றம், பாலியல் வன்முறை, பிற வன்முறைச் செய்திகள், ஒற்றர்கள் குறித்த கதைகள், செல்வத்தைப் பெறுவது, மாய மந்திர பேய்க்கதைகள் இவைகளை முன்னிருத்தியே ஒளிபரப்பப்படுகின்றன. இவைகள் அனைத்தும் விளம்பரம், விளம்பரதாரர், அரசு இவற்றுடன் முரணில்லாத போக்கையே கடைபிடிக்கின்றன. மேற்கூறிய நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதின் மூலம் நேயர்களையும் அந்த பள்ளத்திற்குள் தள்ளுகின்றனர். பெரும்பகுதி மக்களின் மூளையை உருவமைப்பதில் தொலைக்காட்சிக்கு ஏக அதிகாரம் இருக்கிறது. அதுமட்டுமின்றி சமூக வாழ்க்கை நெறிமுறைகள் கூட தொலைக்காட்சிகளின் மூலம் விவாதிக்கப்பட்டு கட்டமைக்கப்படுகிறது. துணுக்குச் செய்திகள் மற்றும் விளையாட்டுச் செய்திகள் மூலம் நேயர்களின் கவனம் ஈர்க்கப்பட்டு குடிமக்கள் தங்கள் ஜனநாயக உரிமைகளை செயல்படுத்தத் தேவையான தகவல்களைப் பெறுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுகின்றனர். ஒன்றைப் பார்க்கச் செய்து, தான் பார்க்கச் செய்ததை நம்பவைக்கும் திறன், மனக்கண் முன் நிறுத்தும் தன்மை இந்த தொலைக்காட்சிகளுக்கு உண்டு. இதன்மூலம் மக்கள் சமூகத்தினரிடையே வன்முறை, பாலியலுக்கு அச்சாரத்தளம், பயங்கொள்ளச்செய்வது, பாதுகாப்பற்றதாக உணரவைப்பது, சார்ந்திருக்கவைப்பது, எதிர்காலம் இருண்மையாக உணர்வது, தனிமைப்பட்டு வீட்டிலேயே முடங்குதல் ஆகியவைகளுக்குக் காரணமாகிவிடுகிறது. எதிர்காலச் சந்ததியினரை, குறுகிய லாபத்துக்காக இப்படி நுகர்வோராக நுடமாக்குவது மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. பணத்தைப் போட்டு வாங்கி மூளையை நுடமாக்கிக் கொள்கிற நிலை.

தமிழகத்தில் தொலைக்காட்சி நேயர்களின் மூளையை ஆக்கிரமித்து, ஆதிக்கஞ் செலுத்தும் சில தனியார் தொலைக்காட்சிகளின் ஒருநாள் முழுவதுக்குமான நிகழ்ச்சிகளைப் பகுத்தாய்ந்தால் நுகர்வோர் சந்தைக்கான களத்தின் திறவுகோலாக இத்தகைய தொலைக்காட்சிகள் மாறிவிட்டிருப்பதை எளிதில் அறியலாம்.பெரும்பான்மையான நேரங்களில் சினிமா, பாட்டு, காமெடி இப்படியாக சினிமா தொடர்பான நிகழ்ச்சிகளே ஒளிபரப்பாகின்றன. ஒவ்வொரு தொலைக்காட்சியிலும் சினிமா நிகழ்ச்சிகளின் நேரம் முன்னே பின்னே ஒளிபரப்பானாலும் 24 நேரமும் கேளிக்கையே பிரதானமாய் இருக்கிறது.

தொடர்கள், க்ரைம் தொடர்கள், மாயாஜாலம், உல்லாசப் பயணம், உணவு வகைகள், மருத்துவம், யோகா, ஜோசியம், அருள்வாக்கு, விளையாட்டு, இலவச டிப்ஸ், துணுக்குகள் குறித்த நிகழ்ச்சிகளே ஆதிக்கம் செலுத்துகின்றன. பெரும்பாலான தொடர்களின் பெயர்களோ பெண்கள் குறித்தும், குடும்பம் குறித்தும், சக்தி கடவுள் குறித்தும். மாயாஜாலங்கள் குறித்தும் பெயர்களைத் தாங்கி இந்துத்துவ புனிதங்களைக் கட்டமைக்க உதவுகின்றன. மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தமைவுகளுக்கு எதிர்மறையான போக்குகளைக் கொண்ட தொடர்களும் நேயர்களின் சிந்தனைத் தளத்துக்குள் எளிதில் தொற்றிக் கொள்கின்றன. பழமைவாதத்தை அதாவது சமூகத்தின் தற்போதையே நிலைமைகளை இருக்கிறவாறே தக்கவைத்துக் கொள்வதையே இத்தொலைக்காட்சிகள் விரும்புகிறது என்பதே உண்மை. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சாதாரண நிகழ்வுகளிலிருந்து விலகி, மிகவும் அசாதாரண நிகழ்வுகளிலிருந்துதான் நேயர்களை மிகவும் கவர்கின்றன. தமிழகத்திலிருந்து இயங்கும் தொலைக்காட்சிகள் சில, தான் சார்ந்திருக்கும் அரசியல் பின்புலத்தை பக்கபலமாகக் கொண்டு இயங்குவதை யாவரும் அறிவர்.

தமிழக அரசியல் தலைவர்கள் சிலர், தங்களுடைய கருத்துக்களைப் பிரதிபலிக்க மேலும் சில தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுடன் பேசிவருவதாக செய்திகள் கசிகின்றன. அரசியல் இயக்கங்கள் தங்களுடைய கருத்துக்களை இத்தகைய தனியார் தொலைக்காட்சிகளின் மூலம் (ஆளுங்கட்சி - எதிர்கட்சியாக இருக்கும்போதும்) திணிக்கவே செய்கின்றன. தற்போ



படிப்பகம்

www.padippakam.com

தெல்லாம் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் எல்லாம் குறைந்து தொலைக்காட்சிகளின் மூலம் இப்பணி நடைபெறுகிறது. 24 மணி நேரமும் சினிமா நிகழ்ச்சிகளின் மூலம் நேயர்களை மூழ்கடித்து, நாட்டில் நிலவும் அரசியல் - சமூக - பொருளாதார சூழலில் தங்களுக்கான ஜனநாயகப் பண்பினை ஆற்றுவதிலிருந்து விலக்கி வைத்து, சினிமா நாயக - நாயகிகளால் கட்டமைக்கப்படும் 'மநு' தர்ம சிந்தனைகளை சுமந்து இந்துத்துவத்தின் சேவகர்களாக மாற்றுவதில் தொலைக்காட்சிகள் கவனங்கொள்கின்றன. நிகழ்வுகளைப் பதிவு செய்யும் ஒரு கருவியாகத் தன்னை அறிவித்துக் கொள்ளும் தொலைக்காட்சிகள் சிறிது சிறிதாக நேயர்களிடம் யதார்த்தத்தை உருவாக்கும் கருவியாக மாறிவிடுகிறது. ஆரோக்கியமான ஜனநாயகச் சிந்தனையின் வெளிப்பாட்டிற்கு தொலைக்காட்சிகள் சாதகமாக இருப்பதில்லை என்பதைப் புரிந்துகொண்டு எச்சரிக்கையுடன் அணுகுவது அவசியம்.

இந்தியக் குடியரசின் முழக்கங்களை சுமந்து செல்வதில் வானொலிக்கும் முக்கிய பங்குண்டு. இப்போது வானொலியும் தனியாருக்கு அனுமதியளிக்கப்பட்டுவிட்டது. காட்சிகளின் மூலம் நேயர்களை கட்டமைக்க முடியவில்லையே தவிர, தனியார் தொலைக்காட்சியினர்களைப்போன்றே சினிமா, பேட்டி, துணுக்குச் செய்தி, விளையாட்டுச் செய்தி கும்பாபிஷேகம், ராசிபலன் இவைகளுடன் 24 மணி நேரமும் ஒலிக்கத் துவங்கியிருக்கிறது. இலவசங்கள், நேரடி சந்திப்பு, தொலைபேசி உரையாடல்கள் மூலம் நேயர்களை வசப்படுத்தி கட்டமைக்கிறது. அரசு சார்ந்த வானொலிகளும் பல்வேறு அலைவரிசைகளைக் கொண்டிருந்தும் இந்துத்துவ அருளுரை, ஆன்மீகம், கர்னாடக சங்கீதம், தெலுங்கு கீர்த்தனைகள், மலையாள வேத ஜோதிடம் இவைகளை உள் நிறுத்தியே இயங்குகிறது.

பத்திரிக்கைகளோ, வானொலிகளோ, தொலைக்காட்சிகளோ அனைத்தும் இந்துத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு 'லாபத்தை' முன்மொழிந்து செயலாற்றுகின்றன என்பதே உண்மை. மக்களுக்காக சேவை என்பதெல்லாம் பொய். பார்ப்பனியத்திற்கும், முதலாளியியத்திற்கும் 'சேவை' செய்வதே இவைகளின் குறிக்கோள்.

இந்தியக் குடியரசானது, தலித் மக்களுக்கு சாதி, தீண்டாமைக் கொடுமைகளிலிருந்து பாதுகாப்பும், அரசியல் பொருளாதார தளத்தில் சம வாய்ப்பும் கிடைக்க வழிவகுத்திருப்பதை உறுதி செய்யும் என இன்றளவும் நம்பி வருகிறார்கள். தலித் மக்களுக்காகத் தங்களுடைய காலமெல்லாம் போராடி உரிமைகளை மீட்டெடுத்து மேலும் மீட்டெடுக்க வழிகாட்டிய தலித் தலைவர்களைப் பற்றி (தலித் மக்களுக்கே தெரியாத வண்ணம்) அரசியல், சமூக, பொருளாதாரத் தளத்தில் ஆதிக்கம் செய்த / செய்கிறவர்கள் (தாங்கள்) அரசை ஆளும்போது பாடத்திட்டம் மூலமும், வெகுஜன ஊடகங்களின் மூலமும் இருட்டடிப்பு செய்து தலித் மக்களிடமிருந்து பிரித்து விட்டிருக்கின்றனர்.

இத்தகைய நடவடிக்கையானது ஆதிக்கச் சாதியினர் மேற்கொண்ட ஒருவகையான சமூக இன ஒதுக்கல் நடவடிக்கையே. பாடத்திட்டத்தின் - மக்கள் தொடர்பு சாதனங்களின் மூலம் தலித் மக்களுக்குரிய சம வாய்ப்புகள் கிடைக்க தடையேற்படுத்திவிட்டு, ஆதிக்க இன சாதி தலைவர்கள்தான் தலித் மக்களுக்கான தலைவர்கள் என காட்சி ஊடகங்களில், பத்திரிக்கைகளில் கற்பிதமாக செறிவூட்டப்பட்டிருக்கின்றனர். தற்போது அவர்கள், தலித் மக்களின் சமூக - பொருளாதார விடுதலைக்கு வழிவகுப்பார்கள் எனவும் கட்டமைக்கின்றனர். ஊர் - சேரி என பிரிந்து இருப்பினும் பாடத்திட்டம், ஊடகங்களின் இத்தகைய நடவடிக்கைகளால் பிறப்பால் தலித் ஆனவர் தன்னுணர்வின்றி ஆதிக்கச் சாதியினரின் அரசியலுக்கு உறுதுணை புரிவதாகவும் ஆக்கப்படுகின்றார்.

அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு தயாரிக்கப்படும் பாடத்திட்டமும், மக்கள் தொடர்பு சாதனங்களும் சேர்ந்து தலித் மக்களானவர்கள் ஆதிக்கச் சாதியினருக்கு இணங்கி சேவகம் செய்யவே என மறைமுகமாக உணர்த்தப்படுகின்றனர்.

தலித் மக்கள் தங்களுடைய அரசியல், கல்வி, பொருளாதார வளர்ச்சிக்காகவும், பாடத்திட்டத்தின் மூலமும், ஊடகங்களின் மூலமும் சமூக பாரபட்சம் காட்டி மறைக்கப்பட்ட தலித் மக்களின் உண்மை வரலாறுகளை மீட்டெடுப்பதும், பரவலாக்குவதும் தலித் மக்களின் பணியாகிறது. தலித் மக்களில் பலர் வானொலி, தொலைக்காட்சி நேயர்களாகவும், பத்திரிக்கைகளின் வாசகர்களாகவும் இருக்கின்றனர். இச்சமூக மக்களின் தனித்துவத்தை அங்கீகரிக்காது, பொது - கேளிக்கை என்கிற பெயரில் தான் சார்ந்த தன் வர்க்கம் சார்ந்த, ஆதிக்க சாதியின அரசியல், கலாச்சாரத்தை திணிப்பது தலித் சமூகத்திற்கு செய்யும் மிகப்பெரிய சமூக அவமரியாதையாகும்.

கடவுளை உருவாக்கி, கடவுள் தோன்றி மனிதர்களை படைத்ததாக மக்களிடம் மாற்றிக் கூறி, மக்களை வழிபடச் செய்து அதன்மூலம் தட்சிணையைப் பெற்று அதனைப் பெருக்கி (கடவுள் பெயரால்) பார்ப்பனியம் நிறுவனமயமாகியதுபோல், தொலைக்காட்சி நிறுவனமும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வடிவமைப்பு செய்து மக்களுக்காக எனக்கூறி மக்களிடம் காண்பித்து (விளம்பரம் மூலம்) லாபம் எனும் தட்சிணையைப் பெற்று நிறுவனமயமாகி விட்டிருக்கிறது.

கோவில் - வீடு (தொலைக்காட்சி) இரண்டுமே தரிசனத்துக்குரியவைகளாகி விட்டன. வீடு - கோவிலாக, கோவில் - வீடாகி விட்டது.

ஆக்கவும், அழிக்கவும், காக்கவுமான பணியில் அதிகாரத்தைக் கொண்டுள்ள ஆதிக்கச் சாதியினர் மண்ணின் மைந்தர்களாக. தலித் மக்களோ தரிசனத்திற்காக ஊருக்கும், கோவிலுக்கும் வெளியே!!.


படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி பதில்

■ முனிமா

✉ தென்னிந்திய தலித் எழுத்தாளர் பேரவை திட்டமிட்டபடி செயல்படுகிறதா?

*- பழனிச்சாமி, சேலம்-3.*

வரும் அக்டோபர் 17-ந் தேதி திருவள்ளூரில், திருவள்ளூர் மாவட்ட பேரவைக் கிளையினை துவக்க இருக்கிறோம். சென்னை, விழுப்புரம், திருச்சி மற்றும் கடலூர் மாவட்டக் கிளைகள் அவ்வப்போது கருத்தரங்குகளும், மாணவர்களுக்கான பயிற்சி முகாம்களும் நடத்துகின்றன. புதுக்கோட்டையில் அருள் மேரி உலகநாதன் எனும் ஓய்வுபெற்ற தமிழாசிரியையும் தலித் முக்குலத்தின் அமைப்பாளரும், மாவட்டப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளார். தேனி மாவட்டத்தில் சிவபாலுவும் பேரா. ராஜ்குமாரும் பள்ளர், பறையர், அருந்ததியர் ஒற்றுமையை முன்னெடுத்து பிரச்சாரம் செய்து வருகின்றனர். கன்னியாகுமரி, தூத்துகுடி மாவட்டங்களில் பேரா. பிரபாகர், எழுத்தாளர் அபிமானி, தொழுவு - அன்பழகன் ஆகியோர் துடிப்புடன் செயல்படுகின்றனர். எனினும் இது போதாது. கோவை, சேலம் போன்ற மேற்கு மாவட்டங்கள் இன்னும் தங்கள் பணிகளை துவங்கவில்லை. பெண் எழுத்தாளர்கள், கலைஞர்கள் தலித் அடையாளத்துடன் இணைந்து செயல்பட முன்வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கான தனி முயற்சிகளை தென்னிந்திய தலித் எழுத்தாளர் மற்றும் கலைஞர் பேரவை மேற்கொள்ளும்.

✉ புதிய கோடாங்கி பதிப்பகம் சிவகாமியின் 'அப்னா பஞ்சாயத்து' என்ற நூலை மட்டும் வெளியிட்டுள்ளது. வேறு ஏதாவது புத்தகங்கள் வெளியிடும் எண்ணம் உள்ளதா?

*- சக்திவேல், பழனி.*

தலித் எழுத்தாளர்கள் பதிப்பகச் செலவுளை பகிர்ந்துகொள்ள முன்வந்தால், பல புத்தகங்களை இப்பதிப்பகத்தின் மூலம் வெளிட முடியும். சன்னாவின் 'அல்லாதவர் அரசியல்' பற்றிய கட்டுரைத் தொகுப்பும்,சிவகாமியின் 'உடல்மொழி'யும் இப்பதிப்பகத்தின் மூலம் டிசம்பர் இறுதிக்குள் வெளியிடும் திட்டமுள்ளது.

✉ பெரியாரின் பிறந்தநாளை ஒட்டி பல பத்திரிக்கைகள் சிறப்பு இதழ்கள் கொண்டு வந்திருக்கின்றன. புதிய கோடாங்கி ஏதேனும் திட்டம் வைத்துள்ளதா?

*- நெடுஞ்செழியன், மதுரை-2.*

பெரியார் சிறப்பு இதழ்கள் கொண்டு வந்திருக்கின்ற பத்திரிக்கைகள் புதிய கோடாங்கி போன்ற தலித், இதழ்கள் பெரியார் மீது வைத்த விமரிசனங்களுக்கு பதில் தரவும், தலித்துகள் மீது சவாரி செய்ய பெரியார் இன்றும் தேவைப்படுகிறார் என்பதை வலியுறுத்தவும் சிரமப்பட்டிருக்கின்றன. பாராட்டுகள்.

அம்பேத்கர் பிறந்தநாளை ஒட்டி சிறப்பு இதழ்களை அவர்கள் கொண்டுவரட்டும். அதில் அவர்கள் சொல்லப்போகும் செய்திகளையும் உள்வாங்கி விமரிசிக்கலாம்!?

✉ சேது சமுத்திரம் திட்டம் பற்றி விளக்கிக் கூறுங்கள். எல்லா அரசியல் தலைவர்களும் அதற்காக பெருமை பாராட்டுகின்றார்கள். தலித்துகளுக்கு அதில் ஏதேனும் நன்மை உண்டா?

*- பக்கீர்முகம்மது, மண்டபம்.*

தொடர்ந்து கப்பல்கள் கடல்வழி பயணம் செய்ய முடியாதபடி, இந்தியாவின் தென்பகுதியில் ராமேஸ்வரத்திற்கு அருகிலுள்ள பாம்பன் பகுதியில் மணற்திட்டு உள்ளது. இங்கு கடலின் ஆழம் மூன்று மீட்டர் தான். இந்த மணற்திட்டு இலங்கையின் தலைமன்னார் பகுதிவரை உள்ளது. ஆகையால் தூத்துக்குடிக்கு வரும் போகும் கப்பல்கள் இலங்கைத் தீவைச் சுற்றி வட்டமடித்து வருகின்றன. ஏறக்குறைய நூறு கடல் மைல்கள் (Nautical miles) சுற்ற வேண்டியுள்ளது. பயணம் 24 மணி நேரம் கூடுதலாகிறது.

ஆகவே இந்த மணற்திட்டைக் கரைத்து 35 அடி ஆழப்படுத்த வேண்டியுள்ளது. இதுவே சேது சமுத்திரத் திட்டமாகும். முதன்முதலாக 1980-இல் இத்திட்டம் மத்திய அரசில் விரிவாக விவாதிக்கப்பட்டது. தொடர்ந்து 1983, 1989, 1990 என்று விவாதிக்கப்பட்டு 1994-இல் தமிழக அரசு பல்லவன் கன்சல்டன்ஸி கமிட்டி மூலம் திட்டம் தயாரித்து மத்திய அரசுக்கு சமர்ப்பித்தது. அவ்வருடம் திட்ட மதிப்பீடு ரூ. 1200 கோடியாக இருந்தது. 1996-ஆம் வருட திட்ட மதிப்பீடு ரூ.1448 கோடியாக உயர்ந்தது. 1980-இல்தான் இத்திட்டம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்றாலும் முதன்முதலாக 1860-ஆம் வருடமே கமான்டர் டெய்லர்தான் இத்திட்டத்தை வலியுறுத்தியவர் ஆவார்.

இத்திட்டத்தினால் கப்பல் வைத்திருப்பவர்களுக்கு ஒட்டுமொத்தமாக வருடத்திற்கு முப்பது கோடி மிச்சமாகும். அதிக கப்பல்கள் தூத்துக்குடி துறைமுகத்துக்கு வருவதன் மூலம் துறைமுக வருமானம் அதிகரிக்கும். வேலைவாய்ப்பு சிறிதளவு அதிகமாக வாய்ப்புள்ளது. தற்போது இத்திட்டத்திற்காக அறிவிக்கப்பட்ட முதலீடு ரூ. 2000 கோடி.



படிப்பகம்

www.padippakam.com

பாதிப்பு என்றால் அது மீனவர்களுக்குத்தான். சுற்றுச் சூழல் பாதிக்கப்படலாம். தலித்துகளுக்கு இதனால் நன்மை எதுவும் இல்லை. இந்த மணற்திட்டு கரைக்கப்பட்டு ஆழப்படுத்தப்படும் சமயத்தில் கூலி களாக சில பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கலாம். அவ்வளவுதான்!

இதற்குப் போய் அரசியல்வாதிகள் அலட்டிக் கொள்கிறார்கள். பெரிதாக சாதித்து விட்டதாக உதார் விட்டு தமிழக மக்களை ஏமாற்றுகிறார்கள். வரும் இதழ்களில் இதுபற்றிய விரிவான கட்டுரையை எதிர் பாருங்கள்.

சிறப்புக்கூறுத் திட்டம் எந்த வகையில் தலித்துகளுக்கு நன்மை செய்யும்?

*- பெஞ்சமின், தரங்கம்பாடி.*

சிறப்புக்கூறுத் திட்டம் பற்றிய கையேடு ஒன்றை முறைப்படி அரசாங்கம் அச்சடித்து மக்களுக்கு வழங்கியிருக்க வேண்டும். அப்படி எதுவும் செய்ய வில்லை.

இத்திட்டப்படி தலித்துகளுக்கு ஒவ்வொரு வருட மும் 20 சதவிகிதம் மாநில பட்ஜெட்டிலிருந்து தனியாக ஒதுக்க வேண்டும்.

இவ்வருடம் ரூ. 1700 கோடி ஒதுக்கீடு செய்திருக்க வேண்டும். ஆனால் ஒதுக்கப்பட்டது ரூ. 350 கோடி தான்.

இத்தொகை முழுதாக ஒதுக்கப்படுவது மட்டுமல் லாமல், ஆதி-திராவிடர் நலத்துறை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அத்துறை மூலம் தலித் மக்கள் தேவையறிந்து திட்டங்கள் தீட்டி, முறையாக செயல் பட்டால் தலித் மக்களின் வளர்ச்சிப் பாதையில் சிரமங்கள் இருக்காது.

தலித் எழுத்தாளர்கள் நூறுபேர் இருக்கிறார்கள் என்கிறீர்கள், ஏன் ஒவ்வொரு மாதமும் ஒரு எழுத்தாளரை சிறந்த முறையில் கோடாங்கி வாசகர்களுக்கு அறிமுகம் செய்யக்கூடாது?

*-அறிவழகன், அரியலூர்.*

அடுத்த இதழிலிருந்து துவங்கிவிட்டால் போகி றது!. கவிஞர் ப்ரதிபா ஜெயச்சந்திரன் அவர்கள் இவ் வேலையைத் தொடர்ந்து செய்ய முன்வந்துள்ளார்கள். எழுத்தாளரின் நிழற்படம், வாழ்க்கைக் குறிப்புகள், எழுதிய நூல்கள், சில தேர்ந்த கருத்துக்கள் என்ற வகையில் பதிவுகள் அமையும்.

கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் துணையாகவும், நட்பாகவும் பழகுவது தற்போதைய சமூக அமைப்பில் சாத்தியமா?

*- மாலதி, தென்காசி.*

இல்லறம் என்பது இனியதாக இதை சாத்திய மாக்க வேண்டும். ஆனால் ஆடவனான எசமானும், அடிமையான பெண்ணும், தங்கள் உறவுகளை என்ன பெயர்சொல்லி அழைத்துக் கொண்டாலும், ஒரு பெண் ஆணுக்கிணையான கல்வி அறிவும், அதிகார மும் பெறும்போதுதான் கணவன் மனைவி நண்பர் களாகப் பழக முடியும்.

தமிழக அரசியலில் ராமதாஸும் திருமாவளவனும் இணைவது புரட்சி என்று நான் நிச்சயமாகச் சொல்வேன்!

*- லோகநாதன், காட்பாடி.*

இரண்டு கட்சிகளும் நட்புப் பாராட்டுவது சிறப் புக்குரியது. இருவருக்குமான கூட்டு நடவடிக்கையில் தலித்துகளுக்கான திட்டங்கள் யாவை?

**நன்றி – உலகத் தமிழர் சக்தி**

**செப்டம்பர் 2004**

**"இன்குலாப் அவர்களின் ஒப்புதல் வாக்குமூலம்"**

இன்குலாப் அவர்களுக்கு உலகத் தமிழர் சக்தி பத்திரிக்கை முன்வைத்த கேள்வி:

சமீப காலமாக தலித் எதிர்ப்பாளர் என்ற பிரச சாரத்தை உங்கள் மீது தொடுத்து வருவது குறித்து?

இக்கேள்விக்கு இன்குலாப் அவர்கள் அளித்த மிகப் பெரிய பதிலுக்குள் ஆழமாகப் போகாமல் சுருக்கமாக வெளியிட விரும்புகிறது புதிய கோடாங்கி.

1. அமைதி அரசு விபத்தில் சிக்கி மண்டையில் அடிபட்டு மோசமாக பாதிக்கப்பட்டிருந்த சூழலில் அமைதி அரசின் மருத்துவச் செலவிற்காக வசூலிக்கப் பட்ட பணத்தை வீ. அரசும், கவிஞர் இன்குலாப் ஆகிய நானும் கையாடல் செய்துவிட்டதாக தலித் தோழர்கள் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்ந்து எங்களால் பொய்யாக்கப்பட்டு வருகின்றது.

2. வீ. அரசு கையாடல் செய்துவிட்டாரென தலித்து கள் அபாண்டமாகப் பழிப்போடக்கூடாது. ஏனெனில் அவர் தம்பிக்கு தலித் இனத்தில் பெண் எடுத்துள்ளார்.

3. வழக்கறிஞர் சோதிப்பிரகாசத்தின் 'வரலாற்றில் முரண்' (வரலாற்றில் முரண இயக்கம் என்றிருத்தல் வேண்டும்) என்ற புத்தகத்திற்கு இன்குலாப் ஆகிய நானும் ஆழமாகப் போகாமல் சுருக்கமாக முன்னுரை எழுதிக் கொடுத்தேன்.

4. சிவகாமி, கவுதம சன்னா போன்ற தலித்துகள் இன்குலாப் ஆகிய என்னை தலித் ஆதரவாளர் என்று ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள்.

பின்குறிப்பு

இன்குலாப் என்ற தலித் ஆதரவாளர், தலித்து களுக்கு தலித்தியம், பெண்ணியம் கற்றுத்தர விரும்பும் தொனி வெளிப்படுகிறது. ஆசிரியர் பணிக்கு அவர் விண்ணப்பிக்கும் பட்சத்தில் பரிசீலிக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# பாரசீக வளைகுடாவுக்கு அப்பால்

■ எச். பீர்முஹம்மது, ழீன் கிறிஸ்டோப்

வாழ்க்கை முழுவதும் காந்த விசைகளால் நிரம்பியிருக்கிறது. அதன் துருவங்களோடு நம்மை ஈர்க்க வைக்கிறது. இரையைத் தேடி பறவைகள் எல்லை தாண்டுவது மாதிரி மனிதன் எல்லை தாண்டுவது அவசியமான ஒன்றாக மாறிவிட்டது. அது மாதிரியே எனக்கும் ஆகிவிட்டது. எனக்குள்ள சமூக கட்டாயம் எல்லை தாண்ட வைத்துவிட்டது. மத்திய கிழக்கு நாடான பஹ்ரைனில் தற்பொழுது பணிபுரிகிறேன். இங்கு பலநாட்டு மனிதர்களைப் பார்க்க முடிகிறது. அந்தவகையில் எனக்கு பிரான்சை சேர்ந்த ஒருவருடன் தற்செயலாக அறிமுகம் ஏற்பட்டது. ஐரோப்பியர்களுக்கு கோட்பாடு, இலக்கிய ரீதியான பாதிப்பு இயல்பாகவே இருக்கும். பிரான்சில் உள்ள மனித உரிமை அமைப்பொன்றில் உறுப்பினராக உள்ள இவருக்கு கோட்பாடு, இலக்கியம், அரசியல் போன்ற துறைகளில் ஈடுபாடும், ஆழ்ந்த அறிவும் இருக்கிறது. பிரெஞ்சுப் பத்திரிக்கைகளில் அவ்வப்போது கட்டுரைகள் எழுதி வருகிறார். சிவில் இஞ்சினியராக பிரான்சில் பணிபுரியும் இவர் கம்பெனிகளிடையேயான ஒப்பந்த அடிப்படையில் இங்கு பணியாற்றுகிறார். தொலைபேசி வழியாக வழக்கமாக உரையாடிக் கொள்கிறோம். எங்களுக்குள் பல்வேறு விசயங்கள் குறித்து நேரடியாக உரையாட வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது. பாரசீக வளைகுடாவின் அழகான கடற்கரையோரம் அமர்ந்து (இது பஹ்ரைனுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையே எல்லையோரம் அமைந்திருக்கிறது) ஒரு நாள் விரிவான உரையாடல் நடத்தினோம். குறிப்பாக ஐரோப்பிய விவகாரங்கள், மத்திய கிழக்கு, படைப்பிலக்கியம், பின் நவீனத்துவம் குறித்து நிறையவே பேசினோம். அவற்றின் சுருக்கமே இக்கட்டுரை.

**பீர்முஹம்மது :** மத்திய கிழக்கின் ஒரு மூலையில் பாரசீக வளைகுடாவின் கரையில் உட்கார்ந்து கொண்டு உரையாடுவது நமக்கு நல்ல அனுபவம்தான். அதோ பாருங்கள் அல்-கோபார் தெரிகிறது. இங்குள்ள அரபு பெட்ரோலிய கழகத்தின் மீதுதான் சமீபத்தில் அல்-குவைதாவின் தாக்குதல் நடைபெற்றது. இந்த தாக்குதலை நாம் அரபு - மேற்கு பின்னணியில் வைத்து பார்க்கவேண்டியதிருக்கிறது. மேற்குலகம் காலங்காலமாக இஸ்லாத்தை அதன் எதிரியாகப் பார்த்து வந்திருக்கிறது. ஸ்பெயின் அனுபவத்திலிருந்து நாம் இதனைத் தொடங்கலாம்.

**ழீன் கிறிஸ்டோப்:** என்னை பொறுத்தவரை பெரும்பான்மை எப்பொழுதுமே தனக்கு எதிரிணையை தேடி கொள்கிறது. பல மில்லியன் ஆண்டு உலக வரலாறு நமக்கு இதைத்தான் காட்டுகிறது. நடப்பு உலகில் மதங்கள் சாமானிய மனிதனின் வாழ்வாதாரமாக இருக்கின்றன. முதலாளித்துவம் சில சமயங்களில் மதத்தை தன்னுடைய ஒடுக்குமுறை கருவியாக பயன்படுத்திக்கொள்கிறது. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் ரோம் மன்னன் காண்ஸ்டாண்டைன் கிறிஸ்தவத்தை தன்னுடைய அதிகாரபூர்வ சமயமாக அறிவித்தான்.

அன்றைய நிலையில் கிறிஸ்தவம் அவனுக்கு ஓர் அதிகார கோல். அதனை மையமாக வைத்தே அவன் மற்ற நாடுகளின் மீது படையெடுத்தான். திருச்சபையின் ஆதரவும் அதற்கு இருந்தது. கலிலியோவில் இருந்து கோபர்நிகஸ் வரையிலான அனுபவம் நமக்கு அதன் சுயத்துவத்தை வெளிப்படுத்துகிறது. ஐரோப்பியர்களுக்கு 18-ஆம் நூற்றாண்டு வரையிலான விஞ்ஞான முடிவுகளை ஏற்பதில் சிக்கல் இருந்தது. அவர்கள் பௌதீக உலகை மதத்தின் துணையோடு அணுகினார்கள். சூரிய கிரகணத்திற்குக் கூட ஆசாரம் பார்ப்பது ஐரோப்பாவின் சில பகுதிகளில் நடைமுறையில் இருந்தது. புராட்டஸ்டண்ட் இயக்கம் ஐரோப்பிய வரலாற்றின் துவக்கப் புள்ளி. வைதீக கிறிஸ்தவத்தின் பிடியில் இருந்து மக்களை விடுவித்த பெருமை அதற்கு உண்டு. அன்று பாவமன்னிப்பு கூட மேலடுக்கு முறையில் இருந்தது. இன்று எல்லாமே மாறிவிட்டது. இஸ்லாத்தைப் பொறுத்தவரை அது செமிடிக் ஆன்மாவைக் கொண் டது. (கிறிஸ்தவம் கூட) மத்திய கிழக்கில் அவசியமான காலகட்டத்தில் தோன்றிய மதம் அது. அன்றைய கால கட்டத்திலேயே மத்திய கிழக்கிற்கும் மேற்கிற்கும் கலாச்சார வேறுபாடு இருந்தது. உடை அமைப்பில் தொடங்கி சாதாரண நடத்தையில் கூட வேறுபாடு இருந்தது. இஸ்லாம் தோன்றியது அவசியமான மற்றும் தற்செயலான நிகழ்வு. அக்கால கட்டத்தின் அரசியல், கலாச்சாரம் நிலவிய நிலையில் ஒரு பொறுப்புள்ள நம்பிக்கை முறையை உருவாக்கி அதன் வழி அன்று வழக்கிலிருந்த ஒடுக்கு முறையை எதிர்த்தல் அல்லது துண்டுகளாக சிதறிக்கிடந்த இனக்குழு மக்களை ஒருங்கிணைத்தல் அதன் தேவையாக இருந்தது. இதனை செயல்படுத்தும் துலைவராக நபி திகழ்ந்தார். அதில் ஓரளவு வெற்றியும் கண்டார். புதிய கோட்பாட்டை நிறுவுவதற்கான அவசியம் இதன் மூலம் சாத்தியமானது. பெர்டினாண்டு ரஸ்ஸல் ஒருமுறை ஆரம்ப கால இஸ்லாத்தை போல்சிவிஸத்துடன் ஒப்பிட்டு இவை இரண்டும் யதார்த்தமானவை, சமூகமயமானவை, ஆன்மீகத்துடன் சம்பந்தம் இல்லாதவை, உலக பேரரசை நிறுவும் நோக்கம் கொண்டவை



படிப்பகம்

www.padippakam.com

என்று குறிப்பிட்டார். என்னுடைய பார்வையில் இது ஓரளவு சரியாக தெரிகிறது. காரணம் முஸ்லிம் அல்லாதவர்கள் மீதான அதன் வரலாற்று அணுகுமுறை. ஜிகாத் பற்றிய குரானிய பார்வை இன்று பல பயங்கரவாத அமைப்புகளுக்கு செயல்திட்ட மூலாதாரமாக இருக்கின்றது. அடிபணிய வைத்தல் அல்லது ஏற்றுக் கொள்ள வைத்தல் ஆகிய குரானிய விளக்கங்களை இவை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றன. இன்னொருபுறத்தில் கிறிஸ்தவ பயங்கரவாதம் பற்றியும் சொல்ல வேண்டியிருக்கிறது. புனித பார்த்தலோமிய தின படுகொலைகள், தென்னாப்பிரிக்காவில் கருகலைப்பு மருத்துவமனைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், அமெரிக்க பழங்குடியினரை ஒடுக்குதல் ஆகியவற்றை குறிப்பிடலாம். இருந்தும் கிறிஸ்தவம் அதன் போக்கில் தன்னை சுயவிமர்சனம் செய்து கொண்டுவிட்டது. ஆனால் துரதிருஷ்டவசமாக இஸ்லாம் அதன் போக்கில் தன்னை என்னென்றைக்குமானதாக கருதிக்கொள்கிறது. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நிகழ்த்திய கொடூரங்கள் பதிவுசெய்யப்பட வேண்டியவை. மத விரோதிகள் என்று ஏராளமானோர். கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். விபச்சாரிகள் என்று முத்திரை குத்தப்பட்டு பெண்கள் கொல்லப்பட்டார்கள்.

**பீர்முஹம்மது :** இஸ்லாமிய அடிப்படைவாத குழுக்கள் தங்களின் செயல்பாடுகளுக்கு மத அடிப்படையை எடுத்துகொள்வது பற்றி சொன்னீர்கள். ஆனால் பாலஸ்தீன யூத பயங்கரவாதம் தன்னுடைய செயல்களுக்கு தன் பிரதியை நியாயப்படுத்திக் கொள்கிறது. ஆக மத அடிப்படைவாதிகளுக்கு அவர்களின் பிரதியே தூண்டுகோலாக இருக்கிறது எனலாம். அடுத்ததாக லெளகீக உலகத்திற்கு வருவோம். ஒடுக்குமுறைகள், மனிதனை மனிதன் சுரண்டுதல் ஆகியவற்றால் இவ்வுலகம் நிரப்பப்பட்டிருக்கிறது. ஒரு மனிதனின் அழுத்தமே மற்றொருவனுக்கான இருப்பு என மாறுகிறது. இதிலிருந்து சமூகத்தை விடுவிப்பது என்பது அவசியமாகிறது. 19-ஆம் நூற்றாண்டில் மார்க்ஸின் கனவும் அதுவாகத்தான் இருந்தது. சுரண்டலற்ற சமூகம் என்ற மார்க்ஸின் கனவு பலிக்கவில்லை. சோவியத்தின் வீழ்ச்சி நமக்கு அதை வெளிப்படுத்துகிறது. உங்கள் நாட்டிலும் (பிரான்சு) 1968-இல் மாணவர் புரட்சி நடைபெற்றது. அதன் பிறகு உலகம் முழுவதும் புதிய சோசலிச கட்டுமானம் பற்றிய உற்சாகம் பிறந்தது. அதன் தோல்வி எதிர்பாராதது. அந்தப் புரட்சியின் அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்க வேண்டியிருக்கிறது.

**ழீன் கிறிஸ்டோப் :** சோவியத் வீழ்ச்சி என்பது சோசலிச உலகத்திற்கான பெருஞ்சறுக்கல். அது ஒரு துன்பியல் நிகழ்வு கூட. அக்டோபர் புரட்சியானது புதிய உலகை நிர்மாணிப்பதற்கான தூண்டுகோலாக இருந்தது. புரட்சியின் அர்த்தம் அதுவே. பாரிஸ் கம்யூனின் (1871) பின் தொடரல் இது.

சோவியத் புரட்சிக்குப் பின்னர் லெனின் தலைமையிலான அரசுக்கு சோசலிச கட்டுமானத்தை நிர்மாணிப்பதில் சில தடங்கல்கள் இருந்தன. அது சரிசெய்யக் கூடியதுதான் என்றாலும் குறுகிய கால கட்டத்தில் லெனினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. லெனினைப் பொறுத்தவரை சர்வாதிகார ஆட்சியை தூக்கி எறிந்து விட்டு சோசலிசத்தை நிர்மாணிப்பது அவசியமாக இருந்தது. அவரின் மறைவுக்குப் பிறகு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் பெரும் குழப்பங்கள், சச்சரவுகள் ஏற்பட்டன. ட்ராஸ்கி தலைமையில் ஒரு குழு தனியாக இயங்கியது. லெனினுக்குப் பிறகு ஆட்சியதிகாரம் ஸ்டாலின் கைக்கு மாறியது பெரும் துரதிருஷ்டம். அவரின் இயல்பான ராணுவ குணமே அவரை சர்வாதிகாரத்திற்கு இட்டுச் சென்றது. சீர்திருத்த நடவடிக்கைகளில் இறங்கிக் கொண்டே அரசியல் எதிரிகளை பழி வாங்க ஆரம்பித்தார். அவர் காலத்தில் வதை முகாம்களுக்கு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் இருந்தது. ஒருவர் "கடையில் இறைச்சி ஏன் கிடைக்கவில்லை" என்று சுவரில் எழுதியதற்காக வதை முகாமுக்கு அனுப்பப்பட்டார்.

கட்சி நிர்வாகிகள் பலருக்கு உணவுப் பொருட்கள் இலவசமாகக் கிடைத்தன. பொது அங்காடிகளுக்குச் சென்று பொருட்களை எடுப்பார்கள். எடுத்த வேகத்தில் வெளியில் வருவார்கள். இதற்கு க்ரெம்லின் ரேசன் என்று பெயர்.

ட்ராஸ்கிக்கும் ஸ்டாலினுக்கும் இடையேயான முரண்பாடு அதிகாரப் போட்டியின் விளைவே. ஆட்சியதிகாரம் தனக்கு வரவேண்டுமென்ற தீவிர ஆர்வம் இராணுவ தளபதியாக இருந்த ஸ்டாலினுக்கு ஆரம்பத்திலிருந்தே இருந்தது. இதன் தர்க்கரீதியான தொடர்ச்சியே பின்னாளில் டிராஸ்கிக்கு எதிராகத் திரும்பியது. இது வேகமாக பரவி புகாரின், காம்னேவ், ஜினோவ் போன்றவர்களின் மீதும் திரும்பியது. இவர்களில் புகாரின் சிறிது காலம் ஸ்டாலின் நண்பராக இருந்தார். பின்னர் இருவருக்கிடையே உராய்வு வெடிப்பாக மாறியது.

ஸ்டாலின் தன் அரசியல் எதிரியாக டிராஸ்கி இருந்தபோதிலும் அவர்மீது நடத்திய தாக்குதல்கள் கொடூரமானவை. ஹிட்லர் யூதர்கள் மீது நடத்திய தாக்குதல்களோடு இதனை ஒப்பிடமுடியும். மெக்ஸிகோவிற்கு நாடு கடத்தப்பட்ட பின் அவரின் தலையை வெட்டிக்கொண்டு வரவேண்டுமென்றும் அதனைப் பார்த்து தான் காரி உமிழ வேண்டும் என்றும் தன் படைகளுக்கு உத்தரவிட்டார். மெக்ஸிகோவில் டிராஸ்கி தங்கி இருந்த இடத்தில் ஸ்டாலின் படைகள் முற்றுகை இட்டு தாக்குதல் நடத்தின. தாக்குதலில் டிராஸ்கி படுகாயம் அடைந்தார். சிறிது நாட்களுக்குப் பிறகு மரணடைந்தார். பின்னர் தொடர்ச்சியாக புகாரின், ஜினோவ், காம்னேவ் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர். புகாரின் மாஸ்கோ இறுதி விசாரணையின்போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

"நீங்கள் என்னை சோசலிச எதிரி என்றோ, மக்கள் விரோதி என்றோ, முதலாளிய பிரதிநிதியென்றோ குறிப்பிடுங்கள். அது உங்கள் வசதியைப் பொறுத்தது. எனக்கு அதைப்பற்றி கவலை இல்லை. ஆனால் என்றாவது ஒரு நாள் இந்த சோவியத் என்னை


படிப்பகம்

www.padippakam.com

புரிந்துகொள்ளும். என் மரணம் சோவியத்தின் வீழ்ச்சியாக இருக்கும்."

இது தவிர ஏராளமானோர் கொல்லப்பட்டனர். ஸ்டாலின் காலத்து வரலாறுகள் பல மறைக்கப் பட்டன. சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகே அவை அனைத்தும் வெளிவந்தன. பிரான்சில் இதற்கு முன்பே இது பற்றிய விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. ஸ்டாலினுக்குப் பிறகு வந்த குருசேவ், பிரஸ்னேவ் ஆகியோர் சோவியத்தை மீட்க விரும்பினர். குருசேவ் ஸ்டாலினை கடுமையாக விமர்சித்தார். இதுகுறித்து அவர் கட்சி மாநாட்டில் ஆற்றிய உரை வெளியிடப்படாமல் நீண்ட காலத்திற்குப் பிறகே வெளிவந்தது. குருசேவின் செயல்திட்டமும் சோவியத்தை சீரமைக்க முடியவில்லை. பண்ணை அமைப்பு முறையை மாற்றி அமைத்தார். விளைவு விவசாயம் பின்னுக்குச் சென்றது. இந்நிலையில்தான் மாவோவுடன் மோதல் ஏற்பட்டு சோவியத் - சீனா பிளவு ஏற்பட்டது. மேற்கண்ட நிகழ்வுகள் மூலம் பல்வேறு படிப்பினைகள் பெற வேண்டியதிருக்கிறது. மார்க்ஸின் கோட்பாடு 19-ஆம் நூற்றாண்டின் ஐரோப்பியச் சூழலை மையமாகக் கொண்டது. அக்காலகட்டத்திலேயே மேற்கிற்கும் கிழக்கிற்கும் வேறுபாடு இருந்தது.

மார்க்ஸின் "இதுவரையிலான வரலாறுகள் அனைத்தும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறே" என்பது கூட ஜெர்மனியில் நடைடந்த விவசாயப் போராட்டங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டதுதான். இறுதியில் அவரே அயர்லாந்து பிரச்சினையில் மாறுபடவேண்டியதாயிற்று. மரபார்ந்த ஜெர்மானிய கோட்பாட்டிற்கு எதிர்கோட்பாட்டை கண்டுபிடிப்பது அன்றைய நிலையில் அவருக்கு அவசியமானதாக இருந்தது. புருதோனும் பயர்பார்க்கும், டூரிங்கும் இதற்கு உதாரணங்கள். கம்யூனிஸ்ட் கட்சிகள் இதனை சரிவர புரிந்துகொள்ளவில்லை.

புரட்சியின் விளிம்பில் பிரான்சில் 1968-ஆம் ஆண்டின் மாணவர் புரட்சி ஓர் துவக்கப்புள்ளி. அந்நேரத்தில் பிரான்சு புரட்சியின் விளிம்பில் நின்றது. நான் அப்போது குழந்தை. என் மூத்த சகோதரர் கூட இந்தப் புரட்சியில் பங்கேற்றார். 1968 மார்ச் 22-இல் பிரான்சு அரசாங்கம் ஐந்து மாணவர்களை போராட்டத்தின் பேரில் கைது செய்தது. வியட்நாம் போரைக் கண்டித்து அவர்களின் போராட்டம் இருந்தது. அன்று மாலையே மாணவப் பிரதிநிதிகள் பாரிஸ் பல்கலைக்கழக வளாகத்தில் கைதைக் கண்டித்து கூட்டம் நடத்தினார்கள். விரிவுரை வளாகத்தில் சே-குவாரா பற்றிய படங்கள் திரையிடப்பட்டன. இந்நிலையில் பிரான்சு கல்வி மந்திரியின் பேச்சு மாணவர்களை மேலும் தூண்டிவிட்டது. பல்கலைக்கழக வளாகத்தில் சே-குவாரா, டிராஸ்கி, பிடல்காஸ்ட்ரோ, மாவோ போன்றவர்களின் பெயர்கள் அடிக்கடி உச்சரிக்கப்பட்டன. மே 3-ஆம் நாள் சில மாணவர்கள் பல்கலைக்கழத்தினரால் நீக்கப்படுவர் என்று எச்சரிக்கப்பட்டனர். அன்றைய தினம் மாணவர்கள் மீது கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தியது. சில மாணவர்களை கைதும் செய்தது. இதனைத்

**ஸ்டாலின் தன் அரசியல் எதிரியாக டிராஸ்கி இருந்தபோதிலும் அவர்மீது நடத்திய தாக்குதல்கள் கொடூரமானவை. ஹிட்லர் யூதர்கள் மீது நடத்தய தாக்குதல்களோடு இதனை ஒப்பிடமுடியும். மெக்ஸிகோவிற்கு நாடு கடத்தப்பட்ட பின் அவரின் தலையை வெட்டிக்கொண்டு வரவேண்டுமென்றும் அதனைப் பார்த்து தான் காரி உமிழ வேண்டும் என்றும் தன் படைகளுக்கு உத்தரவிட்டார்.**

தொடர்ந்து மாணவர்கள் வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தார்கள். மே 10-ஆம் நாள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பிரம்மாண்ட பேரணிக்கு ஏற்பாடு செய்தார்கள். "கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்," "ஸோபோர்ன் பல்கலையிலிருந்து போலீஸை வாபஸ் வாங்கு" போன்ற கோரிக்கைகள் உள்ளடங்கி இருந்தன. பேரணி ஸோபோர்ன் பல்கலையை நெருங்கியதும் தயாராக நின்ற போலீஸ் அவர்கள் மீது தடியடிப் பிரயோகம் மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இறுதியில் பல மாணவர்கள் படுகாயமடைந்தனர். நாடு முழுவதும் மாணவர்கள் மத்தியில் கொந்தளிப்பு நிலவியது. பல இடங்களில் மாணவர் போராட்டங்கள் நடந்தன. பள்ளி மாணவர்களும் இதில் கலந்துகொண்டனர். இதற்கிடையில் மாணவர்கள் ஸோபோர்ன் பல்கலைக்கழகத்தை "மக்கள் பல்கலைக்கழகமாக" அறிவித்தனர். இனி மாணவர்கள் அடங்கிய குழுவே அதை நிர்வகிக்கும் என்றனர். பல தொடர்ச்சியான போராட்டங்களுக்குப் பிறகு பிரான்சு அரசு மாணவர்களை விடுதலை செய்தது.

இந்தப் புரட்சி உலகம் முழுவதும் புதிய பார்வையை கொடுத்தது. நவ-மார்க்ஸிய சிந்தனையாளரான அல்-தூசரால் கூட இப்புரட்சியை விளக்க முடியவில்லை.

இதற்கிடையே பிரான்சு கம்யூனிஸ்ட் கட்சியானது புரட்சியை குறைகூறியது. குறுங்குழுக்கள், குழப்பவாதிகள், திருத்தல்வாதிகள் என்றது. போலீஸ் அராஜகம் நடந்து கொண்டிருந்தபோது கூட கம்யூனிஸ்ட் கட்சி மாணவர்களை விமர்சித்தது பெரும் அபத்தம். வரலாற்று தவறு கூட. புரட்சி முடிவுக்கு வந்தபின்னரே தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டது. சில நேரங்களில் கட்சி இது மாதிரியான திரிப்புத்தனத்தில் இறங்குகிறது. இன்றைய சூழலில் உலகம் மனிதன் மீதான அழுத்தத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதற்கான மாற்று வழிகளின் தேடல் இருந்துகொண்டே இருக்கிறது.

*- மீதி அடுத்த இதழில்.*



படிப்பகம்

www.padippakam.com

உலகமயமாக்கல்

# ஆயுத எழுத்தாய் ஹைகூ கவிதைகள்

■ அன்பாதவன்

தொழிற்புரட்சி என்ற பெயரில் பிறந்த எந்திர மயமாக்கல் முதல்முதலில் மனிதர்களின் ஆளுமையை விழுங்கியது. எந்திரத்தின் பற்சக்கரங்கள் மனிதர்களை அடிமைப்படுத்துகின்ற அதிகாரமையங்களாயின.

மூன்றாம் உலகம் என்று அடிமைத் தேசங்களுக்கு பெயர் சூட்டப்பட்டு, மேலை காலனியாதிக்க நாடுகளுக்கான விற்பனை சந்தைகளாகின. மேலை நாடுகளின் வணிக கட்டளைகளுக்கேற்ப ஆடுகின்ற பொம்மைகளாக மூன்றாம் உலக நாடுகளின் உழைக்கும் மக்கள் கருதப்பட்டனர்.

"1980-களிலேயே பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தாட்சர், அமெரிக்க குடியரசுத் தலைவர் ரீகன் போன்றோர் 'முதலாளித்துவத்திற்கு மாற்று ஏதும் இல்லை'(There is No Alternative ) என்ற முழக்கத்தை வைத்து வந்தனர். 1989-இல் பெர்லின் சுவர் இடிக்கப்பட்டதற்கும், 1990-இல் சோவியத் யூனியன் தகர்ந்து வீழ்ந்ததற்கும் பிறகு இந்த முழக்கத்தின் மற்றொரு வெளிப்பாடாக 'உலகமயமாக்கல்' என்ற சொல்லாடல் பரவத் தொடங்கியது. 'உலகமயமாக்கல்' என்பது 'புதிய தாராளவாதம்' (New - Liberalism) என்ற கருத்தியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

தாராளவாதம் என்ற பெயரில் தனியுடைமை போற்றி போஷிக்கப்பட வேண்டும்; தனி முதலாளிகளின் சுதந்திரத்தில் அரசின் தலையீடு இருக்கக் கூடாது; பெரும் வணிக நிறுவனங்களின் பெயரில் கொழுத்த லாபமீட்டும் தனிக் குடும்பங்களுக்கான வரி குறைக்கப்பட வேண்டும்; அரசுக்கு சொந்தமான பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட வேண்டும்; தனியார் நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, லாபம் மட்டுமே குறிக்கோளாய்க் கொண்ட நிறுவனங்கள் செயல்பட வேண்டும் - போன்றவை தாராளமயமாக்கலின் தாரக மந்திரங்களாக் ஒலிக்கத் தொடங்கின.

இந்தக் கருத்துகளுக்கு வலுச் சேர்ப்பதற்காகக் கீழ்க்காணும் வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. உலக வரலாற்றைக் காண்கையில் நாட்டின் பொருளாதாரத்தில் அரசின் தலையீடு என்பது 1920 -களில் தான் தொடங்கியது. ஆனால் அது திறமையின்மையையும் விரயத்தையுமே உருவாக்கியுள்ளது. கிழக்கு ஐரோப்பிய (சோசலிச) நாடுகளின் பொருளாதார வீழ்ச்சி, இலத்தீன் அமெரிக்க, ஆப்பிரிக்க நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார தேக்க நிலை, வறுமை ஆகியன பொருளாதாரத்தில் அரசுத் தலையீட்டினால் ஏற்படக்கூடிய அழிவுகளுக்கு எடுத்துக் காட்டுகளாகும். வறுமையையும் பின்தங்கிய நிலையையும் கடந்து வரவேண்டுமானால், இன்னும் மிச்சம் மீதியுள்ள அரசுக் கட்டுப்பாடுகளை - உலக வர்த்தக நிறுவனம், சர்வதேச நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் துணை கொண்டு, அப்புறப்படுத்தியாக வேண்டும். தொழில் முயற்சிகளை அரசின் 'செயற்கையான' கட்டுப்பாட்டிலிருந்து விடுவிப்பதன் மூலம் மனித குலம் முழுவதுமே மேம்பாடு அடைய வழிவகுக்க முடியும். மூலதனம் தங்கு தடையின்றி எங்கெல்லாம் செல்ல விரும்புகிறதோ, அங்கு மிகவும் திறமையான முறையில் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். திரட்டப்பட்ட செல்வம் இனிமேல் திறமைக் குறைவான தொழில்களுடன் பிணைக்கப்பட்டிராது. உற்பத்தித் திறனில் ஏற்படக்கூடிய வியக்கத்தகு வளர்ச்சியை இப்போது தடுத்து நிறுத்திக்கொண்டிருக்கிற அதிகார வர்க்கக் கோட்பாடுகளும், தொழிற் சங்கங்களின் ஆதிக்கமும் ஒழிய வேண்டுமானால் தனியார்மயமாக்கலும், உள் நாட்டு சந்தைகளும் கட்டாயம் தேவை. இத்தகைய புதிய தாராளவாதக் கருத்துக்களுடன் இணைந்ததுதான் 'உலகமயமாக்கல்' என்ற கோட்பாடு ஆகும். உலகமயமாக்கல் என்ற பெயரில் பன்னாட்டு நிறுவனங்கள் குடிநீர் தொடங்கி பெரும் எந்திர உற்பத்தி வரை தங்களின் ஆதிக்க நாக்கை சுழற்றி எளிய நாடுகளின் வளங்களை ஸ்வாகா செய்து விட்டன.

'வேரை வெட்டுவோம்
வேண்டியது எங்களுக்கு
விறகு' *(கவிமுகில்)* என்றதொரு ஹைகூவைப் போல பிறநாட்டு வளங்களைச் சுரண்டி இலாபம் என்ற பெயரில் பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் நாடுகளுக்கு எடுத்துச் செல்லவே உலகமயமாக்கல் உதவுகின்றது.

புதிய பொருளாதாரக் கொள்கை ஒரு நாட்டை வேகமான வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்று விடும் என்று சொல்லப்பட்டது. இப்போதும்கூட அதை நம்புபவர்கள் பலர் இருக்கின்றனர். ஆனால் உலக வங்கியின் பொருளாதாரத் திட்டங்கள் ஏற்படுத்திய விளைவுகள் இதற்கு எதிர்மாறானவை. உலக வங்கி, ஐ.எம்.எஃப் ஆகியவற்றின் மாதிரித் திட்டங்களைப் பின்பற்றிய நாடுகளில் மிக அதிகமான கடன்சுமை அதிகரித்துக் கொண்டேயிருக்கும். வறுமை, பரவலாகக் காணப்படும் சமச்சீரற்ற தன்மை, சமூக ரீதியான பதற்றங்கள் போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கி கொண்டிருக்கின்றன. இந்தியாவுக்குள்ளும் உலகமயமாக்கம் தன் பருத்த உடலின் முக்கால் பாகத்தை உள்ளே நுழைத்துக்கொண்டு முழுவதுமாக உள்ளே வர முயன்று கொண்டிருக்கிறது.

சரி! உலகமயமாக்கல் என்றவொரு மிகப்பெரிய


படிப்பகம்

www.padippakam.com

தாக்கத்திற்கெதிராக தமிழின் ஹைகூ படைப்புலகம் எவ்வகையில் பதில் சொல்லியிருக்கிறது? நம் முன்னே கிடக்கின்ற பெரிய கேள்வி இது!

"தற்கால இலக்கியவாதி பல்வேறு சூழ்நிலைகளால் கெடுக்கப்படுகிறான். பழங்காலம், நிகழ்காலம், உள்நாடு, வெளிநாடு, தனிமனித சுயவெளிப்பாடு, சமூகத்தின் கூட்டுக் காரணங்கள் அவனை அலைக்கழிக்கின்றன. மாற்றத்துக்கு உள்ளாகும் சமுதாயமும், பூமியிலும், பண்பாட்டு அமைப்பிற்கான பொருளாதாரமும் அவனுக்குப் பின்னால் நின்று அவனது பொம்மலாட்டக் கயிறுகளை அசைக்கின்றன" என்னும் கலைவிமர்சகர் இந்திரனின் கருத்துகளை நாம் கவனத்துடன் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

தமிழின் பல ஹைகூ கவிஞர்கள் உலகமயமாக்கலுக்கு எதிரான ஹைகூக்களை நாடக மொழியில் பதிவு செய்துள்ளதை பரவலாக நாம் காணமுடிகிறது என்பது சற்றே ஆறுதலான விஷயம்.

"இரண்டு விளையாட்டுகள்
இன்று ஒன்றானது
கிரிக்கெட், சூதாட்டம்" என்கிற மணிமேகலை நாகலிங்கம் கிரிக்கெட் என்கிற விளையாட்டு விளம்பரதாரர்களின் வியாபார வெறியால் சூதாட்டமாக மாறிவிட்டதை சுருங்கச் சொல்கிறார்.

"வெளியே மழை
விளக்கருகே பூச்சி
சந்தோஷமாய்ப் பல்லி" என்ற அன்பாதவனின் காட்சியில் தெரிவதென்ன! உலகமயமாக்கல் என்கிற மழை, எளிய நாடுகளின் வளங்கள், சந்தோஷத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் என்கிற பல்லி இதுதானே!

செ. தமிழ்ராஜின் குரலோ காட்டமாக ஒலிக்கிறது.

"ஆலை மூடினாலென்ன
கையேந்தி நில்லுங்கள்
அன்னதானத் திட்டம்"

பாரம்பரியமாய் நாம் பயன்படுத்தும் எளிய வேளாண் பொருட்களையும் உலகமயம் காப்புரிமை என்ற பெயரில் கபளீகரம் செய்துவிட்டது. ஆதிக்கத்தின் முகத்தில் குத்தும் ஒரு கவிதையைத் தந்திருக்கிறார் சஞ்சீவி மோகன்:

"காப்புரிமை பற்றி கவலையில்லை
கிளி தின்னும் வேப்பம் பழம்"

இரா. இரவியின் ஹைகூவோ அப்பட்டமாக உண்மையைப் போட்டு உடைத்துவிடுகிறது.

"அட்சயப் பாத்திரம் அந்நியருக்கு
திருவோடு குடிமக்களுக்கு
உலகமயம்"

ஆட்சியாளர்களின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துகிறது ஜி. மாஜினியின் ஹைகூ.

"சுதேசிக் கொள்கையாம்
பரதேசிகளாய்
நெசவாளிகள்"

உழைப்பவர்களின் வயிற்றில் அடித்தால் என்ன வாகும்? நிலா கிருஷ்ணமூர்த்தி பதில் தருகிறார்.

"தேன் கூட்டில்
கல்லெறிந்தார்கள்
தனியார்மயம்"

பொன். குமாரின் கவிதையோ தாராளமயத்தைத் தோலுரிக்கிறது தாராளமாய்...

"இந்தியனாக இரு
இந்தியப் பொருளை வாங்காதே
தாராளமயம்"

அந்நிய மோகத்தில் சுதேசிப் பொருட்களை நிராகரிப்பவர்களை கேலி செய்கிறது மித்ராவின் ஹைகூ.

"தொட்டிச் செடிக்கு நீரூற்றுகையில்
கேலியாய்ச் சிரிக்கின்றன
வேலிப் பூக்கள்"

ஆரிசன் வைக்கின்ற விமர்சனக் குட்டு அழுத்தமானது.

"கனிதரும் மரங்களுக்கு
வேரின் சூட்சுமம் தெரியவில்லை
பொதுத்துறை விற்கும் அரசு" இயந்திரங்களோடு இணைந்து உழைத்து எந்திரங்களாகிப்போன மனிதரின் அவலத்தைச் சொல்லும் விக்னா பாக்யநாதனின் கவியொன்று.

"உழைப்பில் போட்டி
இயந்திரங்களுடன் மனிதர்கள்
இதயங்களும் இயந்திரமாய்" கலிவரதனின் ஹைகூவில் பளீரென வெடிக்கிறது ஓர் உயர்ந்த உண்மை.

"உலகமயமாதலில்
அமோக விற்பனை
இந்தியப் பொருளாதாரம்" உலகமயமாக்கல் கொடுமையை இதைவிட எளிமையாகவும் கூர்மையாகவும், கச்சிதமாகவும் யாரும் சொன்னதாகத் தெரியவில்லை'யென பொன்னீலனால் பாராட்டப் பெற்ற மு. முருகேஷின் கவிதையொன்று:

"பெப்சி குடித்து
செத்துப் போனது
கோலிச்சோடா" தமிழ் ஹைகூ படைப்பாளிகளின் ஒட்டுமொத்தக் குரலாக உலகமயமாக்கல், தாராளமயம், தனியார்மயம் என்ற எந்தவொரு ஆதிக்கத்திற்கும் எதிராக போர் முழக்கமாய் எழுகிறது விழி.பா. இதயவேந்தனின் கவிதை.

'விடமாட்டாய் என்றாலும்
தடுக்க முடியுமா உன்னால்
மீறி எழுவதை?' கண்ணில்பட்ட, கையில் கிடைத்த ஹைகூகளில் இவ்வளவு வன்மையான, உலகமயமாக்கலுக்கு எதிரான ஆயுத எழுத்துக்களாக ஹைகூ பதிவாகியிருப்பதைக் காணும்போது தமிழ்ப் படைப்பிலக்கியத்தின் மீதான நம்பிக்கை இன்னமும் தொடர்வதை உணர முடிகிறது.

ஹைகூ எனும் வடிவத்தை சமகால அரசியல் பின்னணியோடு இணைத்து செயல்படும்போது கவிதையை விடுதலைக்கான ஒரு ஆயுதமாகவும், புதிய புரிதலைத் தரும் கருவியாகவும் எதிர்காலத்திற்கான ஒரு கவிப்பதிவாகவும் கொண்டு செல்லமுடியும் என்பதில் ஐயமில்லை.



படிப்பகம்

www.padippakam.com



# தலித் எழுச்சியை சிக்கலாக்கிய மாய வலைகள்

4

■ மா. வேலுசாமி

"...புகழ்ந்து பசப்புவோரிடம் கவனமாய் இரு! கெட்ட எண்ணம் கொண்ட சில சாதி இந்துக்கள் வந்து, உன்னிடம் பணம் இருக்கிறது என்று அறிந்தால், உன்னை வானளாவப் புகழ்வார்கள். தங்களில் ஒருவனாக உன்னைப் பாவிக்காவிட்டாலும், நீ ஏதோ தவறுதலாக ஓர் ஆதி-திராவிடனாகப் பிறந்துவிட்டதாகக் கூறுவார்கள்.

நீ கல்லாதவனாக இருப்பினுங்கூட, உன்னை மாபெரும் கல்விமான் எனச் சொல்லுவார்கள். உன் வாயினின்று வரும் எந்த உளரலையும் தூற்றலையும்கூட சுத்த இலக்கியத் தமிழ் என்று அழைக்க அவர்கள் தயங்கமாட்டார்கள். நரியிடத்து காக்கை ஏமாந்து பிறகு வருந்தியது அன்றோ! அதுபோல புகழ்ச்சிப் போதையிலே நீ ஏமாறக்கூடும் அல்லவா?

உம்மிடம் நல்ல குணங்கள் இல்லை என்றாலும், சிறந்த குணங்கள் உன்னிடத்தில் நிறைந்திருப்பதாகக் கூறுவார்கள். உன்னை ஒரு தகைமைமிகு பெரியாரைப்போல் உடைகளால் தோற்றங்கொள்ளச் செய்வார்கள். அவர்கள் உன்னைப் பற்றி தங்களுக்குள்ளாகவே பேசி நகைத்துக் கொள்வார்கள். எடுத்தார் கைப்பிள்ளையாக நீ இருப்பதனால் அவர்கள் சொல்லுகிறபடியெல்லாம் நீ ஆடுவதனால் உன்னை அவர்கள் எந்நேரமும் முட்டாளாக ஆக்கிக் கொண்டு இருக்க விரும்புவார்கள்.

அவர்களின் வலையிலே நீ விழவேண்டாம். ஆதிதிராவிட மக்களை நிரந்தரமாக அடிமைத் தனத்திலே உழல வைக்க வேண்டும் என்பதே அவர்களின் குறிக்கோளும் ஆசையும் ஆகும்!"

*- தலைவர் எம்.சி. ராஜா*
*21.7.1922 தென்னிந்திய ஆதி திராவிடர் மாநாடு, திருநெல்வேலி*

மேற்கண்ட எச்சரிக்கையை தலைவர் எம்.சி. ராஜா அவர்கள் தமிழக தலித் மக்களின் நலனுக்காக விடுத்து ஏறக்குறைய 82 ஆண்டு காலமாகியும் இன்றுவரை அவர் எந்த மாயவலையில் விழவேண்டாம் என எச்சரித்து சென்றாரோ அதே மாயவலையில் இன்றைய தலித் எழுச்சியும் ஏறக்குறைய விழுந்துவிட்ட நிலையில், தமிழக அரசியல் இதுவரை பிராமணரல்லாதார் - பெரியார் - திராவிட அரசியல் என்ற முப்பெரும் அரசியல் முன்னெடுப்புகளைச் சந்தித்து அதே நிலையில் தொடர்ந்து வரும் நிலையில் இந்த முப்பெரும் அரசியல் முன்னெடுப்புகள் தலித்துகளின் எழுச்சியினை சிக்கலாக்கியது எங்ஙனம் என்ற முயற்சியின் கருவே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

ஏனெனில் பிராமணர் என்ற சமூகத்தின் ஆதிக்கத்தை இந்தியச் சமூக அமைப்பில் இருந்து முற்றிலும் தகர்க்க உருவாக்கப்பட்ட பிராமணரல்லாதார் இயக்கத்திலும் அதனுடைய வளர்ச்சியிலும் மிகவும் உற்சாகத்தோடு பங்காற்றியவர்கள் தலித்துகள் என்பதை யாராலும் மறுக்கமுடியாது. அதே வேளையில் பிராமணர்களின் சூழ்ச்சியை தகர்த்து பிராமணரல்லாத மக்களிடையே ஏற்பட்ட அதிகாரப் பரவல் தலித் சமூகத்தை மட்டும் சென்றடையவில்லையே. ஏன்? தங்களுக்கும் (பிராமணரல்லாதார்) பிராமணர்களுக்கும் ஏற்பட்ட அதிகார தர்க்கத்தில் தலித்துகள் பலிகடாக்கள் ஆக்கப்பட்டு பிராமணரல்லாத குழு மட்டும் அதிகார பலத்தை பெற்றதோ என்ற நிலையே மாயவலை ஒன்று. ஈ.வெ.ராமசாமி அவர்களால் உருவாக்கப்படுகிற மற்றும் அவர் தலைமையேற்ற இயக்கங்களான சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவு இயக்கம், நீதிக்கட்சி, திராவிடர் கழகம் என்ற அனைத்து இயக்கம் (அ) கழகம் (அ) ஆட்சிகளிலும் தலித்துகள் இவற்றால் தங்களது சமூக மற்றும் பண்பாட்டு இழிவு நிலை முற்றிலும் அகன்றுவிடப் போகிறது என்றெண்ணி புற்றீசலாய் தலித்துகள் புறப்பட்டுச் சென்று இவ்வியக்கங்களை வலுப்படுத்தினர் என்பதை மறுக்கவியலாத போது அரசியல் தளத்தில் ஏற்படுத்திட்ட புரட்சிகர மாற்றங்கள் - சமூக - பண்பாட்டு இழிவுகளை மாற்றும் தளத்தில் ஏற்படாத நிலை தலித்துகளின் எதிர்காலத்தை



படிப்பகம்

www.padippakam.com

மீண்டும் ஒரு முறை சிக்கலாக்கியது. எனவே தலித்துகள் உயிர்த்தியாகம் செய்து வளர்த்த இவ்வியக்கங்களே தலித்துகளை சரிநிகராக வளர்க்க முனையாமல் இருந்த நிலையே தலித் எழுச்சியை சிக்கலாக்கிய இரண்டாவது மாயவலை ஆகும்.

திராவிடர் கழகம் தோன்றியதிலிருந்து இன்றுவரை உருவாக்கப்பட்ட எத்தனையோ திராவிடப் பாரம்பர்ய கட்சிகளில் அடிமட்டத் தொண்டர்களாய், சமூக பண்பாட்டு இழிவுகளுடனே, பொருளாதார சுரண்டல்களில் சராசரி மனித வாழ்க்கையைக் கூட வாழாத தலித்துகளே உள்ளனர். ஏனெனில் இந்தியாவின் மொத்தமக்கள் தொகையில் 16 சதவிகிதம் தலித்துகள் மட்டுமே உள்ளனர். ஆக இந்தியாவின் சராசரி சதவிகித தலித் மக்கள் தொகையை அதிகமாக் கொண்ட மாநிலங்கள் ஆறு மட்டுமே. அதில் தமிழகமும் அடங்கும். ஏனெனில் தமிழக தலித் மக்களின் சதவிகிதம் 19.1. அதாவது நூற்றுக்கு 25 நபர்கள் தலித்துகளேயாவர்.[2] எனவே எந்தக் கட்சியிலும் தலித்துகளின் ஆதரவில்லாமல் ஆட்சியைப் பிடிக்க முடியாத நிலையில் தலித்துகளை விவசாயக் கூலிகளாக, நிலமற்றவர்களாக, அரசாங்கத் திட்டத்தினை எதிர்பார்க்கும் ஒரு கூட்டமாக, வேலையற்றவர்களாக என்றென்றும் இவர்களின் சமூக - அரசியல் - பண்பாட்டு - முதலாளித்துவத்தின் நிரந்தர பண்ணை அடிமைகளாக மாற்ற முயற்சி செய்வதே திராவிட அரசியலாரின் வரலாற்று சாதனைகளாகும். இவற்றையெல்லாம் கடந்து வரும் தலித் அதிகாரிகளை, வியாபாரிகளை, சிறுதொழில் மற்றும் சிறுவிவசாயிகளை திட்டமிட்டு அழிப்பதும் வாடிக்கையாகி விட்டது. இந்த நிலையில் இவர்கள் அரசியலை கைப்பற்ற நடத்திய போராட்டத்தில் 'முன்னின்று உயிர்த் தியாகம் செய்த உயர் இனத்தின் மீதான அரசியல் அடக்குமுறைகள் திராவிட பாரம்பர்யத்தின் கைதேர்ந்த கலையாகும். எனவே இவ்வியக்கத்தால் தமிழகம் மறுமலர்ச்சி கண்டிடப்போகிறது என்றெண்ணிய தமிழக தலித் மக்களை எமாற்றி தம் சூழ்ச்சியால் இன்றுவரை தலித் எழுச்சியை சிக்கலாக்கிய திராவிட அரசியல் என்ற மூன்றாவது மாயவலை. இவைகளைப் பற்றி விரிவாகக் காண்போம்.

I

**மாயவலை – பிராமணரல்லாதார்**

யார் பிராமணரல்லாதார்? என்ற கேள்வியிலேயே மாபெரும் சிக்கல். ஆனால் தலித்துகளைப் பொறுத்தவரையில் பிராமணரல்லாத குழுக்களின் நோக்கமான பிராமணர்களின் மேலாண்மையையும், ஆதிக்கத்தினையும் தகர்க்க தமிழகத்தில் தோன்றிய அனைத்து இயக்கங்களுடன் ஊக்குவித்து எந்தவித சுயலாபம் கொள்ளாமல் கலந்து கொண்டது என்பதே வரலாறு. ஆனால் தமிழக அளவில் எந்தவொரு சமூக, அரசியல் போராட்டகளத்திலும் கலந்து கொள்ளாமல் தங்களை ஒதுக்கிக் கொண்டு வெறும் பதவியாசை, பணஆசை மட்டும் குறிக்கோளாய் வாழ்ந்துள்ள குழுமங்களும் பிராமணரல்லாதார் என்ற குறியீட்டில் வந்துள்ளது நம் அனைவருக்கும் புரிந்த ஒன்று. இவர்களே இன்னும் அரசியல், வியாபாரம், நிலவுடைமை, உயர் பொறுப்புகள் ஆகியவற்றை தக்க வைத்துள்ளனர் என்பது நிதர்சன உண்மை. ஆனால் இவர்களைப் போலவே தலித்துகள் தங்களுக்கும் வாழ்க்கை அமைந்து விடப்போகிறது, இவற்றுக்கெல்லாம் ஒரே தடை பிராமணர்களின் அரசியல் மற்றும் அதிகார மேலாண்மை என்றெண்ணியதும், பிராமணரல்லாதார் தலைவர்களால் தலித்துகளுக்கு ஒரு புதிய சமூக மாற்றம் நிகழ்ந்திடப் போகிறது என்றெண்ணி ஏமாந்ததும் ஒரு காரணமேயாகும்.

ஏனெனில் தமிழ்நாட்டில் வாழும் பிராமணரல்லாத சாதிக் குழுமங்களைச் சேர்ந்தவர்கள், தங்களின் சமூக நிலைமையையும் தங்கள் சமூக அசைவியக்கத்தையும் வரையறை செய்த 'பிராமண கருத்து நிலை' என்பது தம்மீது திணித்ததென அவர்கள் கண்ட, மேலாண்மைக்கெதிராக நடத்திய போராட்டங்களினூடே மேற்கிளம்பியதும், அந்தப் போராட்டங்களை நியாயப்படுத் துவதற்குப் பயன்படுத்தப்பட்டதுமான சிந்தனை நிலைப்பாடே திராவிட கருத்து நிலையாகும்; அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் 'தமிழ் பிரக்ஞை' ஏற்படுவதற்கு இது தளமாக அமைந்து வந்துள்ளது; இது மதம் சமூக நடத்தை முறை பற்றிய ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்தினை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. அந்தக் கண்ணோட்டத்தின் பிரதான எண்ணக் கருத்துக்களே நாத்திகம், பகுத்தறிவுவாதம், சுயமரியாதை என்பனவாகும். இது ஆரியத்தைப் பிராமணியமாக நோக்குவதுடன், திராவிடம் என்பது பிராமணியம் என்று கொள்ளப்படுவதன் எதிர்நிலையாகக் கொள்ளப்படுவது ஆகும். அது காலனித்துவ ஆட்சிக்காலத்தில் வடிவம் பெற்றது. அத்துடன் இந்திய வரலாறு பண்பாடு பற்றிய காலனித்துவ வாசிப்புகளினால் உந்துதல் பெற்றதும் உண்மையாகும் (சிவத்தம்பி, 1979)[3] என்று திராவிட இயக்கக் கருத்துநிலையின் தோற்றம் பற்றிய இவரது ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளவாறு திராவிடம் என்பது பிராமணியத்தை வீழ்த்த பிராமணரல்லாதார்களால் உருவாக்கப்பட்ட ஒரு எதிர்க் கருத்து நிலையே ஆகும். ஆனால் அப்போதைய தமிழக தலித் தலைவர்கள் எதிர்பார்த்தது போல சாதியத்தை வேரறுக்கவோ, பிராமணர்களால் படிநிலைப்படுத்தப்பட்ட சமூக அமைப்பை தகர்க்கவோ 'திராவிடம்' தோன்றவில்லை என்பதையே இம் மேற்கோள் தெளிவுபடுத்துகிறது.

இவ்வுண்மையை பெரியார் அவர்களும் தனது 'டாக்டர் நாயர், தியாகராயர், நான்' என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதுகிறார். "...ஆரம்பக் காலத்தில் பார்ப்பனரல்லாதவர்களுக்கு விரோதமாக தேசிய போர்வையில் பார்ப்பனர்களை ஆதரித்தவர்கள்தான் அவரும் (நாயர்), நானும் ஆரம்பத்தில் பார்ப்பனர்களுக்கு ஆதரவாயிருந்து பார்ப்பனரல்லாதார் தேர்தலை எதிர்த்த நாங்கள் பிறகு உண்மை உணர்ந்து பார்ப்பனரல்லாதாரோடு ஒன்றானோம். ஜஸ்டிஸ்



படிப்பகம்

www.padippakam.com

கட்சி பிரமுகர்களில் மிக முக்கிய மானவரான சர் தியாகராயச் செட்டியார்கூட ஆரம்பத்தில் தேசிய வாதியாக இருந்தவர்தான். 1914-இல் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டின் காரியதரிசியாயிருந்து அரும்பெரும் தொண்டாற்றியவர்தான் அவர். அவரும் இன உணர்ச்சி பெற்றார். ஆகவே நாங்கள் எல்லாம் துவக்கதிலேயே இரட்சகர்களாக ஆக்கப்பட்டவர் அல்லர். அடிமைகளாயிருந்து பிறகு அவர்களின் கொடுமை தாங்காமல், இழிவு பற்றிய உணர்ச்சி பெற்று விழிப்படைந்தவர்கள் நாங்கள்..." நீதிக்கட்சி 75-வது ஆண்டு பவள விழா மலர், 1992, பக்.5)[4]

இவ்வாறு வரலாற்றில் பெருந் தலைவர்கள் எல்லோரும் முதலில் பிராமணர்களிடம் ஏவலாளிகளாக இருந்து பின்பு அவமானப்பட்டு, அடிமைநிலையுணர்ந்து, பிறகே தங்களுக்குள் இன உணர்ச்சி பெற்றுள்ளனர். இந்நிலையிலேயே பிராமணரல்லாத தலைவர்களுக்கு பிராமணியத்திற்கு மாற்றாக கருத்து நிலை உருவாக்கம் அவசியமேற்பட்டது. அதுவே 'திராவிடம்' என்றுணரப்படுகிறது. பிராமணர்களின் அடக்குமுறைகளுக்கு உள்ளான பிராமணரல்லாத தலைவர்கள் தங்களின் அடிமை நிலைகளைக் கூறி பிராமணரல்லாத மக்களை ஒன்று திரட்டி பிராமணர்களைத் துரத்த முயற்சி செய்யும் காலத்தில், பிராமணரல்லாதாரின் இப்புரிதலுக்கு முன்பே சமூகத் தளத்தில், பத்திரிக்கை தளத்தில், மதத்தளத்தில் ஆதி-திராவிடர்கள் பிராமண எதிர்ப்பு களத்தை விரிவு படுத்தியிருந்தனர். இருந்தாலும் பிராமணரல்லாதாரின் புரிதலுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கியதோடு இணைந்து செயல்பட்டவர். இதுவே எப்போதும் தனித்துவத்தோடு செயல்பட்டுக் கொண்டிருந்த தலித் எழுச்சியின் முதல் வீழ்ச்சியாகும். பொதுத்தளம் என்ற போர்வையில் சிக்குவது இதுவே முதன்முறையாக தமிழக தலித் மக்களின் அரசியல் பதிவு பெறுகிறது. தங்களுக்கான அமைப்பும், பத்திரிகையும் நடத்தும் அளவிற்கு உயர்வு பெற்றிருந்தும் 'பிராமண எதிர்ப்பு' என்ற கருத்து நிலை 'அனைவருக்கும் விடுதலை' என்றுணரப்பட்டதால் பொதுத்தளம் தலித்துகளின் விடுதலையை பிரசவிக்கும் என்ற எண்ணத்தில் அப்போதையே தலித் தலவர்கள் பிராமணரல்லாதவருடன் இணைந்து செயல்பட்டது தவறில்லை. ஏனெனில் தற்போதைய வடமாவட்ட தலித் அரசியலின் எழுச்சியின் அடையாளமாகத் திகழ்ந்த தோழர் தொல். திருமாவளவன், விடுதலை சிறுத்தைகளின் அமைப்பாளர், தமிழ் பாதுகாப்பு அமைப்பு[5] என்று தமிழர் என்ற பொதுத் தளத்தில் - களத்தில் தலித்துகளின் நேரெதிரிகளாகவே இன்றுவரை இருக்கும் வன்னியர், தேவர், வெள்ளாள கவுண்டர்களுடன் கை கோர்த்து நிற்கும், நிற்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றபோது அப்போதையக் காலகட்டமும் அப்படியே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் பொதுத் தளம் என்ற மாயவலை எப்படியெல்லாம் தலித் எழுச்சியை சிக்கலாக்கியது என்பதை பார்ப்போம்.

தமிழகத்தில் காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் திரு. கல்யாண சுந்தர முதலியார், சர்க்கரை செட்டியார், கோடம்பாக்கம் நடேச நாயக்கர், வாடியா, சி.எஸ். அய்யர் ஆகிய தொழிற் சங்கத் தலைவர்கள் 1921-இல் சென்னையில் தொழிலாளிகளை வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடுத்தினர். இப்போராட்டத்தில் ஆதி-திராவிட மகாஜனசபையும், நீதிக்கட்சியும் ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஆதரவளிக்கவில்லை. ஆதி-திராவிட மக்கள் வழக்கம்போல தம் பணிக்குச் சென்றனர் என்ற காரணத்தினால் சென்னையில் பல்வேறு இடங்களில் சேரிகள் (ஆதி-திராவிட மக்கள் வாழும் பகுதிகள்) தாக்கப்பட்டன. புளியந்தோப்பு என்ற சேரி அடியோடு எரித்து சாம்பலாக்கப்பட்டது. இதற்கு மேல்நடவடிக்கை எடுத்து அப்போதைய ஆளுநர் வெலிங்டன் பிரபு கலவரங்களுக்குக் காரணமான மேற்கூறிய அய்வரையும் நாடு கடத்துவதற்காக உத்தரவிட்டார். ஆனால் சர் பிட்டி. தியாகராயர் அந்த உத்தரவை முயற்சி செய்து நிறுத்தி விட்டார்." ஏனெனில் அந்த அய்வரில் மூவர் பிராமணரல்லாத தலைவர்கள் என்பதனால் மட்டுமே. ஆனால் இந்த அரசியல் நிகழ்ச்சியில் அடித்தவன் காப்பாற்றப்பட்டான், தூண்டியவர் அரசியல் விளம்பரம் பெற்றுக்கொண்டனர். ஆனால் துன்புறுத்துலுக்கு உள்ளானது தலித் மக்கள் மட்டுமே என்று அறியமுடிகிறது.

இதே ஆண்டில் 1921-இல் சென்னை பெரம்பூர் பக்கிங்காம் கர்னாடிக் மில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட போராட்டம் சாதிக்கலவரமாக மாறியது. இதைக் காரணமாக வைத்து நீதிக்கட்சி தலைவர் சர் பிட்டி. தியாகராய செட்டி தலித்துகளை நகருக்கு வெளியே குடியமர்த்தும்படி அரசக்கு ஆலோசனை வழங்கியதை அன்றைய தொழிலாளர் தலைவரான எம்.சி. ராஜா கடுமையாக விமர்சம் செய்தார்.[7] இந்த நேர்மையற்ற செயல் ஏறிவந்த ஏணியை எட்டி உதைக்கும் 'நீதிக் கட்சியினர்' என்று தலைவர் ஜெ. சிவசண்முகம் பிள்ளையை எழுத வைத்தது. மொத்தத்தில் நீதிக்கட்சியில் நீதிமட்டும் இல்லை என்று தாழ்த்தப்பட்ட தலைவர்களை முணுமுணுக்க வைத்தது.

காலனியாட்சிக் காலத்தில் தமிழக அளவில் மூன்று முக்கிய குழுக்கள் தங்களை பிரதிநிதித்துவப்படுத்த முயற்சி செய்து கொண்டிருந்தன. அவை பிராமணர்கள், பிராமணரல்லாதார்கள், தலித்துகள். இவர்கள் தனித்தனி பிரிவினர் என்பதுடன் இவர்களின் போராட்டத்தின் நோக்கங்களும் வேறானவையாக இருந்தன. அது 1) பிராமணர்களுக்கு முழு ஆட்சிப் பொறுப்பை ஆங்கிலேயர்களிடமிருந்து பெறுவது என்பதும், 2)பிராமணரல்லாதார்க்கு பிராமணர்களின் ஆதிக்கத்தை அரசியல் மற்றும் அதிகார தளத்தில் குறைப்பது, பிராமணரல்லாதாரின் அரசியலை பரவச் செய்வது, 3) தலித்துகள் பிராமணர்களின் சாதிய செல்வாக்குகளை அழித்து தங்கள் மீது திணித்த சமூக இழிவுகளைப் போக்கி மனித உரிமை


படிப்பகம்

www.padippakam.com

யுடன் அனைத்து தளத்திலும் தனித்துவத்தோடு வாழும் சூழலை உருவாக்குதலேயாகும். இதை நிருபிக்கும் வகையில் 18-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்தே தங்களது மக்களுக்கான இயக்கங்களை கண்டு வந்துள்ளனர். அதாவது 1885-இல் தோன்றிய தேசிய காங்கிரஸ், 1917-இல் உருவான நீதிக் கட்சி ஆகியவற்றின் முன்பே தலித் இயக்கங்கள் தமிழகத்தில் வலுப்பெற்று இருந்ததை யாராலும் மறுக்கவியலாது. இந் நிலையில் தமிழக அரசியல் வரலாற்றை யார் எழுதினாலும் தலித் தலைவர்கள் எழுச்சியை மறைத்து, புறக் கணித்து எழுதி வருகின்றனர்.[8]

1884-இல் தியோசபிகல் சொசைட்டி உறுப்பினராக இருந்து துவங்கவிருக்கும் காங்கிரஸ் இயக்கம் தலித் மற்றும் ஆதிவாசிகளுக்கு எவ்வகையிலும் பயனளிக்காது என்று உறுப்பினர் பதவியில் இருந்து வெளியேறியவர் தாத்தா ரெட்டமலை சீனிவாசனார் அவர்கள்.[9] இந்த முடிவை 1925-இல்தான் ஈ.வெ. ராமசாமி அவர்கள் புரிந்து கொண்டார் என்பதே உண்மை. இந்த உண்மையை உணர்ந்த தலித் இனத் தலைவர்கள் கி.பி. 1892-இல் வைரக்கண் வேலாயுதம் பிள்ளை, மதுரைப் பிள்ளை, அயோத்திதாசப்பண்டிதர், எம்.சி. ராஜா ஆகியோருடன் இணைந்து "ஆதி-திராவிடர் மகாஜன சபை" என்ற அமைப்பைத் தோற்றுவித்து திறம்பட செயல்பட்டார்கள்.[10] இதைத் தொடர்ந்து 1893-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னை ராயப்பேட்டையில் வெஸ்லி பள்ளியில் தாத்தா ரெட்டமலை சீனிவாசன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பழங்குடி மக்களின் மாபெரும் மாநாடு நடத்தப்பட்டு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இது இந்தியாவிலேயே கூட்டப்பட்ட முதல் மாநாடு என விடுதலைமணி என்ற சமூக சீர்திருத்த மாத இதழ் எழுதியுள்ளதை நினைவு கூறுதல் நலம்.

இவ்வாறு சமூகக் குழுக்கள் அரசியல் படுத்தப்பட்ட காலந்தொட்டு இன்றுவரை பொதுத் தளம் என்ற மாயயைகள் தலித் தலைவர்களை கவர்ந்து வந்தாலும் 'பிராமணரல்லாதார் எழுச்சி' என்னும் மாயவலைக்குள் சிக்க தலித் தலைவர்கள் உடன்பட்டதே முதல் மாயவலையெனலாம். இதுவே இன்றைய தலித் எழுச்சியினை சிக்கலாக்கியது. இனி இரண்டாவது மாயவலையினையும், அது எப்படி தலித் எழுச்சியினை சிக்கலாக்கி வருகிறது என்பதையும் காண்போம்.

II

**பெரியார் – தமிழக சமூக நீதிக்கான அடையாளமா?**

தமிழ்நாட்டில் தோன்றிய, தோன்றப்போகிற அனைத்து சமூக கட்சிகளும், (தலித் சமூக கட்சிகள் கூட) பெரியாரை சமூக நீதிக்கான அடையாளமாக கொள்வது மிகவும் வருத்தத்திற்குரியதாக இருக்கிறது. ஏனெனில் பெரியாரின் எழுச்சியினால், அதன் பலத்தால் உருவான கட்சிகளாக திராவிட முன்னேற்றக்கழகம் அதனுடைய பிளவினால் உருவான அனைத்து திராவிடக் கட்சிகளும், இயக்கங்களும் தங்களது வரலாற்றை பெரியாரின் பிராமணரல்லாதார்க்கான அரசியல் பிரவேசம் முதலில் இருந்து தான் தொடங்குகிறார்கள். ஆனால் தலித் இயக்கங்களின் இயக்க மற்றும் அரசியல் வரலாறு பெரியாருக்கு முன்னரே இருந்து துவங்குகிறது. எனவே சமூக நீதியை வேண்டி பெரியாருக்கு முன் எழுந்த தலித் தலைவர்களின் குரல் பெரியாரின் அழுத்தத்தால் புறக்கணிக்கப் பட்டு மறைக்கப்பட்டுள்ளது என்பது மறுக்கமுடியாத வரலாறு. பெரியாரை கடந்து தமிழ்ச் சமூகத்தைப் பார்க்கும்போது சமூக நீதியின் உண்மையான அடையாளம் இன்று வரை மறைக்கப்பட்டு வருவது நேர்மையுள்ளவர்களுக்குப் புரியும் செய்தி. இந்நிலையில் பெரியார் எனும் மாயவலை தலித் எழுச்சியை எங்ஙனம் சிக்கலாக்கியது என்பதை காண்போம்.

"...தீண்டாமை ஒழிய வேண்டுமானால் சாதிகள் இருக்கக் கூடாது என்ற ஒரு புரட்சிகரமான பிரச்சாரம் வடக்கிலும், தெற்கிலும் ஏக காலத்தில் தீவிரமாக நடந்து வரும் போதுதான் தமிழகத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் இனத்தை சேர்ந்தவர்கள் சுயமரியாதை இயக்கத்திலும், தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்திலும் பணியாற்ற முன்வந்தனர். தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையிலும் பிரச்சாரங்களிலும் சுட்டிக் காட்டப்பட்ட 'தீண்டாமை ஒழிப்பு' என்கிற கொள்கையால் ஈர்க்கப்பட்ட என் தந்தை திரு. க. நாகைநாதர் அவர்கள் பெரியாரின் கொள்கைக்கு ஆதரவு அளித்து பணியாற்றினார். ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதைக் கட்சி, தென்னிந்திய பௌத்த சங்கம், அகில இந்திய பகுத்தறிவாளர் சங்கம் ஆகியவற்றில் எனது தந்தை தீவிர பங்கு கொண்டார். அவர் செல்லும் கூட்டங்களுக்கு எல்லாம் பின் தொடர்ந்து சென்றதினால் இந்தக் கொள்கைகள் என் பிஞ்சு உள்ளத்தில் பதிய வாய்ப்பாக இருந்தது. இவரோடு நில்லாமல் என் வாழ்க்கைத் துணைவர் திரு. எம்.எஸ். முத்து அவர்கள் தீவிர சுய மரியாதைக் கொள்கை ஆதரவாளர். 1938-இல் தந்தை பெரியார் துவக்கிய இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டதுடன், சுயமரியாதை இயக்கத்தின் சென்னை மாநகர செயலாளராக பணியாற்றினார் பின்னர், 1944-இல் தென்னிந் திய நல உரிம சங்கம் திராவிட கழகமாக மாறிய சேலம் மாநாட்டில், நாங்கள் அனைவரும் கலந்து கொண்டோம். திராவிடக் கழகக் கூட்டத்திலும் மாநாட்டிலும் நான் நிறைய பங்கு ஏற்றுள்ளேன். திராவிடக்கழகத்தில் நான் கொடியேற்றாத மாநாடே கிடையாது எனச் சொல்லலாம்." (பக்.14-15)[11] என்று தனது தந்தை, கணவர் மற்றும் தான் (டாக்டர் சத்தியவாணி முத்து) எவ்வாறு திராவிடக் கழகம் என்பதன் துவக்கத்திலேயிருந்து உழைத்ததை கருங்கக் கூறுவதன் அவசியத்தைப் பற்றியும், அதில் தாழ்த்தப்பட்டோர் எவ்வாறு இவ்வியக்கத்தால் வஞ்சிக்கப்பட்டார்கள், யார் முன்னேறினார்கள் என்பதையும் பெரியார் என்பவர் யாருக்கு பெரியாராக இருந்திருக்கிறார்? என்பதை திராவிடம் சாயம் பூசி மேற்கண்ட மாயவலையில் சிக்கி மீண்டும் சுயஉணர்வு அடைந்து



படிப்பகம்

www.padippakam.com

தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தின் தலைவியான டாக்டர் சத்தியவாணிமுத்து பெரியார் அவர்களைப் பார்த்து கூறிய அனுபவத்தை நினைவூட்ட விரும்புகிறேன்.

"... ஒருமுறை தந்தைப் பெரியார் அவர்கள் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டை பெரியார் திடலில் நடத்தினார். அப்போது அவர் முன்னாலேயே பேசிய நான் அய்யா அவர்களே சமுதாயத்தில் இருக்கும் சாதி இழிவுகளைத் துடைக்க தாங்கள் எடுத்த முயற்சி பூரண வெற்றி பெறவில்லை. பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை துவக்கினீர்கள். ஏனெனில் சாதியமைப்பில் சூத்திரர்கள் கேவலமாக மதிக்கப்படுகிறார்கள்.

பார்ப்பனரையும் பாம்பையும் கண்டால் பாம்பைக் கொல்லாதே பார்ப்பானைக் கொல்லு என்றீர்கள். உங்களால்தான் இப்படிச் சொல்ல முடிந்தது. அப்படிப் பேசிய உங்கள் பேச்சு உங்கள்முன் வீற்றிருக்கும் ஒரு சில சமுதாய சீர்திருத்த கருஞ்சட்டை வீரர்களுக்குத்தான் உயர்வை அளித்துள்ளது. பார்ப்பனர்கள் எந்தத் தொல்லையையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தருவது இல்லை. பார்ப்பனரல்லாதவர்களால்தான் தாழ்த்தப்பட்டவர்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாகிறார்கள் என்கிற தகவல் வந்துகொண்டிருக்கிறது. நிலைமையைப் பார்த்தால் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் இடையே நீங்கள் தொடங்கிய போராட்டம் அதைப்பேலவே சூத்திரர் - சூத்திரர் அல்லாதாருக்கிடையே போராட்டம் துவங்க வேண்டிய நிலை உருவாகி இருக்கிறது எனப் பேசினேன்."[12] (பக். 76) என்று திராவிட இயக்கத்தில் தன்னுடைய வாழ்க்கை முழுவதும் அர்ப்பணித்து உழைத்த மற்றும் அவரது ஆதரவாளர்களை திராவிடத்தினுள் நிலைக்கச் செய்து பின்பு பெரியார், பிராமணரல்லாதார், சுயமரியாதை இயக்கம், திராவிடக் கட்சிகளின் சுயம் உணர்ந்து சரியான பாதையான தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவியான டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்களின் வரிகள்.

பெரியார் அவர்கள் வாழ்ந்தக் காலத்திலேயே தலித் - தலித் அல்லாதார்க்கு இடையேயான போராட்டத்தின் துவக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆனால் இதன் உண்மை என்னவெனில் பெரியார் இயக்கங்களில் இருந்து விடுபட முனைந்து முடியாமல் போன குமுறல்களே இவை என்பதை தலித் தோழர்கள் புரிந்து மாய வலைக்குள் சிக்காமலிருக்க முயல வேண்டும்.

மேற்கண்ட விளக்கங்கள் அரசியல் ரீதியாக திராவிட இயக்க கருத்துக்களை ஏற்றுக்கொண்டு பணியாற்றிய ஒரு தலைவிக்கே இத்தனை குழப்பமெனில் - சமூக தளத்தில் கல்வி - பொருளாதார முன்னேற்றமில்லாத தலித் மக்களின் கனவான சமூக நீதி மற்றும் சாதியரீதியிலான அவலங்கள், சுரண்டல்கள், அடக்குமுறைகளிலிருந்து விடுதலையினை பிரசவிக்கப் போகின்ற ஒரு பெரும் இயக்கமாக கடவுள் மறுப்பு இயக்கத்தையும், சுயமரியாதை பிரச்சாரத்தையும் தலித் மக்கள் நம்பி முழுமையாக அர்ப்பணித்தனர்.

ஆனால் சமனற்ற வளர்ச்சியையும், அதிகார படிநிலைச் சமூக அமைப்பையும் கொண்ட சமூகத்தில் 'மதம்' 'கடவுள்' ஆகியன மக்கள் மனதை சமூக இருக்கைக்குப் (சராசரி வாழ்க்கைக்கு) பதனப்படுத்திடும் ஒரு வழிமுறையாக அமைகிறது. அந்த பதனப்பாடு (சமூக அமைப்பு) ஒழிக்கப்பட வேண்டுமெனில், உற்பத்தி முறைமையின் சமூக உறவுகள் மாற்றப்பட வேண்டும். ஆனால் பெரியாரால் உருவாக்கப்பட்ட கடவுள்/மத எதிர்ப்பு தளத்தில் இந்து மதம் என்பது சமூக கட்டுப்பாட்டுக்காக தோற்று விக்கப்பட்ட ஒரு ஆரிய/பிராமண சூழ்ச்சி என்றே நோக்கப்பட்டது.[13] ஆனால் கடவுள் எதிர்ப்பு பிரச்சாரத்தில் பிராமணர்களில்லாத மதங்களான கிறிஸ்துவம், இஸ்லாம் ஆகியன உட்படுத்தப்படவில்லை என்பது விந்தை. ஆக பிறப்பின் மூலம் கற்பிக்கப்படுகிற சாதிய அடையாளத்தை ஒழிக்க அல்லது சமூக உறவுகளை சாதிய ரீதியில் வளப்படுத்துகிற பண்பாட்டுத் தளத்தை தகர்க்க முனையாமல் - வெறும் பிரச்சாரமாக கடவுள் மறுப்பையும் - மத எதிர்ப்பையும் பிராமணர்களிடமிருந்து பிராமணரல்லாதார்க்கு அதிகார மாற்றம் என்ற ஒன்றிற்காக முயன்றிருப்பதை உற்றுநோக்கி ஆராய்ந்து பார்த்தால் புரியும்.

ஏனெனில் இதே நிலையை அகில இந்திய அளவில் இந்துமத ஒழிப்பு பிரச்சாரத்தை நடத்திய அண்ணல் அம்பேத்கர், மதம் எனும் சமூக பண்பாட்டு நிறுவனத்தை மறுதலிப்பது என்பது இந்தியா போன்ற பாரம்பரியம் மிக்க சமூகத்தில் எளிதாக செய்துவிடக்கூடிய காரியம் இல்லை என்பதும் - இந்து மத எதிர்ப்பு கொள்கையினை கொண்டவர்களுக்கான சமூக - ஒழுங்கு பதனப்படுத்தும் வழிமுறைகள் இல்லாதது என்ற நிலையில் அவர் மாற்றுச் சமுதாயம் அதாவது இந்துக்களின் எந்தவொரு சமூக ஒழுங்கையும் கொண்டிராத ஒரு மதத்தை உருவாக்கவோ அல்லது அப்படியில்லாமல் இந்துக்களின் சமூக ஒழுங்கை புறக்கணிக்கும் எந்த மதத்திலும் கடவுள் மறுப்பாளர்களும், இந்து மத எதிர்ப்பாளர்களும் ஏற்றுக்கொள்ளலாம் என்று அறிவித்த அம்பேத்கர் அவர்கள் மாற்றுச் சமுதாயத்தை விரும்பும் அனைத்து மக்களும் பௌத்த மதத்தை பின்தொடரலாம் என்று தானே அதற்கு நற்சான்றாய் 1956-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ஆம் தேதி புத்தமதத்தை தழுவினார். ஆக தன்னுடைய கருத்து நிலையில் கவரப்பட்ட அனைத்து மக்களும் பரிபூரணமாக சமூக - பண்பாட்டுத் தளத்தில் விடுதலைப் பெற கருத்து நிலையோடு நின்றுவிடாமல் செயல்பாட்டளவில் நிரூபித்து காட்டியும் உள்ளார்.[14]

ஆனால் தமிழகளவில் அதி கார மாற்ற தளத்தில் பெரிதாய் பேசப்பட்ட எந்த சாதனைகளும், சமூக பண்பாட்டு தளத்தில் செயலற்ற நிலையிலேயே இருந்தது. இது சமூகத்தில், கலாச்சாரத்தில் ஏதோ புரட்சி ஏற்பட்டு மாற்றங்கள் நிகழ்ந்திடப் போகிறது என்றெண்ணிய தலித்துகளுக்கு இந்த மாற்றங்கள் ஏமாற்றத்தையே அளித்தது.


படிப்பகம்

www.padippakam.com

ஏனெனில் பிராமணரல்லா தாரின் அநீதிகளை எதிர்த்து தலித்துகளை ஒன்றுதிரட்டி இந்தியாவின் மற்ற மாநிலங்களில் அரசியலை வென்றெடுக்க முடியும் போது தமிழ்நாட்டில் மட்டும் ஏன் சாத்தியமில்லை என்றறிய முற்படும்போது இந்த பெரியாரிய தாக்கம் எந்தளவிற்கு தமிழக தலித் மக்களை வீழ்த்தியதும், தலித்துகளின் பெரியாரிய கருத்துநிலை ஆதரவால் பிராமணரல்லாதார் மட்டுமே அடையமுடியும் அரசியல் மற்றும் அதிகார வளர்ச்சி நிலைக்காரணம் பற்றிய இந்திய அரசின் பின்தங்கிய வகுப்பாருக்கான ஆய்வறிக்கை இவ்வாறு கூறுகிறது.[15]

"தமிழ்நாட்டில் திராவிட கழகம் காரணமாகவே தலித்துகளுக்கும், பிராமணரல்லாத குழுக்களுக்குமிடையே எவ்வித மோதல்களும் நிகழவில்லை. ஏனெனில் தமிழ் பண்பாட்டு மீட்பு தமிழ் நாட்டினை இறுகப்பற்றியிருக்கும்வரை, உண்மையான தலித் இயக்கம் தமிழ்நாட்டில் தோன்ற வாய்ப்பில்லை. ஏனெனில் தலித்துகளுக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையே ஏற்படும் மோதல்கள் பிராமணரல்லாதார் குழுக்களின் மோதலாகவே காணப்படுமே தவிர பிராமணர் - பிராமணரல்லாதார் பிளவை ஒருபோதும் மறைத்து விடாது. தலித்துகள் சாதி இந்துக்களான பிராமணரல்லாதாரின் கொடுஞ்செயல்களை எதிர்த்தாலும் பண்பாட்டு ரீதியில் பிராமணரல்லாதார்கள் - தலித்துகள் பிளவு ஏற்படாவண்ணம் திராவிட - சுயமரியாதை இயக்கத்தினையும் தலித்துகள் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளனர் என்ற நிலைப்பாடே தலித்துகள் ஏறக்குறைய முக்கால் நூற்றாண்டு காலமாக அரசியல் சூழ்ச்சியினையும், அவர்களது முன்னெடுப்பை உறுதி செய்வதற்கான ராஜதந்திரமே சுயமரியாதை இயக்கமும், பகுத்தறிவு கொள்கைகளும், கடவுள் எதிர்ப்பும் என்பதறியாமல் ஏமாந்து வந்துள்ளனர்."

இச்சூழலில் இந்திய சமூக அமைப்பில் மேனிலை அசைவியக்கம் (upward social mobility) பற்றிய சமூகவியல் ஆராய்ச்சியாளர் எம்.என். சீனிவாஸ்[16] கூறியுள்ள ஒரு பொதுவிதியின் செயற்பாட்டையும் நாம் இங்கு ஒளிவு மறைவின்றிக் குறித்துக் கொள்ளல் வேண்டும். அச்சொல்நெறியை சீனிவாஸ் "சமஸ்கிருத மயவாக்கம்" (Sanskritisation) என்பார். இங்கு "சமஸ்கிருதம்" என்பது ஒரு மொழி நிலைக் குறிப்பல்ல. அதாவது அடிநிலைச் சமூகத்தினர் மேனிலை எய்தும்போது, உயர்நிலைச் சமூகத்தினரின் பண்பாட்டுப் போக்குகளைக் கையேற்றுக் கொள்ளல் இந்தியச் சமூகவியலின் பொதுவிதி என்பர். இது பெரும்பாலும் பிராமணியச் சடங்குகளைக் கொண்டது. ஆனால் எல்லா வேலைகளிலும் அல்ல. ஏதோ ஒரு வகையில் ஒரு மதநூற் பாரம்பரியத்திற்குச் செல்லல் என்பதை குறிக்கும். இந்த சமஸ்கிருதமயவாக்கம் பல வடிவங்களில் பிராமணரல்லாதாரைச் சூழ்ந்துள்ளது. தமிழ் மரபின் தெய்வங்கள் இன்று பெருந்தெய்வங்களாக போற்றப்படுகின்றன. உதாரணமாக மேல் மருவத்தூர், மேல்மலையனூர், பெரியபாளையம், மாங்காடு போன்றவை அம்மன் கோயில்களின் வளர்ச்சியை கூறலாம்.

பெரியாரின் சுயமரியாதை, பகுத்தறிவு இயக்கத்தின் மூலமாய் அடிநிலைச் சமூகமான பிராமணரல்லாதார் குழுக்கள் மேனிலை எய்திய பின்பு உயர்நிலை சமூகத்தாரின் (பிராமணர்களின்) அனைத்து சமூக - பண்பாட்டு போக்கினை கையேற்றுக் கொண்டது. உதாரணமாக தீண்டாமை பழக்கங்கள், சாதியைச் சொல்லி இழிப்படுத்துதல், திட்டு போன்றவற்றில் பிராமணர்களைப் போலவே பிராமணரல்லாதாரும் செய்வதை கவனத்தில் கொள்ளலாம். எனவே எம்.எம். சீனிவாசின் பொதுவிதி தமிழகளவில் சரியான அளவில் பொருந்துவதைக் காண முடிகிறது. கருக்கமாகச் சொல்வோம் எனில் தமிழ்நாட்டில் எந்த இயக்கம் ஒரு குறிப்பிட்ட சாதியின் சமூக - பண்பாட்டு மேலாண்மையை மறுதலித்து தொழிற்பட்டதோ அதே இயக்கம், சமத்துவம் பேணப்பட வேண்டிய இடை நிலை, அடிநிலைகளிற் சாதியுணர்வை மிக வன்மைப் படுத்தியுள்ளது. இதன் காரணமாகத் தமிழ்நாட்டின் நவீனகால வரலாற்றில் சாதிக்கலவரம் என்பது ஒரு தொடர்ச்சியான அம்சமாகக் காணப்படுகிறது.

இந்த சாதிக்கலவரங்களின் ஒரு முக்கிய கூறு என்னவெனில் இக்கலவரங்கள் சமூக மேநிலைப் பாட்டை அடைய முற்படுகின்ற சமூகத்திற்கும், அவர்களுக்கு நேரடியாக மேலேயுள்ள சாதிகளுக்கிடையேயுமான ஒரு போராகவே புலப்பதிவுச் செய்யப்படுகிறது. உதாரணமாக வன்னியர்களுக்கும் - பறையர்களுக்குமிடையே வடமாவட்டத்தில் ஏற்படும் சாதி மோதல்களையும், தேவர்கள், தேவேந்திரர்கள் ஆகியோருக் கிடையேயான தென் மாவட்ட சாதிக்கலவரங்கள், வெள்ளாள கவுண்டர்களுக்கும் அருந்ததியர் களுக்குமிடையே ஆன மேற்கு மாவட்ட சாதி மோதல் களையும் எடுத்துக்கொள்ளலாம்.

இறுதியாக திராவிட இயக்கம் தான் மேற்கொண்ட பிராமணரல்லாத சமூகங்களின் சனநாயகவாக்கம் என்ற நோக்கின் தர்க்கத்தை தொடர்ந்து கடைப் பிடித்திருந்தால், அது ஒடுக்கப்பட்ட தமிழ் சமூகமான மேற்கண்ட பறையர், தேவேந்திரர், அருந்ததியர் ஆகியோருக்கும் சென்றிருத்தல் வேண்டும். ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை இன்றைய நிலையிலிருந்து மீள்நோக்கும் பொழுது ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என்று தனது கட்டுரையில் திராவிட இயக்கத்தின் செயல்பாடற்ற நிலைபற்றி கூறும் கார்த்திகேசு சிவத்தம்பி மேலும் இவ்வாறு விவரிக்கிறார். "திராவிட இயக்கச் செல்வாக்கால் ஏற்பட்ட இந்த மேநிலைவாக்கம் தமிழ்நாட்டின் இடைநிலைச் சாதிகளோடு நின்றுவிட்டது போலத் தெரிகிறது. பெரியார் பற்றிய மீள் வாசிப்பிற்குகூட, பெரியார் தலித்துகள் பற்றியும் அவர்கள் இயக்க மாவதிலும், போராடச் செய்வதிலும் போதிய முனைப்புகாட்ட வில்லை என்றும் பெரியார் மீது வைக்கப்படும் விமர்சனங்கள் நியாயமானது (காத்தி



படிப்பகம்

www.padippakam.com

கேசு சிவத்தம்பி அவர்களின் கூற்றுக்கூட பெரியாரைத் திரிக்கும் புரட்டுகள் எனில் என்ன செய்வது?) எனத்தோன்றுகிறது என்றும் குறைந்தபட்சம் 1954-க்கு பிறகாவது அவர் தலித்துகளின் எழுச்சியில் கவனத்தைக் குவித்திருக்கலாமே என்றும் கூறப்படுவதை மனங்கொள்வது மிகவும் அவசியமானது என்று முடித்திருக்கிறார்.[17]

மேற்கண்ட விளக்கத்தில் தலித்துகள் புரிந்துகொள்ளவேண்டியது என்னவெனில் தமிழக தலித் தலைவர்கள் ஆங்கிலேயர்கள் காலம் தொட்டு தலித் மக்களுக்கென தனித்தே தனித்துவத்துடன் போராடியபோது, இனவெழுச்சி என்ற போர்வையில், பிராமண எதிர்ப்பு என்ற காலத்தில், திராவிடம் என்ற சூழ்ச்சியால் பிராமணரல்லாதார்களின் ஒப்பற்றத் தலைவராகவே வாழ்ந்து - தலித்துகளின் எழுச்சியை திராவிடத்தினுள் சிக்கவைத்து இன்றுவரை தலித் விடுதலையை கனவாக்கிய ஒரு ஒப்பற்ற தலைவனை தமிழக தலித்துகள் சமூக நீதியின் அடையாளமாய் ஏற்றுக் கொள்ளமுடியும்? பெரியாரின் அரசியல் எழுச்சியும் அவரது கொள்கைகளுமே தலித் எழுச்சியை சிக்கலாக்கிய இரண்டாவது மாயவலை.

III

**திராவிட அரசியல் – தலித் – தலித் அல்லாதார் பிளவு**

ஒரு இயக்கத்தின் தோற்றமே தலித் மக்களின் எழுச்சியையும், வளர்ச்சியையும் புறக்கணிப்பதாய் அமைந்தபோது அவ்வியக்கத்தின் அரசியல் தளமும் அப்படியே அமையும் என்பதில் எவ்வித மாற்றமும் இருந்துவிட வாய்ப்பில்லை என்பதே உண்மை. அதுபோலவே திராவிட அரசியலாரின் 1967-இல் துவங்கிய ஆட்சி இன்றுவரை தமிழகத்தின் ஆட்சிபீடத்தை தன்னிகரற்று ஆட்சி செய்து கொண்டு இருக்கின்றபோதிலும் தலித் மக்களின் வளர்ச்சி விகிதம் சமூக பொருளாதார நிலைகளில் மிகவும் பரிதாபத்திற்கு உரியதாகவே இருந்து வருகின்றது. பிராமணரல்லாதாரின் மேலாண்மையை திராவிட அரசியலுக்குள் புகுத்த காரணமாயிருந்த பெரியாரைப் போல தலித்துகளின் மேலாண்மையைப் புகுத்த ஒரு பெரியார் தலித்துகளுக்கு இல்லாத காரணத்தால் திராவிட அரசியலாரின் நிர்பந்த மாயவலைக்குள் தலித்துகளின் உணர்வுகள், உரிமைகள் சிக்கித் தவிக்கின்றது. இந்த மாயவலையிட்ட தன்மைகளையும், அதன் செயல்தந்திரத்தையும் விரிவாக மாயவலை II-இல் அலசினோம். எனவே திராவிட அரசியலாரின் சாதனைகளாக பெரியாரிஸ்டுகள் சாதனைகளை தினம் தோறும் பட்டியலிட்டுக் கொள்கின்றனர். அவற்றைக் கேள்விக்குறியாக்குவதே இன்றைய தலித் அல்லாதாரிடம் - தலித்துகள் செய்யவேண்டிய முதல்கடமையாகும். வரலாற்றில் பிராமணர்களின் மேலாண்மையை விரும்பாத காரணத்தாலும் அவர்களின் எதேச்சதிகாரப்போக்கு பிடிக்காத காரணத்தினாலும் பிராமணரல்லாதாரின் எழுச்சி அவசியமெனில் கடந்த அரைநூற்றாண்டுகால திராவிட பெரியாரியப் போர்வையில் பிராமணரல்லாதவர்கள் செய்யும் அட்டூழியங்களின் விளைவால் உருவாகியுள்ள தலித் - தலித் அல்லாதார் பிளவும் நியாயமானது. திராவிட எழுச்சி தலித் மக்களுக்கு மட்டும் செயலற்றுப் போகின்றதெனில் அவசியமில்லாததை ஏற்க தலித்துகள் மட்டும் என்ன ஏமாளிகளா? இவர்களின் சாதனைப் பட்டியலில் சிலவற்றைக் காண்போம்.

1. தமிழ்நாட்டுக்கு அம்பேத்கரை அறிமுகப்படுத்தி, அவரின் “சாதி ஒழிய வழி” என்னும் நூலை பட்டிதொட்டியெல்லாம் அறிமுகப்படுத்தியவர்கள் நாங்களே![18]

மிகவும் விந்தையாகவும், ஆச்சர்யமாகவும் இருக்கும் அதே நேரத்தில் இந்த நூற்றாண்டிலும் இப்படியொரு தற்பெருமை மனிதர்களை திராவிட இயக்கத்தில்தான் அரிதாக காணமுடியும். ஏனெனில் பெரியார் சாதித்ததை விட அதிகமாகவே சாதித்த ஜோதி ராவ் பூலே போன்ற வடமாநில சீர்திருத்தவாதிகளை திராவிட இயக்கத்தின் பிராமணரல்லாத கூட்டம் ஏற்றுக் கொள்ளுமா? ஆம் எனில் தலித்துகளும் அப்படியே அண்ணல் அம்பேத்கரை ஏற்றுக்கொள்ளத் தயார். ஆனால் தமிழகளவில் அம்பேத்கர் அவர்களுக்கு முன்பும், சம காலத்திலும் தலித் தலைவர் இருந்திருக்கிறார்கள். உதாரணமாக 1930-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நடந்த வட்டமேசை மாநாட்டில் அண்ணல் அம்பேத்கருடன் தமிழக தலித் தலைவர் ரெட்டமலை சீனிவாசன் அவர்களும் கலந்துகொண்டுள்ளார் என்பது[19] தற்போதைய சூழலில் தமிழ்நாட்டு தலித் இளைஞர்கள் தங்களது வரலாற்றைத் தேடும்போது அண்ணல் அம்பேத்கரை தெரிந்தளவிற்கு அவர்களுக்கான தமிழ் இனத்தைச் சேர்ந்த தலித் தலைவர்களை தெரியாததில்தான் திராவிட இயக்கத்தின் சூழ்ச்சி வெற்றியடைந்துள்ளது.

டாக்டர் அம்பேத்கரை தமிழகத்தில் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் திராவிட இயக்கத்திற்கு வந்ததன் நோக்கம் என்னவெனில் இங்குள்ள தமிழக தலித் எழுச்சியை மழுங்கடிப்பதற்காகவே. ஆனால் தமிழக தலித்துகள் அம்பேத்கர் உதவியுடனேயே அவர்களது தலைவர்களை அறிந்து கொண்டது இவர்களுக்கெங்கே புரியப்போகிறது. மஹர் இனத்தை தங்களுடன் உட்கார அனுமதிர்ந, தங்களது கட்சி விளம்பரங்களில் இடம்பெறச்செய்த எந்த திராவிட இயக்கங்களாவது பறையர், தேவேந்திரர், அரு ததியர் இனத் தலைவர்களை உ கீகரிக்க மறுப்பது ஏன்? சு ாபங்களுக்காக நீங்கள் செய் விளம்பரங்களை சாதனைகளாக சொல்வேன். நிலைமை இப்படியிருக்க தமிழக தலித் தலைவரை அவரது அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் திராவிட இயக்கத்தின் நிகழ்காலத் தலைவர்கள் எப்படி அறிமுகப்படுத்தியுள்ளார்கள் என்பதைப் பார்ப்போம்.

“நான் ராஜ்பவனிலிருந்து வருகிற வழியிலேகூட நம்முடைய அமைச்சர் தமிழ்குடிமகன் முற்றும் கற்றவர், இருந்தாலும் அடுத்த


படிப்பகம்

www.padippakam.com

நிகழ்ச்சி என்ன என்பதைக் கேட்ட போது ரெட்டமலை சீனிவாசன் நிகழ்ச்சி என்று சொன்னேன். அதற்கு அவர் ஓ அதுவா செங்கற் பட்டு மாவட்டத்தில் ரெட்டமலை என்ற ஊரில் பிறந்தவர் அவர் என்றார். நான் சிரித்துக்கொண்டு சும்மாயிருந்தேன். அதையே அவர் மற்ற அமைச்சர்களுக்கும் விளக்கிக் கொண்டிருந்தார். .....என்ன புலவர் ரெட்டமலை என்பது ஊரா என்று கேட்டேன். ஆமாம் அண்ணே என்றார். அது ஊரல்ல, ரெட்ட மலை என்பது அவருடைய தந்தை யின் பெயர். தந்தையின் பெயரை இணைத்து வைத்துக் கொண்டுள் ளார். அதனால்தான் அவரை எல்லாரும் தாத்தா ரெட்டமலை சீனிவாசன் என்று அழைப்பதாக கற்பனை செய்துகொண்டேன். 150 ஆண்டுகளுக்குப் பின்பு ஒரு தலித் தலைவரை தமிழர்களுக்க அறி முகப்படுத்தும் விழாவில் அமைச் சராக உள்ளவருக்கு முற்றும் கற்றவருக்கே தெரியாதவராகவே தாத்தா ரெட்டமலை சீனிவாசன் அறியப்படுகிறார். அவர் செய்யாத தையா இந்தத் தலைவர்கள் செய்து விடப்போகிறார்கள். அரசின் உதவி யுடன் அமைக்கப்படும் ஆதி-திராவிட குடியிருப்புகளை கலைஞர் காலனிகளாக மாற்றி இவரது பெயரையே உச்சரிக்க வைத்த இவர் தலித் தலைவரை அறிந்து வைத்திருப்பது ஆச்சர்யமே!"

திராவிட அரசியலாரின் தலித் தலைவர்களின் வரலாறு இருட் டடிப்பும், தலித் அரசியலை புறக் கணிப்பதும் ஒவ்வொரு தேர்தலில் நாம் நேரிடையாகக் காணமுடியும். ஆனால் எவ்வித கேள்வியும், சந்தே கமுமின்றி தலித்துகள் மட்டும் அப் படியே பெரியார் மற்றும் திராவிட சாயம் பூசிக்கொண்டு இந்த பொய்ப் பிரச்சாரங்களை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது எவ் விதத்தில் நியாயம்.

என்வே தங்களது திராவிட இயக்கத்தார் செய்யாததையும் செய்ததாகக் கூறுவதையும், அதையே தம்பட்டம் அடித்தும் நாடகம் நிறைவேற்றி வருவதையும் தினந் தோறும் அரசியல் நிகழ்வுகளாக நாம் காணலாம். ஆனால் தலித்து களின் சமூக பொருளாதார வளர்ச் சிக்காக இந்திய அரசியல் சாசனத் தில் வரையறுக்கப்பட்ட சலுகை களேயே கூட இந்த 40 ஆண்டுகால திராவிட அரசியலார் முழுமையாக செயல்படுத்த்த உண்மையை ஆராய்ச்சி பூர்வமாக எடுத்துச் சொல்லமுடியும். பலமுறை ஒரு பொய் சொல்லப்படும்போது அதை உண்மையாக இருக்குமோ என்பது கேட்பவரை சந்தேகத்திற் குள் ஆழ்த்துவது போல் இருக்கும். இதையே உண்மையென திராவிட இயக்கத்தினுள் இன்னும் இருக்கும் தலித்துகள் நம்பி உள்ளனர்.

இறுதியாக பிராமணரல்லா தார், பெரியார், திராவிட அரசிய லார் இந்த முப்பெரும் மாயவலை களில் சிக்கி வரலாறு இழந்து, வாழ்வை சிதைத்து, தற்குறிகளாய் திரிந்துகொண்டிருக்கும் தலித் மக் களின் வோட்டுக்களை குறிவைத்து மட்டும் தலித் மக்களை அணுகு கின்ற உங்களால் தலித்துகளுக்கு என்ன பயன் என்பதை கேள்வி களாக காண்போம்.

1. முதல் திராவிட அரசியல் முதலமைச்சரான திரு. அண்ணா துரையிலிருந்து இன்றுவரை 5 முறை மட்டும் சிறிது காலத்திற்கு ஆதி-திராவிட நல அமைச்சர் இல் லாத பதவியைத் தந்தவர்கள், நிரந் தரமாக தலித் பிரதிநிதிகளை முக் கிய நிதி, நிர்வாக, மந்திரிகளாக பொறுப்புகளை கொடுத்து உள்ள னரா. (சபாநாயகர் பதவியைத் தவிர்த்து)?

2. ஒவ்வொரு கிராமப்பகுதி யிலும் சாதி ஒழிப்புத் திட்டத் தினை நிறைவேற்றுவதே குறிகோள் என்று தம்பட்டம் அடிக்கும் திரா விடக் கட்சிகள், கிராமத்தில் தலித் துகள் வாழும் பகுதியில் இல்லாமல் உயர்சாதி குடியிருப்புப் பகுதியில் தலித்துகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கி அனைவரும் ஒன் றாக வாழ வழிவகுக்க இதுவரை முயன்றிருக்கிறார்களா (சமத்துவம் கூட தனிமைப்படுத்தப்பட்ட கிரா மப்புறமாகவே காட்சியளிக்கின் றது)?

3. அரசு உயர் பதவியில் கொள்கை முடிவெடுக்கும் துறைகளான நிதித் துறை/உள்துறை போன்றவற்றில் இதுவரை குறிப்பிட்ட காலம்வரை நீடிக்கவைத்திருக்கிறார்களா?

4. பிராமணரல்லாதவர்களின் நிர்வாகத்தினால் நடத்தப்படுகின்ற அல்லது உயர்பொறுப்பில் பிராம ணரல்லாதவர்கள் இருக்கும் அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழகங் களில்/கல்லூரிகளில் இதுவரை எந்தளவிற்கு தலித்துகள் முன்னுரி மைப்படுத்தப்பட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் (அ) இல் லையெனில் அதைச் செய்திடவா வது துணிவிருக்கிறதா?

5. மேற்கண்டவைகளை சரி செய்ய இயலவில்லையெனில் பெரி யாரின் புரட்சி, எழுச்சி யாருக் கானது என்றாவது புரிந்துகொள் ளும் மனப்பக்குவம் இருக்கிறதா?

6. மறுக்கப்பட்ட தலித்து களின் உரிமைகளை, பெரியாரால் மறைக்கப்பட்ட தலித் எழுச்சியை தலித்துகளின் தலைமையில் இனி யாவது தலித் - தலித் அல்லாதார் ஒற்றுமைக்கு வித்திட இவர்களுக்கு மானமிருக்கிறதா?

7. தமிழக வரலாற்றில் ஜனநாய கம் வேரூன்றிய காலம் தொட்டு இன்றுவரை உள்ள பல்வேறு பிரா மணரல்லாதார், பெரியார் இயக் கம், திராவிட அரசியல் என்று தங் களை பொதுத்தளத்தில் கரைந்து தேய்ந்த தலித் எழுச்சி மெல்ல தலித் - தலித் அல்லாதார் பிளவு என்று மீண்டுமொரு தலித் சுயமரியாதை, பகுத்தறிவு இயக்கங்களை துவங்கி பிராமணரல்லாதாரின் மேலாண் மையை தகர்த்தெறிய வெகுகால மில்லை என்பதையாவது இவர் களால் யூகிக்க முடிகிறதா?

இத்தருணத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் காங்கிரஸ் இயக்கத்தாரின் தலித்துகளுக்கு ஆதரவான பொய் பிரச்சாரங்களை யும், காந்தியாரின் தலித் ஆதரவு வேஷத்தையும் மிகவும் துணிச்ச லுடன் உலகுக்கு அறிவித்ததுடன் "தாழ்த்தப்பட்டவர்கள் காந்தி யிடம் ஏன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்ற கட்டுரையினை இன்றைய தலைமுறையினருக்கு ஆவணமாக பதிவுசெய்துள்ளார். அதிலிருந்து பிராமணரல்லாதார்,



படிப்பகம்

www.padippakam.com

பெரியார் - பெரியாரிஸ்டுகள் மற்றும் திராவிட அரசியலாரிடம் தலித்துகள் ஏன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று தமிழக தலித்துகள் கூறுவது காலத்தின் கட்டாயம். எனவே அம்பேத்கரின் எச்சரிக்கை என்னவென்று காண்போம்.

"நூற்றாண்டு கால பிரச்சாரங்கள் செய்யாததைக் காட்டிலும் தாழ்த்தப்பட்டவர்களின் கைகளில் நிர்வாக அதிகாரத்தை அளித்தால் ஓர் ஆண்டிற்குள் பெருமளவு மாற்றத்தை செய்துவிட முடியும் என்பதைச் சராசரி அறிவு உள்ளவனே புரிந்துகொள்வான். அந்த அளவிற்கு இந்தக் கோரிக்கைகளின் நியாயம் வெளிப்படையானது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசியல் அதிகாரம் என்ற சிந்தனையே கூட காந்திக்கு வெறுப்பைத் தருகிறது. தாம் நம்பிக்கை வைத்த சமூக வளர்ச்சிப் போக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு முற்றாக உதவவில்லை என்பதை உணர்ந்திருந்தபோதிலும் காந்தி தாழ்த்தப்பட்டவர்களின் விடுதலைக்காக அரசியல் வளர்ச்சிப்போக்குகளை பயன்படுத்த அனுமதிக்கவில்லை. இப்படி இருக்கையில் 'காந்தியிடம் எச்சரிக்கையாக இருங்கள்' என்று தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஏன் சொல்லக்கூடாது?"[21] என்ற புரிதலில் தலித்துகளின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் இன்றுவரை தடையாய் இருந்துவரும் பிராமணரல்லாதார் பெரியார் - திராவிட அரசியல் ஆகியோரின் மாயவலைகளை அறுத்தெறிவதே தலித் எழுச்சியின் துவக்கம்.

- தொடர்வோம்.


**இக்கட்டுரைக்கு துணைநின்ற நூல்கள்**

1 ராவ்பகதூர்எம்.சி. ராஜாஒடுக்கப்பட்ட இந்துக்கள், 1968, அம்பேத்கர் சிந்தனை வெளியீடுகள், சென்னை. பக். 1

2. மா. வேலுச்சாமி தலித் மக்களின் இன்றைய நிலை, 2001, மறுமலர்ச்சி, சென்னை பக். 21

3. கார்த்திகேசு சிவத்தம்பி திராவிட இயக்கக் கருத்து நிலையின் இன்றைய பொருத்தப்பாடு. ஒரு வரலாற்று நோக்கு, 1999, நாவாவின் ஆராய்ச்சி, சென்னை, பக். 9-23, 32-33

4. அன்பு பொன்னோவியம் எதிர்வினைக்கு ஒரு விளக்கவுரை 2003, புதிய கோடாங்கி, பக். 50

5. புதிய கோடாங்கி கேள்வி-பதில், 2004 பக். 30

6. விடுதலை மணி ராவ் பகதூர் என். சிவராஜின் வாழ்க்கை வரலாறு, 1998, விடுதலை மணி, திருமானூர் பக். 4

7. புதிய கோடாங்கி பார்க்க அன்பு பொன்னோவியம்

8. புதிய கோடாங்கி பார்க்க அன்பு பொன்னோவியம்

9. விடுதலைமணி பண்பாட்டுத் தலைவர் தாத்தா ரெட்டமலை சீனிவாசன், 1997, திருமானூர், பக். 2

10. விடுதலைமணி பார்க்க பண்பாட்டுத் தலைவர் தாத்தா ரெட்டமலை சீனிவாசன்

11. டாக்டர். சத்தியவாணி முத்து எனது போராட்டம், 1981, செழியன் பதிப்பகம், பக். 14-15

12. டாக்டர் சத்தியவாணிமுத்து பார்க்க எனது போராட்டம், பக். 12

13. கார்த்திகேசு சிவத்தம்பி. பார்க்க. திராவிட இயக்கக் கருத்துநிலையின் இன்றைய பொருத்தப்பாடு ஒரு வரலாற்று நோக்கு

14. மா. வேலுசாமி சாதி ஒழிப்பு - டாக்டர் அம்பேத்கரின் நிறைவேறா கனவு, 2003, மறுமலர்ச்சி, சென்னை. பக்.6

15. Government of India Report of the Backward Classes Commission, I part, 1980, New Delhi P. 32

16. M.N. Srinivas Social change in India, 1992,

17. பார்க்க கார்த்திகேசு சிவத்தம்பி

18. தமிழ் ஓவியா பெரியார் எல்லாருக்கும் பெரியார்..? களத்துமேடு, 2004

19. மா. வேலுசாமி அரசியல் சாசன சலுகைகளும், தலித் மக்களும் ஒரு கண்ணோட்டம், 1மறுமலர்ச்சி 2002, சென்னை பக். 23

20. தமிழரசு ரெட்டைமலை சீனிவாசன் அஞ்சல் வெளியீட்டுவிழா, 2000, தமிழரசு, சென்னை. பக். 59

21. அண்ணல் அம்பேத்கர் தாழ்த்தப்பட்டவர்கள் காந்தியிடம் ஏன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்? 2002, பக். 58


# நாட்டுப்பற்று

■ மருத்துவர் காசி பிச்சை

நாட்டுப்பற்று என்பது
கோலத்தை நேசிப்பதல்ல,
கொள்கையை நேசிப்பது;

பிழைப்பை நேசிப்பதல்ல,
உழைப்பை நேசிப்பது;

நோட்டை நேசிப்பதல்ல,
நாட்டை நேசிப்பது;

போற்றலை நேசிப்பதல்ல,
ஆற்றலை நேசிப்பது;

கோட்டையை நேசிப்பதல்ல,
கூட்டுறவை நேசிப்பது;

வரைபடத்தை நேசிப்பதல்ல,
வறுமையொழிப்பை நேசிப்பது;

மண்ணை நேசிப்பதல்ல,
மக்களை நேசிப்பது;

# கோயில் மாடுகள்

■ வீ. ஏழுமலை

நாங்கள்
குத்தகைக்கு விடப்பட்ட
கோயில் மாடுகள்
பொட்டுகட்டி விடப்பட்ட
பூதேவதைகள்...

சிகைக் காணிக்கை கொடுத்தால்
சீக்கிரத்தில் வளர்ந்து விடுமென்று
சதைக் காணிக்கை கொடுக்கும்
சீதைகள்...

கடவுளின் பெயரால்தான்
முதலில் எங்கள்
கற்பும், கனவும்,
கடைசியாய் எங்கள் கர்ப்பமும்
கலைக்கப்படுகின்றது...

ஆண்டவனுக்கு
தொண்டு செய்ய எங்களை நாங்கள்
அர்ப்பணித்துக் கொண்டதால்
அர்ச்சகருக்கு மட்டும்
அனுமதி இலவசம்...

www.padippakam.com

# மாற்றங்கள்

■ சுப்ரபாரதிமணியன்



என் கால்களில் முளைத்த அதிசயம் வெகுவாக நிலை குலையச் செய்திருந்தது. வலது காலில் ஒரு வகைச் செருப்பையும், இடது காலில் இன்னொன்றையும் மாட்டியிருந்தேன். இரண்டுவகைச் செருப்புகளும் என்னுடையவைதான் என்பது ஆறுதலாக இருந்தது.

இது எப்படி நேர்ந்தது என்ற தலைக்குப்புறத் தாக்குதலைப் பற்றி யோசிப்பதற்கு முன்பே கால்களில் இருந்து செருப்புக்களைக் கழற்றி விட்டிருந்தேன். சட்டென உடம்பு முழுக்கப் பூச்சிகள் தாக்கி அரிப்பெடுத்த மாதிரி இருந்தது. பூச்சிகளை உதறின பின்பு நகர்ந்து போய்விட முடியும் என்றுத் தோன்றவில்லை. புழுத்து சாகும் ஒரு பிராணியைப் போல உடம்பு நடுங்க ஆரம்பித்திருந்தது.

என் அறையைத் தாண்டி, லிப்ட்டில் ஐந்து மாடிகளைக் கடந்துமிருந்தேன். லிப்ட்டிலிருந்து வெளியேறும்போது லிப்ட்டுக்காகக் காத்திருந்தவர்கள் லிப்ட்டில் இருமுறை பயணம் செய்யக் கூடிய அளவில் அபரிமிதமாக இருந்தார்கள். ஜனத்திரள் எப்போதும் கும்பலாயும், அலைந்து கொண்டிருக்கும் அலுவலகத்தின் 80' நீளப்பாதையை ஓரளவு கடந்துமிருந்தேன். அப்போதுதான் இரண்டு கால்களிலும் இரண்டு வகைச் செருப்புகள் இருந்ததைக் கவனித்தேன்.

, வீட்டில் ஒன்றுக்கும் மேற்பட்ட ஜதைச் செருப்புகளை பயன்படுத்துவது தவிர்க்க இயலாததாகி விட்டது. குளியலறை மற்றும் ஒதுக்கப்பட்ட அறைகளில் செல்லவும் வெளியில் உடல் பயிற்சிக்காகப் போகிறபோதும் சாதாரணசெருப்பு தேவையாக இருந்திருக்கிறது. அது ஒதுக்கப்பட்ட பொருள் போல் முன் வாசலில் எப்போதும் கிடக்கும்.

அலுவலகத்திலும் அதே நிலைதான். அறையில் இருக்கும்போது ஒரு வகைச் செருப்பையும், வேலை செய்யும் நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட களத்திற்குள் செல்லும்போது இன்னொரு வகைச் செருப்பையும் போட வேண்டிய கட்டாயம் தொழில் முறை விதிகளாய் இருந்து கொண்டிருந்தது. வேலை பார்க்கும் நவீன சாதனங்களின் அறை 18° C சீதோஷ்ண நிலையே கொண்டிருக்கும். அதற்குக் கீழாகச் சிலசமயம் செல்வதுண்டு. 18°C மேலான சீதோஷ்ணம் என்பது உயர்ந்த தொழில் நுட்பக் கருவிகளின் செயல்பாட்டில் குந்தகம் விளைவிக்கும். குந்தகத்தை மனதில் வைத்துக்கொண்டு அதி நவீன 'விண்டோ' 'ஸ்பிளிட்' வகை குளிரூட்டான்களால் சீதோஷ்ணம் காப்பாற்றப்பட்டு வந்து கொண்டிருந்தது. அது கடைபிடிக்கப்படாத போது சிவப்பு மற்றும் பச்சை விளக்குகள் எரிந்து பயமூட்டும். . தொலைதூர தொழில்நுட்பக் கருவிகளின் குந்தகத்தை அவை காட்டிவிடும். மேலதிகாரிகளின் கோபமும் எரிச்சலை அறை வெப்பத்தைச் கலபமாகக் கூட்டிவிடும். அந்த தளம் முழுக்க தூசுகளிலிருந்து காப்பாற்றப்பட வேண்டிய ஸ்தலமாக இருந்தது. 'தூசிகள் எதிரி எண் 1' என்ற தொனியிலான வாசகங்கள் முன்னம் ஒவ்வொரு மூலைகளிலும் எச்சரிக்கைகளாகத் தொங்கிக் கொண்டிருக்கும். அந்தத் தளத்தில் வெற்றுக் காலோடு நுழைந்துவிட முடியாது. உடம்பு ஜில்லிட்டுப் பிணமாகிவிடும். எனவே அந்தத் தளத்திற்குள் பயன்படுத்திக் கொள்ளவென்று ஒருவகைச் செருப்பு இருக்கும்.

இந்தச் செருப்புக்களை வைக்கவென்று இரண்டு அடுக்குகளாலான மரப்பெட்டி இருக்கும். என் அறை இரண்டாம் தளத்திலும், வேலை செய்யும் தளம்



படிப்பகம்

www.padippakam.com

நான்காம் மாடியிலும் இருந்தது பெரிய அசௌகரியமாக இருந்தது. அறையிலிருந்து புறப்படும்போது சாதனங்கள் இருக்கும் தளத்திற்கு பயன்படுத்தும் சாதாரண ஹவாய் செருப்புகளில் கால்களை நுழைத்துக் கொள்வேன். பிறகு வெளியில் செல்லும்போது இரண்டாம் தளத்திலுள்ள அறைக்கு வந்து செருப்பை மாற்றிக் கொள்வதை இயல்பாகத்தான் செய்து வந்திருந்தேன். இரண்டாம் தளத்து அறையில் இருந்து கோப்புகளைப் பார்க்கும்போது இருவகைச் செருப்புகளும் காலடியில் கிடக்கும். ஏதாவது ஒரு ஜதைச் செருப்பில் கால்கள் இருக்குமாறு பார்த்துக் கொள்வேன். மேலே சுழலும் மின் விசிறியைத் தவிர்த்துவிடுவேன். தூரத்துக் கட்டிடங்களும் நீல ஆகாயமும் பெட்ரோல் புகையூடே தெரிகிற விதமாய் பக்கவாட்டு ஜன்னலைத் திறந்து வைத்துக்கொள்வேன். சில சமயம் கால்களில் பூச்சி ஊருவது போல இருக்கும். தலையைக் குனிந்து பார்க்கும்போது ஒருவகை இருட்டு கால்களுக்கு இடையில் அப்பிக்கொண்டிருப்பது தெரியும். கண்ணில் கண்ணாடி தொங்கு கிறதா என்று சரிபார்த்துக் கொள்வேன். கண்ணாடி எந்த விதத் தொந்தரவும் இல்லாமல் உட்கார்ந்திருக்கும். பார்வையைக் கவனப்படுத்துகிறபொழுது கால்களில் செருப்புகள் இருப்பது தென்படும். எவ்வித விசித்திரத்தனமும் இல்லாதிருந்தால் உடம்பில் பூச்சி ஊர்வது நின்றிருக்கும்.

இரண்டாம் தள அறையிலும் நாலாம் தள சாதன அறையிலும் ஒரேவகைச் செருப்பை உபயோகப் படுத்துவதை ஒரு வகை ஆராய்ச்சிக்கான விஷயமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது நெடு நாளைய ஆர்வமாக இருந்தது. ஆனால் சமீபத்தில் சென்று வந்த ஒரு பயிற்சியில் இருபத்து நான்கு மணி நேரமும் இணைய இணைப்பு வழங்குதற்காக மிகக் குறைந்த மாதக் கட்டணம் வசூல் செய்யும் ஒரு வகை இயந்திரம் கவனத்திற்குள்ளாகி இருந்தது. அது நிறுவப்பட்டு மின் ரீதியான இணைப்புகள் கொடுக்கப்பட்டுவிட்டன. ஆனால் விடுமுறை தினங்களில் சலுகைக் கட்டணத்தை அறிவிக்க வேண்டிய தன் செயலை அது செய்யத் தவறி விட்டதை கண்டுபிடித்தோம். அதைச் சரி செய்கிற ஆராய்ச்சியில் ஒரே வகைச் செருப்பு பற்றின ஆராய்ச்சி காணாமல் போயிருந்தது.

என் முன்னர் வந்து நின்ற நபர் தனியார் சேவையை வழங்கும் ஒரு நிறுவனத்தைச் சேர்ந்தவராக இருந்தார். பல ஆண்டுகளாக மத்திய அரசுப் பணியில் தனியாரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி பலமிழந்து விட்டதன் அறிகுறியாய் தனியார் சேவை தொடங்கப் பட்டு விட்டது. எங்களின் நான்காம் தளத்திலேயே மூன்று தனியார் நிறுவனங்கள் 5000 கோடி ரூபாய் அந்நியச் செலவாணி தரும் நகரத்தில் சேவையைத் தருவதற்காக கருவிகளை பொருத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். எங்களின் கருவிகளின் மின் அதிர்வு தூரத்திலேயே தனியார்களின் கருவிகள் பொருத்தப் பட்டுவிட்டன. வாடகையாக சில குறைந்த லட்சங்கள் மட்டும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. அந்த அறையின் அந்த மூலை நிர்மாணச் செலவிற்குக் கூட

**காலையில் சக அதிகாரி ஜன்னலில் தலையை நீட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். இருக்கையில் இருந்தபடியே என்னவென்று விசாரித்தேன். ஒரு பெண் இறந்து கிடக்கிறாள். ஆண்கள் யாருமில்லை. நாடோடிப் பெண்கள் மதுவைக் குடித்துவிட்டு ஏகமாய் ரகளை செய்துகொண்டிருக்கிறார்கள். பிணம் கிடக்கிறது என்றார். நானும் எட்டிப் பார்த்தேன்.**

அந்தக் குறைந்த சில லட்ச ரூபாய்கள் ஈடாகாது என்பது உண்மை. ஒப்பந்த காலத்தில் அந்தக் கருவிகளை இயக்க வேண்டிய பொறுப்பும் எங்களுடையதாகவே அந்த ஒப்பந்தத்தில் எழுதப்பட்டிருந்தது. பல ஆண்டுகளாக தனியார் சேவையை எதிர்த்து வந்தவர்களே அவர்களின் சேவையைப் பராமரிக்க வேண்டிய கட்டாயம் வேறு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது ஒரு கோடிப் பூச்சிகள் உடம்பில் ஊர்வது போலிருந்தது.

அந்தத் தனியார் நிறுவன ஊழியர் என் முன் வந்து நின்றபோது ஒரு பெருத்தப் பூச்சியொன்று விசுவரூபித்து என் முன் நிற்பது போலத்தான் இருந்தது. "எங்களின் கேபிள்கள் முறையாக நிர்மானிக்கப்பட்டு விட்டன. அவற்றை தாங்கள் சரி பார்த்து விட்டால் கேபிள்களை அடுத்த அறைக்குக் கொண்டு போகும் வேலையை கவனிக்கச் சரியாக இருக்கும்" என்றார் அவர். அதற்காக எழுந்தபோது தான் இரு கால்களிலும் வெவ்வேறு வகையான செருப்புக்களை மாட்டிக் கொண்டிருக்க வேண்டும். பெருத்த பூச்சியின் முன் நான் வெளியில் நடந்து வெளியேறின பின்புதான் இதைக் கண்டு பிடித்தேன். பெரிய பூச்சிக்கு என் தயவு தேவையாக இருந்ததால் சில அடிகள் தள்ளி முன்னதாக நடந்துகொண்டிருந்தார்.

கால்களில் மாறின செருப்புகளால் அடுத்த அடியை எடுத்து வைக்க முடியுமா என்பது எனக்கு விளங்கவில்லை. அதற்குப் பதிலாய் வெற்றுக் கால்களுடன் திரியலாம். நின்று கொண்டிருந்த கார் ஒன்றின் முன் டயர் அருகில் செருப்புக்களைக் கழற்றி விட்டேன். யாராவது கவனிக்கிறார்களா என்று ஒரு பார்வை பார்த்து வைத்தேன். எவரின் கண்களையும் நேரடியாக என்னால் சந்திக்க இயலவில்லை. பெரிய பூச்சி முன் நகர்ந்துவிட்டிருந்தார்.

வேறு எந்த கணத்தில் என்னைப் பதற்றமாக்கிக் கொண்டு இப்படி மாற்றுச் செருப்புக்களை மாட்டிக் கொண்டேன் என்பது பற்றி யோசிக்க ஆரம்பித்தேன். தூக்கநிலை, விழிப்பு, ஞானம், காட்சியாயிருத்தல்


படிப்பகம்

www.padippakam.com

என்று எல்லா நிலைகளும் என்னைக் குழப்பின. மனம் எப்போதும் விழித்திருக்கும்படி செய்ய என்ன செய்ய வேண்டும் என்று அடுத்த ஆராய்ச்சியாக இருக்க வேண்டும். தூக்கத்திலிருந்து எழ முடியாமல் இறந்து விடுகிற மாதிரியான நிலையாக இது. எழுந்து நடந்தது இறப்பை நிராகரித்துவிட்டது. ஆனால் ஒரு கணம் வெறும் காட்சியாக இருந்து வேடிக்கை பார்த்து விட்டோமா என்றிருந்தது.

காலையில் சக அதிகாரி ஜன்னலில் தலையை நீட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். இருக்கையில் இருந்தபடியே என்னவென்று விசாரித்தேன். ஒரு பெண் இறந்து கிடக்கிறாள். ஆண்கள் யாருமில்லை. நாடோடிப் பெண்கள் மதுவைக் குடித்துவிட்டு ஏகமாய் ரகளை செய்து கொண்டிருக்கிறார்கள். பிணம் கிடக்கிறது என்றார். நானும் எட்டிப் பார்த்தேன். அலுவலக காம்பவுண்ட் ஒட்டி சாக்கடை நீட்சியில் சமையல் பாத்திரங்களும் பிற பொருட்களும் ஏகமாய் இறைந்து கிடந்தன. வாகனங்கள் செல்லும் ஓர வழி நிதானமாக இருந்தது. பொட்டலங்களாய் கட்டிப் போட்டதாய் சிலவை கிடந்தன. "பிணம் என்றீர்களே' என்றேன். "மூட்டை போலக் கட்டிக் கிடக்கிறது பாருங்கள்." கண்ணாடியைச் சரி செய்து கொண்டு இரண்டாம் தளத்திலிருந்து பார்வையை கீழே விசிறினேன். பொட்டலமாய் கட்டிக் கிடப்பதைக் கூர்ந்து கவனித்தேன். கால்கள் கட்டப் பட்டிருந்த சேலையால் முழுக்க மூடப்பட்டுக் கட்டப்பட்டிருந்தது. இடுப்பின் அருகில் இரு பூ மாலைகளின் நீட்சி தென்பட்டது. பார்வையை மேலே கொண்டு சென்றபோது யாரோ உட்கார்ந்த நிலையில் இருப்பது தெரிந்தது. பிணத்தை உட்கார வைத்திருக்கிறார்களா என்ன என்று அதிர்ச்சியாக இருந்தது. கூர்ந்து பார்த்தபோது உட்கார்ந்திருக்கும் பெண்ணின் தலையின் அசைவைத் தெரிந்து கொள்ள முடிந்தது. அவளின் கைகளின் நீட்சியில் ஒரு பெண்ணின் தலை கிடத்தப்பட்டிருந்தது. பூமாலைகள் கழுத்தைச் சுற்றி இறுக்கி இருந்தன. மூக்குகளில் பஞ்சுகள் வைத்து அடைக்கப்பட்டிருந்தன. பிளாஸ்டிக் சாக்கொன்று பிரிக்கப்பட்டு சடலத்தின் தலையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்தது. உட்கார்ந்திருந்த பெண் சாக்கை சற்றே விலக்கி பிணத்தின் முகத்தைத் தடவிக் கொடுத்தாள். ஈக்கள் அணுகாத மாதிரி வலது கையை வீசினாள். பிணம் ஒரு பொட்டலத்துக்குள் அடைபட்டது போலிருந்தது. நடந்து கொண்டிருந்தவர்களின் வெறித்த பார்வைக்குப் பின் எதுவும் நிகழவில்லை. நான் தலையை உள்ளிழுத்துக் கொண்டேன். என்ன வாழ்க்கை என்று தத்துவம் உதிர்த்தார் சக அதிகாரி. புழு புழுத்துச் சாகப் பிறந்தவர்கள் நாம் என்றார். நான் தனியார் சேவை ஊழியரை பெரிய புழுவாக நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

தூக்கத்தில் தீர்க்க தரிசனம் கொள்வது போல் செருப்புக்களின் வேறுபாட்டை நான் அறிந்து கொண்டேன். விழித்த நிலையிலும் தூங்க முடியும், தூக்க நிலையிலும் விழிப்பு பெறலாம்தான். நான் விழிப்பு பெற்றது விழிப்பு நிலையிலேயே ஞாபகம் வந்தது. கனவுகளில் இந்தச் செருப்புகள் பதிவாகி மனிதனை இம்சைப்படுத்துமா? ஏதோவகைக் குறியீடாயும் செருப்பு வந்து தொலைத்து இம்சைப் படுத்தி விடக்கூடாது. தூங்கும்போது விசித்திரமான தீர்க்க தரிசனங்களை இந்தப் பெருத்த பூச்சியோ செருப்புகளோ தொடுத்துவிடும் என்பது நிச்சயமாகியிருந்தது என்னுள். எந்தப் பிரார்த்தனைகளாவது இந்தச் செருப்புக் கனவுகளின்றி என்னை மிதக்க விடுமா என்ன. பலத்த திடுக்கிடும் கனவுகளின்போது குரல் இழந்து ஊமையாகத் தத்தளிப்பதும் உண்டு. உரத்து பேசுவது போல வாய் அசைவு தெரிந்து கொண்டே இருக்கும். ஆனால் பேச்சு வராது. சூழ் நிலைத் தூக்கம் என்று ஒருவகைப் பயிற்சி இருப்பதைப் பற்றிக் கூட ஒரு நண்பர் சொல்லிக் கொண்டிருந்தார்.

> **ஒவ்வொரு தளத்திற்கும் லிப்ட் நின்று சிலரை வெளித் துப்பியும், சிலரை வரவேற்றும் சென்றுகொண்டிருந்தது. ஒவ்வொரு தளத்திலும்வருபவர்களும், வெளிக்கிளம்புகிறவர்களும் என் செருப்புக்களையே பார்த்துச் சிரிப்பது போலிருந்தது. என் உடம்பு லிப்ட்டின் ஒரு பொத்தானாய் சிறுத்துவிட்டிருந்தது.**

உரையாடல்களுக்கு நடுவில் செருப்பு, பூச்சி என்ற வார்த்தைகள் சிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்கான பயிற்சியில் தொடர்ந்து இருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டேன். வார்த்தைகள் சிக்கினால் வார்த்தைகள் இன்றி வாய் குரலை வெளிப்படுத்துவதற்கு லாயக்கு அற்றதாகப் போய்விடும். தனியார் மயத்தை எதிர்த்து பல வருடங்களாய் கோஷங்களை எழுப்பி வந்தது இப்போது குரலற்ற ஊமையாய் மாற்றி விட்டது போலிருந்தது.

காருக்கு அருகில் கிடந்த செருப்பை மாட்டிக் கொண்டேன். இப்படியே விட்டுச் சென்று விடலாமா. மாலைவரைக்கும் இப்படியேக் கிடக்கவிட்டு வந்து சேகரித்துக் கொள்ளலாம். சுவர் ஓரமாய்க் கூட நகர்த்திவிட்டு விடலாம். அவை நிச்சயம் பறிபோய் விடும் என்ற பயம் மனதை அப்பியிருக்க வேண்டும். செருப்புகளுடன் நடக்க ஆரம்பித்தேன்.

லிப்ட் அருகில் கூட்டம் அதிகம் இல்லை என்பது ஆறுதலாக இருந்தது. லிப்டின் உள்புறத்தில் என் அலுவலகத்தைச் சார்ந்த இருவர் இருந்தனர். கடைநிலைப் பெண் ஊழியரும், முதிர்ந்த ஆண் ஊழியரும் என் வருகையை வெகுவாக எதிர்பார்த்திருந்தவர்கள் போல லிப்ட் பொத்தானில் கை வைத்து அழுத்தி இருந்தனர். கடைநிலை ஊழியப் பெண் என் செருப்பு



படிப்பகம்

www.padippakam.com

களை கவனித்து விட்டிருந்தாள். அவள் உரக்கச் சிரித்தாள். கால்களை உள்ளிழுத்துக் கொண்டாலும் செருப்புகளை முழுமையாய் மறைத்துவிட முடியவில்லை. அவை விகாரமாய் நீட்டிக் கொண்டிருந்தன. எப்படியோ மாறிவிட்டது என்று சொல்லிவிட்டு விழிப்பு நிலையில் இருந்து விடுபட்டு சாட்சியாக இருத்தல் என்பது போல் அவளைப் பார்த்தேன். ஏதாவது சாபமிட்டு அவளின் குள்ள உருவத்தை செருப்பிற்கு இணையாகக் கொண்டு சென்று விட வேண்டும் போலிருந்தது. சிரிப்பின் அடர்த்தியாய் இன்னும் சிலர் லிப்ட்டின் உள்புறத்தில் இருப்பது தெரிந்தது. "நீங்கள் கார் அருகில் செருப்புகளை கழற்றி விடும்போது கவனித்தேன். எதற்கு செருப்பில்லாமல் நடந்து போகிறார் என்று குழப்பமாக இருந்தது" என்றார் வாகன ஓட்டி ஒருவர். அவரின் பேச்சின் இறுதியில் பலத்தச் சிரிப்பை உதிர்த்தார். ஒவ்வொரு தளத்திற்கும் லிப்ட் நின்று சிலரை வெளித்துப்பியும், சிலரை வரவேற்றும் சென்றுகொண்டிருந்தது. ஒவ்வொரு தளத்திலும் வருபவர்களும், வெளிக்கிளம்புகிறவர்களும் என் செருப்புக்களையே பார்த்துச் சிரிப்பது போலிருந்தது. என் உடம்பு லிப்ட்டின் ஒரு பொத்தானாய் சிறுத்து விட்டிருந்தது. ஒருவகை பெருத்த சிரிப்பை வெளிக்காட்ட முயன்று தோற்றுப் போயிருந்தேன்.

என் அறையின் அடுத்த மூலையில் இருந்த சக அதிகாரி பெருத்த சிரிப்பாய் என்னை வரவேற்றார் அவர் கையிலிருந்த தொலைபேசியை பெருத்த சப்தத்துடன் வைத்துவிட்டுச் சிரித்தார். "என்ன செருப்பெல்லா மாறிப்போச்சாமா" என்றார். நானும் சிரிக்க முயன்றேன். இந்த முறை உரத்த சிரிப்பை பார்த்து விட்டிருந்தேன்.

கடைநிலை அலுவலகப் பெண் அலுவலகர் நான் அழுத்திய அழைப்பு மணியின் தீவிரச் சப்தத்தில் என் முன் வந்து நின்றிருந்தாள். அவளின் முகம் ஒருவகை இறுக்கத்தால் மாறிப் போய் இருப்பது தெரிந்தது. அவளை லிப்ட் சிரிப்பை மறுபடியும் உதிர்க்க ஆணை இட வேண்டும் போலிருந்தது.

"நான் அறையிலிருந்து வெளியே செல்லும் போது செருப்புகளை மாற்றி அணிகிறேனா என்பதை கவனிக்க வேண்டியது உன் வேலை" என்றேன். அவளின் தலையசைப்பில் ஒருவகைப் புன்னகை மிளிர்ந்தது. "அதுவும் தனியார் சேவை நிறுவனத்தினருடன் நான் செல்லும்போது எனது செருப்புக்களைச் சரியாக கவனிப்பது முக்கியக் கடமை." அவள் தலையை இருபுறமாக ஆட்டினாள். "இன்றைக்கு இதற்கு மேல் எந்த தனியார் சேவை ஊழியரும் என் முன்னால் வந்து நிற்கக் கூடாது. நிறைய வேலை என்று சொல்."

அவள் வலது பக்கக் கதவில் வெளியேறி உள் அறைக்குச் சென்றாள். இடது பக்க அறை வாசல் வழியே வந்தவரை கவனித்தேன். நல்ல விலை உயர்ந்த காலணியும் உடைகளும் அணிந்திருந்தார். உள்ளூருக்கு சேவை தரப்போகும் இன்னொரு தனியார் நிறுவனத்தின் முக்கிய பிரதிநிதி அவர். ஷூ அணிந்த காரணத்தால் ஒவ்வொரு தளத்திற்கும் என்னைப்போல மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது என்பதாய் பட்டது. ஆனால் பெருத்த பூச்சியாய் அவள் நெளிந்து நிற்பதாய் தோன்றியது. செருப்பு ஜதைகள் மாறாமல் இருக்க பார்வையை கீழே தாழ்த்தினேன். கால்களுக்கிடையில் கனத்த இருட்டு அப்பியிருந்தது. ●

---

# அகம் சொல்லும் முகம்

■ விழி பா. இதயவேந்தன்

நினைத்தால் மனம் லயிக்கும்
சந்தோசத்தில் சில முகங்கள்.

பார்த்தாலேப் பரவசங்கொள்ளும்
பண்போடு சில முகங்கள்.

பார்த்தும் பார்க்காத மாதிரி
கடந்துபோகும் சில முகங்கள்.

பார்க்கவே சகிக்க முடியாமல்
பரிதவிக்கும் கோரமாய் சில முகங்கள்.

கேட்டாலும் புன்னகைக்காது
கடிந்துபோன சில முகங்கள்.

அடிக்கடி சிரித்து மகிழும்
காரணம் ஏதுமில்லா முகங்கள்.

பொருளுக்காய் மட்டுமே புன்னகைக்கும்
சுயநலமிக்க சில முகங்கள்.

இனிமையில் கனிவாய் புன்னகைக்கும்
இன்னும் சில முகங்கள்.

உள்ளுக்குள் இடிந்து
வெளியேக் கடிந்தபடி
வெறகொண்டு அலையும் பல முகங்கள்.

வேதனைகளை சுமந்துகொண்டு
சேதி சொல்லக் காத்திருக்கும்
மீதி சில முகங்கள்.

நெடுந்தூரம் பயணப்பட்டு
கழிந்துபோன வாழ்வில்
அகம் சொல்லும் முகங்கள்
எத்தனை... எத்தனை...? ●



படிப்பகம்

www.padippakam.com

# சும்மாடு [கவிதைகள்]

■ பிரதிபா ஜெயச்சந்திரன்

நூல் அறிமுகம்

ஆசிரியர் : அகவி
வெளியீடு : கலைநிலை பதிப்பகம், திருச்சி
விலை : ரூ. 30

தலித்துகளின் கவிதைகள், கட்டுரைகள், நாவல்கள் எல்லாம் இப்போது வெகு விமரிசையாக விற்பனை யாகிக் கொண்டிருக்கும் - இது தலித் காலம். மடிசார் களும், செஞ்சட்டைகளும் கழற்றி வைக்கப்பட்டு இதுவரையிலும் சட்டை செய்யப்படாமல், தாழ்த்தப் பட்டு ஒதுக்கப்பட்டு வந்த தலித் இலக்கியம் இன்று பரவலாக புருவம் உயர்த்திப் பார்க்கப்படுகிறது. ஆவணமாகாத வரலாறுகள் இன்று ஆவணமாகிக் கொண்டிருக்கின்றன. தம் வாழ்க்கை பற்றி எழுதத் துணியாத பலரும் இன்று தலைநிமிர்ந்து எழுதத் துவங்கிவிட்டனர். தனது எழுத்துக்கள் பரவலான அங்கீகாரம் பெறத்தக்க தகைமையானவையா என்ற சந்தேகத்துடன் தயங்கி நின்ற தரமான எழுத்துக் களைக் கொடுக்கத் திராணியுள்ளவர்களும் இப்போது களம் இறங்கிவிட்டனர்.

இந்த வரிசையில் மிகுந்த நம்பிக்கையைத் தரத்தக் கதாக, அழகியல் மெருகுடன் கிராமத்தின் ஆழ்ந்த அனுபவங்களை அழகான கவிதைகளாக வடித்திருக்கி றார் அகவி. மொத்தம் 45 கவிதைகளைக் கொண்ட இந்தத் தொகுப்பு நல்ல தரமான அச்சாக்கத்துடன் வெளிவந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

பொதுவாக ஆசிரியர்களின் வாழ்வுத் துறை சார்ந்த நிகழ்வுகளும் அனுபவங்களும் கவிதைகளாகி விடும். ஆனால் அகவியின் கவிதைகளில் இந்த விபத்து பெரிதாக ஏற்பட்டுவிடவில்லை. அது பெரிதாக வெளிப்பட்டிருப்பது 'அவன் இவன் என்றால்' கவிதையில்தான். ஆனாலும் அது கேள்வி கேட்பது சாதியம் சுமந்துதிரியும் கிராமத் திமிர்வாதக்காரர் களை. 'அவன் இவன் என்றால் அவன் நாக்கை அறுப் பது யார்?' என்ற கேள்வியில்; சாதியின் பெயரால் அதிகாரம் சுமந்து திரியும் (சூடிக்கொள்ள முனையும்) சாதிய நாவுகள் அறுக்கப்பட வேண்டும் என்ற வன் முறை சார்ந்த வரிகள் ஒடுக்கத்தின் வடுக்களிலிருந்து பீறிட்டுக் கிளம்பிய வரிகள். இந்தப் பீறிடலைத் தடுக்க எந்த இறக்குமதி செய்யப்பட்ட சித்தாந்தங்களாலும் முடியாது.

கிராமங்களின் நகர் சார்ந்த தொடுகோடுகளாய் விளங்கும் பேருந்துகள் அந்தக் கிராமங்களின் மேல் செலுத்தும் அரசு அதிகாரம் - 'போனால் போகட்டும் பொறம்போக்குப் பயல்களென பொழுதுசாய வரும் ஒரு வண்டி;' (பக். 61); 'வீடுகளின் முற்றத்தில்/எரியும் விளக்குகள்/ஒவ்வொன்றாய்க் கண்மூடியும் வர வில்லை/ஊரின்/அன்றைய கடைசிப் பேருந்து' (இர வின் முன்முகம், பக்.- 39) போன்ற வரிகள் அரசின் அதிகாரக் கரங்களில் அனாதரவாய் விடப்பட்ட கிராமக் குழந்தைகளாய்த் தோன்றுகின்றன.

ஒரு எழுத்தாளன், கவிஞன் தன்மொழியின் குறைந்த பட்சம் 200 ஆண்டுகால எழுத்து வரலாற்றைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இலக்கிய வரலாற் றில், கவிதைகள், அதன் போக்கில் தனது பரிணாம வளர்ச்சியின்பாற்பட்டு தனக்கேயான மெருகுடன் புதிய பல வடிவங்களையும், உள்ளடக்கங்களையும் செய்நேர்த்திகளையும் தன்னகத்தே கொண்டு சுவடுகள் பதித்துச் சென்றுகொண்டிருக்கின்றன. அந்த வகையில், அதன் தொடுதூரம் (approachability) புதிதாகக் கள மிறங்கியுள்ள ஒரு கவிஞனின் கடந்து வந்த தூரத்தை விட அதிகமாயிருக்கும் பட்சத்தில் கவிஞன் தனது ஓட்டத்தைத் துரிதப்படுத்தித் தன்னைச் செழுமைப் படுத்திக்கொள்ள வேண்டியிருக்கும். மாறாக, கவிஞன் தனது தொடுபுள்ளிகளின் விளிம்புகளை விஸ்தரிக் கும்போது, புதிய தரமான கவிதைகளைக் கண் டெடுக்க வாய்ப்புள்ளது.

அகவியின் கவிதை விஸ்தாரங்கள், தன் கிராமம், தன் இனம், தன் அவலங்கள் என்று மனிதாபிமானம் ததும்பும் கவிதைகளாக அடையாளப்பட்டிருப்பது தலித் கவிஞர்கள் மத்தியில் புதிய வரவாக அறியப் படலாம் - அவரது வரப்போகும் கவிதைகளும் தலித் வாழ்வு மீது மையம் கொண்டு வளரும்போது.

அகவியின் சொற்பிரயோகங்கள் சில இடங்களில் சலிப்பை ஏற்படுத்துபவையாக உள்ளன. வானம்பாடி களின், சிவப்பிலக்கியக் கவிதைகளின் நீட்சியாக பயின்றுவரும் 'நினைவு வைத்துக் கொள்ளட்டும்' 'குறித்து வைத்துக் கொள்ளட்டும்' போன்ற பிரயோ கங்கள் 'ஒற்றையடிப்பான' போன்ற நல்ல கவிதை களில் வரும்போது, கவிதையின் கவித்துவ அழகைத் தரம் தாழ்த்தி விடுகின்றன. இப்படிப்பட்ட பிரயோகங் கள் சவடால்/சவால் வார்த்தைகளாக மிஞ்சி வலு விழந்து விடுகின்றன. இதுபோல் 'யாரோ போட்ட சோக முடிச்சுகளாய்' (பக் - 13) 'அதோ அடிபட்ட முகங்கள்' (பக் 14) 'கோர முடிச்சுகள்' (பக் 17) 'விளையாட்டுப் பொழுதயும் வெடுக்கென்று பிடுங்கி' (பக் - 21) 'முந்திரிக்காட்டு மூடுமந்திரத்தில்' (பக் - 26) போன்ற பதப் பிரயோகங்களால், கவிதையின் மெருகு சீர் குலைந்து போவது தவிர்க்க முடியாததாகி விடு கிறது. மேலே சொல்லப்பட்டவை உதாரணத்திற்காக மட்டும் எடுத்துக்காட்டப்பட்டவை.



படிப்பகம்

www.padippakam.com

இந்த இடத்தில் தலித் எழுத்தாளர்களுக்கான (புதியவர்களும், பழையவர்களும் விதிவிலக்கல்ல) சில இடறல்கள் காத்திருக்கின்றன - மேலே உயரச் செல்ல முடியாதபடிக்கு. வெளியிலிருந்து பாராட்டுகளோ, உள்ளேயிருந்து குறைகளோ வருகிறபட்சத்தில் - ஒன்று, வெளியேறிப்போய்விடவும்; மாறாக நின்று, செழுமைப்படுத்திக் கொள்ளவுமான இரண்டு விருப் பக் கூறுகள் (OPTIONS) உண்டு. இவற்றுள் இரண்டா வதைத் தேர்ந்தெடுப்பவர்கள் மட்டும் சுயசாதிக்கான தரமான விஷயங்களைத் தாமே மேலதிகமாகத் தரமுடியும். மாறாக, பிணக்கிக் கொண்டுபோக எத் தனிப்பவர்கள் தங்கள் எல்லைகளின் விஸ்தாரங்களை உணராமல் வீணாகிப் போக நிறைய சாத்தியம் உண்டு.

இதில் அகவி இரண்டாம் ரகத்தைச் சேர்ந்தவராக நம்மால் அனுமானிக்க முடியும். ஏனென்றால் அவருக்கு தலித் அனுபவங்கள் செரிவாக இருக்கின்றன. ஈடுபாடும், உத்வேகமும் அவருக்கு நிறையவே உள்ளன. அவரது கவிதைகள் போர்க்குணமும், அதேவேளையில் அழகியலுடனும் இயங்குவதால் இவரை நம்பிக்கை நட்சத்திரமாக எதிர்காலச் சிறந்த கவிஞராக நாம் அனுமானிப்பதில் எந்தத் தவறும் இருக்க முடியாது. ஏனென்றால் அவரது வாழ்வனுபவங்கள் அப்படி இருக்கின்றன. உதாரணமாக, 'சொந்த நிலம்' என்ற கவிதையின் வரிகள் (பக். 45)

> "வெட்டி எறிந்ததால் விஞ்சிய
> பருத்திச் செடியின் அடிக்கட்டைகள்
> குத்துகின்றன நடக்காமலேயே"

என்று இவர் அழகுணர்வுடன் தன் விரக்தியை வெளிப் படுத்தியதோடு நின்று விடாமல் அடுத்த வரிகளில்,

> "தப்பி உதிர்ந்த மக்காச் சோளம்
> மனசெல்லாம் முளைத்து
> கதிர் காட்டித் தலையாட்டுகின்றன"

என்ற தனது நம்பிக்கை வெளியீட்டில் அகவியை நம்மால் ஒரு சிறந்த கவிஞராக இனங்கண்டு கொள்ள முடிகிறது. அகவியின் முதல் முயற்சிக்குப் பாராட்டுகள்.

# புதிய கோடாங்கி இதழுக்கு விருது



(இடமிருந்து வலம்) எழுத்தாளர் கி. ராஜநாராயணன், ப்ரதிபா ஜெயச்சந்திரன், பேராசிரியர் பஞ்சாங்கம், எழுத்தாளர் கி. ராஜநாராயணனின் துணைவியார் கணவதியம்மாள், எழுத்தாளர் பா. ஜெயப்பிரகாசம்

புதுச்சேரியில் 'கரிசல் கட்டளை' சார்பில் 2004-ஆம் ஆண்டின் சிறந்த சிறு பத்திரிக்கைக்கான விருதினை 'புதிய கோடாங்கி' மாத இதழுக்கு கடந்த 16-9-2004 அன்று எழுத்தாளர் கி. ராஜநாராயணனும், அவரது துணைவியார் கணவதியம்மாளும் இணைந்து வழங்கினர். புதிய கோடாங்கி மாத இதழின் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த எழுத்தாளர் ப்ரதிபா ஜெயச்சந்திரன் விருதினைப் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் எழுத்தாளர் பேராசிரியர் க. பஞ்சாங்கம், எழுத்தாளர் பா. செயப்பிரகாசம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

- ஆசிரியர்


படிப்பகம்

www.padippakam.com

# உடல்மொழி

■ சிவகாமி

## தலித் பெண்ணியம்

தலித் பெண்ணியம் என்ற பதம் பரவலாகி வருகின்றதெனினும், இது தலித் பெண்களின் தனிப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வு என்ற முறையில் அணுகப்படுகிறது. மக்கள் தொகுப்பு சார்ந்து மட்டுமே பெண்ணியம் வகைசெய்யப்படுவது அவசியமா? ஒரு கருத்தியல், பிரதேசவாரியான, பல்வேறு இனக்குழு வேற்றுமைகளையும் உள்ளடக்கியதாகஇருக்க முடி யாதா? இந்தியப் பெண்ணியம் என்ற சாராம்ச அடையாளங்களில் அடக்க முடியாத எச்ச சொச்சம்தான் தலித் பெண்ணியமா? தலித் பெண்ணியம் என்ற பதத்தை உபயோகிப்பவர்கள் பெரும்பாலும் ஒட்டுமொத்த பெண்விடுதலைக் கருத்தியலில் அடக்கமுடியாது துருத்திக்கொண்டு நிற்பதே தலித் பெண்ணியம் என்று கருதி பிரயோகிக்கிறார்கள். தலித் பெண்கள் பிரச்சினைகளும், பிறசாதிப் பெண்கள் பிரச்சினைகளும் வெவ்வேறானவை என்பதுதான் தலித் பெண்ணியத்தின் அடித்தளமா? இத்தகையக் கேள்விகளை தலித் பெண்ணியம் என்ற பதம் எதிர்கொள்கிறது.

இதன் மறுபுறத்தில், இந்து சாதிப் பெண்ணியம், மார்க்ஸிய இந்து சாதிப் பெண்ணியம், இந்துசாதி தமிழ்ப் பெண்ணியம் என்பவை சரியான கருத்தியல்களே என்ற புரிதல் கட்டமைக்கப்பட்டிருப்பது புலப்படுகிறது. இத்தகைய கருத்தியலிற்குள் விளக்கம் பெறாத உதிரியே தலித் பெண்ணியம் என்ற தோற்றம் நவீனத்துவவாதிகளால் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

பெண் விடுதலையில் சாராம்சம் என்பது பெண் ஒடுக்குமுறையை எதிர்த்து, ஆண் பெண் சமத்துவத்தை வளர்த்தெடுப்பதாகும். பெண் ஒடுக்குமுறை வடிவங்கள் நாடு, இனக்குழு சார்ந்து வேறுபடலாம். அதற்கேற்றவாறு போராட்ட வடிவங்கள் வேறுபடலாம். ஆனால் இந்துசாதிப் பெண்ணியம் ஒட்டிய அனைத்துப் பெண்நிலை வாதங்களும் சாதி-மத ஒடுக்குமுறையைக் கேள்விக்குட்படுத்தவில்லை. இந்து சாதிப் பெண்கள் தலித் ஒடுக்குமுறைக்கு தொடர்ந்து காரணமாயிருந்துகொண்டே, பெண்விடுதலையை வென்றெடுப்போம் என்பது எந்த சாராம்ச வகைப்பட்டது? இவ்வகைப் பெண்ணியத்திலிருந்து தலித் பெண்ணியம் வேறுபட்டது என்பதைவிட அதற்கு முரணானது என்று கொள்வதே பொருத்தமாக இருக்கும். இன்று பெண்ணியவாதிகள் பலர் நாவல், சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், இலக்கியப் பத்திரிக்கைகளில் பத்திகள் எழுதுகிறார்கள். இவர்கள் எழுத்துக்களில் பெண்ணடிமைத்தனத்திற்கு அடிப்படை பால் ரீதியான ஒடுக்குமுறை மற்றும் உற்பத்தி உறவுகள் என்று கருதப்பட்டு, மாற்று யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. இந்தியாவில் மதம் - சாதி பெண்ணடிமைத் தனத்தின் அடிப்படைகள் என்றோ, அதைத் தொடர்ந்து கேள்விக்குட்படுத்த வேண்டும் என்றோ அவர்கள் பதிவு செய்வதில்லை. பெண் என்பதால் அதிகாரத்திலிருந்து புறக்கணிக்கப்படுகின்றோம் என்ற அழுகுரலே தொடர்ந்து ஒலிக்கிறது. உடல் இச்சைகள் கவிதைகளில் கவனம் பெறும்போதுகூட அவை சாதி சார்ந்த உடல் இச்சைகளோ எனும்படி சாதி - மதம் மீறிய தடயங்கள் கவனமாகத் தவிர்க்கப்பட்டு வருகின்றன.

'பெண் விடுதலை' என்றதுமே நீண்டகாலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட பெண்ணினம் போராட வந்துள்ளது என்ற தனி கவனிப்புடன் முக்கியத்துவம் பெறுகிறது.பெண்ணினம் போராட வந்துள்ளது. ஆனால் இங்கே பெண் விடுதலை என்பது சுயநலமானது, சாதி இந்து பார்வையை உடையது, ஒடுக்குமுறையாளர்களுடன் பின்னிப் பிணைந்துள்ளது, தலித்துகளுக்கு எதிரான கருத்தியல் களை உள்ளடக்கியது என்பதையும் கவனிக்க வேண்டியுள்ளது. இவ்வகைப் பெண்ணியங்களின் அடிப்படை சாதிக் குழுக்களின் நலன்களே. ஆனால் தலித் பெண்ணியம் என்பது சாதி - மத - வர்க்கக் கட்டமைப்பை ஒட்டிய ஆணாதிக்கத்தை முறியடிப்பதாகும்.

ஒரு விடுதலைக் கோட்பாட்டின் சாராம்சமும் நடைமுறைகளும் வேறுபடலாம். உதாரணமாக மார்க்ஸிய நெறி என்பது இந்தியாவில் சாதி ஒடுக்குமுறையைக் கணக்கிலெடுக்கத் தவறியது. இது கவனக்குறைவையோ அல்லது சித்தாந்தம் சரியாக உள்வாங்கப்படாததையோ குறிக்காது. உழைக்கும் வர்க்கத்தின் பெரும்பகுதியான தலித்துகள் தனியாக இயக்கம் கண்டபிறகும், இயக்கமற்ற இயக்கமாக தேர்தலைக் குறிவைத்து 'இருந்து' வருகின்ற மார்க்ஸிய இயக்கங்களே, இது கவனமாக திட்டமிடப்பட்ட புறக்கணிப்பு என்பதற்கு சான்றுகள். இவ்வாறு சித்தாந்தங்களும் நடைமுறைகளும் வேறுபடலாம்.

ஆனால் பெண் விடுதலை சித்தாந்தங்களே அடிப்படையில் சாதி மதங்களை ஏற்றுக்கொள்ளுமானால், அவ்வகை சித்தாந்தங்களினால் தலித் பெண் விடுதலை என்பது ஒருபுறமிருக்க, சாதிப் பெண்களின்



படிப்பகம்

www.padippakam.com

விடுதலைதான் சாத்தியமாகுமா? தலித் பெண்களின் வாழ்வியல் பிரச்சினைகள் வேறானது தான் என்பதை மறுப்பதற்கில்லை. வெவ்வேறு பிரச்சினைகளின் அடிப்படைகள் இங்கே ஒன்றாகத் தான் இருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

தலித் பெண்ணியம் என்பது சாதி - மத - வர்க்க அடிப்படையில் உருவான ஆணாதிக்கத்தை எதிர்ப்பது. பால் பேதமற்று எல்லா உயிர்களும் சம சமூக மதிப்பு உடையன என்பதை ஏற்றுக் கொள்வது. புழக்கத்திலுள்ள பெண் விடுதலைக் கோட்பாடுகளோ சாதி மத அடிப்படைகளை மறுத்து பால் - வர்க்க முரண்களை அடிப்படையாகக் கொண்டு மேம்போக்காக சீர்திருத்தங்களை விழைபவை. இக்குறைபாடுகளைக் களைகிறது தலித் பெண்ணியம்.

தலித் பெண்ணியம் எவ்வாறு தலித் பெண்களின் விடுதலையையும் அதையொட்டி ஏனையோர் விடுதலையையும் வென்றெடுக்கும் என்பதையும், தலித் பெண் விடுதலையை முன்னெடுப்பதற்கான சில செயல்திட்டங்கள் குறித்தும் இனி பார்ப்போம்.

முதலில் தலித் பெண்களின் தனித்த பிரச்சினைகளை வரிசைப்படுத்திக்கொள்ளலாம்.

- தீண்டாமை, வன்கொடுமை.
- தலித் பெண்களின் வாழ்வியல் என்பது கடுமையான உடலுழைப்பிலும் தொடரும் வறுமை! இதனால் குடும்பப் பொறுப்பின் சுமை கூடுகிறது.
- தலித் பெண்கள் பெரும்பாலும் நிறுவனப்படுத்தப்படாத விவசாயம் மற்றும்பிறதொழில்களில் ஈடுபட்டுள்ளார்கள். ஆணுக்கிணையான ஊதியமில்லை என்பது ஒருபுறமிருக்க, பிறசாதிப் பெண்களை ஒப்பிடும்போது பெரும்பாலும் தலித் பெண்கள் கீழ்மட்ட வேலைகளையே செய்து வருகின்றனர்.
- கல்வியறிவு, வேலைவாய்ப்பு இவற்றில் சாதிப் பெண்களோடு ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள்.
- அடிப்படை வசதிகளான குடிநீர், எரிபொருள், கழிப்பிடம், மருத்துவ - சுகாதார வசதிகள் மிகக்குறைவாக இவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.
- பஞ்சாயத்து அமைப்புகளில் பெண்களுக்கான ஒதுக்கீடு கிடைத்தும், பிற பெண் பிரதிநிதிகளைப் போல் அதிகாரத்தைப் பயன்படுத்த முடியா வண்ணம் சாதிரீதியாக ஒடுக்கப்படுகிறார்கள்.
- தலித் பெண்கள் மீது பாலியல் வன்கொடுமை சாதி அடிப்படையில் நிகழ்த்தப்படுகிறது.
- பிறசாதிப் பெண்கள் போலல்லாது இவர்கள் சிறு சிறு உடைமைகள் அல்லது சொத்துகள் அற்றவர்களாயிருக்கிறார்கள்.
- கணவன்மார்கள் குடித்துவிட்டு, பெண்களை அடித்துத் துன்புறுத்துவது தலித் சமூகத்தில் அதிகமாக உள்ளது.

இவ்வாழ்வியல் பிரச்சினைகள் காரணமாக, இவர்களது உளவியலும், அணுகுமுறைகளுமே மாறுபட்டுள்ளன.

உதாரணமாக, தாய்மை என்பதை பெறற்கரிய பேறு, சிருஷ்டியின் மூலம், பெண்ணாகப் பிறந்ததன் பயன், வெவ்வேறு உடை - நகைகளை அணிவித்து மகிழலாம் என குழந்தையை எதிர்பார்க்கும்போது, தலித் பெண் தன்னுடன் சேர்ந்துழைக்க கூடுதலாக இரண்டு கரங்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கிறாள்.

அதேபோல் குடும்பம். குடும்பம் இன்றைய நிலையில் ஆணாதிக்கத்தின் ஒட்டுமொத்த வடிவம் என்று கூறினாலும் அது மிகையில்லை. ஆனால், தலித் பெண்ணோ, இன்றைய சாதி சமூகத்தை எதிர்க்கின்ற கட்டுக்கோப்பான வடிவமாக அதைக் காண்கின்றாள். சாதி இந்துப் பெண், குடும்பத்தை சாதி மதக் கருத்தியலுக்கு இசைந்த வழிபாட்டு சடங்கு முறைகளைப் பின்பற்றி வாரிசுகளை பயிற்றுவிக்கும் இடமாகப் பார்க்கும் பொழுது, அதையே தலித் பெண்கள் தங்கள் விடுதலைக்கான போராட்டக் கருவியாகக் காண்கிறார்கள்.

பிற பெண்கள், உடல் உழைப்பை வெறுத்து, ஆணாதிக்கக் கருத்தியலான மென்மை, நளினம் இவற்றை ஆதரிப்பது போலன்றி, தலித் பெண்கள் உடல் உழைப்பை முன்வைத்து சமூக மதிப்புப் பெறுகிறார்கள்.

குடும்ப உறவுகள் தலித் சமூகத்தில் நெகிழ்ச்சியாக உள்ளது. ஒரு கணக்கெடுப்பு நிகழ்த்தினால், கணவன் - மனைவி ஆகிய இருவரும் உடலுழைப்பில் ஈடுபடும் குடும்பங்களின் எண்ணிக்கை தலித் சமூகத்தில்தான் கூடுதலாக இருக்கும் என்பது ஐயமில்லை. இத்தன்மையே குடும்ப உறவுகள் நெகிழ்ச்சியாக இருப்பதற்கு காரணமாக இருக்கலாம்.

சாதிச் சமூகத்துப் பெண்களுக்கும், தலித் பெண்களுக்குமான வேறுபாடுகள் தலித் பெண்களை தாழ்வாகக் காட்டினாலும், வாழ்சூழல் தலித் பெண்களை போராட்ட குணமிக்கவர்களாக மாற்றியிருக்கிறது. அவர்களது அணுகுமுறைக்கும் காரணமாக உள்ளது. இதுவே அவர்களது பலம். தெருவில் இறங்கி போராட தலித் பெண்கள் தயக்கம் கொள்வதில்லை.

## தலித் சமூகத்திலும் ஆணாதிக்கம்

தலித் விடுதலையே, தலித் பெண் விடுதலையுமாகும் என்று கூறிவிட முடியாதபடி தலித் பெண் அவள் சார்ந்த சமூகத்திலும் கீழாக நடத்தப்படுகிறாள்.

- தலித் சமூகத்திலும் பெண்கள் ஜனத்தொகை ஆண்கள் ஜனத்தொகையை விடக் குறைவாக


படிப்பகம்

www.padippakam.com

உள்ளது.

- எழுதப்படிக்கத் தெரிந்த பெண்களின் தொகை ஆண்கள் தொகையை விட குறைவு.
- தலித் ஆண்களைவிட குறைவான எண்ணிக்கையிலேயே தலித் பெண்கள் மேற்படிப்பைத் தொடர்கின்றனர்.
- பெண்கள் இறப்பு விகிதம் ஆண்களை விட அதிகமாக உள்ளது.
- உயர் கல்வி, வேலைவாய்ப்பு காரணமாக தலித் ஆண்களே சாதி மறுப்பு திருமணம் செய்கின்றனர்.
- வரதட்சிணை என்ற இந்து சமூகப் பழக்கம் தலித் சமூகத்திலும் ஊடுருவியுள்ளது.
- குடித்துவிட்டு மனைவியை அடிப்பது தொடர்கிறது.

மேற்கண்ட விவரங்கள் தலித் சமூகத்திலும் ஆணாதிக்க செயல்பாடுகளை விளக்குபவையாக உள்ளன. தலித் ஆண் தன் சமூகத்தின் பெண்களை ஒடுக்கும் அதிகாரம் படைத்தவனாகவும், மேல்சாதி ஆணுக்கும் பெண்ணுக்கும் அடங்கிப்போகும் அடிமையாகவும் இருக்கும் இரட்டை நிலையில் தார்மீக அடிப்படையை இழந்து சாதிப்படி நிலையை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்குள்ளவனாக ஆக்கப்படுகிறான். ஆதிக்க மனோபாவத்தைத் தன்னளவில் களைந்து கொள்ள முடியாதவர், அவர் ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி, தன்மீது பிறர் ஆதிக்கம் செலுத்துவதை எவ்வித தர்க்கங்களை முன்வைத்து எதிர்க்க முடியும்?

தலித் ஆண், பெண் ஒடுக்குமுறையாளனாக இருப்பினும் இவர்கள் இருவரும் சாதி ஆதிக்கத்தின் அடிமைகளே என்றளவில், பிற பெண்களிடம் தலித் பெண்கள் நெருக்கமாக உணர்வதைவிட தலித் ஆண்களையே தங்களோடு இணைந்து போராடுபவர்களாகக் கருதி நெருக்கமாக உணரமுடியும்.

தலித் பெண்ணே, விடுதலைக் கருத்தியலின் தார்மீக அடிப்படையைக் கொண்டுள்ளாள். இந்த இயற்கையான வாய்ப்பை தனது விடுதலைக்காகவும், சாதிக் கட்டமைப்பை உடைக்கவும் தலித் பெண் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

## கருத்தாக்கத்தின் வேரூன்றல்

தலித் பெண்ணியம் இன்று கருத்தளவிலேயே நிற்கின்றது. மகளிர் சுய உதவிக் குழுக்கள், அரசின் திட்டப் பயன்களைப் பெறவேண்டி தலித் பெண்களுக்கென தனியே அமைக்கப்பட்டுள்ளன. இவ்வமைப்புகளை தலித் பெண்ணியப் பார்வைக்குள் கொண்டு வருவது சுலபமே. ஏனெனில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் தீண்டாமையின் தாக்கத்தை உணர்ந்தவையே. பிறசாதி மகளிர் குழுக்கள், அவர்களுக்கான கூட்டங்களின்போது சேர்ந்து உண்ணாமை, தலித் மகளிர் சமைத்ததை உண்ணாமை போன்ற விலக்கல் நடவடிக்கையைக் கடைப்பிடித்திருக்கின்றனர்.

தலித் பெண்களுக்காக சில தன்னார்வ அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இவை, வன்கொடுமை பற்றிய விழிப்புணர்வு, தள அளவிலான சிறு போராட்டங்கள், பொருளியல் நடவடிக்கைகளுக்கு சிறிய அளவில் ஊக்கம் தருகின்றன. பறை மற்றும் தலித் கிராமியக் கலைகளில் அவர்களுக்கு சில இடங்களில் பயிற்சி தரப்படுகின்றது. இவை போதுமானதல்ல.

தலித் அரசியல் அமைப்புகளான விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம், தலித் மக்கள் முன்னணி, புரட்சி பாரதம், இந்தியக் குடியரசு கட்சி, ஆதித் தமிழர் பேரவை போன்றவைகள், தங்கள் அமைப்புகளில் பெண்களைக் கொண்டிருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அப்படியே சிலர் இருந்தாலும் அவர்களுக்கு அவ்வமைப்புகளில் எவ்வித முக்கியத்துவமுமில்லை. கிராம வாரியாக, கட்சி சார்ந்தும் சாராமலும் இயங்கும் அம்பேத்கர் மன்றங்களும் இயக்கங்களும்கூட விதிவிலக்கல்ல.

தலித் ஆதார மய்யம் (மதுரை), எட்வின் ஆரோக்கியதாஸ் அவர்களின் தன்னார்வ நிறுவனம் (மதுரை), பெர்னார்டு பாத்திமா அவர்களின் நிறுவனம் (அரக்கோணம்), அனித்ரா ட்ரஸ்ட் (தீனபந்துபுரம்), C.R.D.S. (செங்கல்பட்டு), தலித் விடுதலை கல்வி நிறுவனம் (கடலூர் கிராமம்) மற்றும் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் தலித் பெண்களுக்கென பிரத்யேகமான விழிப்புணர்வு முகாம்களை நடத்தி வருகின்றன. தலித் ஆதார மய்யம் 'தலித் பெண்ணியம்' என்ற திரட்டைக் கொண்டு வந்துள்ளது. புதிய கோடாங்கி இதழ் தலித் பெண்களுக்கான அரசியல் முகாம்களை தொடர்ந்து நடத்தி வருகிறது.

மேற்கண்ட அரசியல் அமைப்புகள், தன்னார்வ நிறுவனங்கள், பிற அமைப்புகள் தலித் பெண்களை அரசியல்படுத்துவதற்கான செயல் திட்டங்கள் எதேனும் வகுத்துக் கொண்டு அதனடிப்படையில் செயல்படுகின்றனவா என்பது தெரியவில்லை. ஆனால் இவ்வமைப்புகள் தங்களது குறைந்தபட்ச செயல் திட்டங்களாக கீழ்க்கண்டவற்றைக் கொள்ள லாம்.

## தொண்டு நிறுவனங்களுக்கான செயல் திட்டங்கள்

தொண்டு நிறுவனங்கள் போராட்டத்தையே சீர்குலைக்கின்றன. போராட்ட உணர்வுகளை மழுங்கடிக்கின்றன. அரசு மீது நம்பிக்கையை ஏற்படுத்தி மக்களை ஏமாற்றுகின்றன. போராளிகளை வெறும் கோரிக்கையாளர்களாக உருமாற்றம் செய்துவிட்டன. வெளிநாட்டு நிதியையே அச்சாணியாகக் கொண்டு சுழல்கின்றன. செயல்பாட்டுக்கான நிதி ஆதாரம் என்றல்லாது, நிதியைப் பெறவே செயல் திட்டங்கள் கருக்கொள்கின்றன. தொண்டு நிறுவனங்களின் அடிப்படை நோக்கம் கிறித்துவத்திற்கு மக்களை திருப்புவதே. இவ்வகையாகவும் இன்னும் பலவித மாகவும் தொண்டு நிறுவனங்கள் மீது நமக்கு விமர்சனங்கள் உண்டு.

- தொடரும் ●



படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் அறியாத அம்பேத்கர்

■ குடியரசன்

ஜெய்பீம். இந்தச் சொல் டிசம்பர் 1945-இல் உருவாக்கப் பட்டது. உலகெங்கும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் உணர் வுச் சொல்லாக நம்மை இணைக் கிறது இச்சொல். அம்பேத்கர் மக்கள் என்பதற்கான அடையாள மான இந்த நீதி வார்த்தை நம் அம்பேத்கர் உயிருடன் இருந்த போதே தோற்றுவிக்கப்பட்ட சொல். இதன் வரலாற்றை நாம் காணும் போது,

செட்யூல்டு காஸ்ட் பெடரே சனின் பாதுகாப்பு குழுவான சமதா சைனிக் தள் (SSD) அம்பேத்கருக்கு மரியாதை அணிவகுப்பு நடத்தி யது. இந்த அணிவகுப்பு நிகழ்விற்கு 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காங்கிரசு கட்சியைச் சார்ந்த தாழ்த் தப்பட்ட மக்கள் குறிப்பாக இளை ஞர்கள் அக்கட்சியை விட்டு வெளி யேறி வந்து கலந்து கொண்டனர். அணிவகுப்பு நிகழ்விற்கு காங்கிரசு கட்சியை விட்டு வெளியேறி வந்த அந்த தாழ்த்தப்பட்ட இளைஞர் கள் தாங்கள் அதுவரை அணிந்து வந்திருந்த காந்தி கதர் குல்லாவை யும் கொண்டு வந்திருந்தனர். ஆனால் குல்லாயை யாரும் அணிய வில்லை. நிகழ்வில் கலந்து கொண்டு M.G. ஜாதோவ், மனோகர் காம்ளே மற்றும் பலர் சிறப்புரை யாற்றினர். அம்பேத்கரின் கடும் உழைப்பையும், காங்கிரசு கட்சி யின் துரோகத்தையும் ஆழமாக காம்ளே விவரித்தார். அதுநாள் வரை காந்தி - காங்கிரசு மாயையில் சிக்கி தங்கள் கருத்தியலை மறந் திருந்த அந்த தாழ்த்தப்பட்ட இளை ஞர்கள் மணம் தெளிவு பெற்றனர். ஜெய் ஹிந்த் என்று குரல் எழுப்பும் வகையில் பழக்கப்படுத்தப்பட்டி ருந்த அவர்கள், ஜெய்பீம் என்ற புதிய வார்த்தையை உற்பத்தி செய்தி அங்கு முழங்கினர். தங்க ளுடைய கதர் - காந்தி குல்லாக் களை குவித்து தீ மூட்டினர். எரியும் குல்லாய் களைத் தொடர்ந்து ஜெய் பீம் என்ற சொல்லின் அதிர்வும் விரவிப் படர்ந்தது.

இந்த நிகழ்வு நடந்த இடம் நாக்பூர். ஜெய்பீம் என்ற சொல் பின்னர் செட்யூல்ட் காஸ்ட் பெட ரேசனின் முழக்கமாகக் கொள்ளப் பட்டது. அம்பேத்கர் வாழ்ந்த் காலத்திலேயே இச்சொல் பிரபலப் பட்டிருந்தது. இந்தச் சொல்லின் தொடர்ச்சியாக பீம்பத்திரிகா, ஜெய்பீம் பத்திரிக்கை போன்றவை பெங்களூர் மற்றும் சென்னையில் துவக்கப்பட்டன. நாட்டின் தென் பகுதியில் SCF பற்றிய செய்திகள் பத்திரிக்கையாக தமிழக அளவில் ஏற்கனவே நடைபெற்றுவந்த பிற் படுத்தப்பட்டவர்களின் பெருவாரியான பத்திரிக்கை களுக்கு சவால் விடும் அளவிற்கு வெளிவந்தன.

தங்கள் சுய வரவுகளுக்காக, திமுக, அதிமுக, பாமக போன்ற பிற்படுத்தப்பட்டவர்களின் நலன்சார் கட்சிகள், தாழ்த்தப் பட்ட சமூகத்தினர் தங்கள் கட்சிக் குள் அடக்கம் என்று இன்று செயல்படுவதைப் போலவே அன் றைக்கும் தமிழகத்து பிற்படுத்தப் பட்ட கட்சிகள், அமைப்புகள், பத்திரிக்கைகள் இப்பத்திரிக்கை களை ஆழமாகப் புறக்கணித்தன. இந்நாள் வரை தன்னை தாழ்த்தப் பட்ட மக்களின் பாதுகாவலனாக சித்தரித்து அதன் மூலம் தலித் எழில்மலை முதல் பொன்னுசாமி வரை தலித் சமூகத்தின் விவரமறிந்த வர்களை நிர்ப்பந்தப்படுத்தி அரசி யல் நடத்தி வந்த பாமக, இந்திய அளவில் சமூக நீதி பேச, கன்ஷி ராம், மாயாவதி, ராம்விலாஸ் பாஸ்வான் போன்றவர்களை உயர்த்திப் பேசி உள்ளூர் தலித் சமூகத்தின் அரசியல் சக்திகளை ஒடுக்கிவந்தது.

இதுவரை நடைபெற்ற தேர்த வில் கன்ஷிராம், மாயாவதி, ராம் விலாஸ் பாஸ்வான் போன்றவர் களின் நண்பர்களாக தன்னை வெளிக்காட்டி வந்த பாமக, தமிழ கத்து தலித் சக்திகளான விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம் ஆகியவற்றை திட்டமிட்டு ஒடுக்கி வந்ததை நாம் ஏதோ இன்றைக்கு ஆரம்பித்த துரோகம் என்று காணக் கூடாது. தலித்துகள் கொடுமையாக தாக்கப்பட்டபோது பிற்படுத்தப் பட்ட பத்திரிக்கைகள் ஏதும் உண்மைநிலையை பதிவு செய்ய வில்லை. இந்தியாவில் எந்த மாநிலத் திலும் தலித்துகளின் விடு தலைக் கான கருத்தியல் நகர்வின் உண்மை நிலையை பிற்படுத்தப்பட்ட பத் திரிக்கைகள் ஏதும் பதிவு செய்ய வில்லை.

மனிதன் என்றைக்கும் சுயநலம் சார்ந்தே சிந்திக்கத் தெரிந்தவன், சிந்திக்க முடிந்தவன். ஒவ்வொரு மனித னுக்கும் பசி, தாகம் உள்ளது போல தன்னை காத்துக் கொள்ள வேண்டிய உணர்வும் கண்டிப்பாய் இருக்கும். இது அரசியல் தளத் திலும் தொடர்வது நம்மால் புரிந்து கொள்ளக்கூடியதே. இதை நாம் உணர்ந்திருப்பதால் தான் காந்தியைப் புறக்கணித்து, அம் பேத்கர் பின்னர் தாழ்த்தப்பட்ட மக்கள் அணி திரண்டனர். அம் பேத்கர் தன் இனம் என்று தன்னை நிறுத்திக் கொண்ட மனிதரல்ல. தன்னை புத்தரின் நிலைக்கு உயர்த் திக் கொண்டவர். அவர் வெகுமக் கள் நன்மைக் காக சட்டம் எழுதித் தந்தார். அந்தச் சட்டம் மக்க


படிப்பகம்

www.padippakam.com

ளுக்கு எதிரானது என்று, நாடகமாடியே தமிழகத்து திராவிட கட்சிகள் சட்டத்தை நிர்வகிக்கும் வாய்ப்பைப் பெற்றனர். திமுக சட்டம் எரிக்கும் பல போராட்டங்களை நடத்தியே சட்டத்தை கோலோச்சும் உரிமையாக மத்திய அமைச்சர் பதவி வரை வந்துள்ளது.

அன்று தலித்துகள் 'மகாத்மா'(?) காந்தியை எதிர்த்துப் போராடும்அளவிற்கு தெளிவும் பலமும் பெற்றிருந்தனர். இன்றைக்கு பிற்படுத்தப்பட்டவர்களின் அரசியல் கட்சிகள் தொடர்ந்து செய்துவரும் நயவஞ்சகத்தால் 'சோனியா' காந்தியாவது நமக்கு ஆதரவு தரமாட்டாரா என்ற நிலைக்கு தலித் கட்சிகள் தள்ளப்பட்டன. தங்களிடம் உள்ள பலத்தை பிற்படுத்தப்பட்ட கட்சிகள் இதுவரை தலித்துகளை ஒடுக்கவே பயன்படுத்தி வந்துள்ளன. இதை நன்கு புரிந்து கொண்ட இன்றைய தலித் கட்சிகள் அரசியல் சதுரங்கத்தில் மிகச் சரியாக அசைவை நிகழ்த்துகின்றன. இது தேர்தல் அரசியலின் கட்டாயம்.

இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு பார்ப்பனர்களின் ஆளும் உரிமையை பாதுகாக்கும் சக்தியாகவே இந்த பிற்படுத்தப்பட்டவர்கள் இதுவரை இருந்துவருகின்றனர். தலித்துகளோ, தங்களின் ரிசர்வ் தொகுதியில் கூட பிற்படுத்தப்பட்ட மக்களை பிரதி நிதித்துவப்படுத்தும் கட்சியின் தயவில் மட்டுமே வெற்றிபெற இயலுகிறது. இந்த கொடுமையான நிலை, கீழ்வெண்மணியை விட, தாமிரபரணி படுகொலையை விட கொடூரமாக நமக்கு ஏன் தெரிவதில்லை?

இந்து மதத்தில் கொடூரமாக சிராத்தம் நடத்தப்படும். இருக்கும் தேவையானவர்களுக்கு உணவு தரமாட்டார்கள். இறந்து போனவர்களுக்காக உணவு தயாரித்து தண்ணீரில் விடுவார்கள். இதையேதான் பிற்படுத்தப்பட்ட கட்சிகளும் செய்கின்றன. தலித் தலைவர்களில் வாழ்வாங்கு வாழ்ந்து முடித்தவர்களின் புகைப்படங்களை, சிலைகளை திறக்க முன்வரும் இவர்கள், இன்றைக்கு இருக்கும் தலித் தலைவர்களுக்கு அரசியல் அதிகாரம் பெரும் வகையில் தேர்தல் அதிகாரப் பகிர்வு தர மறுக்கின்றனர்.

நம்முன் இதுவரை காட்டப்பட்டுவந்த எந்த பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த போராளிகளும் இதுவரை தலித்துகளின் தேவையை சரிவர உணர்ந்து கொண்டதாகவே தெரியவில்லை. வட்டமேஜை மாநாட்டிற்கு அம்பேத்கருடன் லண்டன் சென்றுவந்த ரெட்டமலை சீனிவாசன், அம்பேத்கர் காலத்தில் அவருடன் அரசியல் நடத்திய M.C. ராஜா, தமிழகத்திலேயே பெண் விடுதலையை சரியாக உணர்ந்து போராடிய மீனாம்பாள், தேர்தல் அரசியலில் பலருக்கு முன்னோடியாக விளங்கிய சிவராஜ் போன்றோர்களை தமிழகத்து பத்திரிக்கைகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் அரசியல் கட்சிகள், பிற்படுத்தப்பட்ட சமூகத்தின் போராளிகள் ஏன் உயர்த்திப் பிடிக்கவில்லை என்பதன் பதில் சாதி உணர்வுதான். அல்லது பிற்படுத்தப்பட்ட சமூக மக்கள் தங்கள் தலைவர்களாக இதுவரை தமிழகம் என்ற அளவில் பிற்படுத்தப்பட்டவர்களையே ஏற்றுக்கொண்டுள்ளனர். ஏன் பிற்படுத்தப்பட்ட மக்களால் ரெட்டமலை சீனிவாசன், M.C. ராஜா, மீனாம்பாள், சிவராஜ் போன்றோர்களை தங்களின் தலைவர்களாக ஏற்றுக்கொள்ள வியலவில்லை. இவர்கள் எல்லாம் தமிழர்கள் இல்லையா? (நமக்கு தமிழ்மீது பகுத்தறிவை மீறிய ஈர்ப்பு என்று ஏதும் சிறப்பாக இல்லை என்பது வேறு விசயம்)

கம்யூனிஸ்டுகள் கூட பாரதியை தமிழுக்காகவும், அவரின் பார்ப்பன நையாண்டிக்காகவும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் அயோத்திதாசப் பண்டிதரின் படைப்புகளை இதுநாள்வரை ஆய்வு செய்ய வேண்டும் என்ற எண்ணம் கூட திராவிட, பிற்படுத்தப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வரவில்லையே. காரணம் என்னவாக இருக்கும்? அன்பு பொன்னோவியம் அவர்களின் தொடர்ந்த முயற்சியால் இந்த தொகுப்புகள் வெளிவந்தன. இதுநாள்வரை அமைதியாக இருட்டடிப்புச் செய்த பார்ப்பன பத்திரிக்கைகள், நூல்வெளிவந்ததும் அந்நூலைப் பற்றிய விமர்சனம் கூட செய்திடவில்லை. காரணம் அந்நூல் பார்ப்பனியத்தை பலமாகச் சாடிய முதல் தமிழ்நூல் என்பதால் தான் என்பது பொன்னோவியம் அவர்களின் கருத்து.

திருவாசகமும், தேவாரமும் பார்ப்பனியத்தை தூக்கிப் பிடிப்பதால் தான் அச்செய்யுள் திரட்டுகள் எல்லா பார்ப்பன ஏடுகளாலும் போற்றப்படுகின்றன. ஆனால் பண்டிதரின் உழைப்பு அவர் வாழ்ந்த காலத்திலிருந்து இன்றுவரை பார்ப்பனர்களால் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றது. பிற்படுத்தப்பட்டவர்களால் கடுமையாக விமர்சனம் செய்யப்படுகின்றது. உட்சாதிச் சிக்கல் என்ற அளவிற்கு பண்டிதரின் படைப்புகள் விமர்சனம் செய்யப்படும் நிலை பிற்படுத்தப்பட்டவர்களின் சதியேயாகும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்கான தனி தத்துவத்தின் அடிப்படையில் திரண்டுவிடக்கூடாது என்ற தீய சக்திகளின் உள்நோக்கமே இது. தலித் என்ற சொல் 50 ஆண்டுகள் பழமை மட்டுமே உடையதாக இருப்பினும், தலித்துகளின் வரலாறு என்பது இந்த சொல்லின் துவக்கத்தை மட்டுமே ஆதியாகக் கொள்ளாமல் ஆதிக்குடிகளின் துவக்க வரலாறான 6000 ஆண்டு வரலாற்றை நாம் கணக்கிடுவது போல அம்பேத்கர் என்ற இயக்கத்தின் துவக்கம் 1891-இல் இருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், ஆதிக்குடிகளின் எழுச்சித் தத்துவம் உருவான காலம் வரை பின்னோக்கி நீட்டிக்கப்பட்டும், இன்று வரையும் தொடரப்பட்டும் காணப்படவேண்டும் என்பது உண்மை.

ஜெய்பீம் என்ற சொல் அம்பேத்கர் காலத்தில் அதுவும் 1945-இல்தான் துவக்கப்பட்டிருந்தாலும் அது ஆதிப் பழங்குடி மக்களின் துவக்கத்தை குறிப்பதாகக் கொண்டுள்ளது. அம்பேத்கர் தான் புகழப்படும் போது அது குறித்து உவகை அடைந்தார். காரணம் தன்னை ஆதிக்குடிகளின் பிரதிநிதியாக நம்பியதால், ஆதிக்குடிகளின் விடுதலைக் கருத்தியலின் நேரடி



படிப்பகம்

www.padippakam.com

உருவமாக நம்பினார். தன் அசைவுகளை தன் பழங்குடி சமூகத்தின் அசைவாக நம்பினார். இந்த நம்பிக்கை அவருக்கு போதிய துணிச்சலையும் அறிவையும் தக்கவைத்தது என்பார் N.C. ரட்டு. தன்னை பழங்குடி சமூகமாகவே உணர்ந்த அம்பேத்கரின் கருத்தியலைப் புறக்கணித்துவிட்டு அவரின் உருவத்தை வைத்து நாடகமாடும் பிற்படுத்தப்பட்ட அரசியல் சக்திகளிடம் நாம் கொள்ளவேண்டியது எச்சரிக்கை.

பன்து (Bantu) என்பது வட ஆப்பிரிக்காவின் பழங்குடி பூர்வ குடிகள். இம்மக்களுக்காக அங்கு நிர்வகிக்கப்படும் அரசு தனி கிராமங்களை ஏற்படுத்தியுள்ளது. இதைப்போலவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்தியாவின் பூர்வகுடிகள் என்ற வகையில் தனி கிராமங்கள் (seperate villages) ஏற்படுத்தித் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை 1946-ஆம் ஆண்டின் துவக்கத்திலேயே முன்வைத்தார். நாங்கள் இந்த நாட்டின் பழங்குடிகள். எனவே எங்களின் கொள்கையையும், உரிமையையும் பாதுகாக்க அரசு தன்னுடைய நடவடிக்கையாக தனி கிராமங்கள் ஏற்படுத்த வேண்டும் என்றார் அம்பேத்கர். அதாவது, இந்த நாட்டில் பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலம் நாடு முழுவதும் விவசாயம் செய்யப்படாமல் கிடக்கின்றது. அரசானது ஓர் அறக்கட்டளை அமைத்து அத்தகைய நிலங்களை கையகப்படுத்தி, நிலமில்லாமல் விவசாயக் கூலியாக உள்ளவர்களுக்கு சட்டப் பூர்வமாக பகிர்ந்தளிக்க வேண்டும். இதன்மூலம் நிலமும் வளப்படும்; பூர்வக் குடி மக்களும் பலன்பெறுவர்; நாட்டின் பொருளாதாரம் உயரும்; விவசாயக் கூலிகளை சுரண்டும் முறை தடைசெய்யப்படும் என்றார் அம்பேத்கர். கிராமங்கள் என்பது சமூக ரீதியானது. சமூகத்தின் பொருள்சார் அங்கம் அல்ல. எனவே பொருளாதார முடக்கம் ஏற்பட்டுவிடும் - இது போன்ற கிராமங்களை அரசு ஏற்படுத்தினால் என்ற அச்சம் அரசுக்குத் தேவையில்லை என்று அம்பேத்கர் குறிப்பிட்டார்.

சட்டம் எழுதும் வாய்ப்பு அவருக்கு தரப்பட்டாலும், இதை ஏன் சட்டமாக்க அம்பேத்கரால் இயலாமற் போயிற்று என்பன உள்ளிட்ட தகவலை அடுத்த கட்டுரையில் காண்போம்.

- தொடரும்

## நாம் யார்?

■ தேவதேவன்

மானுட இழிவுகளறியும்
சுரணையுண்டோ ஜாதியத்திற்கு?

இறுதி விடுதலைக்காய்
ஒன்று சேர்வதும்
ஒன்று திரட்டுவதும்
பெரும் போராளியாய்
நின்று கொதித்துச் சாதிப்பதும்
ஜாதியமாமோ?

புதுப் புது அவதாரங்களில்
முகமூடியணிந்துகொண்டு
விடுதலைக் கொடிபிடித்து
இன்றுவரை தப்பித்துக் கொண்டு வருவது
ஜாதியமின்றி வெறென்ன?

இரத்தக் கறைபடிந்த அக்குற்றவாளிகள் எங்கே?
தொடரும் குற்றங்களினின்றும்
விலகி நிற்போர் யார், யார்?

மனிதர்களைத் தேடி அலைந்ததில்
குற்றவாளிகளையும் குற்றங்களையும்
ஒருபோதும் காணத் தவறாத
மோப்ப சக்தி கைவரப்பெற்றுவிட்ட
அப்பிராணி விலங்கா,
அன்றி, அவ் விலங்கு கைவரப்பெற்ற மனிதரா,
நீங்காத இரத்தக் கறைகளால்
பைத்தியமாகித் துடிக்கும் குற்றவாளிகளா,
குற்றங்களா,
யாரோ நாம்?

## கழிவறையின் விலை

■ புதிய மாதவி

கழிவறைக்கட்ட
உலகவங்கி
பலகோடித்தந்து
உதவியது
உண்மைதான்
ஆனால்
எங்களுக்கு
கழிவறையும் அல்லவா
காஸ்ட்லியாகிவிட்டது.

ஒரு தடவைக்கு
தண்ணீரில்லாமல்
இரண்டு ரூபாய்
தண்ணீருடன்
ஐந்துரூபாய்.

இப்போதெல்லாம்
கழிவறைக் கட்டணம்
இருந்தால் மட்டுமே
சாப்பிட முடியும்.


படிப்பகம்

www.padippakam.com



# உள்ளொளியாளரின் உரையாடல் தேசியம்?

■ கௌதம சன்னா

தேசியம் குறித்த புரிதல் தமிழ் தேசிய உணர்வாளர்களுக்கு எப்படி இருக்கிறது என்பதை அறிந்து கொள்வது சுவாரஸ்யமாய் இருக்கும்.

சட்டக் கல்லூரி மாணவர்கள் அமைப்பு குறித்த ஓர் ஆலோசனைக் கூட்டத்தில் எனக்கு கிடைத்த ஓர் அனுபவம், இச்சூழலில் பொருத்தமாக இருக்கும். சட்ட மாணவர்கள் குழுவாக ஓர் இடத்தில் குழுமி அரசியல் பிரச்சினைகள் குறித்து விவாதித்துக் கொண்டிருந்தனர். அக்கூட்டத்தில் மாணவராய் இல்லாத ஒரு நபர் அமர்ந்திருந்ததோடு, இடையிடையே தன் கருத்துக்களைக் கூறிவந்தார். அவர் தம் கருத்துக்களில் சமூக-அரசியல் பிரச்சினைகளை அலசும் போக்கில் தமிழ்மொழி குறித்த பிரச்சினைகளையே மையப் படுத்தினார். இது மாணவர்களுக்கு இடைஞ்சலாக இருந்ததுடன், எரிச்சலையும் மூட்டியது. எனவே மாணவர்கள் குழுவை விட்டு வெளியேறும்படி அவரிடம் கூறினார்கள். மாணவர்களின் இந்த கோபமான எதிர்வினைக்குப் பிறகு அவர் அமைதியாகிவிட்டார். ஆனால் கூட்டம் முடிந்தவுடன் தன்னுடைய கருத்துக்களை ஒவ்வொரு மாணவரிடமும் வலியுறுத்தத் தொடங் கினார். இதனால் மாணவர்கள் விரைவிலேயே கலைந்து விட்டனர். பிறகு நான் அவரைத் தனியே அழைத்துச் சென்று அவர் கருத்துக்களைக் கூறுமாறு கேட்டேன். அவர் என்னிடம் கேட்டார் நாம் தமிழர்தானே? அதிலென்ன சந்தேகம் என்றேன். அவருக்கு முகம் மலர்ந்தது. இந்த மாணவர்கள் என்னைப் புரிந்து கொள்ளவில்லை. உங்களது ஆர்வம் எனக்கு மகிழ்ச்சி யளிக்கிறது என்றார்.

சரி உங்கள் நோக்கம் என்ன? திட்டம் என்ன? என்று நான் கேட்டேன். நாமெல்லாம் தமிழர்கள், நாமெல்லாம் ஒன்றிணைந்து தமிழ்த் தேசத்தை அமைக்க வேண்டும் என்றார். நல்லது, அது எப்படி சாத்தியம், இங்குள்ள பிரச்சினைகள் வேறு மாதிரியாக இருக்கிறதே என்றேன். இக்கேள்விக்குப் பிறகு அவர் தனது தமிழ் தேசிய திட்டத்தை முன்வைத்தார். நம் மக்களிடம் மொழி உணர்வு குறைந்து வருகிறது. நாம் பேசும் தமிழில் நூறு தமிழ் வார்த்தைகளுக்கு மேல் பயன்படுத்துவதில்லை. தமிழில் லட்சக்கணக்கான வார்த்தைகள் இருக்கும்போது, கேவலமாக நூறு வார்த்தைகளுக்குள்ளே உழல்கிறோம். எனவே பேச்சுத் தமிழில் நூறு வார்த்தைகள் என்பதிலிருந்து ஆயிரம் வார்த்தைகளை புழக்கத்ததில் கொண்டு வரவேண்டும். இது சாத்தியப்பட்டுவிட்டால் தமிழ்த் தேசியம் சாத்தியப் பட்டுவிடும் என்று கூறி அதற்கு ஆதாரமாக தூய தமிழ் வார்த்தைகளை அடுக்க ஆரம்பித்தார்.

இந்தக் கருத்து எனக்கு திகைப்பை உண்டாக்கியதுடன், அவருடன் பேசும் ஆர்வத்தையும் ஒரேயடியாக குலைத்துவிட்டது. விரைவிலேயே அவரிடமிருந்து விடைபெற்று விட்டேன். அவரது கருத்துக்களில் இருந்த தன்மையை விட, இதை நம்பிக்கொண்டிருக்கும் அவரது ஆர்வம்தான் எனக்கு அதிர்ச்சியையும் ஆச்சர்யத்தையும் அளித்தது.

இதேபோல் நான் சந்தித்த பல தமிழ் தேசியத் தோழர்கள் தூயத் தமிழில் என்பதைவிட நாடகத் தமிழில் உரையாடுவதை வழக்கமாக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தபோது, முன்சொன்ன வார்த்தை தேசியரின் கருத்துக்கள் எனக்குள் நிழலாடியது.

தமிழ் தேசியம் பேசும் பலரும் நாடகத் தமிழில் உரையாடுவதில் ஆர்வம் காட்டுவதை காணும்போது எனக்கு ஏற்படும் வியப்பை மறைத்து, கிராமத்தில் வாழும் படிப்பற்ற பாமர ஏழை உரையாடும் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலக்காமல், அப்படியே கலந்து இருந்தாலும் மிகச் சொற்ப அளவில் இருக்கும் போதும், அந்த பாமரத் தமிழில் இருக்கும் இயல்புத் தன்மை நீங்கள் பேசும் தமிழில் இல்லையே, ஏன் என்று ஒரு தோழரை வினவினேன். அவரோ ஒரு தனித் தமிழ் ஆர்வலர் மற்றும் தேசியர். அவர் நம் மக்களுக்கு புதிய வார்த்தைகளை அறிமுகப்படுத்த வேண்டி இருக்கிறது. அதோடு மொழியின் தூய்மையையும் காக்கவேண்டும் என்றார். எடுத்துக்காட்டாக பிளாஸ்டிக்கை 'நெழிஞ்சி' என்றவர் விளித்தபோது அவருக்கு உண்டான பெருமிதம் அவர் முகத்தில் தெரிந்தது.

இதையொத்துக் கருத்துக் கொண்ட இன்னொரு தமிழ் தேசியரிடம் நான் பேசிக் கொண்டிருந்தபோது தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைக்கெல்லாம் தீர்வு தமிழ் தேசியம் மலரும்போது நீங்கிவிடும் என்று சொன்னார். எப்படி என்று நான் கேட்டேன். அது என் நம்பிக்கை என்று அவர் பதிலளித்தார்.

இன்றைக்கு தமிழ் தேசியம் நாடகத் தமிழில் பேசப்பட்டாலும், அதைக் கேட்க வேண்டியவர்களோ தூய தமிழில் அதேவேளை எளிய தமிழில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பாமரத் தமிழிலும் இருக்கும் உயிர் நாடகத் தமிழில் இருப்பதில்லை அல்லவா? எனவே, இங்கு சுட்டிக்காட்டிய என் அனுபவங்களில் தொடர்புடைய நபர்களின் பெயர்கள் தேவையற்றது என்பதுடன் அவர்கள் வெளிப்படுத்திய மனப்போக்கே கவனிக்கத் தக்கது. அத்தோழர்களிடம் தமிழ் தேசியம் குறித்த நம்பிக்கை இருந்ததே தவிர, அது குறித்த அறிவியல் அடிப்படையுள்ள அணுகுமுறைகளையும், கருத்துக்களையும் காண்பது அரிதாக இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ் தேசியம் ஒரு நாடகத் தமிழ் இயக்கமாக மாறிவிட்டதோ என்றுகூடப் பலவேளை எனக்குச் சங்கையுண்டானதுண்டு. மொழியைத் தூய்மை செய்வது என்ற நோக்கில் அதனை உயிரற்றதாக்குவதில் ஓர் ஆர்வம் உழல்கிறது. இவைகள் தமிழ் தேசியம் பேசும் நம்பிக்கையாளர்களின் செயல்பாடுகள் என்றால் தமிழ் தேசியத் திறனாய்வாளர்கள், மெய்யியல் கோட்பாளர்கள் மற்றும் இயக்கக் கொள்கைகளின் விளக்கத்தில் தமிழ்த் தேசியத்தை விளங்கிக்கொள்ள வேண் டும். எனவே இதுவரைப் பார்த்த தேசிய இன வரை யறுப்புகளில் தமிழ்த் தேசியத்தைப் பொருத்திப் பார்ப் போம்.

**பொதுவான மொழி**

தமிழர்களுக்கென்று பொதுவான மொழி இருக்கிறது. சந்தேகத்திற்கு இடமின்றி தொன்மை வாய்ந் த தமிழ். இத்தமிழுக்கென்று பொதுத்தன்மை உள்ளதா என்பது இங்கு கவனிக்க வேண்டும். வழக்கமாக தமிழை முத்தமிழ் என்று அழைப்பது வழக்கம். இயற்தமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் எனும் இவற்றில், இயற்தமிழ் இலக்கியத் தமிழ் ஆகும். இந்த முத்தமிழ் கொள்கை இன்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இதை பண்டிதர் அயோத்திதாசர் போன்றோர் மறுக்கின்றனர். முத்தமிழ் என்பதின் பொருள் பேச்சுத் தமிழ்தான் என்பது அவரது விளக்கம்.

"வழங்கு தமிழை முத்தமிழென்று மூவகையாகப் பேசுந்தமிழென்று கூறப்படும். அவைகள் யாதெனிலோ மலையாள வாசிகள் வழங்குந் தமிழை கொடுந்தமிழென்றும், திருநெல்வேலிப்புரவாசிகள் வழங்குந் தமிழை கருந்தமிழன்றும், சென்னை முதலிய புரவாசிகள் வழங்குந் தமிழை செந்தமிழ் என்றும் கூறப்படும். அவைகள் வழங்கும் வகைகளோ (எ.கா) நாயிண்ட மகனே என்பது கொடுந்தமிழ்; நாய் ஈன்ற மகனே என்பது கருந்தமிழ்; நாய் பெற்ற மகனே என்பது செந்தமிழ். கருந்தமிழில் வரைந்துள்ள புகார் கண்ட முதலிய நூல்களில் வரைந்துள்ளவற்றை செந்தமிழ் வாணர் வாசிப்பதற்கே இயலாது இன்னுந்திகைக்கிறார்கள் (அ.தா. 2:565)"

ஏன் இந்த இரண்டு வகையான முத்தமிழ்கள் வழக்கிற்கு வந்தன என்றால், நவீன தேசிய வளர்ச்சியின் போக்கில் இதைப் புரிந்துகொள்ளவேண்டும். பண்டிதர் குறித்துள்ள முத்தமிழ், தமிழ் மரபினுள் மிகவும் நடை முறையில் இருந்ததாகும். இதற்கு ஆதார மாக இலக்கண நூல்களையும், நிகண்டுகளையும் அவர் ஆதாரமாகக் கொள்கிறார். இன்னும் குறித்துச் சொல்வதென்றால் அதை மக்கள் மயமானதாகப் பார்க்கிறார்.

ஏறக்குறைய இதே காலத்தில்தான் இயல், இசை, நாடக முத்தமிழ் கொள்கையும் தோன்றியது. இதற்கு காரணம் மேற்கத்திய தாக்கம்தான். காரணம் தமிழை நவீனப்படுத்த ஆங்கிலேயரின் உரைநடை யுத்திகளைத் தொடர்ந்து தமிழில் இயற்தமிழ் தோன்றியது. இத்தமிழுக்கு பேச்சுத் தமிழிலிருந்து வார்த்தைக் கட்டுமானங்கள், வார்த்தைப் பிரயோகங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதனால், இவ்வுரைத் தமிழுக்கு பங்களித்த உயர்சாதியினரின் தமிழே இயற்தமிழாக பரிணமித்தது. அதனால் அதில் ஏராளமான வடச் சொற்கள் கலந்திருந்தது. இதிலும் தூய்மை வேண்டப்பட்டு, அதற்கும் இயக்கம் உண்டாக்கிவிட்டது. எனவே இயற்தமிழில் துவங்கிய மேட்டுமைத் தன்மையினால் பெரும்பான்மை மக்களின் தமிழ் இயற்தமிழில் இடம் பெறாமலே ஒதுக்கித்தள்ளப்பட்டது. (தற்போதைய நிலையில்தான் இயற்தமிழில் வாய்மொழி இலக்கியம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.)

இதைப்போலத்தான் இசைத்தமிழில் செவ்விசைக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் நாட்டுப்புற இசைக்கு அளிக்கப்படவில்லை. நாடகத் தமிழிலோ ஆங்கில பாணி நாடகத்தினை ஒத்த, தமிழுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம், தமிழரின் தொல் கலைகளான கூத்து போன்ற நாடக வடிவங்களுக்கு அளிக்கப்படவே இல்லை. பின்பு இந்த நாடகத் தமிழானது மேடைப் பேச்சாக வடிவமெடுத்து திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்கு பலமான அடித்தளமிட்டது.

எனவே கல்விப் புலத்தில் அறிமுகமாகியுள்ள பொதுத் தமிழுக்கு இப்படி ஓர் அரசியல் பின்னணியுண்டு. அது மேல்நிலையாக்கம் பெற்ற தமிழ் மக்கள் அதனுடன் உறவு கொள்ள வேண்டுமானால் அதற்காக தங்களை தயாரித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால் தங்களிடமிருந்து முத்தமிழுடன் கல்விப்புல முத்தமிழ் முரண்பட வேண்டியிருந்தது. கல்விப்புல முத்தமிழோ அரசியல் ரீதியாக கட்டமைக்கப்பட்டு தமிழ் தேசிய சார்பிற்கானதாக உள்ளது. வெகுமக்களுடையது அப்படியல்ல, அதற்கு எந்த தேசிய நோக்கமும் இல்லை.

எனினும் தமிழில் பிரிவுகள் இல்லாமல் இல்லை. சாதிக்கொரு தமிழ், அதற்கான வார்த்தைகள், கோர்வைகள் என்பதோடு பகுதிசார்ந்த வழக்கம் போன்றவை பிறப்பகுதித் தமிழின் எளக்காரம் என்று வெட்டிப் பிரிக்கும் கருவியாக தமிழ் சிதிலமடைந்து கிடக்கிறது. எனவே, பொதுவான மொழி எனும் நிலையில் தமிழுக்கு வலுவான வடிவம் இருக்கிறது. உள்ளடக்கத்தில் அது பல்வேறு வடிவங்களை கொண்டிருக்கிறது. முன்பு மொழித் தூய்மை எனும் நோக்கிலும் பாமரத் தமிழ் புறந்தள்ளப்பட்டது. அதனால் ஒடுக்கப்பட்ட மக்களின் தீண்டத் தகாதவர்களின் மொழிகள் நவீன முத்தமிழிலிருந்தே ஒதுக்கப்பட்டது.

இன்று மொழி வளர்ச்சி எனும் நோக்கில் இவைகள் ஒன்றிணைக்கப்படுகிறது. இரண்டு நிலைக்கும் ஒரே நோக்கம்தான், அது அதிகார மையம்தான்.

எனவே தமிழ் ஒரு பொதுமொழியாக இருப்பது எவ்வளவு உண்மையோ அவ்வாறே மக்களைப் பிரிப்பதற்கான மொழியாகவும் இருக்கிறது என்றபோது தமிழ் தேசியத்திற்கு மொழிவகையான அடிப்படையை வழங்குமா?

- தொடரும்


படிப்பகம்

www.padippakam.com

■ பு. ஜார்ஜ்

7

# பாரதியின் பௌத்த வெறுப்பும் இந்துத்துவப் பற்றும்

இந்துக்களின் தத்துவ,- சமயச் சிந்தனைகளில் மூன்று இழைகள் உள்ளன. (1) பிரமாயிசம் (2) வேதாந்தம் (3) பிராமணியம் என்று குறிப்பிடலாம். இவை ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை என்றாலும் இவை மூன்று வெவ்வேறான தனிப்பட்ட கோட்பாடு களைக் குறிக்கின்றன.

பிரமாயிசத்தின் சாரமான கருத்தைக் கூறும் ஒரு கோட்பாடு மூன்று வெவ்வேறு வடிவங்களில் உரைக் கப்படுகிறது.

(I) சர்வம் கல்விதம் ப்ரமா - இது அனைத்தும் பிரமமே

(II) அஹம் ப்ரமாஸ்மி - ஆத்மன் (தான்) பிரமா; எனவே நான் பிரமாவே

(III) தத்வமஸி - ஆத்மன் (தான்) பிரமாவே. எனவே நீயும் பிரமாவே.

இவை மகா வாக்கியங்கள் எனப்படுகின்றன. பிரமாயிசத்தின் சாரத்தை இவை சுருக்கமாகக் கூறுகின்றன.

வேதாந்தத்தின் சாரக் கருத்தைக் கூறும் கோட்பாடுகள் வருமாறு.

I. பிரமாதான் ஒரே உண்மை

II. உலகம் மாயை, அதாவது உண்மையல்ல

III. ஜீவனும் பிரமாவும் -

(i) ஒன்றேதான் என்பது ஒரு பிரிவினரின் கருத்து

(ii) ஒன்றல்ல, ஆனால் அவரின் அம்சமாகும். அவரிடமிருந்து தனியானதல்ல என்பது மற்றொரு பிரிவினரின் கருத்து.

(iii) அவை வெவ்வேறானவை, தனியானவை என்பது மூன்றாவது பிரிவின் கருத்து.

பிராமணியத்தின் கருத்தைப் பின்வரும் கோட்பாடுகளில் சுருக்கமாகக் கூறலாம்.

(I) சதுர்வர்ணத்தில் நம்பிக்கை

(II) வேதங்கள் புனிதமானவை, பொய்யாதவை

(III) தெய்வங்களுக்கு வேள்வி செய்வதுதான் மோட்சத்துக்கு ஒரே வழி

வேதாந்தத்திற்கும் பிராமணியத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடும், அவற்றிற்கிடையில் சர்ச்சைக்கிடமான அம்சங்களும் பலருக்குத் தெரியும். ஆனால் பிரமாயிசத்திற்கும் வேதாந்தத்திற்கும் இடையிலான வேறுபாட்டை அறிந்தவர்கள் மிகச்சிலரே. இந்த வேறுபாடு மிகத் தெளிவானது. ஆத்மனும் பிரமாவும் ஒன்றேதான் என்பதில் பிரமாயிசமும் வேதாந்தமும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளன; ஆனால் பிரமாயிசம் உலகத்தை மாயையாகக் கருதவில்லை என்பதும், வேதாந்தம் அதை மாயையாகக் கருதுகிறது என்பதும் அவற்றினிடையே உள்ள வேறுபாடாகும். இந்த இரண்டுக்கும் இடையில் உள்ள அடிப்படை வேறுபாடு இதுதான்.

உலகம் உண்மை என்பதும், உலகத்தின் பின்னே உள்ள உண்மை பிரமா என்பதும் பிரமாயிசத்தின் அடிப்படைக் கருத்தாகும். எனவே எல்லாமே பிரமம் தான் என்பது இந்தக் கோட்பாடு.

பிரமாயிசத்தின்மீது இரண்டு குறைபாடுகள் காணப்படுகின்றன. பிரமாயிசம் அகம்பாவத்தைக் காட்டுகிறது என்பது ஒரு குறைபாடாகக் கூறப்படுகிறது. ஒரு மனிதன் 'நான் பிரமா' என்று கூறுவது ஒருவகை அகம்பாவமாகும். பிரமாயிசத்தின் மீது கூறப்படும் மற்றொரு குறைபாடு பிரமாவை மனிதன் அறிய இயலாமையாகும்.

'நான் பிரமா' என்று கூறுவது அகம்பாவமாகத் தோன்றலாம். ஆனால் அது ஒருவனுடைய சொந்த மதிப்பை உரைப்பதாகவும் இருக்கலாம். மனிதர்களிடையே தாழ்வு மனப்பான்மை மிகுந்து காணப்படும் ஓர் உலகில், ஒரு மனிதன் தனது சுயமதிப்பை வலியுறுத்தி உரைப்பது வரவேற்கத்தக்கது. ஒவ்வொரு தனிநபரும் தனது மதிப்பை உணர்வது ஜனநாயகத்துக்கு இன்றியமையாதது. ஒவ்வொரு தனி நபரும், தான் மற்ற ஒவ்வொருவரையும் போலவே மதிப்புடையவன் என்று அறிந்து கொள்வதும் ஜனநாயகத்திற்கு அவசியமானது. 'அஹம் ப்ரமாஸ்மி' (நான் பிரமா) என்பதைக் கேலி செய்பவர்கள் மகாவாக்கியத்தின் மற்றொரு பகுதி தத்வமஸி (நீயும் பிரமா) என்று கூறுவதை மறந்து விடுகிறார்கள். 'அஹம் பிரமாஸ்மி' என்பது 'தத்வமஸி' என்பதுடன் சேர்த்துக் கூறப்படாமல் தனியாக இருந்தால் அதைக் கேலி செய்ய முடியலாம். ஆனால், தத்வமஸியுடன் சேர்த்துக் கூறப்படும்போது பிரமாயிசம் அகம்பாவத்தைக் காட்டுகிறது என்ற குற்றச்சாட்டு நிற்கமுடியாது.



படிப்பகம்

www.padippakam.com

பிரமாவை அறியமுடியாமல் இருக்கலாம். இருந்த போதிலும் இந்த பிரமா தத்துவத்தின் சமூக ரீதியான உட்சிடைகள் ஜனநாயகத்தின் அடிப்படையாக அமைவதற்கு மிகவும் பயனுள்ளவை. எல்லா மனிதர்களும் பிரமாவின் அம்சங்கள் என்றால் எல்லோரும் சமமானவர்கள் என்றும் எல்லோருக்கும் ஒரே மாதிரியான சுதந்திரம் இருக்க வேண்டும் என்றும் ஆகிறது. இதுதான் ஜனநாயகத்தின் பொருளும் ஆகும். இந்தக் கோணத்திலிருந்து பார்த்தால் பிரமா அறிய முடியாதவராயிருக்கலாம். ஆனால் இந்த பிரமா கோட்பாட்டைவிட ஜனநாயகத்திற்கு வலுவான அடிப்படையாக இருக்கக் கூடிய வேறு கோட்பாடு இல்லை என்பதில் சந்தேகமில்லை.

நாம் எல்லோரும் கடவுளின் குழந்தைகள் என்பதற்காக ஜனநாயகத்தை ஆதரிப்பது மிகவும் பலவீனமாக அடிப்படையாகும். அதனால்தான் அந்த அடிப்படையின் மேல் ஜனநாயகம் அமைக்கப்படும் போது அது ஆட்டம் காண்கிறது. ஆனால் நீங்களும் நானும் ஒரே பிரபஞ்ச தத்துவத்தின் பகுதிகள் என்று உணர்ந்து ஒப்புக்கொண்டால் நாம் கூடி வாழ்வதற்கு ஜனநாயகத்தைத் தவிர வேறு எந்தக் கோட்பாட்டுக்கும் இடமில்லை. அது ஜனநாயகத்தைப் போதிக்கவில்லை; ஜனநாயகத்தை ஒவ்வொருவருக்கும் உள்ள கடமைப் பொறுப்பாகச் செய்கிறது.

ஜனநாயகம் பற்றி ஆய்வு செய்த மேலை நாட்டினர் ஜனநாயகம் கிறித்தவ சமயத்திலிருந்து அல்லது பிளேட்டோவின் சிந்தனைகளிலிருந்து தோன்றியதாகவும் அதற்கு வேறு ஊற்றுக்கண் எதுவும் இல்லை என்றும் ஒரு நம்பிக்கையைப் பரப்பியிருக்கிறார்கள். இந்தியாவில் உருவான பிரமாயிசம் ஜனநாயகத்துக்கு அவற்றைவிடச் சிறந்த அடிப்படையாக அமைகிறது என்று அவர்கள் அறிந்திருந்தால் அவர்கள் அவ்வாறு அடித்துக் கூறியிருக்க மாட்டார்கள். ஜனநாயகத்துக்குத் தத்துவரீதியான அடிப்படை அமைப்பதில் இந்தியாவும் ஒரு பங்கு ஆற்றியிருப்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

இந்த பிரமாயிசக் கோட்பாடு என்ன ஆயிற்று என்ற கேள்வி எழுகிறது. பிரமாயிசத்தினால் சமூக விளைவு எதுவும் ஏற்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. அது தர்மத்தின் அடிப்படை ஆக்கப்படவில்லை. ஏன் இப்படி ஆயிற்று என்று கேட்டால் பிரமாயிசம் வெறும் தத்துவம் மட்டுமே என்பது பதிலாகிறது. தத்துவம் சமூக வாழ்க்கையிலிருந்து தோன்றாதது போலவும் வெறுமையிலிருந்து தோன்றி வெறுமையாகவே எதற்கும் பயன்படாமலிருப்பது போலவும் இந்தப் பதில் உள்ளது. தத்துவம் வெறும் கோட்பாடு விஷயம் மட்டும் அல்ல; அதற்கு நடைமுறை ரீதியான பயன்களும் உள்ளன. தத்துவத்தின் வேர் வாழ்க்கையின் பிரச்சினைகளில்தான் உள்ளது; தத்துவம் உருவாக்கும் கோட்பாடுகள் சமூகத்துக்கே மீண்டும் சென்று சமூகத்தைச் சீரமைப்பதற்கான சாதனங்களாகப் பயன்பட வேண்டும். அறிவது மட்டும் போதாது. அறிந்தவர்கள் நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும்.

*அப்படியானால் பிரமாயிசம் ஒரு புதிய சமூகத்தை உருவாக்கத் தவறியது ஏன்? இது பெரியதொரு புதிர். பிராமணர்கள் பிரமாயிசத்தின் கோட்பாட்டை அங்கீகரிக்காமல் இல்லை. அவர்கள் அங்கீகரித்தார்கள். ஆனால் அவர்கள் பிராமணனுக்கும் சூத்திரனுக்கும் இடையே, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே, சாதியைச் சேர்ந்தவனுக்கும் புறச்சாதிக்காரனுக்கும் இடையே சமத்துவமின்மையைத் தாங்கள் எப்படி ஆதரிக்க முடியும் என்று கேட்கவில்லை. அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்கவேயில்லை. இதன் விளைவாக, ஒரு புறம் மிகுந்த ஜனநாயகத் தன்மை கொண்ட பிரமாயிசமும் மற்றொரு புறம் சாதிகளும் கிளைச்சாதிகளும் புறச்சாதிகளும் நாகரிகம் பெறாத பழங்குடிகளும் குற்றப் பரம்பரைப் பழங்குடிகளும் நிறைந்த ஒரு சமூகமும் இருக்கின்றது. இதைவிடப் பெரிய முரண்பாடு இருக்க முடியுமா? இதைவிட நகைப்புக்குரியது மகாசங்கராச்சாரியாரின் போதனை. பிரமா இருக்கிறார் என்றும் பிரமாதான் உண்மை என்றும் அவர் எல்லாவற்றிலும் நிறைந்துள்ளார் என்றும் போதித்தவர் அந்த சங்கராச்சாரியார்தான். அதே சமயம் பிராமணிய சமூகத்தின் எல்லா அநியாயங்களையும் அவர் ஆதரித்தார். ஒரு பைத்தியக்காரன்தான் இப்படிப்பட்ட இரண்டு முரண்பாடுகளைப் போதிப்பவனாக இருப்பதில் மகிழ்ச்சி காண முடியும். உண்மையிலேயே பிராமணன் பசுவைப் போன்றவன். ஆதலால் பசுவைப் போலவே அவன் எதை வேண்டுமானாலும் தின்னவும், பின்பு பிராமணனாக இருக்கவும் முடியும். (அம்.தொகுதி 8:392-297)*

சிந்தனைக்கும் செயலுக்கும் இடைவெளியில்லாது இந்துத்துவக் காப்பாளராக பாரதி நிற்க முடிந்த அழகின் பிரமாயிசப் பின்னணி இதுதான். தீண்டாமையின் மூலவேர்களுக்குத் தத்துவ ரீதியாகப் பாதுகாப்பளிக்கும் பணியையே பாரதி செய்திருக்கிறார். இதுதான் பாரதியின் காலகட்டத்தில் இந்துக்கள் கொண்டிருந்த சமூகப் பின்புலம்; அரசியற் கருத்துநிலை; சமூகப் பார்வை. இதிலிருந்து பாரதியைப் பிரித்துப் பார்க்க வேண்டியதில்லை. அவர் வேறு நிலையில் இருந்திருக்க முடியாது. இதைவிட்டுவிட்டு அவர் சார்ந்திருந்த வர்க்க நிலைப்பாட்டை மறைத்துவிட்டு அவரை ஜனநாயக வாதியாகச் சித்தரிப்பது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயல்வதாகும்.

*இந்தியாவின் வரலாறு இரண்டு மதங்களுக்கிடையே புத்த சமயத்துக்கும் பிராமணீயத்துக்கும் இடையே நடந்த கடும் போராட்டமேயன்றி வேறல்ல. (அம்.தொகுதி - 7:160)*

என்ற கருத்துப்படி, பாரதி பிராமணீயத்தின் பக்கம் நின்றே தனது நியாயங்களை முன்வைக்கிறார் என்பது இதுவரை தெளிவாக்கப்பட்டது. சாதியையும் மதத்தையும் அடிப்படையாகக் கொண்டது பிராமணீயம். இவ்விரண்டுமே அடிமைத்தனத்தின் மூலவேர்கள். எனவே அந்த மூலவேர்களை ஒரு பக்கம் தழைக்க விட்டுக்கொண்டே மறுபக்கம் பேசும் பெண் விடுதலையும் தலித் விடுதலையும் விடுதலையாக இருக்கவே முடியாது.


படிப்பகம்

www.padippakam.com

ஆனால் வேடிக்கை என்னவென்றால் இப்படிப் பேசியதற்கே அவரது சமகாலத்தில் பாரதி பிராமணர்களால் புறந்தள்ளப்பட்டார் என்பதும் காந்தி பிராமணனால் சுடப்பட்டார் என்பதும்தான். இதுதான் இந்துத்துவத்தின் மிகக்கொடிய வடிவம்.

கவிஞனாகிய பாரதியை அவரது ஒரு கவிதையைக் கூட மேற்கோள் காட்டாமல், சுட்டாமல் எப்படி முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும் என்ற கேள்வி எழக்கூடும். நியாயமானதே. பாரதியின் முற்காலப் படைப்புகளில் உள்ள தன்மைகள் சில பிற்காலப் படைப்புகளில் இல்லை என்பது எப்படி வெளிப்படையோ அது போலத்தான் அவரது கட்டுரைகளுக்கும் கவிதைகளுக்கும் இடையிலான தன்மைகளின் வேறுபாடும் வெளிப்படை. அவரது கவிதைகளுக்குள்ளேயே முரண்பாடு உள்ளது. அதுபோலவே கட்டுரைக்குள்ளும் முரண்பாடு உள்ளது. இந்த முரண்பாட்டை முன்னிறுத்தி 'கட்டுரையில்தான் பாரதி இப்படியிருக்கிறார். கவிதையில் இப்படி இல்லை' என்ற ஒரு வாதம் இந்த ஆய்வின் சுருக்கம் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட காலத்தில் எழுந்தது. இவ்வாதம் பாரதிக்கு ஆதரவானதுதான். இப்படிப்பட்டவர்களுக்கு ம.பொ. சிவஞானம் கூறும் கருத்து வலுவூட்டக் கூடும்.

*அவர் அறிஞர்; கவிஞர்; ஞானி; தியாகி! ஆனால் அவரிடமும் கொள்கை முரண்பாட்டைக் காண்கிறோம். ஆம், கவிதையிலே வலியுறுத்திய ஒரு கொள்கையை உரைநடைக் கட்டுரையிலே மறுத்து எழுதுகின்றார். கவிதை எழுதியது, தம் மனம் தூண்டியதால்' கட்டுரை எழுதியது, உத்தியோகக் கடமையால்! இதனால் கவிதைகளில் காணப்படும் கருத்துக்கும் கட்டுரைகளிலே காணப்படும் கருத்துக்கும் சில இடங்களிலே முரண்பாடு இருக்கக் காண்கிறோம். அறிஞன் நிலை வேறு, கவிஞன் நிலை வேறு. பாரதியார் அறிஞராகவும் இருந்தார், கவிஞராகவும் இருந்தார். அவர் 'சுதேசமித்திரன்' துணையாசிரியராக இருந்தது அறிஞராகத்தான், கவிஞராக அல்ல. (பாரதியின் பாதையிலே 33-35)*

இந்த மேற்கோளைச் சுட்டிக்காட்டிய கேசவன் இதிலுள்ள ம.பொ.சி-யின் கருத்தை மறுக்கிறார்.

இங்கே பாரதியின் படைப்புகளிலே - கவிதைகள், கட்டுரைகள், அனைத்திலுமே - முற்காலத்தியதற்கும் பிற்காலத்தியதற்கும் உள்ள முரண்பாடுகளைக் காண மறுத்து, அவர் படைப்புகளின் வடிவங்களாக கட்டுரைக்கும் கவிதைக்குமிடையே உள்ள முரண்பாடு சுட்டிக்காட்டப்படுகிறது. மேலும் அறிஞன் நிலையையும் கவிஞன் நிலையையும் அதாவது அறிவையும் கவிதையையும் பிரித்துப் பார்க்கின்ற போக்கையும் காண்கின்றோம். அறிவைக் கவிதையிலின்றும் கவிதையை அறிவினின்றும் பிரித்து, கவிதை உள்மனத் தூண்டுதலே, உணர்ச்சிவசமானதே எனும் கோட்பாட்டையும் காண்கிறோம். அதாவது அறிவு வேறு உணர்ச்சி வேறு என்று பிரிக்கும் தத்துவக் குறைபாட்டையும் காண்கிறோம். அதாவது அறிவு வேறு உணர்ச்சி வேறு என்று பிரிக்கும் தத்துவக் குறைபாட்டைக் காண்கிறோம். கவிதை என்பதோ கட்டுரை என்பதோ கலையின் இருவடிவங்கள்தான். சிற்சில விசேஷச் சேர்க்கைகளே இரண்டையும் பிரிக்கின்றன. அறிவிலிருந்து உணர்ச்சிக்கும் உணர்ச்சியிலிருந்து மீண்டும் அறிவுக்கும் செல்லக்கூடிய இயக்க நிலைப் பாட்டுக் கருத்துக்களின் செறிவான வடிவங்களே கட்டுரையும் கவிதையுமாகும். எனவே பாரதி - அறிஞர் எனும் கோணத்திலும், பாரதி - கவிஞர் எனும் கோணத்திலும் வெவ்வேறாகத் தோற்றமளிக்கின்றனர் என்று அர்த்தப்படுத்திக் கொள்வது சரியில்லை. இது நம் தமிழ் உலகில் காணப்படும் குறைபாடாகும். *(இயக்கமும் இலக்கியப் போக்குகளும் : 18, 19)* ●

*முற்றும்*

■ **மகாராசன்**

# கல் அறி கற்பி

தாழி அறி
வரலாறு பிரி
வாழ்வு நுகர்

கல்

பணிக்குடப் பயணம் செய்
தொப்புள் கொடி ஊர்
வளை பணியில்
ஒப்புக் கொள்

மண் கிளர்த்து
நெல்மணி பொறுக்கு
மிச்சம்
எச்சமா? உச்சமா?

'எனது முதுகுத் தண்டிலா
உன் மாளிகை?'
கேள்விகள் எழுப்பு

கண்விரி
வெளுப்பு ஒதுக்கி
மண் நிறம் பூசு

கொஞ்சம் அழு

அழுகை நிறுத்தி
வீறுபயிர் செய்
கனல் பாய்ச்சி
விடுதலை பறி.

●



படிப்பகம்

www.padippakam.com

■ குடியரசன்

**இலக்கியம் – கணிதமயமாதல் – சாத்தியமா**

# கணிதம் நம் உடைமை 2

**தாய், தந்தை தங்கள் குழந்தைகளுக்கு விளையாட்டைச் சொல்லித் தருகின்றனர். மதம், கலாச்சாரம், பொழுதுபோக்கு, உறவுகள் பற்றிச் சொல்லித் தருகின்றனர். ஆனால் பயன்படு கணிதம் பற்றிச் சொல்லித் தருவதில்லை. காரணமாக தங்களுக்கு கணிதம் தெரியாது என்பதைத் தெரிவிக்கின்றனர். அது அவர்களின் பெற்றோர் செய்த பிழை என்று எண்ணுவதில்லை. கணிதம் வாழ்வின் அடிப்படையான ஒன்று. அதன் குறைந்த அளவிலான கணிதத்தை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு, உலக நடைமுறையைச் சொல்லித் தருவதுபோல சொல்லித் தரவேண்டும்.**

---

பாபிலோனியர்கள்தான் உலகில் முதன் முதலில் வார்த்தைகளுக்குப் பதில் குறிகளைப் பயன்படுத்தினர்.

"நான்கு கூட்டல் மூன்று சமம் ஏழு" என்று அது நாள் வரை எழுதிவந்ததை 4 + 3 = 7 என்று எழுதும் வழக்கம் இவர்கள் காலத்தில்தான் துவக்கப்பட்டது. நாம் பயன்படுத்தும் கூட்டல் குறி + இத்தாலிய நாட்டினரின் முதல் எழுத்து. அவர்களின் முதல் எழுத்தான Plus (+) என்பதை நம் எண்களை கூட்டு வதற்கு உரிய குறியாக கணித உலகம் இன்று வழக்கில் கொண்டுள்ளது. இதைப் போலவே கழித்தல் குறி (-) கிரேக்கர்களின் கொடை. பெருக்கல் குறி (x) ஜெர் மானியர்களின் கொடை. பிரான்சு நாடு நம் வகுத்தல் (÷) குறியை கணித உலகத்திற்கு வழங்கியுள்ளது.

நான்கு கூட்டல் மூன்று சமம் ஏழு (4 + 3 = 7) என்று குறியீடுகளில் எழுதுவதைப் போல, இலக்கியங்களின் அசைவுகளான பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய வற்றையும் குறிகளாக எழுத கணித வல்லுனர்கள் முற்பட்டனர். இலக்கிய ஆளுமையாளர்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்ததால் இம்முயற்சி இன்றுவரை காலம் தள்ளிப்போடப்பட்டு வருகிறது. பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் ஆகியவற்றின் பொருள் அறிவு வயப்பட்டதாகும். சொற்களின் அர்த்தங் களுக்கு நம்மால் பல்வேறு வகைகளில் விவரணம் தர இயலுகிறது. இரண்டு சொற்களை இணைக்கும் போது அச்சொற்கள் தனித்தனி பொருளையும், இணைக்கும் செயல் 'செயலி'-யையும் குறிப்பதாக நாம் கொள்ளலாம். 4 + 3 = 7 என்பதில் 4, 3, 7 என்பன எண்களாகவும் +, = குறிகள்செயலியாகவும் உள்ளது. எண்கள் விசயத்தில் செயலிகளின் தன்மையைப் பொறுத்து புதிய எண்கள் உருவாகின்றன.

உதாரணம்

$4 + 3 = 7$
$4 \times 3 = 12$
$4 - 3 = 1$
$4 \div 3 = 1.33$

இங்கு 4 மற்றும் 3 என்ற இரு எண்களுக்கு இடையே செயலிகள் +, x, - , ÷ என நான்கு வேறுபட்ட செயலிகளால் வேறு வேறு எண்கள் 7, 12, 1, 1.33 என நம்மால் பெறப்படுகிறது. ஆக இரு எண்களின் தன்மையை அங்கு நிகழ்த்தப்படும் செயலிகள் ஆகிவற்றுடன் விளையும் பொருளாகவே விடை அமைகிறது. இதையே நாம் பெயர்ச்சொற்கள், வினைச் சொற்கள் மற்றும் அவைகளுக்கு இடையேயான குறிகளைக் கொண்டு புதிய சொற்களுக்கான விளக்கமாக அல்லது விவரமாகக் கொள்ளலாம் என யூக்லிட் என்ற கணித வல்லுனரின் காலத்திற்கு முன்பே கணித அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இது குறித்த ஆய்வை இலக்கியப் படைப்பாளிகள் ஊக்கப்படுத்தாததால் குறிகள் மற்றும் செயலிகள் இலக்கிய உலகத்தில் இதுவரை நுழையவில்லை.

இதனால் இலக்கியங்களின் தரம், சுவை பாதிக் கப்படுமா? என்ற வினா எழும் அபாயம் உண்டாக லாம். இதற்கு நமது பதில் இதுதான் Mathematics represents absolute truth, அதாவது கணிதம் முழுமையான உண்மையை நிகராகக் கொண்டுள்ளது. உண்மை பாதுகாக்கப்படும் இடங்களில் அழகியலும், தன்மையும் நிலைப்படுத்தப்படும் என்பது இயல்பான ஒன்றுதானே. The great Architect of the universe now

www.padippakam.com

begins to appear as a pure Mathematician என்பது Sir James Jeans அவர்களின் தத்துவம். உலகம் என்ற அமைப்பை உருவாக்கிய மிகச் சிறந்த கட்டுமான அமைப்பாளர் நமக்கு ஒரு தலைசிறந்த கணித வல்லுனராகவே தெரிகிறார்.

கணக்கு 6,000 ஆண்டுகள் வரலாறு பின்புலம் கொண்டது. அதாவது கடந்த ஆறாயிரம் ஆண்டுகளாக கணிதத்தின் வாயிலான ஆராய்ச்சிகள் நமக்கு கிடைத்துள்ளன. இந்த ஆராய்ச்சிகள் உலகெங்கிலும் நடைபெற்றிருந்தாலும் ஐரோப்பா மற்றும் அரேபிய நாடுகளின் பங்களிப்பு குறிப்பிடத் தகுந்தன. கணக்கு மக்களால் எளிதாக புரிந்துகொள்ள இயலாமல் உள்ளதற்கான காரணம், கணித மேதைகளின் மேலோட்டமான அணுகுமுறைகள் அல்ல. மாறாக கணித படைப்பாளிகள், தங்கள் படைப்புகளின் மீது அவர்கள் கொண்டிருந்த அதீத அக்கறையே. தங்கள் கண்டுபிடிப்புகளை மக்களிடம் கொண்டுசெல்வதற்குப் பதிலாக, எந்நேரமும் புதுப்புது ஆராய்ச்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டதன் காரணமாகவே கணிதம் பெரிய அளவில் சாமான்ய மனிதன் வரை பரவவில்லை. இதை முதலாம் தாலமியும், கிரேக்க கணித வல்லுனர் யூக்லிட்டும் பேசிக்கொண்ட ஒரு சொற்றொடரைக் கொண்டு விளக்கப்படுத்தலாம்.

| | |
|---|---|
| முதலாம் தாலமி : | வடிவ கணிதம் என்றால் என்ன என்பதை எனக்கு மிகச் சுருக்கமாக விளக்குங்கள். |
| யூக்லிட் : | There is no royal road to geometry.(வடிவ கணிதத்தை எளிதாகப் புரிந்துகொள்ள முடியாது) |

முதலாம் தாலமியும், யூக்லிட்டும் பெரும் கணித வல்லுனர்கள். யூக்லிட்டின் கணிதப்படைப்பை தாலமியாலேயே புரிந்துகொள்ள இயலாது என்று Geometry (வடிவ கணிதம்)யைக் கண்டறிந்த யூக்லிட் குறிப்பிட்டிருப்பது நாம் கவனம் கொள்ளவேண்டிய ஒன்றாகும். யூக்லிட்டின் இந்த பதில் இன்றைக்கும் பொருத்தமாக உள்ளது. இதற்கான காரணம் என்ன? காரணம் இதுவாகத்தான் இருக்கவியலும். கணிதம் என்பதை படிப்பாகவும், வாழ்வியல் என்பதை மதமாகவும், பொழுதுபோக்கை கலாச்சாரமாகவும் நாம் கொள்வதே.

தாய், தந்தை தங்கள் குழந்தைகளுக்கு விளையாட்டைச் சொல்லித் தருகின்றனர். மதம், கலாச்சாரம், பொழுதுபோக்கு, உறவுகள் பற்றிச் சொல்லித் தருகின்றனர். ஆனால் பயன்படு கணிதம் பற்றிச் சொல்லித் தருவதில்லை. காரணமாக தங்களுக்கு கணிதம் தெரியாது என்பதைத் தெரிவிக்கின்றனர். அது அவர்களின் பெற்றோர் செய்த பிழை என்று எண்ணுவதில்லை. கணிதம் வாழ்வின் அடிப்படையான ஒன்று. அதன் குறைந்த அளவிலான கணிதத்தை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு, உலக நடைமுறையை சொல்லித் தருவதுபோல சொல்லித்தரவேண்டும்.

**நுண்கலைகளின் அடிப்படையை நீங்கள் உணர்ந்த அளவிற்காவது உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுத் தாருங்கள். அடிப்படையை நீங்கள்தான் உருவாக்குகின்றீர்கள். உங்கள் கடமையை புறக்கணிக்காதீர்கள்.**

புத்தர் பெற்றோர்களுக்குக் கூறும் அறிவுரைகளில் பிரதானமானது இது தான். “நுண்கலைகளைப் பயில நீங்கள் உங்கள் குழந்தைகளை ஆசிரியர்களிடம் ஒப்படைக்கின்றீர்கள். அவர்கள் அங்கு செல்வதற்கு முன்னர், நுண்கலைகளின் அடிப்படையை நீங்கள் உணர்ந்த அளவிற்காவது உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுத் தாருங்கள். ஆசிரியர்கள் செய்வது மேல் கட்டுமானங்களே. அடிப்படையை நீங்கள்தான் உருவாக்குகின்றீர்கள். உங்கள் கடமையை புறக்கணிக்காதீர்கள்.”

புத்தரின் வரிகள் நமக்கு வெகு பொருத்தமாக உள்ளது. இன்றைக்கும் நாம் நம் குழந்தைகளை மூன்று வயதில் பள்ளிக்கூடம் அனுப்பிவிடுகிறோம். அவர்கள் சுயமாக சிந்திக்கும் முன்பே அவர்களின் மூளையில் கனத்த பள்ளிச் சிந்தனையை பதித்துவிடுகிறோம். குழந்தைகளும் பெற்றோர்கள் மண்டையில் ஒன்றுமில்லை என்று இளமையிலேயே நம்பிவிடுகின்றன. இந்த நம்பிக்கை முதியோர் இல்லங்களை பிற்காலத்தில் உருவாக்குகின்றன.

லத்தின் மொழியில் டெசிமா என்பதன் பொருள் பத்து. இதை அடிப்படையாகக் கொண்டு அரேபிய எண்கள் 10-ன் மடங்கு முறை இன்றைக்கு நடைமுறையில் உள்ளது. ஆனால் பௌத்தமுறைப்படி 60-ஐ மையமாகக் கொண்டு எண்களைக் கணக்கிடும் முறை உருவாக்கப்பட்டது. இதன்படி முக்கோணத்தின் மொத்த கோணம் 180° என்பதால் ஒரு பக்க கோணத்தின் சராசரி அளவு 60° என்பதாகிறது. அல்லது சமபக்க முக்கோணத்தின் ஒவ்வொரு கோணமும் 60° ஆகும். இந்த பவுத்த முறைமை முக்கோணங்களில் மட்டுமல்லாது வட்டங்களுக்கும் பொருந்துவதாக உள்ளது. ஒரு வட்டத்தின் மொத்தக் கோணம் 360° இது ஆறு 60-களைக் கொண்டுள்ளது. ஒரு நேர் கோட்டில் ஏதேனும் ஒரு புள்ளியில் தாங்கும் கோணமும் 60°-இன் மடங்குகளாகவே உள்ளதை நாம் காண்கிறோம்.

உலகெங்குமுள்ள கடிகார முறைமையில்,

ஒரு நிமிடம் = 60 வினாடி

ஒரு மணி = 60 நிமிடம்

ஒரு நாள் = 24 மணி நேரம் = 2½ மடங்கு 60

ஒரு ஆண்டு = 365¼ (360 + 5¼ நாட்கள்)



படிப்பகம்

www.padippakam.com

இவை அனைத்துமே 60-இன் மடங்காகவே உள்ளதை நாம் காண்கிறோம்.

ஐரோப்பிய முறையில் பணப்புழக்கத்தை 10-இன் அடிப்படையாகக் கொண்டு 1, 10, 100, 1000, 10000 என்று நடைமுறையில் உள்ளது. தங்களின் அனைத்து வகை அளவுகளிலும் நீட்டல் (மீட்டர்), முகத்தல் (லிட்டர்), 10-ஐ அடித்தளமாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது. பவுத்த முறையின் அடி, கஜம் போன்றவற்றையும் 10-இன் அடித்தளமாக மீட்டர், லிட்டர்களில் கொண்டு வரப்பட்டாலும், வட்ட வடிவ அளவுகளை இவர்களால் 10-இன் அடித்தளத்தில் கொண்டுவர இயலவில்லை. அவ்வாறு கொண்டுவந்தால் ஒரு நிமிடத்திற்கு 100 விநாடிகள், ஒரு மணிக்கு 100 நிமிடங்கள் என்று கொண்டுவர வேண்டும். கடிகாரத்தை இதனடிப்படையில் அமைப்பது, கோள்களின் நீள்வட்டப்பாதை இயக்கத்திற்கு பொருந்தி வராது.

இதற்கான காரணங்கள்

60 என்ற எண்ணை 1, 2, 3, 4, 5, 6, 10, 12, 15, 20, 30 & 60 ஆகியன மீதி இன்றி வகுக்கும். ஆனால் 10 என்ற எண்ணை 1, 2, 5 & 10 ஆகிய எண்கள் மட்டுமே மீதியின்றி வகுக்கும். இந்தியாவில் புத்தருக்கு முன்னரே அதாவது கிமு. 2000 ஆண்டிலேயே 60-ஐ அடிப்படையாகக் கொண்டு எண்கள், அளவுகள் கணக்கிடப்பட்டதை நாம் அறிகிறோம்.

மெசபடோமியாவில் கி.மு. 1700-இல் 60-ஐ அடிப்படையாகக் கொண்டு எண்கள் கணக்கிடப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. பாபிலோனியாவின் மாபெரும் அறிஞர், மன்னர் வாம்முராபி 60-ஐ அடிப்படையாகக் கொண்டு எண்களை தம் நாட்டு சட்டமாகக் கொண்டிருந்தார்.

இந்த 60-இன் அடிப்படைக்கு ஏன் இவ்வளவு விளக்கம் என நீங்கள் சிந்திக்கக்கூடும். இன்றைக்கு இந்தியாவில் 60 வயதுக் கல்யாணம் முதலாக நாழிகை காலண்டர் வரை 60-இன் அடிப்படையில் இயங்குகிறது. இவைகள் பவுத்தத்தின் பாதிப்பு என்பதுடன் இந்து என்ற அடியாட் கும்பலை தங்கள் பாதுகாப்பிற்கு வைத்துள்ள பார்ப்பனர்கள் பவுத்தத்தில் இருந்து திருடியவை என்பதும் நாம் உணரவேண்டும்.

பண்டிதரின் வார்த்தைகளின் படி, தாமரை நமது மலர். அது இன்றைக்கு ஊரறிந்த பார்ப்பனர்களின் கட்சியான பிஜேபி-யிடம் சிக்கிக் கொண்டுள்ளது. மெய்யறிவாளன் புத்தரின் மலர், இன்றைக்கு மக்கள் விரோத வர்ணாசிரம கட்சியின் சின்னமாக நாம் களவு கொடுத்துவிட்டோம். இதை மீட்க வேண்டும் என்று இன்றைய தலித் ஆர்வலர்கள் அறிவு தளத்தில் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

கண்டிப்பாக 60 என்ற எண்ணின் அடிமானம் காலம் காட்டும் கருவியின் அடிப்படை நமது கண்டுபிடிப்பு என்பதை நாம் அறிவுதளத்தில் போராடி நிறுவவேண்டிய தேவை எழுந்துள்ளது.

**பண்டிதரின் வார்த்தைகளின் படி, தாமரை நமது மலர். அது இன்றைக்கு பார்ப்பனர்களின் கட்சியான பிஜேபி - யிடம் சிக்கிக் கொண்டுள்ளது. மெய்யறிவாளன் புத்தரின் மலர், இன்றைக்கு மக்கள் விரோத வர்ணாசிரம கட்சியின் சின்னமாக நாம் களவு கொடுத்துவிட்டோம். இதை மீட்க வேண்டும் என்று இன்றைய தலித் ஆர்வலர்கள் அறிவு தளத்தில் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றனர்.**

புத்தர் வாழ்ந்த காலத்தில் இந்தியாவைப் பற்றி கிரேக்க இலக்கியங்களில் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. இந்தியா மற்றும் பித்தாகரசு தத்துவங்கள் ஆழமாக ஆய்வு செய்யப்படும்போது, பித்தாகரசு தன்னுடைய அறிவின் கூர்மைக்காக இந்திய நாட்டைத்தான் அடித்தளமாகக் கொண்டிருந்தார் என்பது புலப்படுகிறது. பௌத்த தத்துவ ஞானிகளையும், மருத்துவர்களையும் பற்றி உலக அளவில் மாபெரும் மதிப்பு கிருஸ்து பிறப்பதற்கு முன்னரே இருந்து வந்தது. குறிப்பாக கி.பி. 300 முதல் 600 வரை பிளேட்டோவின் சிந்தனைக் களத்தை பவுத்த முறைப்படியான ஆய்வுவரை இந்தியாவில் நிகழ்த்தப்பட்டது.

இதில் அநீதி என்னவெனில், பவுத்த கண்டுபிடிப்புகளை இந்திய கண்டுபிடிப்பு என்று வரலாற்றாசிரியர்கள் பதிவு செய்துள்ளனர். இந்தியக் கண்டுபிடிப்புகள் நாளடைவில் இந்துக்களின் கண்டுபிடிப்பு என்றும் அது பார்ப்பன சாதியின் பங்களிப்பு போல இந்திய இந்துத்துவ வரலாற்றாசிரியர்கள் பதிவு செய்துள்ளனர். இந்தியாவில் பவுத்த மார்க்கம் இன்று இல்லை என்று தொடர்ந்து பொய்ப் பிரச்சாரம் செய்யும் பார்ப்பனர்கள், பவுத்தர்களின் கணித கொடையை, தங்களது கொடைபோல திருடிக் கொள்வதில் வெட்கம் ஏதும் அடையவில்லை. இன்று பவுத்தத்தை தன் மதமாகக் கொண்ட வரலாற்று அறிஞர்கள், கணிதவியலாளர்கள் அரிதாக உள்ளதால், பார்ப்பனர்களின் இந்த பொய் உரிமை கொண்டாடுதலை நம்மால் சரியல்ல என்று சாமான்ய மனிதனுக்குப் புரியவைக்க இயலவில்லை.

நம் நாட்டின் கி.பி. 1000-க்குப் பிறகு அரேபியர்களின் நேரடி தொடர்பு பவுத்த இஸ்லாமிய கணிதத் தொடர்பை வலிமைப்படுத்தியது. பவுத்தர்களின் கோணத் தொடர்புகளாக sine (சைன்) சார்புகள் அரேபிய உலகம் பல சமன்பாடுகளால் வலிமைப்படுத்தப்பட்டன. அரேபியர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை உருவாக்குபவர்களாகவும், உருவான தத்துவங்களை உலகெங்கும் கொண்டுசெல்லும் நல் ஊர்தியாகவும், பிறநாட்டு தத்துவங்களுடன் தங்கள் தத்துவங்களை ஒப்பிட்டு அடுத்தகட்ட நகர்வை உறுதிப்படுத்தும் பரந்த சிந்தனை கொண்டவர்களாகவும் விளங்கினர்.



படிப்பகம்

www.padippakam.com

இதைப்போலவே சீனர்களையும் நாம் கணித வளர்ச்சியில் பெருமையோடு குறிப்பிட்டாக வேண்டும். கி.பி. முதலாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இந்திய நாடு சீனர்களின் பவுத்த யாத்திரை தளமாக விளங்கியது. இதனால் சீன - இந்திய (பவுத்த) கலாச்சாரங்கள் பல நூற்றாண்டுகளுக்கு உறவுகளால் பிணைக்கப்பட்டன. இந்திய (பவுத்த) நாட்டின் வானவியல் சாஸ்திரம், கணிதம் மற்றும் மருத்துவம் சீன மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது கி.பி. 600-இல் ஆண்ட சூய் வம்ச சீன மன்னர் காலத்தில்தான். இதன்பின்னால் சீனாவை ஆண்ட தாங் வம்ச மன்னர் இந்திய (பவுத்த) வான - கணித வல்லுனர்களை ஒப்பந்த அடிப்படையில் சீனாவில் உள்ள Astronomical Board of Changan-க்கு ஆசிரியர்களாக பல ஆண்டுகள் நியமித்திருந்தார். இந்திய (பவுத்த) கணித ஆசிரியர் கள் மூன்று ஆண்டு கள் ஒப்பந்தம் என்ற அடிப்படையில் சீனாவின் புகழ்பெற்ற சங்கன் கல்வி நிலையத்தில் ஆசிரியர் களாக பலமுறை பணியாற்றியுள்ளனர். இந்திய பவுத்தத் துறவிகள் பெரும்பாலானோர் சீனாவின் கணித வளர்ச்சிக்காக சீனா சென்று அங்குள்ள பல்கலைக் கழகங்களில் பகுதிநேர கணித ஆசிரியர்களாகப் பணிபுரிந்தனர். இடைநிலைச் சமன்பாடுகள் குட்டக வழியாக இந்திய முறையில் தீர்வு எட்டப்பட்டது. பவுத்த Kuttaka முறை சீன குய்யிசு (Qiuyishu) முறையுடன் இந்த பவுத்த துறவிகளால் ஓர் ஒப்பாய்வு செய்யப்பட்டது. இவ்விரு வழிமுறைகளும் இன்றைக் கும் பெரும் அளவில் ஒப்புடையடையதாக உள்ளதே இதற்குச் சான்று. (இம்முறைகளைப் பற்றிய முழுமை யான கட்டுரையை பின்வரும் தொடர்களில் காண் போம்)

இந்தியாவிலிருந்து கணிதம் - தத்துவம் கற்றுத்தர இந்திய (பவுத்த) நாட்டிலிருந்து சான்றோர்கள் சீனா சென்றனர். நம் நாடு நுண்கலைகளை கற்றுத் தந்த வலிமையான நாடாக பன்னெடுங்காலமாக இருந்தது. பார்ப்பனர்கள் இந்திய நாட்டை தத்துவமற்ற நாடாக்கினர். இன்றைக்கு ஒலிம்பிக்ஸ்-இல் சீன நாடு பல தங்கப் பதக்கங்களை குவித்துக் கொண்டுள்ளது. இந்தியா 104 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரே ஒரு வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றிருக்கிறது. வெற்றி பெற்ற அந்த நபர், நாம் சீனர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்று பேட்டி தந்துள்ளார். நம் திறமை, வலிமை இழந்ததன் காரணம் யாரும் ஆய்வு செய்ய வில்லை. நம்மை நகர்த்தும் தத்துவம் இன்றைக்கு இந்தியாவைப் பொருத்தமட்டில் பார்ப்பனியக் கருத்தாக உள்ள அவலமே இதற்குக் காரணம்.

உலகின் வல்லரசாக உள்ள அமெரிக்கா மிரட்சி கொள்ளும் அளவிற்கு நமது அண்டை நாடுகளான சீனா, ஜப்பான் பதக்கம் வாங்கி குவிக்கும்போது, நமக்கு அது ஏன் சாத்தியப்படவில்லை? காரணம் இங்கு வஞ்சகக் கோலோச்சும் பார்ப்பனியமே.

நாம் அறிவியல் வளர்ச்சி என்பதை ஆழ்ந்து பார்ப்போமானால், விஞ்ஞான கணித கண்டுபிடிப்புகளை பட்டியலிடுவோமானால் அதில் ஒரு பார்ப்பனன் பெயர்கூட சர்வதேச அளவில் காணப்படவில்லை. இருப்பினும் நம்மால் விண்ணில் ஏவப்படும் ராக்கெட்டுகளை இயக்கும் அறிவுசார் தளங்கள், IIT, IIAS ஆகிய அமைப்புகளில் மனப்பாடம் செய்து படித்துவிட்டு அமர்ந்து மாதச் சம்பளமும் பேப்பரில் பெயரும் புகழும் வாங்கிக் கொள்கின்றனர். அதனால்தான் ராமர் பிள்ளை என்ற சாதாரண மனிதனால் கூட IIT பேராசிரியர்களை எளிதாக ஏமாற்றி மூலிகைப் பெட்ரோல் என்ற அளவிற்கு கதைவிட இயலுகிறது.

பகுத்தறிவை தடுக்கும் இந்து-பார்ப்பன கருத்தியலை நம்பி - சங்கரமடங்களை நாட்டின் அதிகார மையங்களாக மாற்றி வைத்திருக்கும் பார்ப்பனியம் வலிமை கொண்டிருக்கும் இந்நாட்டில் தொடர்ந்து பிள்ளையார் சிலை பால் குடிப்பதும், ராமர் பிள்ளையால் மூலிகைப் பெட்ரோல் உருவாக் கப்படுவதும்தான் நடக்கும்.

ஒளிமிகுந்த கண்களாக இருந்தாலும் இமை மூடியுள்ளபோது, பார்வை சாத்தியப்படாதது போல, வளம் மிகுந்த ஆதிக்குடிகள் வாழும் நாட்டில் பார்ப்பனியக் கருத்துகள் அறிவுக்குத் திரையிட்டுள்ளன. இவை நீக்கப்படும்போது, ஆதிக்குடிகளின் அறிவு நிலைபெறும்.

## கவிஞர் அன்பாதவனுக்கு
# சிற்பி இலக்கியப் பரிசு

கவிஞர் அன்பாதவன் எழுதிய "நெருப்பில் காய்ச்சிய பறை" என்னும் தலித் கவிதை நூலுக்கு பொள்ளாச்சி கவிஞர் சிற்பி இலக்கிப் பரிசு கிடைத்துள்ளது.

புதிய கோடாங்கி, தலித் முரசு உள்ளிட்ட பல்வேறு சிற்றிதழ்களில் எழுதிவரும் கவிஞர் அன்பாதவன் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற விருது உட்பட பல பரிசுகள் / பாராட்டுக்கள் பெற்றுள்ளார். 'தலித் நாட்டுப்புறப் பாடல்கள்' எழுத்தாளர் விழி.பா. இதயவேந்தனோடு சேர்ந்து தொகுத்து அண்மையில் தொகுப்பாக வெளிவந்துள்ளது.

'செம்பழுப்பாய் சூர்யன்' உள்ளிட்ட எட்டு தொகுப்புகள் இதுவரை வெளிவந்துள்ளன. இவர் விழுப்புரம் மாவட்ட தென்னிந்திய எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் பேரவையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக உள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# பிணம்

■ பரிக்கல் என். சந்திரன்

"சார்" என்றார் தலைமை எழுத்தர் தன் கையில் ஒரு ஃபைலைப் பிடித்தபடி...

"என்னாய்யா..." என்றார் தாசில்தார்.

"பூவரசம்பட்டு ஊர்சனங்க சுடுகாட்டுக்கு இடம் ஒதுக்கச் சொல்லி, அடிக்கடி போராட்டமும், ஆர்ப்பாட்டமும், ஊர்வலமும், உண்ணாவிரதமும் செய்ததத் தொடர்ந்து, ஆறுமாசத்துக்கு முன்னே உங்ககிட்ட அது சம்பந்தம்மா மனுவும் கொடுத் திருக்காங்க. அதப்பத்திய ஃபைல் சார் இது."

"அதுல என்னாய்யா எழுதியிருக்கே..."

"நீங்க சொன்னமாதிரிதான் சார் எழுதியிருக்கேன்... சுடுகாட்டுக்குன்னு பொதுப்பணிக்குச் சொந்தமான, பொறம்போக்கு நெலத்த உடனடியா ஒதுக்கியிருக்கி றதா. எடுத்துக்கிட்டு வாய்யான்னு சொன்னீங்க... அப்டியே எழுதிக்கிட்டு வந்திருக்கேன் சார்..."

தாசில்தார் பதறினார்... "யோவ்... அந்த ஃபைல அப்டியே தூக்கி குப்பயில போடுய்யா... வம்பெல் லாம் நமக்கு வேணாம்."

"என்ன சார் சொல்றீங்க..."

"யோவ், அந்த பொறம்போக்கு நிலத்த, பக்கத்து நிலத்துக்காரர் வேலாயுதம் மனுபோட்டு எப்பவோ பட்டா வாங்கிக்கினாரய்யா... அந்தப் பட்டாவை நான்தாய்யா கொடுத்தேன். அதுக்கு உன் பங்குக்கு..." என்று இழுத்து ஏதோ ஜாடையாகச் சொன்னார் தாசில்தார். தலையைச் சொரிந்தபடி அசட்டுச் சிரிப் புடன் தலைமை எழுத்தர், "ஆமா சார்... மறந்துட்டேன் சார்..." என்று கூறியவர் தொடர்ந்தார்... "இப்ப என்ன சார் செய்யலாம்... சுடுகாட்டுக்கு எடம் ஒதுக்கறேன்னு நீங்க உறுதிமொழி வேற கொடுத்திருக்கீங்களே..." என்றார்.

"என்னாய்யா உறுதிமொழி... பொல்லாத் உறுதி மொழி. இதப்பாருய்யா... நாமெல்லாம் அரிச்சந்திரன் இல்ல, உண்மையைக் காப்பாத்த... புரிஞ்சிக்க..."

"அப்ப சரி சார்..." என்ற தலைமை எழுத்தர் ஃபைலையும் தன் வாயையும் கெட்டியாக மூடிக் கொண்டு அந்த இடத்தைவிட்டு நகர்ந்தார்.

"ஏம்பா... ஒத்தாரு ஒறவுங்க எல்லாருமா வந்துட் டாங்களா...?"

"எப்பவோ வந்துட்டாங்களே..."

"வேற யாராவது இன்னம் வரவேண்டியவங்க..."

"இல்ல..."

"அப்ப... பொணத்த எடுத்துடலாம்..."

"உம்... உம்..."

"பாட தயாராயிடிச்சில்ல..."

"எப்பவோ..."

"சரி... பொணத்த குளுப்பாட்ட ஏற்பாடு பண்ணுங்க... சல்தி... சல்தி..."

"சரி... பாட தயாரு... பொணத்த பொதைக்க குழி தயாரா?"

"சுடுகாட்டுல இன்னுமா குழிவெட்டாம இருக் கானுவோ இவ்ளோ நேரம் குழிவெட்றப் பயலுவோ. என்னடா பண்ணிக்கினு இருந்தானுவோ...?"

"அவனுவோ கடப்பாரையும் மம்மிட்டியுமாத் தான் போனானுவோ. ஆனா, உங்க பொணத்த பொதைக்க இனி இது எடமில்லன்னு அங்க வேலாயுதமும், அவங்க ஆளுங்களும் சொல்லிட்டாங் களாம். அதனால பேசாம திரும்பி வந்துட்டாங் களாம்..."

"வேலாயுதமா சொன்னாரு."

"அட ஆமா... அவருதான் சுடுகாட்டு நெலத்த பட்டா பண்ணிக்கிட்டாரு"

"அப்டின்னா... நாம தாசில்தாருகிட்ட கொடுத்த விண்ணப்பம்"

"அத எப்பவோ பொதைச்சிட்டிருப்பாங்க குப்பையில..."

"நாம கொடுத்த விண்ணப்பத்த பொதைக்கவும் ஒரு எடம் கிடைச்சிருக்கு. ஆனா நம்ம ஊர் பொணத்த போட்டு பொதைக்க ஒரு எடம் கெடைக்காமப் போச்சே..."

"சரி... இப்ப என்னா செய்யரது..."

"பொணத்த தூக்கிக்கினு போவோம்... சுடுகாட் டுல பொதைக்க முயற்சி பண்ணுவோம். என்னா நடக்குது பாப்போம்."

"வேலாயுதம் பொணத்த பொதைக்க உடமாட் டாராம். நம்ம ஆளுவோ கேட்டதுக்கு, கராரா சொல் லிட்டாராம்."

"தோ பாருப்பா... ஒரு பேச்சுக்கு அப்படித்தான் சொல்வாங்க. பொணத்தோட போய் நின்னா, முடியாது பொணத்தப் பொதைக்க எடமில்லேன்னு யாரும் சொல்லமாட்டாங்க. அதனால, பொணத்த தூக்கிக்கினு போவ ஏற்பாடு செய்யுங்க..."



படிப்பகம்

www.padippakam.com

**“அதாங்கையா... செத்துட்ட கெழப்பொணத்துக்கு நீங்க சுடுகாட்டுக்கு நிலம் ஒதுக்கி உட்றதுக்குள்ள, அவசரப்பட்டு சவம் சட்டுப்புட்டுன்னு மண்டைய போட்டுடுச்சே... இருந்தாலும் இது பொல்லாத கெழம்ங்கையா...”**

மறுநாள்... காலை நேரம்... தாசில்தார் அலுவலகத்திற்கு வந்த ஊழியர்களுக்கிடையே பெரும் பரபரப்பு...

அவர்களுக்குள், இது எப்போது நடந்தது, யார் செய்தது என்பது பற்றிய விவாதம்...

காலை பத்து மணி. தாசில்தார் வந்தார். அனைத்து ஊழியர்களும் அவரைச் சூழ்ந்து கொண்டனர்... “சார் இந்த அநியாயம் எங்க சார் நடக்கும்...”

தாசில்தார் விளங்கிக் கொள்ளாமல் “அநியாயம் எங்கியும் நடக்குதுய்யா...” என்றார் நக்கலாக.

“சார்... நாங்க சொல்ல வந்தது வேற... நம்ம ஆபீசுக்கு வடக்கால...” என்று இழுத்து நிறுத்தினர் ஊழியர்கள்.

“வடக்காலதான... அதுக்கு ஏய்யா இப்படி எல்லாரும் ஒன்னா கூடி முற்றுக செய்யறீங்க... உங்களுக்கு இடம் பத்தல. ஆபிசுல இட நெருக்கடி. ஃபைல வைக்கவும் இடம் போதல. அதுக்காகத்தான் வேற ஒரு கட்டடம் கட்ட கடக்கால் தோண்டி வைச்சிருக் கோம். உடனடியா கட்டடமும் கட்ட ஏற்பாடும் செய்யப் போறோம். அதுக்கு ஏய்யா இப்படி கலவரம் பண்றீங்க...”

“சார்... அந்தக் கடைக்காலல...”

“மண்ணு சரிஞ்சிருக்கா... அத வெளியில எடுக்கச் சொல்லிட்டா போவுது.”

“ஐயோ... இல்ல சார்... யாரோ அத தூத்திருக்காங்க சார்... மண்ணால மேடகட்டி... பூமாலையெல்லாம் போட்டிருக்காங்க... பக்கத்துலியே பாடை கவுத்துக் கெடக்குது. பாத்தா ஏதோ பொணத்த புதைச்சிருக்கற மாதிரி தெரியுது...”

தாசில்தார் திடுக்கிட்டவராய் “என்னய்யா சொல்றீங்க” என்றார்

“ஆமா சார்... பொணத்தத்தான் போட்டு பொர்தைச்சிருக்காங்க. நல்லாத் தெரியுது. மேட மேல வத்தி எரிஞ்சிருக்கு...”

“பொணமா... ஆபீசிலியா? இத யாரு செஞ்சது... யாராவது கொல பண்ணிட்டு, பொணத்த தெரியாத இங்க புதைச்சிக்கிட்டு போயிட்டாங்களா... இருக்கும்யா... பொல்லாத உலகம். சரி... சரி... போலீசுக்கு தகவல் தெரிவிச்சிடலாம் வாங்க.”

“சார்... இது கொலையுமில்ல, கொள்ளையுமில்ல... பூவரசம்பட்டு ஊர்க்காரங்கதான் ஊர்ப் பொணத்த இப்படிப்போட்டு பொதைச்சிருக்காங்கன்னு செய்தி கெடச்சது எனக்கு...” என்றார் ஒரு ஊழியர்.

பூவரசம்பட்டு என்றதும் தாசில்தார் தலையில் இடிவிழுந்தது போல் நிலைகுலைந்தார். அந்த ஊர் மக்கள் சுடுகாட்டுக்கு இடம் கேட்டு மனு அளித்ததும், அதே இடத்தை அரசியல் செல்வாக்கோடு, பெரும் புள்ளியாகத் திகழும் வேலாயுதத்திற்கு பட்டா செய்து கொடுத்ததும் நினைவுக்கு வந்தது தாசில்தாருக்கு.

அந்த நேரம் பார்த்து, திரளான கூட்டம்... கூடவே சங்கு சேகண்டி சத்தம், பறை கொட்டும் ஒலி. அத்துடன் பால் செம்புடனும், எண்ணெய், சீயக்காய் தூள் பொட்டலம், எள்-பூக்கள், வத்தி, சூடம், கொண்ட கூடையுடனும், தண்ணீர் குடத்தோடவும் அந்தக் கூட்டம் வந்து கொண்டிருந்தது. உடன் பிரதான சாலையிலிருந்து தாசில்தார் அலுவலகத்திற்கு திரும்பியது கூட்டம்.

தாசில்தாரும் ஊழியர்களும் திகைத்து நின்றபடி, ‘இது என்ன கூத்து... ஏன்... என்ன செய்ய வராங்க...’ என்று குழம்பிக் கொண்டவர்கள், பிறகு தெளிந்தார்கள். ஓ... பொதைச்ச பொணத்துக்கு பால் ஊத்தும் சாங்கியமா? தாசில்தாருக்கு இப்போது ஊர்ஜிதமானது ஊழியருங்க சொன்னது சரிதான்...

தாசில்தாருக்கு குப்பென வேர்க்கத் தொடங்கியது. வரும் கூட்டத்தைக் கண்டு கோபமும் ஏற்பட்டது.

அலுவலக வளாகத்தில் நுழைந்த அந்தக் கூட்டம், பிரேதம் புதைத்திருக்கும் இடத்திற்கு வந்தது... கூட்டத்தில் இருப்போர் அனைவரும் குடிசைவாசிகளாகத் தென்பட்டனர். அங்கே வந்தவுடன் பறை கொட்டுவதையும், சங்கு ஊதுவதையும் நிறுத்தினர்.

தாசில்தார் கூட்டத்தைப் பார்த்துக் கேட்டார்... “ஏய்யா... என்னய்யா இது...? இது ஆபீசா... இல்ல சுடுகாடா... ஏய்யா... உங்கள உள்ள தூக்கிப் போட்டு நாலு நொங்கு நொங்கினாத்தான் நீங்க பதப்படுவீங்க” என்று கோபப்பட்டார். வந்த கூட்டம் அமைதியாக நின்றது. தாசில்தார் உடன் போலீசுக்கு தகவல் கொடுக்கச் சொல்லி தலைமை எழுத்தரைப் பணித்தார். அவர் தன் செல்போனில் போலீசுக்குத் தகவல் கொடுத்தார். அதற்குள் தாசில்தாருக்கும் கூட்டத்திற்கும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

“ஏய்யா... பொணம் புதைக்க உங்களுக்கு இந்த இடம்தான் கிடைச்சதா...”

“ஐயா... கும்பிர்றோம்... நாங்க நேரா பொணத்த பொதைக்க சுடுகாட்டுக்குத்தான் தூக்கிக்கினு போனோம். போனமா... அங்க, வேலாயுதமும், அவ ரோட ஆளுங்களும் பொணம்புதைக்க உடல் மறிச்சிட்டாங்க. அது அவரு எடமாம். பட்டா வாங்கிட்டாராம். அவர்கிட்ட நாங்களும் எவ்வளவோ கெஞ்சிப் பாத்தோம்.

மனுசன் அசைஞ்சிக் கொடுக்கல... ராத்திரி



படிப்பகம்

www.padippakam.com

பன்னெண்டு மணி வரை பொணத்த அங்கியே வச்சிக்கினு கொட்ட கொட்ட கிடந்தோம். ஒன்னும் வழி பொறக்கலே... எடுத்துக்கினு சுடுகாட்டுக்குப் போன பொணத்த, மறுபடி ஊட்டுக்குக் கொண்டுக்கினு வரலாமா? யோசிச்சோம், இத எங்க பொதைக்கற துன்னு. உங்கள கேட்டு முடிவு பண்ணிக்குவோம்னு தான் ராத்திரி இங்க வந்தோம். காலம்பற நீங்க எப்படியும் ஆபீசுக்கு கண்டிப்பா வந்துதான் ஆகனும். எந்த நேரமானாலும், காத்திருந்து உங்களோட கலப்போம்னு தான் இங்க வந்தோம். இங்கியும் பொணத்த வைச்சிக்கினு எவ்ளுநேரம்தான் மொட்டு மொட்டுன்னு காத்திருக்கறது. பாத்தமா? பக்கத்துல கடக்காலு பள்ளம் இருந்ததா... எங்க பொதைச்சாலும் மண்ணுல தான் பொதைக்கப் போறோம்னு, இங்கியே பொதைச்சுட்டோம். கோவிச்சிக்காதீங்க" என்றார் நாட்டாமை.

"ஏய்யா... நா உங்களுக்கு சுடுகாடு ஒதுக்கித் தரமாட்டேன்னு சொன்னேனா? ஆவன செய்றேன்னு தானே சொன்னேன்."

"அது எங்களுக்குத் தெரியுதுங்க... இந்த கெழத்துக்குத் தெரியலையே..."

"கெழத்துக்குன்னா..."

"அதாங்கையா... செத்துட்ட கெழப்பொணத்துக்கு. நீங்க சுடுகாட்டுக்கு நிலம் ஒதுக்கி உட்றதுக்குள்ள, அவசரப்பட்டு சவம் சட்டுப்புட்டுன்னு மண்டைய போட்டுடுச்சே... இருந்தாலும் இது பொல்லாத கெழம்ங்கையா..."

"சரி... நடந்தது நடந்து போச்சி. பொணத்த வெளியில எடுத்து அப்புறப் படுத்திடுங்க..."

"நாங்க கெழத்துக்கு பால்தாய்யா ஊத்த வந்தோம்..."

"ஏய்யா... என்னை என்ன பைத்தியக்காரன்னு நினைக்கறீங்களா? இல்ல கேனப்பயன்னு நினைக்கிறீங்களா?"

"நாங்க உங்கள பைத்தியக்காரன்னு நினைப்போமாய்யா"

"அப்படின்னா என்ன அர்த்தம். தாசில்தார கேனப்பயலுனுதான் நினைக்கறோம் அப்படிங்கறாங்கப்பா..." ஒருவர் தன் சக அலுவலரிடம் முணுமுணுத்துக் கொண்டார்.

அப்போது மூன்று ஜீப்புகள் அலுவலக வளாகத்திற்குள் வேகமாக வந்து நுழைந்தன. ஒன்று உள்ளூர் போலீஸ் ஜீப். ஒன்றில் மாவட்ட போலீஸ் அதிகாரி... ஒன்றில் உதவிக் கலெக்டர். கூட்டத்தின் அருகே வந்து நின்ற ஜீப்பின் உள்ளிருந்து அனைவரும் மடமடவென்று இறங்கினர்.

"இங்க என்னாய்யா கூட்டம்" என்று கேட்டார் மாவட்ட போலீஸ் அதிகாரி.

அவருக்கு நடந்த சம்பவங்களையும், தங்கள் ஊர் சுடுகாட்டுக்காகப் போராடியதையும், தங்கள் நிலைகளையும் விளக்கினர். இதையெல்லாம் கேட்ட அதிகாரி அதே பல்லவியைத்தான் மிரட்டலாகப் பாடினார்.

"உங்களுக்கு சுடுகாட்டுக்கு எடம் ஒதுக்கறோம். இப்ப இந்தப் பொணத்த தோண்டி அப்புறப்படுத்துங்க... இல்ல..."

பொதுசனம் மிரண்டதா? இல்ல... சாலையில் மறியல் செய்யக் கிளம்பினர். அப்போது அங்கே திடீரென ஒரு தகவல் வந்தது.

"தாசில்தார் சஸ்பெண்ட் செய்யப் பட்டிருக்கிறார். வேலாயுதத்தின் சுடுகாட்டு நிலப் பட்டா ரத்து செய்யப்படுகிறது" என்கிற இரு உத்தரவும் கலெக்டரால் போடப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றது என்பதுதான் அது.

## அவசர அலறல்

■ அரும்பா. சரவணன்

தொலை பேசியில்
தேர்தல்
தனியார் துறையில்
ஒதுக்கீட்டிற்கு
இடமளிப்பா அல்லது
இடமறுப்பா

அறுபத்திரெண்டாம்
எதிர்ப்புக்கு
முப்பத்தெட்டாம்
ஆதரவாக
சதவிகிதம் நூறானது

பாப்பாபட்டி, கீரிபட்டியின்
அவசர அலறல்
அய்யனாரே! அருள் அளியேன்
குலம் உயர்த்தேன்

ஒதுக்கீடு வேண்டாம்
ஏனிந்த சதவிகித சர்ச்சை
வெள்ளையன் திரும்பட்டும்
சமத்துவம் நிலவட்டும்
அனைவரும் அவன் அடிமைகளென!



படிப்பகம்

www.padippakam.com

# எல்லாமே அழுக்கு...

■ வலம்புரி ஜான்

கார்மேகம்
பொழிந்த பிறகும்,
கதிரவன் காய்ந்த பிறகும்
உலகம் என்னவோ அழுக்காகவே இருக்கிறது...

பிறந்த குழந்தை முதல்
புதைக்கப்படுகிற,
கிழவனின் சடலம் வரை
எங்கே இல்லை அழுக்கு?

அழுக்கின் திரண்ட வடிவமே அகிலம்...

கோயிலுக்கு வருகிறபோது
குளித்துவிட்டு வா என்கிறாயே,
எனிமா எடுத்துக்கொண்டா
எல்லோரும் வருவார்கள்...

குடலை அறுத்து
குவித்தால் தவிர,
உள்ளே இருக்கிற அழுக்கு
ஒருபோதும் வெளியேறாது...

மேலுக்கு குளிக்கிறவன்தான்
மேன்மையானவனோ?
உங்கள் பக்தி விதையாயிருக்கிறபோதே
கள்ளிமுள்
காட்டையல்லவா கர்ப்பம் தரித்திருக்கிறது...

நீ வழிபடுகிற ஆலயத்திற்கு
நான் வரவேண்டும் என்கிறாய்,
என் சேரியிலே உள்ள
சுடலைமாடன், மதுரை வீரன், இவர்களை
நீ எப்போதாவது
எட்டி நின்றாவது பார்த்திருக்கிறாயா?

காவில் பட்டுக்கெட்டிக் கொண்டாவது
எங்கள் ஐயனார் சுவாமியை,
எப்போதாவது
நீ வணங்கியதுண்டா?

மேலோர் வழிபட்டால்
அவன் சிவன்,
நான் வழிபட்டால்
அவன் மாடன்...

சொள்ளமாடன்,
சுடலைமாடன்,
மாட்டில் ஏறி வருகிறவன் மாடன்
மாட்டில் ஏறி வருவது சிவன்தானே?

சாதியை வைத்து
சாமி பெயரையே மாற்றுகிற,
சாபபூமியில் வேரடித்ததற்காக
வெட்கப்படுகிறேன்...

இமயம் பெருமை
என்று நீதான் பேசுகிறாய்,
ஆல்ப்ஸ் பெருமையென்று
ஐரோப்பியர் சொன்னதில்லை...

கங்கை புனிதமென்று
நீதான் சொல்கிறாய்,
அமேசான் புனிதமென்று
அவர்கள் சொன்னதே இல்லை...

மலையும் நதியுமா
ஒரு நாட்டுக்கு பெருமை?
மனிதர்கள்
அல்லவா பெருமை - இங்கே

மக்கள் தொகை எழுத
மலையளவு தாள் வேண்டும்,
மனிதர்கள் தொகை எழுத
மந்தார இலை போதும்...

கீழாவது மேலாவது
என்று காட்ட,
கே.ஆர். நாராயணனை
காட்டுகிறாய்...

மேலவளவு
போன்ற ஊர்கள்,
இருக்கிற நாட்டில்
பிறந்ததற்காக நான் வெட்கப்படுகிறேன்...

உணவுக் கடைகளில்
இரண்டு குவளைகள்,
உள்ள நாட்டில் பிறந்ததற்காக
நான் வெட்கப்படுகிறேன்...

கண்ணனின் கருப்பு
என்றால் உனக்குப் பிடிக்கும்,
அண்ணனின் கருப்பு
என்றால் அதில் வெறுப்பு...

காகம் கருப்பாக இருக்கிறது என்று
வெள்ளைக் கொக்கு அதை வெறுக்கவா
செய்கிறது?
கரடி கருப்பாக இருக்கிறது என்று
முயல் என்ன முறைத்துக்கொண்டா நிற்கிறது?

ஏழு அறிவு இருந்தாலும்
நீ அழுக்கு,
உன் சிந்தனை, சொல், செயல்
எல்லாமே அழுக்கு...



படிப்பகம்

www.padippakam.com

■ ஆ. வெங்கடேஷ்

# சுதந்திரம் என்றொரு பெருங்கதையாடல்

மனித வாழ்வை அச்சுறுத்தும் அபாயங்களின் வேர்க்கால்களை சரித்திரத்தின் சாம்பல் மேட்டில் தேடுவது சில சமயங்களில் அவசியமானதாகி விடுகிறது. பட்டினிச்சாவின் சுடுகாடுகளை விஸ்தரிக்கும் இந்தியா போன்ற சுதந்திரம் பெறப்பட்டதாய் சொல்லப்படும் நாட்டின் பொய்மை வரலாறுகளில் புதைந்து, உண்மை வரலாறுகளை அறியும்போது கூச்சமூட்டுவதாய் உள்ளன. சுதந்திரம், நாடு போன்ற பெருங்கதையாடல்களை நிறுவி நம்பத் தகுந்த கட்டமைப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் பெருங்கதையாடலின் பெரும்பயன் எல்லோருக்குமானதாக ஏமாற்றுவது சுதந்திரம் என்பதை நிகழ்த்தியவர்களின் வெற்றியாகி விடுகிறது.

இந்தியச் சுதந்திரத்தை நிகழ்த்தியதன் நோக்கங்களாக குறிப்பாக ஐந்து விஷயங்கள் புலப்படுகின்றது.

1. பிரிட்டிஷ் ஆட்சி மூலதனத்தால் இந்திய முதலாளிகளின் நலன் பின்னடைவு ஏற்பட்டதால்.
2. இந்திய முதலாளிகளின் நலனுக்கேற்ப தேசிய இயக்கங்களின் கட்டமைப்பு நடந்தது.
3. தேசியவாதிகள் முதலாளிகளாகவும், முதலாளிகள் தேசியவாதிகளாகவும் இருந்தது.
4. வட்டமேசை மாநாடுவரை பிரதிநிதித்துவப் படுத்திக் கொண்ட முதலாளிகளின் நலனுக்கேற்ப இந்திய அரசு வடிவமைக்க வற்புறுத்தப்பட்டது.
5. மிகவும் கவனிக்கப்பட வேண்டிய காரணியாக குறைந்தபட்ச மக்கள் ஜனநாயகத் தன்மையை நிறுவிய (பெரும்பாலும் தோற்றுப்போன) உண்மையான தேசத்தலைவர்களை வரலாற்றில் புறக்கணித்தது.

போன்றவை சுதந்திரத்தின் மறைமுக நோக்கங்களாக நமக்குத் தென்படுகின்றன.

இந்தியாவில் முதலாளித்துவ நிறுவனங்களின் நிலைக்கொள்ளல் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடந்தது. இந்த நிறுவன முதலாளிகளின் வர்த்தக அமைப்பானது உள்ளூர் வணிகர்கள் வர்த்தக சங்கம் கோக்நாடா (பின்பு கோதவரி வணிக மையமானது) 1885 இல் நிறுவப்பட்டது. இதே ஆண்டே இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கப்பட்டது. 1887-இல் தொடங்கப்பட்ட வங்காள தேசிய வர்த்தக மையத்தில் முக்கிய தேசியவாதிகளான சுரேந்திரநாத் பானர்ஜி, A.M. பாசு, நரேந்திரநாத்சென் ஆகியோர் கௌரவ உறுப்பினர்களாக இருந்தனர்.

திரு. பானர்ஜி அவர்கள் இந்திய தேசிய காங்கிரஸ் சென்னையில் நடந்தபோது வர்த்தக அமைப்பின் சார்பில் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார். இவ்வாறு இந்திய தேசிய காங்கிரசும், முதலாளிகளின் வர்த்தக அமைப்புகளும் கூட்டாகவே பரிணமித்துள்ளன. தேசியவாதியான M.G. ரணடே வட இந்திய தொழில் கூட்டமைப்பின் தொழில் மாநாட்டினை பூனாவில் முதலில் ஒருங்கிணைத்து நடத்தினார். 1905 வரை இந்திய தேசிய காங்கிரஸானது முதலாளிகளுடன் இணைந்து இந்தியத் தொழில் மாநாட்டினை ஆண்டுக் கூட்டங்களாக நடத்தியது. முதல் இந்திய தொழில் மாநாடானது R.C. தத் முன்னிலையில் நடந்தாலும், இதனோடு புகழ்மிக்க தேசியவாதிகளாகவும், தொழிலதிபர்களாகவும் இருந்த மதன் மோகன் மாளவியா, லாலா லஜபதிராய் போன்றோர் மிக நெருக்கமாக இருந்தனர்.

1913-இல் கராச்சியில் நடந்த தொழில் வர்த்தக மாநாட்டில் C.Y. சிந்தாமணி மற்றும் லாலா லஜபதி ராய் முன்மொழிந்த தீர்மானத்தில் ஒத்துழைப்பும், ஒருங்கிணைப்பும் இந்திய தொழில் மையத்தில் இருக்க வேண்டும் என்றும், இதுபோன்ற வர்த்தக கூட்டமைப்புகள் இல்லாத இடங்களில் அமைக்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். 1915-இல் பம்பாயில் இந்திய வணிகர்களால் தொடங்கப்பட்ட சங்கமானது 1907-இல் தேசிய இயக்கங்களோடு நெருக்கமான நிலையில் இருந்ததால், இந்திய முதலாளிகளின் வர்த்தக சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு இந்திய வர்த்தக காங்கிரஸ் உருவானது. இறுதியில் இந்திய தொழில் வர்த்தக மையமும், இந்திய வர்த்தக காங்கிரசும் ஒன்றிணைந்து 1920-இல் இந்திய தொழில் வர்த்தக காங்கிரஸ் (FICCI) உருவானது.

முதலில் வர்த்தக கட்டமைப்பிற்குள் வகுப்புவாரி மற்றும் வட்டாரவியல் வேறுபாடுகள் அப்பாற்பட்டதாகவே இருந்தது. 1940 வரை பாகிஸ்தான் தனி அரசாக உருவாகும் நிலையில் 1939-இல் முஸ்லிம் லீக்கானது, முஸ்லிம் முதலாளிகளை தனியாக ஒருங்கிணைத்து முஸ்லிம் வர்த்தக அமைப்பு உருவாக்கம் பெற்றது. 1928-இல் புருசோத்தம் தாஸ் தாக்கூர் என்ற பெரு முதலாளி FICCI-இல் தலைவராக இருந்தபோது நம்மால் அரசியலிலிருந்து பொருளாதாரத்தை தனியாகப் பிரிக்கமுடியாத சூழ்நிலையில் நாம் உடனே தேசிய இயக்கங்களின் பகுதிகளாக செயல்பட வேண்டுமென்று பேசியுள்ளார்.

1930-இல் FICCI கூட்டத்தில் பேசிய G.D. பிர்லா அவர்கள் நமக்குத் தகுந்தாற்போல் பிரிட்டிஷ் அரசை மாற்ற முடியாத நிலையில் இந்திய முதலாளிகள் வலிமையான கரங்களோடு சுயராஜ்ஜியத்திற்காக போராட வேண்டுமென்றார்.

1930-இல் மே மாதம் FICCI நிர்வாகக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இரண்டாம் வட்டமேசை மாநாட்டில் கலந்துக்கொள்வதாக எடுக்கப்



படிப்பகம்

www.padippakam.com

பட்ட முடிவின்படி திருவாளர் காந்தி அவர்கள் கலந்துகொண்டார்.

1931 ஜனவரி 16-இல் G.D. பிர்லா, புருசோத்தம் தாசுக்கு அனுப்பிய கடிதத்தில் நமக்கு உரிய பங்கை காந்தியின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றும், தற்போதைய இயக்கங்கள் அதனை விட்டு விடாது என்று எழுதியுள்ளார். குறிப்பாக வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்குவதற்கு 43 நாட்களுக்கு முன்பு 1942 ஆகஸ்ட் 5-இல் J.R.D. டாடா, புருசோத்தம் தாஸ், பிர்லா ஆகியோர் வைஸ்ராய்க்கு எழுதியக் கடிதத்தில் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு அரசியல் விடுதலையே தீர்வினைத் தரும் என்று எழுதினார்கள்.

டாடா, பிர்லா, டால்மியா, தாடர்ஸ், ஸ்ரீராம், வால்சந்த் குரூப், கஸ்தூரிலால் போன்றோர் தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு பணம், உணவு உதவிகளை அளித்ததோடு மட்டுமில்லாமல், தங்குவதற்கு இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தனர். உளவுத்துறை அறிக்கையின்படி தமது சொந்தத் தொழிற்சாலைகளுக்குள்ளேயே வேலை நிறுத்தங்களை ஊக்குவித்தனர். இதில் வியப்பூட்டும் விஷயம் என்னவென்றால் காங்கிரஸ் சோசலிசக் கட்சியின் மூலவர்களான ஜெயப்பிரகாஷ், அருணா அசாப் அலி, ராம் மனோகர் லோகியா போன்றோரும் முதலாளிகளிடமிருந்து பெருமளவு நிதியைப் பெற்றுக் கொண்டனர்.

இந்திய சுதந்திரம் பலவகைகளில் பொருள் கொள்ளப்பட்டாலும், ஏகாதிபத்தியத்திற்கான மூல வித்துக்கள் அன்றே ஊன்றப்பட்டுவிட்டன. பிரெட்டன் உட்ஸ் மாநாட்டில் கலந்துகொண்ட இந்திய பெரு முதலாளிகள் IMF-ன் நிர்வாகக் குழுவில் நிரந்தர இடம் இந்தியாவிற்கு அளிக்கப்பட்டதால் FICCI ஆனது IMF-க்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றியது. பிறகு IMF-ஆனது இந்தியாவில் சில அவசியமான வளங்களை பரிமாறிக் கொள்ள உதவி செய்வதாக உறுதி அளித்தது.

1940ஆகஸ்டில் நேரு அவர்கள் சோசலிச திட்ட அமைப்பாக அரசை மாற்றவும், தேசிய நடவடிக்கைகளை சோசலிசப்படுத்தப் போவதாக பம்பாய் திட்டத்தில் கூறப்பட்டாலும் அதற்கான எந்தஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் இந்திய பெருமுதலாளிகளின் வசதிக்கேற்ப பொது நிறுவனங்களை அமைத்தது மட்டுமே அவரது சோசலிச மோசடி. அம்பேத்கர் அவர்கள் அரசமைப்பு சட்டத்தின் துவக்க உரையில் பேசும்போது நிலங்களையும், அடிப்படை தொழில்களையும் தேசியமயப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதுவே சோசலிச அரசாக இருக்க முடியும் என்றார்.

1929 செப்டம்பர் 27-இல் பகிஸ்கிரித் பாரத் இதழில் எழுதிய அம்பேத்கர் அவர்கள் லெனின் இந்தியாவில் பிறந்திருந்தால் புரட்சிக்கு முன்னதாக தீண்டாமையையும், சாதியத்தையும் அழித்திருப்பார் என்று எழுதினார். எடுத்துக்காட்டாக அமெரிக்காவின் பல பொருளாதார தடைகளுக்குப் பிறகும் ஒரு தன்னிறைவு பெற்ற அரசாக உள்ள இன்றைய கியூபாவின் விடுதலைத் தந்தையான ஜோஸ் மார்த்தி அவர்கள், கியூபாவில் இருந்த ஸ்பெயின் அடக்குமுறையை ஒழிப்பதற்கு முன்பாக அங்கு நிலவிய வெள்ளை/கருப்பின மக்களுக்குக் கிடையில் வேறுபடுத்தல்களை ஒழித்த பிறகே கியூபா தேசியத்தை முன்னெடுத்தார். மார்க்சியத்தை மண்ணைக் கவ்வச் செய்யும் இந்திய கம்யூனிஸ்டுகளுக்கு இனியாவது அம்பேத்கரும், மார்த்தியும் அடிச்சுவடாய் இருக்கட்டும்.

---

# முகத்தில் முகம்

ராமதாஸ் - திருமாவளவன் ஆகிய இருவரும் அரசியல் களத்தில் நேர் எதிரிகளாக் இருந்தாலும் 'தமிழ்' என்றவுடன் 'அண்ணன்-தம்பி' என போற்றிக் கொள்வதுதான் போலித்தனமாயுள்ளது. புதிய கோடாங்கி இதழை 'கதை சொல்லி' சிறந்ததாக தேர்ந்தெடுத்ததற்க பாராட்டுக்கள் மேலும் பல விருது பெற வாழ்த்துக்கள்.

ஹரி கிருஷ்ணனின் 'தாய்' வித்தியாசமாகயிருந்தாள். ஒரு நல்ல உள்ளத்துக்கு எடுத்துக்காட்டாய் இருந்தது. கதை வழக்கச் சொல்லில் இருந்தாலும் முடிவில் தெலுங்கு தெலுங்கு மொழியை தமிழிலேயே எழுதி உள்ளார்கள். கதை ஒட்டத்தில் புரிகிறது எனினும் இறுதி பத்தியில் மட்டும் மொழிபெயர்ப்பு ஏன்?

'இறைவா நீ என்ன சாதி?' என வினவியிருப்பது சமுதாய விடியலுக்கான அஸ்திவாரம்.

பொன். குமார், சேலம்.

செப்டம்பர் மாத இதழில், 'தனியார் துறை - வளங்கள் பொதுவில் வை' எனும் கட்டுரையமைப்பைப் படித்தேன். 'போபால் பிரகடனம்', சந்திரபான் பிரசாத் கருத்துகள் மற்றும் பல்வேறு மூலாதாரச் சான்றுகளின் புள்ளிவிவரங்கள் முதலானவற்றைக் கொண்டு சூழ்ச்சிகள் திக்கம் தூண்டும் வண்ணம் நல்லாய்வாக அமைந்துள்ளது கட்டுரை.

தனியார் துறையில் ஒதுக்கீடு எனும் கோரிக்கையையும் உள்ளடக்கி வளங்களில் பங்கு எனும் கொள்கைப் போராட்டமே சாதனைக்குறியது என்பதை முழுமையாக வரவேண்டுகின்றேன்.

கலைஞர் டாக்டர் கே.ஏ. குணசேகரனின் 'முரண்' ஒலிநாடா விமர்சனம் அவருடைய இசையை நுணுக்கத் திறனாய்வையும் வெளிப்படுத்தியுள்ளது.

பெ.சு. மணி, சென்னை - 33.



படிப்பகம்

www.padippakam.com




Postal Regn. No. TN/PMG(CCR)/842/03-05
Registrar of Newspapers for India Regn. No. TNTAM /2001/4926

www.padippakam.com

Postal Regn. No. TN/PMG(CCR)/842/03-05 Registrar of Newspapers for India Regn. No. TNTAM /2001/4926

# கலைக்கோயில்கள் நிறைந்த சொர்க்க பூமிக்கு உங்களை அழைக்கிறோம்.



**மன நிறைவுக்கு**



**நிம்மதியான ஓய்வுக்கு**

*தமிழகத்தின் ஒப்பற்ற மாநகரம் மதுரை. கயிலைநாதனான சிவ பெருமானின் தலைமுடியிலிருந்து சிதறிய அமுதத்துளிகளே ''மதுரையம்பதி'' என்று அழைக்கப் படுவதாக வரலாறு கூறுகிறது. அங்கு அமைந்திருக்கும் பெருமைமிகு ''மீனாட்சி அம்மன் திருக்கோவில்'' வரலாற்றின் வியத்தகு சான்றாகும். சொர்க்கத்தில் நடப்பது போன்ற மீனாட்சி - சுந்தரேஸ்வரர் திருக்கல்யாண வைபவமும், உலகம் போற்றும் சித்திரைத்திருவிழாவும் ஒவ்வொருவரும் காணவேண்டிய ஒன்றாகும். மதுரையிலிருந்து இரண்டு மணிநேர பயண தூரத்தில், ஆரோக்கியமான மலை வாசஸ்தலமான கொடைக்கானல் அமைந்துள்ளது இதன் மற்றுமொரு தனிச்சிறப்பு.*

*சொர்க்க பூமியாம் மதுரையம்பதிக்கு உங்களை அழைக்கிறோம்...*

enchanting tamil nadu

experience yourself

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்,**

தலைமை அலுவலகம் : வாலாஜா ரோடு, சென்னை - 600 002.

போன்: 91- 44 -2538 8785, 2536 1640 ஃபேக்ஸ்: 91- 44 -2538 2772

E-mail:ttdc@md3.vsnl.net.in Website:tamilnadutourism.org

**For online booking click our website ttdconline.com**

செமதொஇ/1198/வரைகலை/2004

படிப்பகம்